406
2.62

MADRAS RECORD OFFICE
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JUN 1962
MADRAS

உ

சிவமயம்

" ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே!"

# கோயில் மாநகர்

[மதுரை மீனாட்சி சுந்தரர் திருக்கோயில் வரலாறு]

திருப்பணிக்குழுத் தலைவர்
தமிழவேள் **பி. டி. இராசன்** அவர்கள்
விருப்பத்திற்கிணங்கத்

திருப்பணிக் குழு உறுப்பினர்
**திரு. கி. பழநியப்பன்** அவர்களால்
இயற்றப்பெற்றது.

வெளியீடு:
**திருப்பணிக்குழு, மீனாட்சி திருக்கோயில்**
மதுரை

முதற் பதிப்பு:- சூன், 1963
உரிமைபெற்றது

இ23:38.21195
N63

TAMIL NADU ARCHIVES LIBRARY
110036
MADRAS-600 008

விவேகாநந்தா அச்சகம்
மதுரை-1

# THE GREAT TEMPLE CITY

By K. PALANIAPPAN

*Published By*

Sri Meenakshi Temple Renovation Committee
MADURAI—1
(*All Rights Reserved*)

# அணிந்துரை

மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயிலில் மாபெரும் திருப்பணி நடந்துகொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், பொதுமக்கள், இக்கோயில் எப்பொழுது கட்டப்பட்டது, யாரால் கட்டப்பட்டது, இதுவரை நடந்த திருப்பணிகளின் விவரம், முதலியவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புவது இயல்பு. ஆனால் இவ்விவரங்களை அனைவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படியாகத் தனிப்பட்ட நூலை எவரும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. இக்குறையை நீக்கும் வகையில், கும்பாபிடேகத்தையொட்டி, கோயிலின் வரலாற்றைத் தொகுத்து வெளியிட வேண்டுமென்று திருப்பணிக்குழுவினால் முடிவு செய்யப்பட்டு, அந்தப் பொறுப்புக் குழுவின் அங்கத்தினரான திரு. கி. பழனியப்பன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொதுவாகத் தென்னகத்துத் திருக்கோயில்களின் வளர்ச்சியையும், சிறப்பாக அங்கயற்கண்ணியம்மன் கோயிலின் வரலாற்றையும், கோயிலின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருந்த, பாண்டியர்கள், நாயக்கர்கள் முதலியவர்களின் வரலாற்றையும்,

மதுரை மாநகரின் வரலாற்றையும் தொகுத்து ஒரு சிறு நூலாக வெளியிட்டுள்ளார்.

தன் உடல்நலம்சிறிது காலம்குன்றியிருப்பதைக்கூடப் பொருட் படுத்தாது, இப்பணியில்மிகுந்த ஆர்வம் காட்டிக் குறுகிய காலத்தில் இந்நூலைத் திரு. பழநியப்பன் எழுதியிருக்கின்றார். ஆலவாய் அப்பனும் அங்கயற்கண்ணியம்மையும் அவருக்கு நீண்ட ஆயுளையும் நல்வாழ்வையும் அளிக்கும்படி, திருப்பணிக் குழுவினரும் நானும் வேண்டுகிறோம்.

பொதுமக்கள் அனைவரும், நம் பெருங்கோயிலின் வரலாற்றைப் படித்துப் பயனடைவார்கள் என்று நம்புகிறோம்.

மதுரை,
20—5—1963.

பி. டி. ராஜன்.
தலைவர்,
**திருப்பணிக் குழு.**

# முன்னுரை

வேதியா வேத கீதா விண்ணவர் அண்ணு என்றென் (று)
ஓதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே அருள்செ யாயே.

அங்கயற்கண்அம்மை அரியணையில் அமர்ந்து, செங்கோல் ஏந்தி அரசுசெய்த இடம் மதுரைமாநகரம். சொக்கநாதப்பெருமான் சித்தராகவும், புலவராகவும், அரசராகவும், அடிமையாகவும், வீரராகவும், விலங்காகவும் தோன்றி அறுபத்துநான்கு திருவிளையாடல்களை நடாத்திய திருவிடம் மதுரையே யாகும். மதுரைமாநகர் தோன்றி, வளர்ச்சியடைந்தமைக்கும், அங்குள்ள மக்கள் சீரும் சிறப்பும்பெற்று வாழ்ந்துவருவதற்கும் துணையாக இருந்ததும், இருப்பதும், நகரின் நடுநாயகமாக விளங்கும் திருக்கோயிலே யாகும் என்பதை யாவரும் அறிவர்.

ஆகவே, மதுரைத் திருக்கோயிலுக்குத் திருப்பணி என்றால் அதுமிகச்சிறப்பு வாய்ந்ததாகவே இருக்க வேண்டுமென்று பொருளையோ, உழைப்பையோ பொருட்படுத்தாமல், பெருமளவில் திருப்பணி மேற்கொள்ளப்பெற்று இன்று கடவுள் மங்கலமும் நடைபெறும் நிலையில்உள்ளது. இத்தருணத்தில் இத்திருக்கோயிலை அமைத்த பெருமக்களைச் சற்று நினைவுகொள்ள

வேண்டியது தமிழ்மக்களின் கடமையாகுமென்று, திருப்பணிக் குழுத்தலைவர் தமிழவேள். பி. டி. இராசன் அவர்கள் எண்ணியது மிகப்பொருத்தமாகும்.

புலமையும் தகுதியும் உடையோர் பலரிருக்க, என்பாலுள்ள அன்பின் காரணமாக, இக்கோயில்வரலாற்றை ஆய்ந்து எழுதும்படி எனக்குத் தமிழவேள் அவர்கள் கட்டளையிட்டார்கள். அக்கட்டளையை நான் பெரும்பேருக ஏற்று, ஆலவாய் அண்ணலின் துணையுடன், என் சிற்றறிவிற்கு எட்டியவாறு கோயில் மாநகர்எனும் இந்நூலை ஆக்கியுள்ளேன்.

மதுரைக்கோயில் வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்குமுன், தமிழகத்தில் கோயில்கள்தோன்றி வளர்ச்சியடைந்த வரலாறு, பாண்டியநாட்டின் அரசியல் வரலாறு, திருவிளையாடற் புராண வரலாறு முதலியனபற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று, அவைகள் சுருக்கமாக முற்பகுதியில் கொடுக்கப்பெற்றுள்ளன. திருவிளையாடற்காலத்திற்குப் பின் நிகழ்ந்த சில அற்புத நிகழ்ச்சிகள் ஒரு பகுதியாகச்சேர்க்கப் பெற்றுள்ளன. கோயில் தோன்றியது முதல் இன்றுவரை அவ்வப்பொழுது கட்டப்பெற்ற மண்டபங்கள், திருச்சுற்றுகள், கோபுரங்கள் ஆகியவற்றின் விவரமும் அவற்றைச்செய்வித்தோர்களின் வரலாறும் முக்கிய இடம் பெற்றுள்ளன. ஆனால் அவர்களில் சிலருடைய வரலாறு முற்றிலும் கிடைக்கவில்லை. அவர்களைப்பற்றிய முழு விவரமும் வெளிவரவேண்டுமென்பதே என் நோக்கம். ஆகவே அப்பெருமக்களுடைய வழியினர் அன்புகூர்ந்து அவர்களைப் பற்றிச் சான்றுகளுடன் எனக்கெழுதியனுப்பினல் அவற்றையும் பின்னர்ச்சேர்த்து வெளியிட ஏதுவாகும்.

திருப்பணி வரலாற்றுடன் ஆலய அமைப்பின் அழகும் சிறப்பும் விவரமாகக் குறிக்கப்பெற்றுள்ளன. அதனுடன் பாண்டியர் காலம்முதல் இன்றுவரை, கோயிலாட்சி எவ்வாறு நடைபெற்று வந்துள்ளது என்பதும் சேர்க்கப்பெற்றுள்ளது. இப்பொழுது நடைபெற்ற மாபெருந் திருப்பணியைப்பற்றிய முழு விவரங்களடங்கிய அறிக்கையொன்று பின்னர்த்தனியாகத் திருப்பணிக் குழுவினரால் வெளியிடப்பெறுமாதலின் முக்கிய விவரங்கள் மட்டும் சுருக்கமாக இந்நூலிற் கூறப்பெற்றுள்ளன. ஆகவே இந்நூலில், கோயிலின் ஒவ்வொரு பகுதியிலும் எவ்வகைத் திருப்பணிகள் இப்பொழுது செய்யப்பெற்றுள்ளன என்ற விவரங்கள்மட்டும் ஆங்காங்கே குறிக்கப்பெற்றுள்ளன.

இந்நூலை இயற்றுவதற்கும் அச்சிடுவதற்கும் எனக்கு எல்லா வகையிலும் பெருந்துணையாக இருந்தவர்கள் திருவாளர்கள் பண்டித மீ. கந்தசாமிப் புலவர் அவர்கள், பண்டித. வித்துவான் ச. சாம்பசிவன் அவர்கள், புலவர்- சு. இராமச்சந்திரன் அவர்களாவர். அவர்களுக்கு எனது உளங்கனிந்தநன்றி உரித்தாகுக. கோயில்அலுவலகத்திலுள்ள சில சான்றேடுகளைப் படிப்பதற்கும், குறிப்பெடுத்துக்கொள்வதற்கும், கோயிலின் பல பகுதிகளைப் புகைப்படம் எடுத்தற்கும் மனமுவந்து உதவிய ஆலய ஆட்சிக் குழுத்தலைவர் உயர்திரு. அ.சிதம்பரமுதலியார் M.L.C. அவர்களுக்கும், இறைபணியாளர் திரு. எம். பரமசிவம் M. A., LL. B., அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. மேலும் பலவகைகளில் அவ்வப்பொழுது உதவிசெய்த திருப்பணிக்குழுத் தனி அலுவலர்,

திரு. கே. வி. குமரன்நாயர் B. A., அவர்கள், பொறியியலர் திரு. கே. வேங்கடராமன் அவர்கள் B. E., பேஷ்கார் திரு. தங்கவேல்தேசிகரவர்கள் ஆகியோர்க்கும் என் நன்றி உரியது.

என்னை இப்பணியில் ஈடுபடச்செய்து ஊக்குவித்தபெரியார் தமிழவேள் அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப் பட்டவனுவேன். இந்நூல் செவ்வனே முற்றுப் பெற நாளும் துணையாக இருந்த அங்கயற்கண்அம்மையையும், ஆலவாயண்ணலையும் வணங்கி வாழ்த்துகின்றேன்.

32, செனுய்நகர்,
மதுரை—13,
20—5—1963.

இங்ஙனம்,

கி. பழநியப்பன்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | தென்னகத்துத் திருக்கோயில்கள் தோற்றமும் வளர்ச்சியும் | 1 |
| 2 | பாண்டிய நாட்டின் அரசியல் வரலாறு | 15 |
| 3 | புராண வரலாறு | 50 |
| 4 | பிற்காலத்தில் நிகழ்ந்த சில அற்புதங்கள் | 97 |
| 5 | மதுரைத் திருக்கோயில் தோற்றமும் வளர்ச்சியும் | 107 |
| 6 | திருப்பணி விவரம் | 118 |
| 7 | திருப்பணி செய்வித்தோர் வரலாறு | 129 |
| 8 | ஆலய அமைப்பின் அழகும் சிறப்பும் | 147 |
| 9 | ஆலய ஆட்சி வரலாறு | 196 |
| 10 | மாபெரும் திருப்பணி | 216 |
| 11 | பிற்சேர்க்கை | 233 |

# ஆய்விற்குதவிய நூல்கள்

1 Nelson's Manual
2 Ramnad Manual
3 Madurai District Gazetteer
4 The Pandyan Kingdom — K. A. Nilakanda Sastri.
5 A History of South India ,,
6 Foreign Notices of S. India ,,
7 Indian Architecture — Percy Brown.
8 History of Indian and Eastern Architecture — James Fergusson.
9 List of the Antiquarian Remains in the Presidency of Madras —Robert Sewell.
10 Madras Government Oriental Series No. C X X I
11 Madura, the Temple City — J. P. Lasrado Shenoy.
12 Siva Temple Architecture —Rao Bahadur P. Sambanda Mudaliar
13 Mahabalipuram—Padma Trivikrama Narayanan.

14 திருவாலவாயுடையார் திருப்பணிமாலை
— தமிழ்ச்சங்கம்
15 சிதளப் புத்தகம் — மதுரைக் கோயிற் கையேடு
16 செந்தமிழ்த் தொகுதி 4, 5.
17 திருவிளையாடற்புராணம்—பெரும்பற்றப்புலியூர்நம்பி
18 ,, — பரஞ்சோதி முனிவர்
19 மூவர் தேவாரம்
20 இறையனார் அகப்பொருள் — நக்கீரனார் உரை
21 பாண்டியர் வரலாறு—டி.வி. சதாசிவபண்டாரத்தார்
22 கொங்குநாட்டு வரலாறு
— ம. இராமச்சந்திரன்செட்டியார்
23 கட்டுரைகள் — உ. வே. சாமிநாதய்யர்
24 மதுரை நாயக்கர் வரலாறு—அ. கி. பரந்தாமனார்
25 பாண்டியராசவமிச சரித்திரம் — R. அரிகரமய்யர்
26 திவ்விய தேச யாத்திரை சரித்திரம் — (பழம் பிரதி)
27 திருமலைநாயக்கர் சரித்திரம்
— மு. கோவிந்தசாமி ஐயர்
28 மாநகர் மதுரை — ச. சாம்பசிவன்
29 சோழர் கோயிற் பணிகள்
— J. M. சோமசுந்தரம் பிள்ளை
30 தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுகள்
— வி. சா. குருசாமிதேசிகர்
31 மதுரைத் திருப்பதிகங்கள்
— தருமபுர ஆதின வெளியீடு
32 மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்
வரலாறு — பஞ்சநதம்பிள்ளை

மதுரைக் கோயிலின் வரைப்படம்




A. சுவாமி கோயில், B. அம்மன் கோயில், D. பொற்றாமரை,
I. ஆயிரக்கால் மண்டபம்

உ

சிவமயம்

# தென்னகத்துத் திருக்கோயில்கள் தோற்றமும் வளர்ச்சியும்

திருக்கோயில்களில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று கோயில்களை முதலில் அமைத்துப் பின்பு அவற்றில் திருவுருவங்களை எழுந்தருளச் செய்தல்; மற்றொன்று திருவுருவங்கள் உள்ள இடங்களில் கோயில்கள் அமைத்தலாகும். எத்தகைய இடங்கள் ஆண்டவன் வழிபாட்டிற்கு உரியனவென்பதைச் சங்கப் புலவர்பெருமான் நக்கீரனார், திருமுருகாற்றுப்படையில் தொகுத்துக் கூறியுள்ளார். காடுகள், பொழில்கள், ஆற்றின் நடுவேயுள்ள அழகான திட்டுகள், ஆற்றங்கரைகள், குளக்கரைகள், நாற்சந்திகள், முச்சந்திகள், புதிய மலர்களையுடைய சோலைகள், ஊர்நடுவிலுள்ள மரத்தடிகள், அம்பலங்கள் போன்ற இடங்கள் வழிபாட்டிற்குரிய இடங்களாம்.

''காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும்.........''

(திருமுருகாற்றுப்படை-வரி 223—26)

என்பதிலிருந்து மேற்கூறிய இயற்கைஅழகு சூழ்ந்த இடங்களே வழிபாட்டிற்கு மிகவும் ஏற்றஇடங்கள் என்று நமது முன்னோர்களால் கருதப்பட்டனவென்பது தெளிவாகின்றது. ஆதியில் சிவலிங்கவழிபாடு செய்பவர்கள், அடர்ந்தகாடுகளில் அழகும்அமைதியும் சூழ்ந்த இடங்களைத் தேர்ந்தெடுத்துச் சிவலிங்கங்களை அவ்விடத்தில் அமைத்து வழிபட்டு வந்தனர். இவ்வாறு காடுகளில் காணப்படும் சிவலிங்கங்கள்பல தாமே தோன்றியன என்றும் அவைகளைத் தேவர்களும் இரவில் வந்து வழிபட்டனர்என்றும் நமதுபுராணங்கள் கூறுகின்றன. அச்சிவலிங்கங்கள் எங்கெந்த மரங்களின் அடியில் காணப்பெற்றனவோ அந்தந்த மரங்களே பிற்காலத்தில் 'தலவிருட்சங்'களாயின. தமிழகத்துத் திருக்கோயில்களின் தலபுராணங்களில் ஒவ்வொரு தலவிருட்சம் கூறப் பெற்றிருக்கும். அத்தலத்தின் ஆதிமூர்த்தி அம்மரத்தின் அடியில் இருந்ததென்பதே அதன்பொருள். மதுரையம்பதியின் தலவிருட்சம் கடம்பமரமாகும். கடம்பமரங்கள் நிறைந்த காட்டில் ஒருகடம்பமரத்தினடியில் ஆதியில் சிவலிங்கம் இருந்ததாகவும், அதை இந்திரன் கண்டு வழிபாடு செய்ததாகவும் திருவிளையாடற்புராணம் கூறுகின்றது.

''எப்புவனத் திலுமென்றும் கண்டறியா
அதிசயமும் எண்ணுக்கு எய்தாத்
திப்பியமும் இக்கடம்ப வனத்தின்று
கண்டுவகை திளைத்தேம் அங்கண்
வைப்பனைய ஒருபுனித வாவிமருங்கு
ஒருகடம்ப வனத்தி னீழல்

ஒப்பிலொளி யாய்முளைத்த சிவலிங்கம்
ஒன்றுளதென் றுரைப்பக் கேட்டான்''
(இங்-76)

இவ்வாறு காடுகளில்காணப்பட்ட சிவலிங்கங்களுக்கு நிழல்கொடுத்த மரங்களே கோயில்களாகவும் அவற்றைச் சுற்றியுள்ள செடிகொடிப்புதர்களே சுவர்களாகவும் விளங்கின. சிவபெருமான் விரும்பியணியும் பாம்புகள் மலர்மாலைகளாகவும், காட்டுமிருகங்களின் முழக்கங்களே வாத்திய முழக்கங்களாகவும் பறவைகளின் ஒலிகளே இன்னிசையாகவும் இருந்து வந்தன. சிலர் இத்தகைய அச்சந்தரும் இடங்களுக்கும்சென்று சிவலிங்கத்தை வழிபட்டு வந்தனர். இதை, நாம் கண்ணப்பநாயனர்சரித்திரத்திலிருந்துதெரிந்துகொள்ளலாம். கண்ணப்பநாயனர் என்ற திண்ணனர் ஒருநாள் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றார். அங்கு ஒருசிவலிங்கம் தனித்திருப்பத்தைக் கண்டு, ''ஐயோ! கொடியமிருகங்கள் வாழும் இக்காட்டிலே துணையேதுமின்றித் தனித்திருப்பது உமக்குத் தகுமோ?'' என்று மனம் வருந்தினர். அச்சிவலிங்கத்தின்மேல் யாரோ தண்ணீர்விட்டுச் சிலபூக்களையும் பச்சிலைகளையும் போட்டிருப்பதைக் கண்டார். இக்கொடிய காட்டில் வந்து இச்செயலைச் செய்தவர் யாரோவென்று வியந்து உடனிருந்த நாணனைக் கேட்டார். அதற்கு அவன், ''அதை நான் அறிவேன். முன்னெருகாலத்தில் உன் தந்தையோடு வேட்டையாட நான் இங்கு வந்தேன்; அப்பொழுது ஓர் அந்தணன் இத்தேவருக்குத் தண்ணீர்விட்டு மலர்களையும் இலைகளையும் சிந்தி உணவும் படைத்து ஏதோ கூறிப் போனதைக்கண்டேன். அவனே இன்றும் இதைச் செய்திருப்பான்'' என்று கூறினன்.

''வெம்மறக் குலத்து வந்த
வேட்டுவச் சாதி யார்போல்
கைம்மலை கரடி வேங்கை
அரிதிரி கானம் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார்
ஒருவரும் இன்றிக் கெட்டேன்
இம்மலைத் தனியே நீரிங்
கிருப்பதே!''• என்று நைந்தார்.
கைச்சிலை விழுந்த தோரார்
காளையார் மீள ''இந்தப்
பச்சிலை யோடு பூவும்
பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ?''
என்றலும் மருங்கு நின்ற
அச்சிலை நாணன் தானும்
''நானிது அறிந்தேன்'' என்பான்.

''வன்றிறல் உந்தை யோடு
மாவேட்டை ஆடிப் பண்டிக்
குன்றிடை வந்தோம் ஆகக்
குளிர்ந்தநீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி
ஊட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான்; இன்றும்
அவன்செய்த தாகும்'' என்றான்.

(பெரியபுராணம் கண்ணப்ப—107, 108, 109)

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வன சிவலிங்கங்கள் காடுகளில் தனித்திருக்குமென்பதும், அவைகளை மக்கள்

சிலர் சென்று வழிபட்டுவரும் வழக்கம் உண்டுஎன்பதுமே யாகும். இவ்வாறு காடுகளில் தனித்திருக்கும் மூர்த்திகள் மழையினாலும் வெயிலினாலும் பாதிக்கப்படுவதையும், காட்டுமிருகங்கள் அவைகளின் தூய்மையைக் கெடுப்பதையும் தடுக்கவேண்டும்என்று அங்குச்சென்று வழிபடுவோர் எண்ணினர்.

அவர்கள் சிவலிங்கத்தைச் சுற்றிப் பாதுகாப்பான ஓர் அறை அமைக்கத் திட்டமிட்டனர். காடுகளில் அவர்களுக்குக் கிடைத்த பொருள் மரங்களே யாகும், ஆகவே மரங்களைவெட்டி அவைகளைக் கொண்டு சிவலிங்கத்தைச் சுற்றிச் சிறு குடிசை அமைத்தனர். அது அதிக உயரமில்லாமலும் பாதுகாப்பிற்கு ஏற்றவகையிலும் அடக்கமாக இருந்தது. அதுவே கருவறையின் (கர்ப்பக்கிருகம்) முதல் தோற்றம் என்று கூறலாம். அப்பழக்கத்தையொட்டியே இன்றும் கோயில்களில்கருவறைகள் சிறியனவாகவும் பாதுகாப்புள்ளனவாகவும் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு மரத்தடிக் கோயில்கள் மரத்தால் கட்டப்பட்ட கோயில்களாக மாறின.

அச்சிறுகோயில்கள் அடர்ந்த காடுகளில் இருந்தபடியால் அவைகளைச்சுற்றிப் புதர்களும் செடிகொடிகளும் வளர்ந்து அக்கோயில்கள் இருக்கும் இடங்களை மறைத்து வந்தன. அதனால் அங்குவழிபடவருவோர் அக்கோயில்கள் இருக்கும் இடங்களைக் காணமுடியாது அங்குமிங்கும் அலைந்து அல்லற்பட வேண்டியநிலை ஏற்பட்டது. இதைத் தவிர்ப்பதற்கு ஒருவழியைக் கண்டனர். நான்கு உயரமான மூங்கில்களைவெட்டிக் கோயிலின் மேற்பகுதியில்

அவைகளைக் கூடாரம்போன்று வளைத்துக் கட்டினர். அவைகள் உயரமாக இருந்தபடியால் புதர்கட்கு இடையே கோயில்கள் இருக்குமிடத்தைத் தெரிந்து கொள்ள உதவின. அத்தகைய மூங்கிலின் அமைப்பே பிற்காலத்தில் கோயில்களில் விமானங்களாக மாற்றப் பெற்றன என்று கூறலாம்.

இவ்வாறு மரத்தாலான கோயில்கள் ஓரளவே பாதுகாப்புடையனவாக இருந்துவந்தன. யானைக் கூட்டங்களினாலும் காட்டுத்தீக்களினாலும் ஏற்படும் தீங்குகளை இக்கோயில்களால் தவிர்க்க முடியவில்லை. கி. மு. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இத்தகைய மரக்கோயில்களைச் சுட்ட செங்கற்களால் கட்டத்தொடங்கினர். மரக்கோயில்களும் செங்கற்கோயில்களும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியனவாகும். இன்று தமிழ்நாட்டில் மரத்தாலோ செங்கல்லாலோ ஆன ஆதிக்கோயில்கள் ஒன்று கூட இல்லையென்றாலும் மலையாளநாட்டில் இவை போன்ற பலகோயில்கள் இன்றும் இருப்பதைக் காணலாம்.

காட்டுக்கோயில்களைச் சுற்றி மக்கள் குடியேறத் தொடங்கினர்; வீடுகளைக் கட்டினர்; நகரங்களை அமைத்தனர்; கோயில்களைச்செங்கற்களால்திறம்படக் கட்டினர். கி. பி, 7ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முற்பட்ட காலங்களிலும்கோயில்கள்எவ்வாறிருந்தனஎன்று அப்பர் சுவாமிகளின் தேவாரத்தில் சிறந்த பல குறிப்புகள் காணப்படுகின்றன.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டு மற்றும்

கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே."

(அப்பர்தேவாரம்)

இத்திருத்தாண்டகத்தில் எண்வகைக்கோயில்கள் குறிக்கப்பெற்றிருப்பதைக் கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞர் டி. வி. சதாசிவப்பண்டாரத்தார்அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள்.

1. **பெருங்கோயில்:—** இவை செய்குன்றுகள்மேல் எடுப்பிக்கப்பெற்றவை. இவற்றை மலைக்கோயில்கள் என்றும் கூறலாம்.

2. **மாடக்கோயில்:–** இவைகளைப்பெருங்கோயில்கள் என்றும் கூறலாம். இவைகள் யானைகள் ஏருத வண்ணம் பூமி மட்டத்திற்குமேல் மிகவும் உயரமாகப் படிக் கட்டுகள் அமைத்துக் கட்டப்பெற்றவை.

3. **கரக்கோயில்:—** இவை தேர் வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பெற்ற கோயில்களாகும்.

4. **ஞாழற்கோயில்:** ஞாழல் என்னும் ஒருவகை மரத்தினாலான கோயில்கள்.

**5. கொகுடிக்கோயில்:** கொகுடி என்னும் ஒருவகை முல்லைக் கொடியினுல் சூழப்பட்ட கோயில்கள்.

**6. இளங்கோயில்:** பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் பொழுது அவற்றிற்கருகில் இறைவனை எழுந்தருளுவித்து வழிபாடு செய்யும் கோயில். இன்றும் திருப்பணிகள் செய்யும் பொழுது கோபுரம், விமானம் முதலியவற்றிற்குப் 'பாலாலயம்' (இளங்கோயில்) என ஒரு வைதிகச் சடங்கு செய்து. அவ்விமானம் போன்ற சித்திரமும் எழுதித் தனியிடத்தில் வைத்துவிட்டுத் திருப்பணி வேலை துவங்குவது வழக்கம்.

**7 மணிக்கோயில்:** அழகிய அஃதாவது மணி போன்ற விமானங்களையுடைய கோயில்.

**8 ஆலக்கோயில்:** ஆலமர நிழலில் எழுந்தருளியுள்ள இறைவனையுடைய கோயில்.

அப்பர்பெருமான் அருளிய மேற்கண்ட திருத்தாண்டகத்திலும் தென்னகத்துத் திருக்கோயில்களின் அமைப்பையும் வளர்ச்சியையும் நாம் முன் குறித்துள்ளபடியே காண்கின்றோம் மரநிழற்கோயில்களும், மரத்தாலான கோயில்களும், கொடிகள் சூழ்ந்த கோயில்களும், இளங்கோயில்களும், விமான முடைய கோயில்களும், பெருங்கோயில்களும் முறையே திருக்கோயில்களின் வளர்ச்சியை நமக்கு அறிவுறுத்துகின்றன.

வழிபாடு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப்பெற்ற இத்தகைய கோயில்கள் பல்லவர்

காலத்தில் ஒரு தனிச்சிறப்பைப்பெற்றன. கி. பி. 600 முதல் முந்நூறு ஆண்டுகள் பல்லவர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்தனர். கோயில் களைக் கலைக்கூடங்களாக்கத் தொடங்கியவர்கள் இவர் களே யாவர். ஆகவே திராவிட சிற்பக்கலைக்கும், கோயில் கட்டடக் கலைக்கும் பல்லவர்களே தந்தையர் என்று கூற லாம். அவர்கள் தலைநகரான காஞ்சிபுரத்தைச் சுற்றியே அவர்களுடைய சிறப்பு மிக்க கட்டடங்கள் பெரும்பாலும் அமைந்துள்ளன. ஒருசில தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி, மதுரைமுதலிய பகுதிகளில் காணப்படுகின் றன.

இறைவனுக்கு மரத்தினலும், செங்கற்களாலும் எழுப்பப்பெற்றகோயில்கள் காலப்போக்கில் சீர்குலை வதைத்தடுக்கவேண்டும்என்று பல்லவர்கள்கருதினர்கள்; மிகவும் உறுதியானபொருள் "கருங்கல்" என்பதை உணர்ந்தார்கள்; மலைகளில் இயற்கையாகஉள்ள பல குகைகளையும் கண்டனர்; அவைபோன்று பாறைகளில் குகைகளைக் குடைந்து அங்கே இறைவனின் திருவுருவங் களை எழுந்தருளச்செய்யவேண்டும்என்று எண்ணினர்; துணிந்து செயலாற்றவும் முற்பட்டனர்; அதற்குத்தக்க இடங்களைத் தேடினர்; மாமல்லபுரத்தில் அதற்குத் தேவையான சிறுகுன்றுகள் இருப்பதைக் கண்டனர். எண்ணற்ற கல்தச்சர்கள் தங்கள் கலைத்திறனை அங்கே காட்டத்தொடங்கினர். அவர்கள் படைப்பே இன்று மாமல்லபுரத்தில் நாம்காணும் உலகப்புகழ்பெற்ற கற்கோயில்களும் இரதங்களுமாகும்.

கி. பி 610 முதல் 640 வரை அரசாண்ட மகேந்திர வர்மன்முதலான பல்லவமன்னர்கள் குன்றுகளைக்

குடைந்து குகைக்கோயில்களை அமைத்தனர். அவைகள் பலதூண்களைக் கொண்ட ஒருமண்டபமாகவும் அதனுள் ஒன்று அல்லது இரண்டு சிறிய அறைகளையுடையன வாகவும் இருந்தன.

கி. பி. 640 முதல் 690 வரை ஆட்சிபுரிந்த மாமல்லன் முதலானோர் சிறு சிறு பாறைகளையே இரதங்களாகச் செதுக்கிக் கோயில்கள் அமைத்தனர். அக்கோயில்களின் அமைப்பும் தோற்றமும் அவற்றிற்குமுன்பிருந்த செங்கல், மரக்கோயில்களின் அமைப்பை ஒட்டியே இருக்க வேண்டும்என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அக் கோயில்களில் கருவறையின் உட்புறச்சுவரில் 'சோமாஸ் கந்தர்' உருவம் செதுக்கப்பெற்றிருக்கும். வாயிலில் உள்ள துவாரபாலகர்களின் உருவங்கள் நேர்முகமாகவும் இரண்டே கைகளையுடையனவாகவும் இருக்கும். கி பி. 674ல் மாமல்லன் மரணத்திற்குப்பின் மாமல்லபுரக் கோயில் வேலைகள் திடீரென்று அரைகுறையாக நின்று விட்டன. அதற்குக் காரணம் அவ்வேலைகளில் மிகவும் கவனம் செலுத்திய மாமல்லனின் மரணமாக இருக்கலா மென்று கருதப்படுகின்றது. அவனுக்குப்பின் பட்டத் திற்கு வந்த இராசசிம்மன் அவ்வேலைகளைத் தொடர்ந்து செய்யவில்லை. என்றாலும் கோயிற்கட்டடக்கலையை வேறு வகையில் உருவாக்கத் திட்டமிட்டான்.

பாறைகளும் குன்றுகளும் இருக்கும்இடங்களைத் தேடிச்சென்று கோயில்களை அமைப்பதைவிடப் பாறை களை உடைத்துக்கொண்டுவந்து நாம் விரும்பும் இடத்தில் கோயில்களை ஏன் அமைக்கக்கூடாது என்று இராச சிம்மன் எண்ணினான்; அதற்குத் திட்டமிட்டு வெற்றியும்

கண்டான். ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டிலும் பலகோயில்கள் இவ்வாறு எடுக்கப் பெற்றன. பல்லவர்களால்முதலில்உடைகற்களால்கட்டப் பட்டகோயில் மாமல்லபுரத்துக் கடற்கரையோரக் கோயில் என்று கருதப்படுகிறது. முதன்முதலாகக் கற்க ளால் கட்டப்பட்ட அக்கோயில் ஆயிரம் ஆண்டுகட்குப் பின்பு இன்றும்உறுதியாகக்காணப்படுவதைஎண்ணினால், அதைக் கட்டிய சிற்பிகள் கற்களை முதலில் பயன் படுத்தியவர்களேயாயினும் அதற்குமுன் பொதுவாகக் கட்டடக்கலையில் மிகத்தேர்ச்சிபெற்றவர்களாகவே இருந் திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை.

கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்பே கருங்கற் கோயில்கள் உருவாகியதற்கும் அதற்கு முன்பு செங்கல்-மரக்கோயில்கள் இருந்தமைக்கும் சான்றாக ஒரு கல்வெட்டும் உள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு குகைக் கோயிலில் உள்ள கல்வெட்டில், ''விசித்திரசித்தனை நான் பிர்மா, ஈசுவரன், விஷ்ணு என்ற மூன்று மூர்த்திகளுக்கும் கோயில் செங்கல், மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமலே செய்வித்தேன்'' என்று பொருள்படும் வடமொழிச்சுலோகம் காணப்படு கிறது. விசித்திரசித்தன்என்பது பல்லவ அரசனான மகேந்திரவர்மனுடைய மற்றொரு பெயர்.

கி. பி. 700-ஆம்ஆண்டில்பல்லவ அரசன்இராசசிம்மன் காஞ்சியில்கைலாசநாதர் கோயிலைக்கற்களால்கட்டினான். தற்காலக்கோயில்களின் அமைப்பான கருவறையும், மேல்விமானமும், அதற்குமுன் மகாமண்டபமும் இவற்றைச் சுற்றிப் பிரகாரமும் சுவரும் இக்கைலாச

நாதர் கோயிலில் காணப்படுகின்றன. கோயில்களையும் விமானங்களையும் அழகான வடிவங்களில் அமைக்கத் துவங்கியது இக்காலத்தில்தான். தமிழ் நாட்டின் அரசியலரங்கில் பல்லவர்கட்கும், சோழர்கட்கும், பாண்டியர்கட்கும் ஓயாத போராட்டம் நடந்து கொண்டிருந்ததன் விளைவாகச் சிலநூற்றுண்டுகள் கோயிற்கட்டடக் கலையில் ஒருவரும் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. கி. பி. 900-ல் தமிழ்நாட்டின் ஆதிக்கம் சோழர்கள்கைக்கு வந்தது. அதுமுதல் 250 ஆண்டுகள் சோழர்கள் ஆண்டனர். அக்காலத்தில்தான் தஞ்சைப்பெருங்கோயிலை இராசராசன் கட்டினன். கி. பி. 1025-ல் இராசேந்திரசோழன் கங்கைகொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டினன். இவ்விரண்டு கோயில்களும்தமிழகத்தில் கோயிற் கட்டடக்கலைக்கு ஒரு திருப்பத்தையும் பெருஞ்சிறப்பையும் கொடுத்தன. இவ்விருகோயில்கள் கட்டப்பெற்ற ஒரு நூற்றுண்டிற்குப்பின் நாட்டில் சோழர்களின் செல்வாக்குக் குறைந்தது. அதன் காரணமாகக் கோயிற்கட்டடக்கலையின் வளர்ச்சியும் குன்றியிருந்தது.

கி. பி. 1100-ல் தமிழகத்தில் பாண்டியர்கள் செல்வாக்குப் பெற்று 250 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். பல கலைகளிலும் பாண்டியர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தாலும் கட்டடக் கலையில் அவர்கள் அதிக கவனம் செலுத்தவில்லைஎன்றே தெரிகின்றது. அக்காலத்தில் திராவிடக்கட்டடக் கலை ஓரளவு வளர்ச்சியடைந்து வந்தாலும் குறிப்பிடத்தக்க தனிக்கட்டடங்கள் எவற்றையும் பாண்டியர்கள் அமைத்ததாகத்தெரியவில்லை. ஆனல் கோயில்களில் பல புதியஅமைப்புக்களை ஏற்படுத்தி

அவற்றை மேலும் அழகுறச்செய்தனர். சோழர் காலத்திய கோயில்களெல்லாம் கருவறைகளைச் சுற்றிலும் அவற்றின்மேலுள்ள விமானங்களிலும் மிக நுணுக்கமான அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பெற்றன. இவ்வாறு கருவறைஒன்றிலேயே அழகிய அமைப்புகள் இருக்கும்என்ற முறையினைமாற்றிப் பாண்டியர்கள் கோயிலின் மற்றைப் பகுதிகளிலும் நுணுக்கமான வேலைப்பாடுகள் அமைந்த கட்டடங்களைக் கட்டத் தொடங்கினர். கருவறைகளைச் சுற்றி மண்டபங்களமைத்துப் பிரகாரங்களையும் பெரிதாக்கிக் கோயில்களைச் சுற்றிலும் கோட்டைகளைப் போன்று உயரமான மதில்களையும் கட்டினர். அம்மதில்களில் உள்ள வாயில்களில் உயரமான கோபுரங்களைக் கட்டினர். இன்று நமது கோயில்களில் காணப்பெறும் வானளாவியகோபுரங்களை முதன்முதலில் கட்டத் துவங்கியவர்கள் பாண்டியர்களேயாவர். கோயில் தூண்களைச் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைத்தவர்களும் இவர்களேயாவர். அவைகளில் வளைவுள்ள போதிகைகளையும் அவற்றில் தாமரை மலர்களையும் அமைத்தனர். தூண்களின் மேற்பாகத்தில் 2 அங்குல கனத்தில் பலகைபோன்ற சதுரமான கல் தகடுகளையும் அமைத்துக் கட்டினர். பாண்டியர் காலத்துக்கோயிற்கட்டடக்கலையைப் பற்றி 'பெர்சி பிரௌன்' என்ற அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "பாண்டியர் காலத்துக்கோயிற் கட்டடக்கலை, சோழர்காலத்துச் செழிப்பான முதிர்ந்த நிலைக்கும் விஜயநகர அரசர் காலத்து அளவுக்குமீறிய நேர்த்திவாய்ந்த வேலைப்பாடுகட்கும் இடைப்பட்டதாகும்.

'Pandian period is a period of transition between the affluent maturity of the Cholas, and the exquisite though extravagant productions of Vijayanagar.'

பாண்டியர்களுக்குப்பின் கி. பி. 1350 முதல் 1736 வரை விஜயநகர நாயக்கர்கள் தென்னாட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அவர்கள் காலத்தில் கோயில் அமைப்புக்களில் பல புதிய மாறுதல்கள் ஏற்பட்டன. கோயில்களில் புதிய விழாக்களும் அவற்றை யொட்டிய சடங்குகளும் அதிகரித்தன. அவைகளுக்குத் தேவையான புதுக் கட்டடங்களும் அமைக்கப்பெற்றன. இதுவரை கோயில்களில் அம்மனுக்குத் தனியாகச் சன்னிதிகள் அமைப்பது வழக்கமில்லை. நாயக்கர்கள் காலத்தில்தான் அம்மனுக்குத் தனிக்கோயில்களும் சன்னிதிகளும் அமைக்கப்பெற்றன. மேலும், நூற்றுக்கால்மண்டபங்கள், ஆயிரக்கால் மண்டபங்கள், கலியாண மண்டபங்கள், ஊஞ்சல்மண்டபங்கள், வசந்தமண்டபங்கள் முதலியன இவர்கள் காலத்தில்தான் தோன்றின. தூண்களில் யாளிகளையும் தெய்வ உருவங்களையும் மனித உருவங்களையும் அமைக்கத் தொடங்கியதும் இவர்கள் காலத்தில்தான். இவ்வாறு பாண்டியர்கள் அமைத்த கோயில்களை நாயக்கர்கள் திருப்பணி செய்து பெரிய அளவில் விரிவுபடுத்தி அழகுறச் செய்தனர்.

தமிழகத்தில் இன்று காணப்பெறும் கோயில்களெல்லாம் நாயக்கர்கள் காலக்கோயில்களின் அமைப்பை யொட்டியே விரிவுபடுத்தப்பட்டனவாகும்.

# பாண்டிய நாட்டின்
# அரசியல் வரலாறு

**நாட்டின் தொன்மை:**

சேரர், சோழர், பாண்டியர்ஆகிய மூவேந்தர்கள் தமிழகத்தின் மூன்றுபெரும் பிரிவுகளாகிய சேர, சோழ பாண்டிய நாடுகளை முறையே ஆண்டுவந்தனர். அவர்கள் ஆதியில் எங்கிருந்துவந்தனர், அவர்களாட்சி எப்பொழுது துவங்கிற்று என்பவைகளைக் கண்டறிவதற்கான சரியான சான்றுகள் இதுவரை கிடைத்தில. நமது பண்டைய தமிழ் இலக்கியங்கள் ''படைப்புக்காலம்'' தொடங்கிச் சேர சோழ பாண்டியர்கள் இருந்துவருவதாகக் கூறுகின்றன. வடமொழி ஆதிகாவியமான வான்மீகிஇராமாயணத்திலும் வியாசமுனிவரின் மகாபாரதத்திலும் பாண்டியநாட்டைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கி. மு. 478ல் இலங்கைமன்னன்விசயன் பாண்டியனுடைய மகளை மணந்துகொண்டதாக 'மகாவமிசம்' எனும் இலங்கைவரலாறு கூறுகின்றது. கி.மு.269-ல்ஆட்சி புரிந்த அசோகனுடைய கல்வெட்டுகளிலும் பாண்டியரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கி. மு. 4-ஆம் நூற்றாண்டிலிருந்த வடமொழி இலக்கண ஆசிரியர்கள்

''பாண்டிய''என்னும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்துள்ளனர். கி. மு 3-ஆம் நூற்றுண்டில் சந்திரகுப்தன் அரசவைக்கு வந்த கிரீசுநாட்டுத்தூதுவர் 'மெகஸ்தனிஸ்' என்பவர் பாண்டியநாட்டு வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார். அதில் 'பண்டேயா' என்ற ஒரு பெண்மணி பாண்டியநாட்டை ஆண்டதாக அவர்கூறியுள்ளார். கி. பி, 79-ல் இருந்தமற்ருெரு மேனுட்டுவரலாற்ருசிரியரும் அவ்வாறே கூறியுள்ளார். இவைபோன்ற பல வரலாற்றுச் சான்றுகளின்மூலம் பாண்டியநாடு மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதை நாம் ஐயமறத் தெரிந்துகொள்ளலாம்.

தமிழ் இலக்கியங்களில் சில பாண்டியநாட்டின் தொன்மையை ஓரளவு அறுதியிட்டுக் கூறுகின்றன. இறையனுர்அகப்பொருளுக்கு உரையெழுதிய நக்கீரனுர் முச்சங்கவரலாற்றைக் குறிப்பிடுகின்ருர். தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பாண்டியர்கள் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்களைநிறுவினர். தலைச்சங்கம் 4440 ஆண்டுகள் இருந்தது என்றும், அதில் அகத்தியனுர் உள்பட 549 புலவர்கள் வீற்றிருந்தனர் என்றும், 4449 புலவர்கள் அச்சங்கத்தில் பாடல்களை அரங்கேற்றினர்என்றும், இடைச்சங்கம் 3700ஆண்டுகள் இருந்ததென்றும் அதில் அகத்தியர், தொல்காப்பியர் முதலிய 59 புலவர்கள்வீற்றிருந்தனரென்றும், 3700புலவர்கள் பாடல்களை அரங்கேற்றினர் என்றும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகள் இருந்ததென்றும் அதில் நக்கீரர் முதலிய 49 புலவர்கள் இருந்தனரென்றும், 449 புலவர்கள் பாடல்களை அரங்கேற்றினரென்றும் நக்கீரனுர்கூறுகின்ருர். தலைச்சங்கம் இருந்த தென்மதுரை நகரும் இடைச்சங்கமிருந்த கபாடபுரமும் கடற்பெருக்கில் மறைந்துவிட்டன. மூன்

ரும் சங்கமாகிய கடைச்சங்கம் 'உத்தரமதுரை' என்னும் இன்றைய மதுரைநகரில் இருந்தது. இதிலிருந்து மூன்று சங்கங்கள் 9990 ஆண்டுகள் இருந்தனஎன்பது தெரிகின்றது. மதுரையிலிருந்த கடைச்சங்கம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் முடிவுற்றதுஎன்பதை வரலாற்று மூலம் நாம் தெரிந்துகொள்கின்றோம். ஆகவே பத்தாயிரம் ஆண்டுகட்குமுன்பே தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரசர்கள்ஒருசங்கம் அமைத்தார்களென்றால் அதற்குமுன் எத்துணை ஆயிரம் ஆண்டுகட்குமுன் அம்மொழியும் அது பேசப்படும் நாடும் தோன்றியிருக்க வேண்டும்என்பதை நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

## பாண்டியர் வரலாறு

இடைச்சங்ககாலத்தில் பாண்டியர் தலைநகரமாக விளங்கிய கபாடபுரம் கடற்கோளினால் மறைந்தது. அப்பொழுது அங்கு அரசாண்டபாண்டியன்முடத்திருமாறனும் சங்கப்புலவர்களும் பல குடிமக்களும் கடற்கோளுக்குத் தப்பி வடக்கேசென்று 'மணலூர்' என்னும் ஒருசிற்றூரில் தங்கினர். பின்பு சில காலங்கழித்து அதைவிட்டு மதுரை மாநகரை அடைந்து முடத்திருமாறன் மூன்றும்தமிழ்ச் சங்கத்தை அங்கு நிறுவினான். அவனைத் தொடர்ந்து அவன் வழியில்தோன்றிய பாண்டியர்கள் மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்களில் பொற்கைப் பாண்டியன், இளம்பெருவழுதி, பூதப்பாண்டியன், ஆரியப்படைகடந்தநெடுஞ்செழியன், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் உக்கிரப் பெருவழுதி முதலிய பாண்டிய மன்னர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் அரசாண்ட பாண்டியன் வலிமையற்றவனாக இருந்தான். அச்சமயம் வடநாட்டிலிருந்து பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளைப்பேசும் களப்பிரர் என்ற ஓர்இனத்தினர் படையெடுத்து வந்து பாண்டியநாட்டைக் கைப்பற்றினர். அவர்கள் 300 ஆண்டுகள் பாண்டியநாட்டை ஆட்சிபுரிந்தனர். அப்பொழுது நாட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அரசாங்கமொழி வேறுமொழியாகித் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. மூன்றும் தமிழ்ச்சங்கமும் அழிந்தது. பௌத்தம், சமணம் ஆகிய சமயங்கள் ஆட்சியாளரின் ஆதரவுபெற்று வளர்ந்தன. சிவநெறி ஆதரவு இழந்து குன்றத்தொடங்கியது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காஞ்சியிலிருந்த பல்லவமன்னவர்கள் களப்பிரருடன் போர் தொடுத்தனர். அச்சமயம் பாண்டியநாட்டின் ஒருபுறத்தில் மறைந்து வாழ்ந்துவந்த பாண்டியர்வழித்தோன்றல் கடுங்கோன் என்பவன் பல போர்வீரர்களைத் திரட்டிக் கொண்டு களப்பிரருடன் போரிட்டான். அப்போரில் வெற்றியுங்கண்டு தன்நாட்டையும் கைப்பற்றினான். இவ்வாறு மதுரைநகரில் மீண்டும் பாண்டியர் ஆட்சியைக் கடுங்கோன் நிறுவியது, கி. பி. 575-ஆம் ஆண்டு என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. பாண்டியன்கடுங்கோனுக்குப்பின் அவன் வழியினர் தொடர்ந்து பாண்டியமன்னர்களாக இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் வடமொழிப் பெயர்களையே தாங்கிவந்தனர். அதற்கு, முந்நூறு ஆண்டுகள் களப்பிரர் ஆட்சியால் ஏற்பட்ட சூழ்நிலையே காரணமாக இருக்கலாம்.

கி. பி. 640-ல் மாறவர்மன் அரிகேசரி என்பான் பட்டத்திற்கு வந்தான். இவனே சுந்தரபாண்டியன், கூன்

பாண்டியன், நெடுமாறன்எனத்திருவிளையாடற்புராணத்தில் கூறப்படுபவன். இவன் மணிமுடிச்சோழன் என்பவனை வென்று அவன் மகளாகிய மங்கையர்க்கரசியாரைத் திருமணம் செய்துகொண்டான். குலச்சிறையார் என்பவர் இவனக்கு அமைச்சராக இருந்தார். இப்பாண்டியனுக்குச்சேரர்களும் பல குறுநிலமன்னர்களும் திறைசெலுத்திவந்தனர். இவன்எவ்வாறோ சமணமதத்தில் மிகப்பற்றுடையவனாக இருந்தான். அதனால் மக்களிடையேயும் அம்மதம் மிக்க செல்வாக்குப்பெற்று விளங்கியது. சைவசமயத்தில் அளவிலாப்பற்றுடைய மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அதைக்கண்டு மனம்வருந்தினர். அந்நிலையைப் போக்கவல்லவர் திருஞானசம்பந்தமூர்த்தியாவர் என்று கேள்வியுற்று அவரை மதுரைக்குவருமாறு அவ்விருவரும் அழைத்தனர். அவரும் அதைஏற்றுவந்துபல அற்புதங்களை நிகழ்த்திக் கூன்பாண்டியனையும் நாட்டுமக்களையும் மறுபடியும் சிவநெறியில் ஈடுபடச்செய்தார்.

கூன்பாண்டியனுக்குப்பின் அவன்மகன் கோச்சடையன் இரணதீரன் கி. பி. 670-ல் பட்டத்திற்கு வந்தான். இவன் நாற்பதாண்டுகள் ஒப்பற்றவீரனாக அரசாண்டான். சோழமன்னன் இவன்மகளை மணந்துகொண்டு மதுரையிற் சிலகாலம் தங்கியிருந்தான். அச்சமயம் சுந்தரமூர்த்திநாயனார், சேரமான் பெருமாள்நாயனாருடன் மதுரைக்குவந்தார். திருவாலவாய்ப்பெருமானையும் திருப்பரங்குன்றத்துப்பெருமானையும் சேர, சோழ, பாண்டியர்களும், சுந்தரமூர்த்திநாயனாரும் ஒருங்கே வழிபட்ட இணையற்றநிகழ்ச்சி அப்பொழுது நடைபெற்றது.

பாண்டியமன்னர்கள் அனைவரும் சைவநெறியைப் பின்பற்றினவர்களேயாவர் அதற்கு விதிவிலக்காகக் கி. பி. 765 முதல் 790 வரை ஆட்சிபுரிந்த நெடுஞ்சடையன் பராந்தகன் என்னும் பாண்டியன் வைணவசமயத்தில் மிக்க பற்றுடையவனாக இருந்தான். அதற்குக்காரணம் அவன் காலத்தில் வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவராகிய பெரியாழ்வார் பாண்டியநாட்டில் வாழ்ந்துகொண்டிருந்தமையேயாகும். அவ்வாழ்வாரிடத்தில் மிகவும் பற்றுக் கொண்ட பாண்டியன் அவரையே ஞானகுருவாகவும் ஏற்றுக்கொண்டான்.

கி. பி. 792-ல் வரகுணமகாராசன் என்ற பாண்டியன் பட்டத்திற்குவந்தான். இவன் 43 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். இவனை முதல்வரகுணபாண்டியன் என்று கூறுவர் அறிஞர். இவன்காலத்தில்தான் திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசகப்பெருமான் இருந்தனர் என்றுசில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இப்பாண்டியனுடைய சிவப்பற்றைக் குறித்து மாணிக்கவாசகர் திருச்சிற்றம்பலக்கோவையிலும், பட்டினத்தடிகள் மும்மணிக்கோவையிலும, நம்பியாண்டார்நம்பி கோயிற்றிருப்பண்ணிய விருத்தத்திலும் பாடியுள்ளனர். இவன் சோழநாட்டின்மேற் படையெடுத்துச் சோழமண்டலம் முழுவதையும் தன்னுட்சிக்குள் கொண்டுவந்தான். மேலும் தொண்டை மண்டலத்தின் தென்பகுதியும் இவன்ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஆகவே இவ்வரகுணன் சோழமண்டலத்தையும், தொண்டைமண்டலத்தையும், பாண்டிமண்டலத்தையும் ஒருங்கே ஆட்சிபுரிந்து பாண்டியர் முதற்பேரரசை நிறுவி மகாராசன் என்ற பெயரையும் பெற்றான்.

வரகுணபாண்டியனுக்குப்பின் அவன்மகன் சீமாற சீவல்லபன் கி. பி. 835-ல் பட்டத்திற்குவந்தான். இவன் பேராற்றலுடன் விளங்கினன். இவன் ஈழநாட்டின்மேற் படையெடுத்துப் பல நகரங்களைக் கொள்ளையிட்டுப் புத்த விவகாரங்களிலிருந்த பொற் சிலைகளையும் பல அரிய பொருள்களையும் கைப்பற்றிவந்தான். சிங்களமன்னன் நாட்டைவிட்டு மலேயாவிற்கு ஓடினன்.

கி. பி. 862-ல் சீவல்லபனுடைய மகன் வரகுணவர்மன் பட்டத்திற்குவந்தான். பல்லவன், சோழன், கங்கன் ஆகிய மூவரும்சேர்ந்து அவனை எதிர்த்துப் போரிட்டனர். கி.பி.880-ல் திருப்புறம்பயத்தில் கடுமையானபோர் நடை பெற்றது. அப்போரில் கங்கமன்னன் கொல்லப்பட்டான் எனினும் பாண்டியன் தோல்வியுற்றான். பல்லவனும் சோழனும் தாங்கள் இழந்தநாடுகளைக் கைப்பற்றினர் இப்போரின்பயனாய் வரகுணமகாராசன் தோற்று வித்த பாண்டியர் முதற்பேரரசு வலிமைகுன்றியது. இவ்வரகுணவர்மன் திருச்செந்தூர் முருகப்பெருமானிடம் மிகவும் ஈடுபாடுடையவன்; அக்கோயிலில் ஆண்டுமுழுவதும் நாள்வழிபாடு நடத்துவதற்கு நிவந்தம் வழங்கியுள்ளான்.

இவனுக்குப்பின் இவனுடையதம்பி பராந்தக பாண்டியன் அரியணையேறினன் இவன்சேரமன்னன்மகள் வானவன்மாதேவியை மணந்துகொண்டான். திருநெல் வேலிமாவட்டத்திலுள்ள சேர்மாதேவி (சேரன்மாதேவி) என்னும் ஊர் இவ்வரசியின்பெயரால் நிறுவப்பெற்றது. இவன்மகன் மூன்றாம் இராசசிம்மபாண்டியன் கி.பி 900ல்

பட்டத்திற்குவந்தான் இவனுக்கும் முதற்பராந்தக சோழனுக்கும் ஓயாது போர்நிகழ்ந்துகொண்டிருந்தது. இறுதியில் வெள்ளூரில் நடைபெற்ற போரில் பாண்டியன் தோல்வியுற்றுன். நாட்டை இழந்த இராசசிம்மன் சிங்கள நாட்டிற்குச்சென்று அந்நாட்டு அரசனுதவியுடன் அங்குத்தங்கியிருந்தான். பின்பு தன்னுடைய அரச கிரீடத்தையும் செங்கோல்முதலிய அரச சின்னங்களையும் அங்குவைத்துவிட்டுத் தமிழகம் திரும்பினுன்; தன்தாயார் பிறந்தகமாகிய சேரநாட்டிற்குச்சென்று அங்கு வசித்து வந்தான். இவன்காலத்தில் பாண்டியநாடு சோழரது ஆட்சிக்குட்பட்டுத் தாழ்ந்தநிலையை அடைந்து வீழ்ச்சி யெய்திற்று.

இராசசிம்மனுடையமகன் வீரபாண்டியன் பாண்டிய நாட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கி.பி. 946 முதல் இருபது ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். எனினும் இவனுக்கும் சோழனுக்கும்பலபோர்கள் நடைபெற்றன. இறுதியில் கி. பி. 966-ல் போர்க்களத்தில் இவன் மாண்டான்.

இவ்வீரபாண்டியனுக்குப்பின் பதின்மூன்றும் நூற்றுண்டுத்தொடக்கம்வரையில் ஆட்சிபுரிந்த பாண்டியர்கள். சோழர்களுக்குத் திறைசெலுத்தும் சிற்றரசர்களாகவே இருந்துவந்தனர். சோழர்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிச் 'சோழபாண்டிய" என்றபட்டத்துடன் மதுரையிலிருந்து ஆட்சிநடத்தச்செய்தனர். அவர்கள் ஆட்சி கி. பி. 1020 முதல் ஐம்பது ஆண்டுகள் நடைபெற்றது. எனினும் பாண்டியர்கள் உள்நாட்டுக் கலகம் விளைவித்துவந்தனர். கி.பி. 1070-ல் அதிராசேந்திர சோழன் இறந்தான். அவனுக்குப்பின் பட்டத்திற்குரிய

இளவரசர்கள் இல்லாமையால் சோழநாட்டில் குழப்பம் ஏற்பட்டது. அதைப்பயன்படுத்திப் பாண்டியர்கள் தங்கள்நாட்டைக் கைப்பற்றிச் சிலகாலம் அமைதியாக ஆண்டுவந்தனர்.

ஆனல் முதலாம் குலோத்துங்கசோழன் கி.பி.1081-ல் பெரும்படையுடன்வந்து பாண்டியநாட்டைக் கைப்பற்றி அதை மீண்டும் சோழர் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தான். எனினும் பாண்டியநாட்டில் ஆங்காங்குச் சில பகுதிகளைச் சிலபாண்டியர்கள் ஆண்டுவந்தனர்.

கி. பி. 1162-ல் சடையவர்மன் குலசேகரபாண்டியன் திருநெல்வேலியிலிருந்து பாண்டியநாட்டின் தென்பகுதியையும், பராக்கிரமபாண்டியன் மதுரையிலிருந்து வடபகுதியையும் ஆட்சிபுரிந்துவந்தனர். இருவரும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு ஒருவர்நாட்டை ஒருவர் கைப்பற்ற முயன்றனர். மதுரையைக் கைப்பற்றக் குலசேகரபாண்டியன் முற்றுகையிட்டான். பராக்கிரமபாண்டியன் இலங்கைமன்னன்உதவியை நாடினன். அவனும் பாண்டியனின் வேண்டுகோளுக்கிணங்கச் சிங்களப்படையொன்றை அனுப்பிவைத்தான். ஆனல் அப்படைவந்து சேர்வதற்குள் குலசேகரபாண்டியன், பராக்கிரமபாண்டியனையும் அவன் மனைவிமக்களையும் கொன்றுவிட்டான். இதனைக்கேள்வியுற்ற சிங்களப்படையின் தண்டல்நாயகன்சினங்கொண்டு குலசேகரபாண்டியனுடன் போர்தொடுத்தான். அதில் வெற்றிபெற்றுப் பின், கொலையுண்ட பராக்கிரமபாண்டியனின் கடைசி மகனாகிய வீரபாண்டியனைக் கூட்டிவந்து மதுரையில்

பட்டங்கட்டிவைத்தான். போர்க்களத்திலிருந்து தப்பியோடிய குலசேகரபாண்டியன் மீண்டும் ஒரு படையைத் திரட்டிக்கொண்டுவந்து வீரபாண்டியனை மதுரையை விட்டு ஓடும்படிசெய்தான். இதைக்கேள்வியுற்ற சிங்களத் தலைவன் ஒருபெரும்படையுடன்வந்து மறுபடியும் போரிட்டுக் குலசேகரனை வென்று இரண்டாமுறையாக வீரபாண்டியனுக்கு முடிசூட்டி வைத்தான்.

நாட்டைவிட்டு ஓடிய குலசேகரபாண்டியன் சிறிது காலம் திருநெல்வேலிப் பக்கம் தங்கியிருந்து பின் கி. பி. 1167-ல் சோழநாடு சென்று இரண்டாவது இராசாதிராசன் உதவியை நாடினன். சோழனும் ஒருபெரும் படையை அவனுக்கு உதவுமாறு அனுப்பினன். சிங்களப் படைக்கும்சோழப்படைக்கும் கடும்போர்நடைபெற்றது. இறுதியில் சோழன் வென்றனன்; சிங்களப்படைத்தலைவன் இருவரைச் சோழன்பிடித்து. அவர்கள் தலைகளை வெட்டிமதுரைக்கோட்டைவாயிலில்வைக்கச்செய்து குலசேகரபாண்டியனை மதுரைக்கரசனுக்கினன். இக்கொடுஞ் செயலைக் கேள்வியுற்ற சிங்களமன்னன் பராக்கிரமபாகு பெருஞ்சினங்கொண்டான்; சோழனையும் பாண்டியனையும் தாக்கமுயன்றுன்; ஆனுல் அம்முயற்சி பயன்தாராமையால் குலசேகர பாண்டியனுக்குப் பல பரிசில்களை அனுப்பிவைத்து அவனுடன் நட்புறவுகொண்டாட விரும்பினன். பாண்டியனும் அவற்றைஏற்று அவனுடன் நட்புக்கொண்டதுமன்றித் தனக்குதவிய சோழனுக் கெதிராகவும் பலகாரியங்களைச் செய்யத்தொடங்கினன். இதையறிந்த சோழன் சினங்கொண்டு நன்றிமறந்த குலசேகரனை நீக்கி வீரபாண்டியனை அரியணையேற்றி வைக்கும்படி ஆணையிட்டு ஒருபெரும்படையை அனுப்

பினுன். அவ்வாறே அச்சோழப்படை குலசேகரனை வென்று கி. பி. 1175-ல் பாண்டிய அரசை வீரபாண்டிய னுக்கு அளித்தது.

வீரபாண்டியன் ஐந்து ஆண்டுகளே அரசுபுரிந்தான். அவனும் சோழன்செய்த நன்றியைமறந்து சிங்களமன்ன னுடன்சேர்ந்து சோழனுக்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டான். அதைப்பொருது சோழன் சினங்கொண்டு போர்தொடுத்தான்: சிங்களப்படைகளையும் வீரபாண்டி யனையும் முறியடித்தான்; தன்னிடம் அடைக்கலம்புகுந் திருந்த குலசேகரபாண்டியனின் மகன் விக்கிரமபாண்டி யனை அரியணையேற்றினுன். நாட்டை இழந்து ஓடிய வீரபாண்டியன்,சேரன்உதவியால் நாட்டைமீட்டமுயன்ற முயற்சிகள் தோல்வியுறவே தன் குடும்பத்துடன் சென்று குலோத்துங்க சோழனிடம் சரணடைந்தான்.சோழனும் அவனை மன்னித்துப் பாண்டியநாட்டில் ஒருபகுதியைக் கொடுத்து அரசாளச்செய்தான். அவனும் சிறிதுகாலம் அமைதியாக அரசாண்டுவந்தான்.

மாறவர்மன் விக்கிரமபாண்டியனும் சோழனிடத்தில் மிக அன்புடையவனுக இருந்து கி. பி. 1190-ஆம் ஆண்டு வரை ஆட்சிபுரிந்தான். அவனுக்குப்பின் அவன்மகன் முதல்சடையவர்மன் குலசேகரபாண்டியன் பட்டத்திற்கு வந்தான். அக்காலத்தில் சோழநாட்டை ஆண்டுவந்த மூன்றும் குலோத்துங்கசோழன், பாண்டியன் தனக்குத் திறைசெலுத்திக் கீழ்ப்பட்டிருப்பதை எண்ணி, மதுரைமாநகரில் வீராபிடேகம் செய்துகொள்ள விரும் பினுன். ஆனுல் குலசேகரபாண்டியன் அதற்கு உடன்பட

வில்லை. அதையறிந்த சோழன் சினங்கொண்டு பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்தான். போரில் பாண்டியன் தோல்வியுற்று நாட்டைவிட்டு ஓடிவிட்டான். வெற்றி பெற்ற சோழன் மதுரைநகரில் பலமண்டபங்களை இடித்துத்தள்ளித் தான் விரும்பியபடி அந்நகரில் சோழபாண்டியன்'என்ற பட்டத்துடன் வீராபிடேகமும் செய்து கொண்டான். எனினும் சிலநாட்கள்கழித்துத் தன்சினம் தணிந்து குலசேகரபாண்டியனுக்கே நாட்டைத்திரும்பக் கொடுத்தான். அவனும் அதையேற்று நன்றியுடன் சோழனுக்குக் கீழ்ப்படிந்தே ஆண்டுவந்து கி. பி. 1218-ல் இறந்தான்.

முதல் சடையவர்மன் குலசேகரபாண்டியன் இறப்பதற்கு இரண்டாண்டுகளுக்குமுன் அவன் தம்பி முதல்மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்கு இளவரசுப்பட்டம்கட்டி வைத்தான். இவன்மிகவும் ஆற்றல் படைத்தவன். இவனே பாண்டிய அரசை நன்னிலைக்குக்கொண்டுவந்து அதைஒரு பேரரசாகநிறுவிய வீரனவான். இவன்காலத்தில்மூன்றும் குலோத்துங்க சோழன் இறந்து அவன்மகன் மூன்றும் இராசராசசோழன் சோழஅரசனுகவந்தான். அவன் ஆண்மையற்றவனுக இருந்தான். இதையறிந்த சுந்தர பாண்டியன் 1219-ல் சோழநாட்டின்மேல் படையெடுத்துச்சென்று அந்நாட்டைக்கைப்பற்றினுன். முன்பு மூன்றும் குலோத்துங்கசோழன் மதுரைநகரில் செய்த அழிவுவேலைகளுக்குப் பழிவாங்கும் எண்ணத்துடன் அதற்கும் பன்மடங்காகச் சுந்தரபாண்டியன் தஞ்சையிலும் உறையூரிலும் அழிவு வேலைகளைச்செய்தான். நகரங்களைத்தீக்கிரையாக்கிக் கூடகோபுரங்களையும் மணிமண்ட

பங்களையும் இடித்துத்தள்ளினன். சோழன், தன் சுற்றத்துடன் தலைநகரைவிட்டு ஓடினன். பாண்டியன் சோழரது முடிசூட்டு மண்டபத்தில் அமர்ந்து வீராபிடேகம் செய்து கொண்டான், பின் சோழனைக் கூட்டி வரச்செய்து தனக்கு ஆண்டுதோறும் கப்பம் கட்டவேண்டுமென்று ஆணையிட்டு நாட்டைத்திரும்பக்கொடுத்தான்; அதனல் 'சோணடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர்' என்ற மெய்க்கீர்த்தியும் பெற்ருன். இவ்வெற்றியின் சின்னமாகவே சுந்தரபாண்டியன் மதுரைக்கோயிலில் கிழக்கு ஒன்பதுநிலைக்கோபுரத்தை எடுப்பித்தான் என்று வரலாற்ருசிரியர்கள் கருதுகின்றனர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் சோழன், பாண்டியனுக்குக் கப்பம் கட்ட மறுத்துவிட்டான். அதனல் கி. பி. **1231**-ல் சுந்தரபாண்டியன் மீண்டும் படையெடுத்துச்சென்று சோழனை வென்ருன். சோழன், நாட்டைவிட்டு வடக்குநோக்கி ஓடினன். அங்குக்குறுநிலமன்னன் ஒருவன் அவனைப்பிடித்துச் சேந்தமங்கலத்தில் சிறையிவிட்டான். சுந்தரபாண்டியன் முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிடேகமும் விசயாபிடேகமும் செய்துகொண்டான். கி. பி. **1232**-ல் போசளமன்னனகிய வீரநரசிம்மன் பெரும் படையுடன்வந்து சோழனைச் சிறைமீட்டுச் சுந்தரபாண்டியனையும் போரில் வென்று இராசராச சோழனுக்குச் சோழநாட்டை மீட்டுக்கொடுத்தான்.

கி.பி. 1239-ல் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டியநாட்டை ஆட்சிபுரிந்த காலத்தில் சோழநாட்டை அரசாண்ட இராசேந்திரசோழன் பாண்டிய

நாட்டைக் கைப்பற்றினுன். அச்சமயம் பாண்டியனுடைய மாமனுகியபோசளமன்னன் வீரசோமேச்சுரன், சோழனுடன் போர்புரிந்து பாண்டியனுக்கு அவன் நாட்டை மீட்டுக்கொடுத்தான். அதனுல் அப்போசள மன்னன் "பாண்டியகுலசம்ரட்சகன்" என்ற மெய்க்கீர்த்தியும் பெற்ருன். இவ்விரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் பாண்டிய நாட்டில் போசளர் ஆதிக்கமும் செல்வாக்கும் மிகுந்திருந்ததற்கு இதுவே காரணமாகும்.

இப்பாண்டியனுக்குப்பின் முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் பட்டத்திற்குவந்தான். இவன் பெரும் வீரனுய்த் திகழ்ந்தான். இவன் காலத்தில் பாண்டியநாடு மிக்க உயர்நிலையடைந்து புகழுடன் விளங்கியது. தமிழகத்திலும் அதற்கப்பாலும் இருந்த அரசர்பலர் இவனுக்குத் திறைசெலுத்திவந்தனர். அதனுல் இவன் "எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீ சுந்தரபாண்டியதேவர்" என்று வழங்கப்பெற்ருன். இவன் சேரநாட்டின்மேல் படையெடுத்து அம்மலைநாடு முழுவதையும் தன் ஆட்சிக்குள்ளாக்கினுன், பின்பு சோழ அரசனையும்வென்று ஆண்டுதோறும் தனக்குத் திறைசெலுத்துமாறு செய்தான். அப்பொழுது சோழநாட்டை ஆண்டவன் மூன்ரும்இராசேந்திர சோழன். அவனுடன் சோழர் ஆட்சியும் முடிவுற்றது. அவன் இறந்தபின் சோழமண்டலம் பாண்டியன் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டது. சுந்தரபாண்டியன் போசளரையும் வென்று அவர்கள்நாட்டில் ஒருபகுதியையும் கைப்பற்றினுன்; இலங்கையரசனை வென்று அவனிடமிருந்து யானைகளையும் மணிகளையும் கப்பமாகப் பெற்ருன்; பல்லவன் அனுப்பிய திறைப்பொருளை ஏற்றுக்கொள்ளாமல்

அவனுடன் போரிட்டு வென்று அவனைத் தன் ஆணைக்கு அடங்கிநடக்கும் ஒரு சிற்றரசனாக்கித் திரும்பினான்; மகத நாட்டையும் கொங்குநாட்டையும் தன் ஆட்சிக்குள்ளாக்கினான்; காஞ்சிமாநகரையும் கைப்பற்றி, வடக்கேசென்று நெல்லூரையும் கைப்பற்றி அந்நகரில் வீராபிடேகம் செய்துகொண்டான். இப்போர் நிகழ்ச்சிகள் நடைபெற்றது, கி. பி. 1258 க்கு முன்னராகும். இவ்வாறு மாவீரனாகிய சுந்தரபாண்டியன் சமயப்பற்றுடையவனாகவும் விளங்கினான். சைவ, வைணவக்கோயில்கள் பலவற்றிற்குத் திருப்பணிகள் செய்துள்ளான். தில்லைத்திருக்கோயிலைப் பொன்னால் வேய்ந்து சிறப்பித்தான். அங்குள்ள மேலைக்கோபுரம் இவன்கட்டியதேயாகும். திருவரங்கக்கோயிலுக்கும் பொன்வேய்ந்து அங்கு முடிசூடிக்கொண்டான். இவ்வாறு இன்னும்பல கோவில்களுக்கு அவன் திருப்பணிகள் செய்துள்ளான். இவன் அரசாட்சி தமிழகம் எங்கும் பரந்திருந்தபடியால் இவன் தன் உறவினர் பலரை அரசப்பிரதிநிதிகளாக நியமித்து ஆங்காங்கு ஆட்சிபுரியச் செய்தான்.

இப்பேரரசனுக்குப்பின் முதல் மாறவர்மன் குலசேகரபாண்டியன் கி. பி. 1268-ல் பட்டத்திற்கு வந்தான். இவன்காலத்தில் பாண்டியநாடு மிக்கசெழிப்புடன் இருந்தது. அக்காலத்தில் இத்தாலிநாட்டிலிருந்து இங்குவந்த 'மார்க்கபோலோ' என்பவர் நாட்டின் செழிப்பைப் புகழ்ந்து தம் நூலில் எழுதியுள்ளார். அதேபோன்று மகமதிய சரித்திர ஆசிரியர் 'வாசப்' என்பவரும் எழுதியுள்ளார். இப்பாண்டியன் ஈழநாட்டின்மேல் படையெடுத்துச்சென்று அந்நாட்டிலிருந்து பெரும்பொருளைக்கொண்டு

வந்ததுடன் அங்கிருந்த புத்தர்பெருமானின் பல்லையும் கைப்பற்றிவந்தான். ஈழநாட்டுமன்னன் பாண்டியனைப் பணிந்துவேண்ட அப்பல்லைத் திரும்பக்கொடுத்தான். கி. பி. 1274-ல் சேரநாட்டின்மேல் படையெடுத்துக் கொல்லம் நகரைக் கைப்பற்றினன். இவன் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலுக்குப் பலதிருப்பணிகள் செய்துள்ளான்.

இம் முதல்மாறவர்மன் குலசேகரபாண்டியனுக்குச் சுந்தரபாண்டியன். வீரபாண்டியன், என இருபுதல்வர்கள் இருந்தனர். அவர்களுள் சுந்தரபாண்டியனே பட்டத்தரசியின் மகன். ஆனல் மற்றொரு மனைவியின் மகனுகிய வீரபாண்டியன் வீரமும் ஆற்றலுமுடையவனுக இருப்பதை எண்ணிக் குலசேகரபாண்டியன், கி. பி. 1296-ல் அவனுக்கு இளவரசுப்பட்டம் கட்டிவைத்தான். அதனுல் சுந்தரபாண்டியன் வெறுப்புக்கொண்டு கி.பி. 1310-ல்தன் தந்தையைக் கொன்றுவிட்டு அரியணையேறினன். இளவரசனுக இருந்த வீரபாண்டியன் மதுரையிலிருந்துதப்பிஓடிவிட்டான். எனினும் பாண்டியநாட்டின் ஒருபகுதி அவன் ஆட்சியின்கீழ் இருந்துவந்தது. சுந்தரபாண்டியனும் வீரபாண்டியனும் தமக்குள்ஓயாமல் போர்புரிந்துகொண்டேயிருந்தனர். இறுதியாகத் தோல்வியுற்ற சுந்தரபாண்டியன் கி. பி. 1310-ல் டில்லிசுல்தானுகிய அல்லாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனுகிய மாலிக்காபூரைத் தனக்கு உதவிசெய்யவருமாறு தென்னுட்டிற்கு அழைத்தான். இந்நிகழ்ச்சி தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒருபெரும் திருப்பத்தையுண்டாக்கியது.

**மகமதியர் ஆட்சி :**

சுந்தரபாண்டியன் மாலிக்காபூரின் உதவியை நாடிய பொழுதுஅத்தகைய ஒருவாய்ப்பையேவிரும்பிய மாலிக் காபூர் உடனே அதையேற்று ஒருபெரும் படையுடன் தமிழ்நாட்டில் புகுந்தான். பாண்டியநாடு அவனுல் கொள்ளையிடப்பட்டது. கோயில்கள் இடிக்கப்பட்டன. மக்கள் பலவகையான இன்னல்களுக்கு உள்ளாயினர். சுந்தரபாண்டியனுக்கு உதவி செய்ய மாலிக்காபூர் வந்தாலும் அவன் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் ஆகிய இருவருடைய செல்வங்களையும் கொள்ளையிட்டுச் சென்ருன். நாடு இவ்வாறு சீர்கேடான நிலையில் இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு குறுநில மன்னர்கள் பாண்டியனுக்குத் திறை செலுத்த மறுத்துஅவரவர்களே தனித்தனியாக ஆட்சி புரியத் தொடங்கிவிட்டனர்.

பராக்கிரமபாண்டியன் ஆட்சியின் பொழுது டெல்லி சுல்தாளுக இருந்த மகமதுபின்துக்ளக் தென்னுட்டைக் கொள்ளையிட ஒரு படையை ஜலாலுதீன் அசன்ஷா என்பவன் தலைமையில் அனுப்பிவைத்தான். அவன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி டெல்லி சுல்தானின் பிரதிநிதியாகவே மதுரையிலிருந்து அரசாண்டான். பின்பு கி. பி. 1330-ல் டெல்லியின் தொடர்பை ஒழித்து விட்டுத்தானே தனி அரசனுக ஆட்சி செய்யத் தொடங்கினுன். அவனுக்குப்பின் அவன் வழிவந்த ஏழு மகமதிய மன்னர்கள் 48 ஆண்டுகள் மதுரையை ஆட்சி புரிந்தனர். அவர்களாட்சியின்கீழ்க் கோயில்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தனவென்றும் மக்கள் பலவகைத்துன்பங்களுக்கு ஆளாயினர் என்றும் அப்பொழுது இந்நாட்டிற்குவந்த மகமதிய

சரித்திர ஆசிரியர் 'இபின்படுடா'(Ibn Batuta)தம்குறிப்பு களில் எழுதியுள்ளார்.

48 ஆண்டு மகமதியர் ஆட்சியின்பொழுது பாண்டியர்களில் சிலரும் நாட்டின் சிலபகுதிகளில் இருந்துவந்தனர். அவர்கள் நாட்டைத் திரும்பக் கைப்பற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் தோல்வியுற்றன.

**நாயக்கர் ஆட்சி :**

இவ்வாறு பாண்டியநாட்டில் மகமதியர் ஆட்சி நடைபெறுவதையும், அங்கு மக்கள்படும் அவதிகளையும் கேள்வியுற்ற விஜயநகர இந்துப்பேரரசைச்சேர்ந்த குமாரகம்பண்ணன் கி. பி. 1378-ல் பெரும்படையுடன்வந்து மகமதியர்களை வென்று பாண்டியநாட்டைமீட்டுப் பாண்டியரிடம் ஒப்பித்தான். 48 ஆண்டுகள் மூடிக்கிடந்த மீனாட்சி சுந்தரர்திருக்கோயிலை மீண்டும் திறக்கச்செய்து வழிபாடுகள் நடைபெற்றுவரும்படி செய்தான். மேலும் பாண்டியருக்குத் துணையாகத்தன் படையைச்சேர்ந்த சிலதலைவர்களை ஆங்காங்குஇருந்து மேற்பார்க்கும்படியும் செய்தான். ஆனால்சிலநாட்களில் அத்தலைவர்கள் தாங்களே நாட்டை ஆட்சிசெய்யத் தொடங்கினர். அதனால் பாண்டியர்கள் மதுரையைவிட்டுத் திருநெல்வேலிப்பகுதிக்குச் சென்று வாழவேண்டியநிலை ஏற்பட்டது. இவ்வாறு மதுரையிலிருந்து வெளியேறிய பாண்டியர்கள் தென்காசியிலும், கரிவலம்வந்தநல்லூரிலும் இருந்து தென்பாண்டிநாட்டை அரசாண்டுவந்தனர். அவர்களில் தென்காசிக்கோயிலைக்



தெற்குக் கோபுரம் (பக்கம் 181)

(பக்கம் 182, 183)



ஒன்பது நிலை மேலக்கோபுரமும், சாரங் கட்டப்பெற்ற ஐந்துநிலைக் கோபுரமும்

கட்டிய பராக்கிரம பாண்டியனும் (கி. பி. 1422—1463) நைடதம் முதலிய பல தமிழ் நூல்களை இயற்றிய அதிவீர ராமபாண்டியனும் (கி. பி. 1564—1604) குறிப்பிடத்தக்க வர்கள்.

இவ்வாறு பாண்டியர்கள் சில பகுதிகளில் இருந்தாலும் நாடு முழுவதும் விஜயநகரமண்டலாதிபதிகளின் கண்காணிப்பிலேயே இருந்துவந்தது. எனினும் பாண்டியர்கள் தங்களுக்குள்ளேயே உரிமைப் போராட்டத்தை ஓயாது நடத்திக்கொண்டிருந்தனர். அதனால்நாட்டில் குழப்பநிலை இருந்துவந்தது. அதையறிந்து சோழநாட்டிலிருந்த வீரசேகரசோழன், சந்திரசேகரபாண்டியனுடன் போர் தொடுத்துப் பாண்டியநாட்டைக் கைப்பற்றினான். பாண்டியன் தப்பியோடி விஜயநகரம்சென்று கிருஷ்ண தேவராயரிடம்(கி. பி. 1509—1529) முறையிட்டு அவருதவியை நாடினான். இராயரும் உடனே தம்படைத் தலைவரானநாகமநாயக்கரைஅனுப்பிச்சோழனிடமிருந்து நாட்டை மீட்டுப் பாண்டியனுக்குக் கொடுத்துவரும்படி ஆணையிட்டார்.

அவ்வாறே நாகமநாயக்கர் சென்று சோழனை வென்றாலும் தம் அரசர்கட்டளைப்படி பாண்டியனிடம்நாட்டை ஒப்படைக்கவில்லை. தாமே ஆட்சிசெய்யத்தொடங்கினார். அதைக்கேள்வியுற்ற இராயர் சினங்கொண்டு விசுவநாத நாயக்கரை ஒருபெரும்படையுடன் அனுப்பி அவர்தந்தை நாகமநாயக்கரைச் சிறைப்பிடித்து வரும்படிசெய்தார், பின்பு விசுவநாதரையே தென்மண்டலத்திற்கு அரசப் பிரதிநிதியாகநியமித்துச் சந்திரசேகரபாண்டியனுக்கு

ஆட்சிசெய்ய உதவினர். சந்திரசேகரபாண்டியன் சந்ததி யில்லாது இறக்கவே விசுவநாதர் கி. பி. 1529-ல் தளவாய் அரியநாதமுதலியாருடன் மதுரைக்குவந்து நாட்டின் ஆட்சியைத்தாமே மேற்கொண்டார். இன்றுள்ள மதுரை திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களும் திருவாங்கூரில் ஒருபகுதியும் விசுவநாதர் ஆட்சிக்குட்பட்டிருந்தன. நாட்டில் நல்லாட்சி நடைபெறத்தளவாய் அரியநாத முதலியார் பாளையப்பட்டு ஆட்சிமுறையை வகுத்து 72 பாளையங்களை ஏற்படுத்தினர். விசுவநாதநாயக்கரும் அரியநாத முதலியாரும் மதுரைப்பெருங்கோயிலுக்குப் பல திருப்பணிகளைச்செய்துள்ளனர்.

விசுவநாத நாயக்கருக்குப் பின் கி. பி. 1564ல் அவர் மகன் முதலாம் கிருஷ்ணப்பநாயக்கர் ஆட்சியை ஏற்ருர். அப்பொழுது பாளையக்காரர்களில் ஒருவரான தும்பிச்சி நாயக்கர் உள்நாட்டுக் கலகம் விளைவித்தார். ஆனல் அக் கலகம் அடக்கப்பட்டுத் தும்பிச்சி நாயக்கரும் கொல் லப்பட்டார். முதலாம் கிருஷ்ணப்பநாயக்கரும் மதுரைத் திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்துள்ளார். ஒன்பதுநிலை வடக்குக் கோபுரம், வெள்ளியம்பலம் முதலியன கட்டியவர் இவரே யாவார். இவர் 9 ஆண்டு ஆட்சிக்காலத்தில் மக்கள் அமைதியுடன் வாழ்ந்தனர். இவருக்கும் அரியாத முதலியாரே தளவாயாக இருந்தார்.

கி. பி. 1572-ல் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சியை ஏற்று 22 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். இவர்காலத்தில்தான் மதுரைக்குக் கிறித்தவப்

பாதிரிமார்கள் முதன்முதலாக வந்தனர். மதுரையின் ஒருபகுதியாகிய கோரிப்பாளையத்தில் மகமதியர்களின் மசூதிக்கு அவர் சில நிலங்களை விட்டுள்ளார். மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கும் சில திருப்பணிகள் செய்துள்ளார். இவற்றை நோக்கும்பொழுது சமய மாறுபாடில்லாது அவர் எல்லாச் சமயத்தினரையும் ஆதரித்து வந்தாரெனத் தெரிகிறது. அரியநாத முதலியாரே அவருக்கும் தளவாயாக இருந்தார்.

வீரப்பநாயக்கருக்குப்பின் அவர்குமாரர் இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கர் கி.பி. 1595-ல் பட்டத்திற்குவந்தார். இவர்காலத்தில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி தளவாய் அரியநாதமுதலியாரின் மறைவு என்றே கூறலாம். விசுவநாதநாயக்கர், முதலாம் கிருஷ்ணப்பநாயக்கர், வீரப்பநாயக்கர். இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கர், ஆகிய நான்கு அரசர்கட்கும் தொடர்ந்து தளவாயாக அமர்ந்து அரியபல பணிகளை ஆற்றிய அரியநாதமுதலியார் கி. பி. 1600-ல் காலமானார். மதுரைக் கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டியவர் இவ்வரியநாதமுதலியாரே யாவார்.

இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கருக்கு மக்கள் இல்லாமையால் அவருக்குப்பின் அவருடையதம்பி விசுவப்பரின் குமாரர் முத்துக்கிருஷ்ணப்பநாயக்கர் கி. பி. 1601-ல் பட்டத்திற்குவந்தார். இராமநாதபுரம் சேதுபதிபரம்பரையைத் தோற்றுவித்தபெருமை இவரையே சார்ந்ததாகும்.

முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கருக்கு முத்துவீரப்பர், திருமலை, குமாரமுத்து என மூன்று மக்களிருந்தனர்.

முதலாம் முத்துவீரப்பர் கி. பி. 1609-ல் பட்டத்திற்கு வந்தார். அவர் தமது முன்னோர்களைப்போல் விஜயநகர அரசிற்குக்கீழ்ப்பட்டிருக்க விரும்பவில்லை. விஜயநகரப் பேரரசும் வலிமைகுன்றியிருந்தது. அதனால் அவர் முழு உரிமையுடன் மதுரையை ஆளவிரும்பினார். நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு அதுவரை மதுரையிலிருந்து வந்த தலைநகரைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினார். பாண்டியர்வழியில்வந்த சிலசிற்றரசர்கள் தென்பாண்டி நாட்டில் இருந்தனர். அவர்கள் நாயக்கருக்குத் திரை செலுத்திவந்தனர். அவர் 14 ஆண்டுகள் ஆட்சிபுரிந்து மக்கட்பேறில்லாது இறந்தார்.

ஆகவே முத்துவீரப்ப நாயக்கருக்குப்பின் அவர்தம்பி திருமலைநாயக்கர் கி. பி. 1627-ல் பட்டத்திற்கு வந்தார். மதுரை நாயக்கர்கள் ஆட்சியின் சின்னமாக இன்றும் மக்களின் மனத்தில் குடிகொண்டிருப்பவர் திருமலை நாயக்கரே யாவர். விஜயநகரப் பேரரசு வலிமைகுன்றிய நிலையில் இருந்தபடியால் தமிழகத்தில் அவர்கள் செல்வாக்குக் குறைந்தது. அப்பேரரசுக்குட்பட்டிருந்த மதுரை, தஞ்சை, செஞ்சி, மைசூர் ஆகிய நாடுகளை ஆண்டோர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர். அதையறிந்த மகமதியர்கள் தென்னகத்தை நோக்கி வந்தனர். அதனால் திருமலை நாயக்கர் திருச்சிராப்பள்ளியிலிருந்த தலைநகரை மதுரைக்கு மாற்றிப் பாதுகாப்பாகக் கோட்டைகளைக் கட்டினார்; விஜயநகரத் தொடர்பைவிட்டுத் தனியரசாக ஆட்சி செய்தார். அவர் மைசூர் அரசனுடனும், திருவாங்கூர் அரசனுடனும், சேதுபதியுடனும் அடிக்கடி பலபோர்கள் புரியவேண்

டியதாயிற்று. இவ்வாறு அவருடைய 36 ஆண்டுகள் ஆட்சிக்காலத்தில் பல போர்கள் நடைபெற்ருலும் தம் பெயர் என்றும் நிலைத்திருக்கும்படி பல அரிய கட்டடங்களைக் கட்டுவித்தார். அதன்பயனுகவே இன்றும் அவர் புகழ் குன்ருது இருந்து வருகிறது மதுரைத் திருக்கோயில் முழுவதையும் புதுப்பித்துத் திருப்பணிகள் செய்து புது மண்டபத்தையும் கட்டுவித்தார். இன்று 'திருமலைநாயக்கர் மஹால்' என்று வழங்கும் அரண்மனையும், பெரிய தெப்பக்குளமும் அமைத்தவர் இவரேயாவர். மேலும் மீனுட்சிசுந்தரர் திருக்கோவிலுக்குப் பல நிவந்தங்கள் விட்டுப் புதிய முறையில் திருவிழாக்களையும் கொண்டாடச் செய்து கோயில் ஆட்சியையொழுங்குபடுத்தினுர்.

திருமலைநாயக்கர் புரிந்த போர்களில் அவருக்குப் பெருந்துணையாக இருந்தவர் அவர் தம்பி குமாரமுத்து நாயக்கர். அதனுல் திருமலைநாயக்கருக்குப்பின் அரசுரிமை தமக்கேயுரியது என்ற எண்ணத்துடன் அவர் இருந்தார். அவர் மைசூர்ப் போரில் வாகைசூடித் திரும்பிவந்து கொண்டிருக்கும்பொழுது மதுரையில் திருமலைநாயக்கர் இறந்துவிட்டார். உடனே திருமலைநாயக்கரின் மகன் இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர் கி. பி. 1659 ல் முடிசூட்டிக்கொண்டார். இதைக்கண்டு குமாரமுத்து சினங்கொண்டு தம் தமையன் மகனுடன் போர்தொடுக்க ஆயத்தமானுர். ஆனுல் போர் நிகழாதவாறு நடுவர் சிலர் அவர்களுடைய பூசலைத் தீர்த்துவைத்தனர். அதன்படி குமாரமுத்து நாயக்கர் சிவகாசியையும் திருநெல்வேலியில் சில பகுதிகளையும் பெற்றுத் தனி

யாட்சி நடத்தினர். முத்துவீரப்பர் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைப் பலப்படுத்தி மகமதியர் படையெடுப்பை வீரத்துடன் போரிட்டுத்தடுத்து மதுரையைக்காத்தார். இவ்வாறு 4 மாதங்களே வீரஞ்செறிந்த ஆட்சியை நடத்தி அவர் இம்மண்ணுலகை நீத்தார்.

இரண்டாவது முத்துவீரப்பருக்குப்பின் அவர்குமாரர் சொக்கநாத நாயக்கர் கி. பி. 1659-ல் பட்டத்திற்குவந் தார். அப்பொழுது அவருக்கு வயது 14; இளம்வயதி லேயே பட்டத்திற்குவந்த அவர் 23 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவராட்சியில் பல போர் நிகழ்ச்சிகளும் சதித் திட்டங்களும் நடைபெற்றுப்பலஇன்னல்கள் ஏற்பட்டன. அவருடைய தளவாய்,பிரதானிமுதலியோர்களேஅவராட் சியைக்கைப்பற்றத்திட்டமிட்டனர். இதையறிந்தசொக்க நாதர் சதிசெய்தவர்களைத் தண்டிக்க முயன்றபொழுது அவர்கள் வெளிப்படையாகப் பீஜப்பூர்சுல்தானுடன் சேர்ந்துகொண்டு திருச்சிராப்பள்ளியைத்தாக்கமுயன்ற னர். சொக்கநாதர் அப்படையெடுப்பைத் தடுப்பதில் வெற்றிபெற்றார். சேதுபதியும் தஞ்சாவூர் நாயக்கமன்ன னும் தமக்கு இப்போரில் உதவிசெய்ய வாராததை எண்ணி அவர்களுடன் பகைமைகொண்டார். செஞ்சியி லுள்ள பீஜப்பூர்சுல்தானின் தொல்லையையும் தஞ்சாவூர் நாயக்கர் தொல்லையையும் தடுப்பதற்காக இவர் தம் தலை நகரை மதுரையினின்றும் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றி னர். அதற்காகத்தம் பாட்டனர் திருமலைநாயக்கர் கட்டு வித்த அரண்மனையை இடித்து இடிபாடுகளைத் திருச் சிக்கு எடுத்துச்சென்று அதேபோன்று அங்கும் ஒரு மாளிகை கட்டவேண்டுமென்று முட்டாள்தனமாகத்

திட்டமிட்டார். அரண்மனையின் பெரும்பகுதியை அவ்வாறே இடித்தார். இது கி. பி. 1665-ல் நடைபெற்றது. தஞ்சை மன்னனுடன் போர்தொடுத்து அவனை முறியடித்துத்தம் தம்பி அழகிரியை அரசப்பிரதிநிதியாக நியமித்தார். ஆனால் அவன் இவருக்குக்கீழ்ப் படியாமல் தானே தஞ்சையைச் சுயேச்சையாக ஆட்சி புரியத் தொடங்கினான். போர்க்களத்தில் இறந்த தஞ்சை அரசனுடைய நண்பர்கள் பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினர். பீஜப்பூர் மன்னன், வெங்கோஜி என்ற மராத்தியப் படைத் தலைவனை அனுப்பித் தஞ்சையை மீட்டுக் கொடுக்கச் செய்தான். வெங்கோஜி அவ்வாறே தஞ்சாவூர் வந்து நாட்டை மீட்டுத் தஞ்சை நாயக்கமன்னர் மகனுக்குக் கொடுப்பதற்குமாறாகத் தானே நாட்டை ஆளத்தொடங்கினான். தமிழகத்தில் மராத்திய ஆட்சி இவ்வாறு துவங்கியதற்குச் சொக்கநாத நாயக்கர் ஒரு காரணமாவார். இவ்வாறு சொக்கநாதர் பல போர்களில் ஈடுபட்டு நாட்டில் பஞ்சமும் வறுமையும்தாண்டவமாடச் செய்தார். மக்கள் அரசரிடம் வெறுப்புக் கொண்டிருந்தனர். அதைப் பயன்படுத்தி அவருடைய படைத் தலைவர்களில் ஒருவனான 'ருஷ்டம்கான்' ஆட்சியைக் கைப்பற்றி இரண்டாண்டுகள் கொடுங்கோலாட்சி நடத்தினான். அப்பொழுது சேதுபதி சில பாளையக்காரர்களுடன் சேர்ந்து ருஷ்டம்கானின் ஆட்சியை யொழித்துச் சொக்கநாதரை மீண்டும் அரியணை ஏற்றினர். இவ்வாறு பல அல்லல்களுக்காட்பட்டு மனவேதனையால் கி. பி. 1682ஆம் ஆண்டில் சொக்கநாத நாயக்கர் இறந்தார்.

சொக்கநாதரின் மனைவியே புகழ்பெற்ற மங்கம்மா

என்பவர். அவர்கள் குமாரர் மூன்றும் முத்துவீரப்ப நாயக்கர் பட்டத்திற்கு வந்தார். அவர் அரியணையேறிய பொழுது மதுரை நாட்டின் ஒரு பகுதியே அவரிடம் இருந்தது. மைசூர் மன்னனும் தஞ்சை அரசனும், சேதுபதியும் நாட்டின் பெரும்பகுதியைக் கைப்பற்றி யிருந்தனர். ஆனால் அவர் ஆட்சிக்கு வந்த நான்காண்டு களுக்குள் தம் தந்தை இழந்த பகுதிகளை எல்லாம் பெரு முயற்சியால் மீண்டும் பெற்றார். அவர் நீதியுடனும் சமய வேறுபாடின்றியும் 7 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். கி. பி. 1689-ல் அவர் அம்மைநோய் கண்டு இறக்கும்பொழுது அவர் மனைவி முத்தம்மா கருவுற்றிருந்தாள். கணவன் இறந்ததும் அவள் உடன்கட்டை ஏற முனைந்து நின்றாள். ஆனால் மாமியாரான மங்கம்மாவின் வேண்டுகோட் கிணங்கிக் குழந்தையைப் பெறும்வரை காத்திருந்தாள். அவ்வாறே குழந்தை பெற்ற நான்காநாள் தற்கொலை செய்து கொண்டு உயிர்நீத்தாள்.

அக்குழந்தைக்கு விசயரெங்க சொக்கநாதன் எனப் பெயரிடப்பெற்றது. மூன்றுவது மாதத்திலேயே அக் குழந்தைக்குப் பட்டங்கட்டி அதன் சார்பாக மங்கம்மா ஆட்சியை மேற்கொண்டார். கி. பி. 1689-ஆம் ஆண்டு முதல் கி. பி. 1706 வரை 17 ஆண்டுகள் இவ்வாறு மங்கம்மா ஆட்சிநடத்தினர். அக்காலத்தில் மகமதியரின் படையெடுப்பைத் தடுத்துவந்த சிவாஜி இறந்ததனால் ஔரங்கசீப் தன் ஆதிக்கத்தைத் தென்னகத்தில் செலுத்தத் துவங்கினன். மைசூர், தஞ்சை முதலிய நாட்டு மன்னர்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்து உடன் படிக்கை செய்து கொண்டார்கள். அவ்வாறே மங்கம்மா

(பக்கம் 184, 186)



சாரம் கட்டப்பெற்ற ஒன்பதுநிலை வடக்குக் கோபுரமும் ஐந்துநிலைக் கோபுரமும்.



(கிழக்குக் கோபுரம்)
பக்கம் 186)

வும் செய்துகொண்டார். ஆனால் அவர்கள் உதவியால் பகைவர் கைப்பற்றியிருந்த தம் நாட்டுப் பகுதிகளை எளிதாக மீட்டுக்கொண்டார். இதுவரை மதுரை ஆட்சிக்கு அடங்கிவந்த திருவாங்கூர்மன்னன் திறை செலுத்த மறுத்தான். அதற்காக மங்கம்மா அவனுடன் போர் தொடுக்க வேண்டியிருந்தது. இவ்வாறே தஞ்சாவூர் மன்னனுடனும் சேதுபதியுடனும் பலகாரணங்களால் மங்கம்மா போரிடநேர்ந்தது. மங்கம்மாவினுடைய பட்டத்திற்குரிய பேரன் விசயரெங்கசொக்கநாதன் வயது அடைந்தும் மங்கம்மா ஆட்சியை அவனிடம் ஒப்படைக்கவில்லை. அதற்காக மக்களால் அவர் சிறையிடப்பட்டுப் பசியால்வாடி வருந்தி மாண்டார் என்று கூறப்படுகிறது. மங்கம்மா பல அறச்சாலைகளையும், கோயில்களையும், நீண்ட சாலைகளையும் ஏற்படுத்தி நாட்டை வளம்பெறச் செய்தார்.

கி. பி. 1706-ல் விசயரெங்க சொக்கநாதர் பட்டத்திற்கு வந்தார். இவர் மிகவும் கோழையாய் இருந்தார். இவருடைய 26 ஆண்டு ஆட்சிக்காலத்தில் வைதீகச் சடங்குகளுக்காகவும் கோயில் திருவிழாக்களுக்காகவும் பெரும்பொருளைச் செலவிட்டார். உள்நாட்டுக் கலகம் ஒன்று இவர்காலத்தில் நடைபெற்றது. பெரும் போர்களில் இவர் ஈடுபடவில்லையென்றாலும், இராமநாதபுரம் சேதுபதியின் உதவிக்காகத் தொண்டைமானுடன் சேர்ந்து தஞ்சைமன்னனை எதிர்த்தார். இவர் ஆண்டு தோறும் பலபுண்ணியத் தலங்கட்கு யாத்திரை செல்லுவதையே முதன்மையான வேலையாகக்கருதி நாட்டிற்குரிய கடமையை மறந்ததால் இவராட்சியில் நாடு சீர்கேடான

நிலையிலிருந்தது. இவர் கி. பி. 1732-ல் சந்ததியின்றி இறந்தார்,

விசயரெங்கசொக்கநாதர் சந்ததியில்லாது இறக்கவே ஒரு பிள்ளையைத் தத்தெடுத்துக்கொண்டு அவர் மனைவி மீனாட்சி ஆட்சியை மேற்கொண்டாள். ஆனால் அப்பிள்ளையின் தந்தையான பங்காருதிருமலை, ஆட்சியைத் தானே பெறவேண்டும் என்று கலகம் செய்தான். அப்பொழுது ஆர்க்காட்டை ஆண்டுவந்த நவாப், தமிழகம் முழுவதையும் கைக்கொள்ளச் சமயம்பார்த்திருந்தான். மதுரையில் நடந்த கலகத்தைப் பயன்படுத்தி ஆர்க்காட் நவாப், ஒரு பெரும்படையுடன் சந்தாசாயபுவை அனுப்பிவைத்தான். பங்காருதிருமலை, அவனுதவியை நாடினான். அதற்காக நிறையப் பொருளையும் கொடுத்தான் மீனாட்சியும் சந்தா சாயபுவின் சொற்களைநம்பி ஏராளமான பொருளைக் கொடுத்தாள். சந்தாசாயபு தந்திரமாகத் திருச்சிக் கோட்டையைக் கைப்பற்றி மீனாட்சியைச் சிறைப் படுத்தினான். பங்காருவை நாட்டைவிட்டு விரட்டினான். சிறைப்பட்ட மீனாட்சி தற்கொலை செய்து கொண்டாள். இவ்வாறு மதுரைநாட்டில் கி. பி. 1529-ல் துவங்கிய நாயக்கராட்சி 207 ஆண்டுகளுக்குப்பின் கி. பி. 1736-ல் முடிவுற்றது.

### மீண்டும் முகம்மதியர் ஆட்சி :

மதுரையைக் கைப்பற்றிய சந்தாசாயபு ஆர்க்காட் நவாப்பிற்கு அடங்கிநடவாமல் நாட்டைத் தன் விருப்பம்போல் ஆட்சி செய்யத் தொடங்கினான். திருச்சிராப்

பள்ளிக்கோட்டையைப் பலப்படுத்திக்கொண்டு தன்னு டன் பிறந்த இருவரைத் திண்டுக்கல்லிலும் மதுரையிலு மிருந்து ஆட்சி செய்யுமாறு ஏற்பாடு செய்தான். தஞ்சா வூர் அரசனையும் தனக்குக் கீழ்ப்படியும்படி செய்தான். சந்தாசாயபு தன் மருமகனுனபடியால் ஆர்க்காட் நவாப் அவனைக் கண்டியாமல் விட்டுவிட்டான்.

தஞ்சாவூர் மன்னனும் பங்காருதிருமலையும் மராத்தி யரின் உதவியை நாடினர். மராத்தியர் கி. பி. 1740-ல் ஒரு பெரும்படையுடன் வந்து ஆர்க்காட் நவாப்புடன் போரிட்டு வெற்றிபெற்றதுடன் நவாப்பையும் கொன்ற னர். பின்னர் நவாப்பின்மகன் சௌதார்அலி (Safdar Ali) யிடம் நாட்டை ஒப்படைத்துத் தங்களுக்குக் கீழ்ப் படிந்து ஆளும்படி செய்தனர். சந்தாசாயபு இப்போரில் தன் தந்தைக்கு உதவிசெய்ய வாராதது குறித்துச் சௌதார் அலி மனவருத்தங் கொண்டான்; அதற்குப்பழி வாங்கவும் சமயம் பார்த்திருந்தான். சந்தாசாயபு சற்றும் எதிர்பாராதநிலையில், சௌதார் அலியின் அழைப்பிற் கிணங்க மராத்தியர், திடீரென்று திருச்சிராப்பள்ளி யைத் தாக்கி முற்றுகையிட்டனர். அவர்கள் சந்தா சாயபுவைச் சிறைப்பிடித்துச் சென்றதுடன் மதுரையி லும் திண்டுக்கல்லிலுமிருந்த அவன் சகோதரர் இருவ ரையுங்கொன்றனர். மதுரைநாடு மராத்தியர் வசமா யிற்று. மோராரிராவ் (Morari Rao) என்பவரை ஆளுந ராக ஏற்படுத்தி மராத்தியர் நாட்டை ஆளச்செய்தனர். ஆனல் அவர் இரண்டு ஆண்டுகள்தான் நாட்டை ஆள முடிந்தது. ஹைதராபாத் நிஜாம் தம் ஆதிக்கத்தைக் கர்னடகத்தில் விரிவுபடுத்தப் படையெடுத்துவந்து

கி. பி. 1744-ல் அன்வாருதீனை (Anwar-ud-din) ஆர்க்காட் நவாப்பாக்கினர். மோராரிராவ் மதுரையை விட்டுத் துரத்தப்பட்டார். மதுரைநாடு முழுவதும் ஆர்க்காட் நவாப் ஆட்சிக்குட்பட்டது.

## ஆட்சியில் ஆங்கிலேயர் தலையீடு:—

கி. பி. 1748-ல் மராத்தியரிடமிருந்து சந்தாசாயபு விடுதலை பெற்று ஒரு படையைத்திரட்டிக்கொண்டு ஆர்க்காட் நவாப்புடன் போர்தொடுத்தான். அப்போரில் வெற்றியும்பெற்று நவாப் அன்வாருதீனையும் கொன்றன் நவாப்பின் மகன் முகமதலி தப்பிச்சென்றுதானே நவாப். என்று திருச்சியிலிருந்துகொண்டு ஆட்சி செய்யத் தொடங்கினன், சந்தாசாயபு, முகமதலியுடன் போர் தொடுத்தான். அவர்களிருவருக்குமிடையே நடைபெற்ற போர்களில் தமிழ்நாடு முழுவதும் ஈடுபடவேண்டியதாயிற்று. அச்சமயம் நாட்டில் வியாபாரத்தை முன்னிட்டு வந்திருந்த பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் அவரவர் தேவைக்கு அதிகமாகப்படைகளை வைத்திருந்த படியினல் அவர்களால் அமைதியாக இருக்கமுடியவில்லை. போரிடுவதற்கு ஏதாவதொரு வாய்ப்புக் கிடைக்குமா வென்று எதிர்பார்த்திருந்தனர். சந்தாசாயபு-முகமதலி சண்டை அவர்கட்கு அவ்வாய்ப்பைக் கொடுத்தது. பிரெஞ்சுக்காரர்கள் சந்தாசாயபுவையும் ஆங்கிலேயர்கள் முகமதலியையும் ஆதரித்தனர். இவ்விருநாட்டினரும் சந்தாசாயபுக்காகவும் முகமதலிக்காகவும் போரிட்டாலும் உண்மையில் தென்னட்டை அவர்களில் யார் கைப்பற்றுவது என்பதற்காகவே போரிட்டார்கள் என்று கூற வேண்டும்.

இவ்வாறு நடைபெற்றபோரில் பலவெற்றிதோல்வி களுக்குப்பின் கி. பி. 1751-ல் சந்தாசாயபுவே ஆர்க்காட் நவாப் பதவியைப்பெற்றான். எனினும் முகமதலி மதுரை யையும் திருநெல்வேலியையும் கைப்பற்றித் தானே நவாப் என்று திருச்சியில் இருந்தான். சந்தாசாயபு மதுரைக்கோட்டையை முற்றுகையிட்டான். அவன் படைத்தலைவர்களில் ஒருவனான ஆலம்கான் (Alam Khan) தந்திரமாகக் கோட்டையைக் கைப்பற்றியதுடன் படை வீரர்களின் நன்மதிப்பையும்பெற்றான். அப்படைவீரர்கள் அவனையே ஆளுநராக மதுரைக்கு ஆக்கினர். எனினும் அவன் சந்தாசாயபுவிற்குக் கீழ்ப்படிந்தே இருந்தான். ஆலம்கான் ஓராண்டே ஆட்சிபுரிந்தான். கி. பி. 1752-ல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற போரில் அவன் உயிர் துறந்தான். அப்பொழுது மதுரையை ஆலம்கானால் நியமிக்கப்பெற்ற மாயனா (Mayana) என்பவன் ஆண்டுவந் தான்.

மூன்றாண்டுகள் கழித்துக் கி. பி. 1755-ல் ஆங்கிலேயர் உதவியுடன் மதுரை நாட்டைக் கைப்பற்றுவதற்காக முகமதலி ஒரு படையை அனுப்பி வைத்தான். அப்படை யுடன் அவனுடைய சகோதரர்களான மகபூசுகானும் (Mahfuz Khan) மகமதுயூசுப்கானும் (Muhammad Yusuf Khan), சென்றனர். அவர்கள் மதுரைக் கோட்டையை எதிர்ப்பின்றிக்கைப்பற்றினர். மகபூசுகான் ஆங்கிலப்படை தலைவன் காலனல் ஹீரானிடம் (Colonel Heron) 15 இலட் சம்ரூபாய் ஆண்டுதோறும் குத்தகையாய்க் கொடுப்பதாக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு மதுரை, திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களையும் கைப்பற்றினான். ஆனால்

அவனால் ஆட்சியைச் சரிவர நடத்த முடியவில்லை. ஒப்பந் தப்படி குத்தகைப் பணத்தைக் கொடுக்கவோ தன் பாது காப்பிற்கு வைக்கப்பட்டிருந்த ஆங்கிலப் படைவீரர் களுக்கு ஏற்பட்ட ஊதியத்தைக் கொடுக்கவோ அவனால் முடியவில்லை. இவற்றுக்கெல்லாம்காரணம் பாளையக்காரர் களின் ஒத்துழையாமையும் அழிவு வேலைகளுமேயாகும் ஆகவேதீவிரமானநடவடிக்கைகள்எடுக்கவேண்டுமென்று கி. பி. 1756-ல் ஆங்கிலேயர்கள் ஒரு படையைமகமது யூசுப்கான் தலைமையில் அனுப்பிவைத்தனர்.

யூசுப்கான் தன் படையுடன் திருநெல்வேலியை நோக்கிச் சென்றான். அதையறிந்து மகமதுபார்க்கி (Muhammad Barki) என்பவன் நாட்டுக் கள்ளர்கள்உதவி யுடன் மதுரைக் கோட்டையினுள் நுழைந்தான். அதி ருப்தியுடன் இருந்த மகயூசுகானின் படைவீரர்களும் மகமதுபார்க்கியுடன் சேர்ந்துகொண்டனர். இதை யறிந்த மகயூசுகான் ஆங்கிலேயர்கள் மூலம் கலகக்காரர் களுடன் சமாதானம் செய்து கொள்ள முயன்றான். ஆனால் அது பயன்பெறவில்லை. மதுரைக்கோட்டையை முற்று கையிட்டான். அதுவும் பயன்தரவில்லை. முடிவில் கலகக் காரர்களுக்கு ரூ. 1,70,000 கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டான். எனினும் நாட்டில் அவலநிலை ஒழிந்தபாடில்லை. இதைப் போக்குவதற்காக ஆங்கிலேயர் கள் மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களை ஆண் டுக்கு 5 இலட்ச ரூபாய்க்கு மகமதுயூசுப்கானிற்குக் குத் தகையாகக் கொடுத்தனர்.

யூசுப்கான், கி. பி. 1759-ல் மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் அதிகாரத்தை ஏற்றுக் கடுமை

யான நடவடிக்கைகளின் மூலம் கலகக்காரர்களை அடக்கினன்; மதுரைக் கோட்டையைப் பலப்படுத்தித் தற்காப்புச் செய்து கொண்டான்; தன் படைபலத்தையும் பெருக்கிக் கொண்டான்; ஆட்சியையும் திறமையுடனும் நீதியுடனும் நடத்தினன்; குத்தகைக்காலம் முடிந்தவுடன் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குத் தனக்கே குத்தகைக்கு விட வேண்டுமென்று ஆங்கிலேயர்களைக் கேட்டான். அதற்காக ஆண்டொன்றிற்கு 7 இலட்சம் ரூபாய் கொடுப்பதாகவும் கூறினன்; ஆனல் ஆங்கிலேயர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதனல்யூசுப்கான் சினங்கொண்டு ஆங்கிலேயர்களின் தொடர்பை அறுத்துக் கொண்டு தானே நாட்டை ஆளத் தொடங்கினன். அதைக்கண்ட ஆங்கிலேயர்கள் கி. பி. 1763-ல் ஒரு பெரும் படையை அனுப்பி மதுரையை முற்றுகையிடச் செய்தனர் கடுமையாகத் தாக்கியும் பல நாட்களாகக் கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. முடிவில் உடனிருந்த ஒரு பிரெஞ்சுக்காரரின் துரோகச் செயலால் யூசுப்கானை ஆங்கிலேயர்கள் சிறைப்பிடித்து மதுரைக் கோட்டையின் வாயிலிலேயே தூக்கிலிட்டனர்.

யூசுப்கானிற்குப்பின் அபிரால்கான் சாயபு (Abiral khan Sahib) என்பவனிடம் ஆங்கிலேயர்கள் நாட்டை ஒப்பித்து நடைமுறை நிருவாகத்தைக் கவனிக்கச் செய்தனர்; பாதுகாப்பு, படை முதலியவற்றைத் தங்கள் பொறுப்பிலேயேவைத்துக்கொண்டனர். இவ்வாறுசிறிது காலம் ஆட்சி ஓரளவு அமைதியாக நடைபெற்றது.

கி. பி. 1780-ல் மைசூரிலிருந்து ஹைதரலி (Haidar Ali) தமிழ் நாட்டின்மேல் படையெடுத்து வந்தான்;

சென்றவிடமெல்லாம் கொள்ளையிட்டும் கொளுத்தியும் மக்களைக் கொலை செய்தும் நாட்டை அவல நிலைக்கு உள்ளாக்கினான். ஆங்கிலேயர்கள் ஹைதரலியை எதிர்த்துப் போரிட்டனர். ஆனால் அவர்களுக்குப் பாளையக்காரர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. குழப்ப நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கள்ளர்கள் வேறு நாட்டைக் கொள்ளையிட்டு வந்தனர். முடிவில் ஒருவாறு ஹைதரலி நாட்டைவிட்டுச் சென்றான். இவ்வாறு ஹைதர்அலியுடன் போரிடுவதற்காக ஏற்பட்ட செலவு தொகையை ஆங்கிலேயருக்கு நவாப் முகமதலியால் கொடுக்கமுடியவில்லை. அதற்காக நாட்டை ஆங்கிலேயர்களிடம் ஒப்பிவித்து அவர்களையே வரிவசூல் செய்து அவர்கள் கடனைத் தீர்த்துக்கொள்ளுமாறு செய்தான். அவ்வாறு கி.பி. 1781-ல் ஜார்ஜ் ப்ராக்டர் (George Proctor) என்ற ஆங்கிலேயர் வரிவசூல் அதிகாரியாக மதுரை ஆட்சியை ஏற்றார். இவரையே மதுரையின் ஆங்கிலேய முதல் கலெக்டர் என்று குறிப்பிடலாம். ஆனால் இவ்வேற்பாடு தொடர்ந்து நீடிக்கவில்லை. கி. பி. 1785-ல் இது கைவிடப்பட்டது. எனினும் ஆங்கிலேயர்க்குக் கொடுக்கவேண்டிய தொகையும் கொடுக்கப்படவில்லை, அதற்காகக் கி. பி. 1790-ல் யாதொரு ஒப்பந்தமுமில்லாது ஆங்கிலேயர்கள் மதுரை நாட்டைக் கைப்பற்றித் , தாங்களே ஆட்சி செய்யத் தொடங்கினர். நாட்டைப் பலமாவட்டங்களாகப்பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆங்கிலேயக் கலெக்டரை நியமித்தனர்.

பின் கி. பி. 1801-ஆம் ஆண்டில் மைசூரில் திப்பு சுல்தான் இறந்ததும் அவனிடமிருந்த சில கடிதங்களின்

மூலம் நவாப் முகமதலி, ஆங்கிலேயர்க்கு எதிர்ப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிகிறது என்றுகூறி ஒரு விசாரணையை ஆங்கிலேயர்கள் நடத்தினர். அச்சமயம் முகமதலி உயிருடன் இல்லையாயினும் நவாப்பாக இருந்த அவனுடைய மகனைப் பதவியினின்றும் நீக்க முடிவு செய்தனர். அதன்படி அவனைப் பதவியினின்றும் நீக்கி வேறொருவனை நவாப்பாக நியமித்தனர். அவ்வாறு தங்களால் நியமிக்கப்பெற்ற நவாப்பிடமிருந்து ஆங்கிலேயர்கள் தமிழகத்தின் முழுஉரிமையையும் தங்களுக்கே எழுதிவாங்கிக் கொண்டனர். அதுமுதல் கி. பி. 1947-ஆம் ஆண்டில் இந்தியா விடுதலைபெற்றுக் குடியாட்சி பெற்ற நாள் வரை மதுரைநாடு ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் இருந்துவந்தது.

---

# புராண வரலாறு

தெய்வேந்திரன் என்றாலும்சிலசட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்கவேண்டும். போர்க்களத்தில் ஒரு போர் வீரன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குச் சில கட்டுத் திட்டங்கள் உண்டு. கொடிய பகைவன் என்றாலும் அவனிருக்கும் நிலையை அறிந்துதான் அவனைத்தாக்க வேண்டும். ஒரு சமயம் தெய்வேந்திரன் இந்த யுத்ததர்மத்திற்குப் புறம்பாக நடந்துகொண்டான். விருத்திராசுரன் என்ற ஓர் அசுரனுடன் இந்திரன் போர் புரிந்தான். அச்சமயம் போர்க்களத்திலிருந்து விருத்திராசுரன் ஓடி ஒளிந்து ஒரு மலையுச்சியில் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தான். இந்திரன் அவனைத் தேடிப்பிடித்து அவன் தவம் செய்து கொண்டிவந்த நிலையையும் கருதாது அவனைக்கொன்றான். கொடிய பகைவனேயாயினும் தவம் செய்து கொண்டிருக்கும் பொழுது இவ்வாறு அவனைக்கொன்ற குற்றத்திற்காக இந்திரனைப் பிரமஹத்திபாவம் பிடித்துக்கொண்டது. அது அவனைப் படாதபாடு படுத்தியது. விண்ணுலகத் திலிருந்தால் இப்பழிபாவம் தன்னைவிட்டு நீங்கா என அறிந்து மண்ணுலகத்திற்கு வந்து புண்ணிய தீர்த்தங்கள் தோறும் முழுக எண்ணினன். அவ்வாறே இமயத்திலி

Q23:38 21195
N163



ருந்து தென்றிசை நோக்கி ஒவ்வொரு தீர்த்தமாக முழுகி வந்தும் பிரமஹத்திபாவம் அவனைவிட்டு நீங்கவில்லை. ஒருநாள் பாண்டியநாட்டில் ஒரு கடம்பவனத்தின் எல்லையோரமாகப் போய்க்கொண்டிருக்கும் பொழுது திடீரென்று அக்கொலைப்பாவம் தன்னைவிட்டு நீங்கிய உணர்வு அவனுக்கேற்பட்டது. அதைக்கண்டு இந்திரன் வியப்புற்று இது இவ்வனத்தின் பெருமையாகும் என்று அதனுட்சென்று உண்மையை அறிந்துவரத் தனது ஏவலாள்களை அனுப்பினான். அவர்களும் காட்டினுள் சென்று அங்கு ஒரு குளமும் அதன் கரையில் கடம்பமர நிழலில் ஒரு சிவலிங்கமும் இருப்பதைக் கண்டு வந்து கூறினர். இந்திரன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து தனது பழியைத் தீர்த்தது அச்சிவலிங்கமே யாகும் என்று அதனை வழிபட்டுஅதற்கோர்அழகான விமானமும்கட்டிமுடித்துத் தேவலோகம் திரும்பிச் சென்றான். அச்சிவலிங்கமே இன்று மதுரைத் திருக்கோயிலில் சொக்கநாதராக விளங்கும் மூலவராகும்.

அக்காலத்தில் பாண்டியரின் தலைநகரம் மணவூர் என்பதாகும் (இது மதுரைக்குக் கிழக்கே $7\frac{1}{2}$ மைல் தூரத்தில் உள்ள மணலூரேயாகும் என்பது சில ஆராய்ச்சியாளர் முடிவு.) குலசேகரபாண்டியன் என்பவன் மணவூரிலிருந்து ஆட்சி செய்து கொண்டிருக்கும் பொழுது அவ்வூரில் தனஞ்சயன் என்று ஒரு வணிகர் இருந்தார். ஒருநாள் அவர் தம் வாணிகத்திற்காக வெளியூர் சென்று. மேற்சொன்ன கடம்பவனத்தின் வழியாகத் திரும்பி வரும்பொழுது பகற்பொழுது கழிந்து இரவு தொடங்கிவிட்டது. இருளில் காட்டைக்கடந்து செல்ல

முடியாத நிலையில் அங்குத் தங்குவதற்கு ஏதாவதோர் இடம் தென்படாதாவென்று கவலையுற்றிருந்தார். இந்திரன் கட்டிய விமானம் அவர்கண்களுக்குத் தென்பட்டது. இதுவே தங்குதற்குச் சரியான இடமென்று உள்ளே சென்றார். அங்கு ஒரு சிவலிங்கமிருப்பதைக் கண்டு சிறந்த சிவபக்தராகிய தனஞ்சயன் அதை வணங்கிக் கருவறையிலேயே படுத்துக்கொண்டார்; காலையில் எழுந்து பார்த்தபொழுது சிவலிங்கத்திற்கு இரவில் யாரோவந்து சிறப்பான பூசனைகள் செய்த அறிகுறிகளைக் கண்டார்; இது தேவர்களின் செயலேயாகும் என்பதை உணர்ந்து மிக்க வியப்புற்று இச்செய்தியை உடனே அரசர்க்குக் கூறவேண்டுமென எண்ணி மணலூர் சென்று குலசேகர பாண்டியனிடம் நிகழ்ந்தவற்றைக் கூறினார். அரசனும் வியப்புற்றுத் தன் பரிவாரங்களுடன் சென்று தனஞ்சயன் காட்டிய விமானத்தையும் சிவலிங்கத்தையும் வழிபட்டான்; இறைவன் தன்னுடைய கனவில் உணர்த்தியபடி அக்கடம்பவனத்தில் ஒருநகரை அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டான். சோமசுந்தரப்பெருமானே ஒரு சித்தராகத் தோன்றிச் சிற்பநூல் விதிப்படி ஆலயமும் நகரமும் இவ்வாறு அமைக்கவேண்டுமென விதித்து மறைந்தருளினார். அதற்கொப்பப் பாண்டியனும் கைதேர்ந்த சிற்பிகளைக்கொண்டு கோயிலையும் மண்டபங்களையும் அவற்றைச் சுற்றித் தெருக்களையும் மாளிகைகளையும் அமைத்தான். இன்றைய மதுரைநகர் அமைப்பே அதனை அடிப்படையாகக்கொண்டு வளர்ந்ததாகும். ஆகவே சோமசுந்தரப்பெருமானே இம்மதுரை நகரை உருவாக்கிய சிற்பியாவார் என்பதைத் திருவிளை

யாடற் புராணத்தினின்றும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

குலசேகரபாண்டியனுக்குப்பின் அவனுடைய மகன் மலயத்துவசபாண்டியன் பட்டத்திற்கு வந்தான். அவனுடையமனைவி காஞ்சனமாலையாவாள். அவர்கட்கு மக்கட் பேறில்லாமையால் அதற்காகப் பலவேள்விகளை நடத்தினர். காஞ்சனமாலை மிகவும் தெய்வபக்தியுடையவள். முற்பிறவியில் 'வித்தியாவதி' என்ற பெயருடன் ஒருவித்தியாதரனுடைய மகளாகயிருந்தாள். அவள், உமாதேவியிடத்து மிக்க அன்புடையவளாகித் தேவியை வழிபடுவதற்குச் சிறந்தஇடம் மதுரையே என்று தன்தந்தையின் வாயிலாகத் தெரிந்துகொண்டு மதுரைக்குவந்து விரதங்களை முறையாக மேற்கொண்டு அங்கயற்கண் அம்மையை நாளும் வழிபட்டுவந்தாள். அம்மையும் அவள்பால் அருள்பாலிக்க மூன்றுவயதுடைய ஒரு சிறு பெண்குழந்தை வடிவில்தோன்றி, 'நீ யாது விரும்பினை?' என வித்தியாவதியை வினவ, அவள் வணங்கித், "தாயே! நின் திருவடித்தாமரையில் நிறைந்தபேரன்பு ஒருகாலமும் நீங்காத பெருவாழ்வு எனக்குத் தந்தருளுக." என்று வேண்டினாள். அதுகேட்டு மீனாட்சியம்மை, "இன்னும் நீ வேண்டுவன யாவை? கேட்பாயாக." எனக்கூறவும், அதற்கு வித்தியாவதி, "அம்பிகையே! இதே பெண்ணுருவத்தில் நீ என்னிடம் மகளாகத் தோன்றி அருள்சுரக்க வேண்டு"மென வேண்டினாள். மீனாட்சியம்மையும் அதற்கிசைந்து, "நீ இதே நகரத்தில் மலயத்துவச பாண்டியன் மனைவியாக வருவாய். அப்போது நான் உனக்கு மகளாக வருவேன்," என்று அருளி மறைந்தார். அதற்கொப்ப

மலயத்துவசபாண்டியன் மகப்பேறு வேண்டி நடத்திய வேள்வித்தீயிலிருந்து மூன்றுவயதுடைய ஒருபெண் குழந்தை தோன்றிக் காஞ்சனமாலையின் மடியில்வந்து அமர்ந்தது. பாண்டியன் தானோர் ஆண்குழந்தைவேண்டி வேள்வி நடத்தியும் ஒருபெண் குழந்தையே கிட்டியதாலும், அதற்கும் மூன்று தனங்கள் இருந்தமையாலும் மிக வருத்தமுற்றான். அப்பொழுது ஓர்அசரீரிவாக்குத்தோன்றி "நீ கவலை கொள்ளாதே; இக்குழந்தைக்கு ஓர் ஆண்மகவுக்கு முறைப்படி செய்யவேண்டியனசெய்து 'தடாதகை' எனப் பெயரிட்டு முடி சூட்டுக; அவளுக்குக் கணவன் வரும்பொழுது மூன்றாவது தனம் மறையும்" என அருளியது. பாண்டியனும் மகிழ்ச்சியுற்றுக் குழந்தைக்குத் தடாதகை எனப்பெயரிட்டு ஓர் இளவரசனுக்குக் கற்பிக்க வேண்டிய எல்லாக் கலைகளையும் கற்பித்து வளர்த்து வந்தான். தக்க வயது எய்தியதும் அவளுக்கு முடிசூட்டித் தன் அரசை ஆளும்படி செய்தான். தடாதகைப்பிராட்டியும் அறநூல் வழியில் அரசோச்சி வந்தாள். அவள் கன்னியாக இருந்து நாட்டை ஆண்டதால் பாண்டியநாடு கன்னி நாடு என்ற பெயரும் பெற்றது. மலயத்துவசன் இறந்த பின்னர்க் காஞ்சனமாலை தன் மகள் தடாதகைப் பிராட்டி கன்னிப்பருவம் எய்தியும் திருமணமாகவில்லையே என்று கவலைப்பட்டாள். 'தக்க தருணத்தில் நின் கவலை தானே தீரும்' எனத் தடாதகைப் பிராட்டி தன் தாய்க்கு ஆறுதல் கூறி, எட்டுத் திக்குகளிலும் தன் வெற்றிக் கொடியை நாட்டுவதற்காகப் படைகளுடன் புறப்பட்டுச் சென்றாள். பல அரசர்களையும் தேவர்களையும் வென்று இறுதியில் கைலாயமலையை முற்றுகையிட்டாள். கைலாயத்தைக் காத்துவந்த நந்திதேவர், பூதகணங்களை

ஏவினர். அக்கணங்களும் தோல்வியுற்றன. அதனைக் கேள்வியுற்ற சிவபெருமான் படைக்கலங்களை ஏந்தித் தாமே போர்க்களத்திற்குப் புறப்பட்டார். அங்கே, பெண் சிங்கம்போன்ற தம்தேவியாரின் திருவுருவத்தையும்வீரத் தையும் எதிரிற் கண்டார். தடாதகையும் தன்வலப்பாதி யானசிவபெருமான் புலித்தோலாடையுடனும்மழுப்படை யேந்திய திருக்கரத்துடனும் சடாமுடியுடனும் பெருங் கருணையுடனும் தன்னை நோக்கினவண்ணம் நிற்பதைக் கண்டாள். அவ்விருடியே அவளுடைய மூன்றுவது தனம் மறைந்தது. நாணமும் மடனும் அச்சமும் குடிபுகக் கண்கள்-தன் அடிகளை நோக்கத் தலைகுனிந்து நின்றாள் தடாதகைப்பிராட்டி. இதைக்கண்ட அமைச்சர்களும் உடனிருந்த மற்றோர்களும் அக்கைலாசபதியே தமது அரசிதடாதகைப்பிராட்டிக்குக் கணவராவர் என அறிந்து கொண்டனர். கைலாசபதி பிராட்டியைப் பார்த்து மதுரையிலிருந்து நீ புறப்பட்டபொழுதே நாமும் உன்னைப் பிரியாது தொடர்ந்து வந்தோம். இன்றைக்கு எட்டாவது நாளாகிய சோமவாரத்தில் உன்நகர் வந்து உன்னைத் திருமணம் செய்துகொள்வோம்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே சிவபெருமான் தேவர்கள், முனிவர்கள் சூழ மதுரை வந்து தடாதகைப் பிராட்டி யாரைத் திருமணம் செய்துகொண்டார்.

அத்திருமணத்தின் பொழுது எம்பெருமான் பல திருவிளையாடல்களைச் செய்தருளினர். திருமணத்திற்கு வந்திருந்த வியாக்கிரபாத முனிவரும், பதஞ்சலிமுனிவரும் நாள்தோறும் கனகசபையில் நடைபெறுகின்ற திருக் கூத்தினைக் கண்டபின்னரே உணவுகொள்வதை நெறி

யாகக் கொண்டவர்கள். அவர்கள் வேண்டுகோளிற் கிணங்க அக்கூத்தினை அவர்களுக்கு மதுரையிலேயே காட்டியருளினர். திருமண விருந்திற்காக ஆக்கப்பட்ட உணவு மிகுதியாக எஞ்சி இருக்கிறதென்று மணப்பெண்ணுகிய தடாதகைப்பிராட்டி தன் கணவரிடத்தில் கூறச் சிவபெருமான் தமது பூதகணங்களில் ஒருவனுன குண்டோதரனைக்காட்டி அவனுக்கு முதலில் உணவு படைக்கும்படி கூறினர். மலையும் குன்றும் போலிருந்த உணவும் கறிவகைகளும்குண்டோதரன் ஒருவனுக்கேபோதவில்லை. நாட்டிலுள்ள குளங்கள், கிணறுகள் அத்தனையும் அவனுடைய தாகத்தினைத் தீர்க்க முடியவில்லை. அவன் தாகத்தைப் போக்குவதற்காகச் சிவபெருமான் தம் திருமுடியின்மேலிருக்கும் கங்கையை மதுரையின் புறத்தே வைகை நதியாக ஓடிவரச்செய்தார்.

உலகுக்குத் தாம் அரசுசெய்து காட்டவேண்டும்எனத் திருவுளங்கொண்டு சிவபெருமான் சௌந்தரபாண்டியர் என்ற திருப்பெயருடன் பாண்டியநாட்டை அரசுசெலுத்தினர். இடபக்கொடியே கயற்கொடியாகவும், சர்ப்பாபரணமே பொன்னுபரணமாகவும், கொன்றைமாலையே வேப்பமாலையாகவும், புலித்தோலாடையே பொன்னுடையாகவும் சடாமுடியே இரத்தின முடியாகவும் அவர்க்கு விளங்கின. உலகத்தைக் காக்கும் அரசர்கள் சிவபெருமானை வழிபடுதலே நெறியென்பதையுணர்த்தச் சௌந்தரபாண்டியராகிய தாம் மதுரையில் நடுவூர் என்னும் இடத்தில் ஒரு சிவன் கோயிலை அமைத்து வழிபட்டார். அதுவே இம்மையில் நன்மைதருவார் கோயிலாக இன்று மதுரையில் விளங்கி வருகின்றது.

தடாதகைப் பிராட்டியின் அன்னை காஞ்சனமாலை சகல புண்ணியநதிகளும் வந்தடையும் சமுத்திரத்திலே நீராடவேண்டுமென்று விருப்பங்கொண்டாள். அதை யறிந்த தடாதகைப்பிராட்டி, அன்னையின் விருப்பத்தைத் தன் கணவனிடம் கூறினாள். அதனைக் கேட்ட சௌந்தர பாண்டியர், 'இதற்காக யாத்திரை செல்லவேண்டா; ஏழு கடல்களையும் இங்கேயே வரச்செய்வோம்' எனக் கூறி ஏழு கடல்களையும் மதுரையில் பொங்கச் செய்தார். அவை பொங்கின இடமே இன்று நமது கோயிலின் சுவாமி சன்னிதிக்கு முன்னுள்ள எழுகடல் வீதியில் 'எழு கடல் குளமாக' விளங்குகிறது. முறைப்படி அக்கடலில் நீராட வேண்டுமெனில் கணவனும் மனைவியும் சேர்ந்தே நீராடுதல் வேண்டும். காஞ்சனமாலையின் கணவன் இறந்துவிட்டபடியால் அவ்வாறு நீராட முடியாதிருப்பதை எண்ணி வருந்தினாள். தடாதகைப்பிராட்டியின் வேண்டுகோளிற்கிணங்கச் சோமசுந்தரப் பெருமான் காஞ்சனமாலையின் கவலையை நீக்க அவளுடைய கணவன் மலயத்துவச பாண்டியனை விண்ணுலகத்தினின்றும் அழைத்து அவளுடன் நீராடச்செய்வித்து இருவர்க்கும் முத்தியளித்தார். இக்காஞ்சனமாலையின் கோயிலை இன்று மேற்கூறிய எழுகடற் குளத்தின் கரையில் காணலாம்.

சிவபெருமான் திருவுள்ளம் கொண்டபடி தம் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய முருகக்கடவுளைத் தடாதகைப்பிராட்டியின் குழந்தையாகத் தோன்ற அருளினார். அக்குழந்தைக்கு 'உக்கிரபாண்டியன்' எனப் பெயரிட்டுச் சகல கலைகளையும் பயிற்றுவித்தனர். அவ்விளவரசனுக்கு உரிய பருவத்தில் 'காந்திமதி' என்ற அரசகுமாரியைத்

திருமணம் செய்வித்தார்கள். அதன்பின் சௌந்தரபாண்டியர் உக்கிரகுமாரனுக்கு முடிசூட்டி அரசுரிமையையும் கொடுத்துத் தடாதகைப்பிராட்டியுடனும் மனிதவடிவத்தில் தம்முடன் வந்த தேவகணங்களுடனும் திருக்கோயிலுக்குச் சென்று தாம் சோமசுந்தரப்பெருமானாகவும் தடாதகைப்பிராட்டி மீனாட்சியம்மையாகவும் எழுந்தருளினர்.

சோமசுந்தரப்பெருமான் அவ்வப்பொழுது பல திருவிளையாடல்களைச் செய்து நாட்டையும். மக்களையும், மொழியையும், சமயத்தையும் காத்து வந்ததுடன் பறவைகட்கும் மிருகங்கட்கும் அருள்பாலித்தும் வந்துள்ளார்.

## ''நாட்டைக்காத்த திருவிளையாடல்கள்''

உக்கிரபாண்டியன் ஆட்சி செலுத்துங் காலத்தில் இந்திரன் ஏவலால் கடல் கொந்தளித்து மதுரையை அழிக்க வளைந்து வந்தது. சோமசுந்தரப்பெருமான் சித்தர் வடிவில் உக்கிரபாண்டியன் கனவில் தோன்றி வரும்ஆபத்தைத்தெரிவித்தார். அதனோடு''உக்கிரபாண்டியன் தன் தந்தையிடமிருந்து பெற்ற வேற்படையைப் பொங்கும் கடலின்மீது எறிந்தால் அதன் வலி கெடும்'' என்றும் கூறி அவர் மறைந்தார். பாண்டியனும் அவ்வாறே செய்து கடல்கோளிலிருந்து மதுரையைக் காத்தான்.

ஒரு சமயம் சேரசோழ நாடுகளுக்கு மழை பெய்வித்த இந்திரன், பாண்டியன்மீது கொண்ட பொறாமையால் பாண்டிய நாட்டிற்கு மட்டும் மழையில்லாமல் செய்தான்

பாண்டியன் சினங்கொண்டு இந்திரனுடைய மழை மேகங்கள் நான்கினைச் சிறையிலிட்டான். இந்திரன் அவற்றை மீட்பதற்காகப் போரிட்டான். பாண்டியன் தன் தந்தையிடமிருந்து பெற்ற வளையினுதவியால் இந்திரனை வென்றான். தோல்வியுற்ற இந்திரன் மழை தருவதாகக் கூறி மேகங்களை விடுவிக்க வேண்டினான். பாண்டியன் அவன் சொற்களை நம்பவில்லை. அப்போது ஒரு வேளாளர் முன்வந்து தாம் இந்திரனுக்காகப் பிணை ஏற்பதாகக் கூறினார். இடுக்கண் வந்து உயிர்க்குத் தீங்கு விளையினும் வாய்மையைக் காத்துக் குற்றமற ஒழுகும் வேளாளமரபிற் பிறந்த அவருடைய சொற்களை ஏற்று உக்கிரபாண்டியன் மேகங்களைச் சிறை நீக்கி விடுத்தான். இதனால் வேளாளருக்குக் 'கார்காத்தார்' என்னும் ஒரு பெயர் ஏற்பட்டது. அதன்பின் பாண்டியநாடு மாதம் மும்மாரி பெற்றுச் செழித்தோங்கியது.

பின் ஒருகாலத்தில் கிரகநிலை திரிந்து நாட்டில் மழை பெய்யாது பஞ்சமுண்டாகி மக்கள் பசியால் வருத்தமுற்றனர். இப்பஞ்சத்தைப் போக்குவதற்கு மேருமலையில் வேண்டிய திரவியங்கள் இருப்பதாகவும் அவற்றைக் கொண்டு வரும்படியும் உக்கிரபாண்டியன் கனவில் சிவபெருமான்சித்தராகத்தோன்றிக் கூறினார்; பாண்டியனும் அவ்வாறே சென்று தன் தந்தையிடமிருந்து பெற்ற செண்டினால் மேருவின் செருக்கையடக்கி எண்ணற்ற திரவியங்களைக் கொண்டுவந்து நாட்டின் பஞ்சத்தைப்போக்கினான்.

வருணனுடைய தூண்டுதலினால் கடல் மற்றுமொரு முறை கொதித்தெழுந்து மதுரையை அழிப்பதற்காகப்

பெருக்கெடுத்து வந்தது. அவ்வாபத்தினின்றும் தப்பு வதற்கு வழியறியாது மதுரை நகர மக்களும் பாண்டிய னும் காத்தருள வேண்டுமென்று சோமசுந்தரப்பெருமா னிடம் முறையிட்டனர். பெருமானும் 'அஞ்சாதீர்' என்று அசரீரியாகத் திருவாய்மலர்ந்து தம்திருச்சடையின்கண் ணுள்ள நான்கு மேகங்களை அக்கடல்நீரைப் பருகச்செய் தார். அதுகண்ட வருணன் பெரும் மழையைப் பொழியச் செய்து நகரத்தை அழிக்க முயன்ருன். சோமசுந்தரப் பெருமான் அந்நான்கு மேகங்களையும் குடைபோலக் கவிந்து மதுரையைக் காக்கச்செய்தார். அதனுல் இந்நகர் க்கு 'நான்மாடக்கூடல்' என்னும் பெயரும் ஏற்பட்டது.

பாண்டியனும் பாண்டியநாட்டு மக்களும் சிவநெறி யைப் பின்பற்றிப் பழுதில்லாது வாழ்ந்து வருவதைப் பொருது சமணசமயத்தினர் பல இடையூறுகளைச் செய்ய முயன்றனர். அதற்காகச் சமணர்கள் சில வேற்றரசர் களின் உதவியால் மாயவேள்விகளை நடத்தி ஒரு பெரிய யானையை ஏவி மதுரையை அழிக்கவிடுத்தனர். பாண்டி யன் சோமசுந்தரப்பெருமானிடம் காத்தருள வேண்டு மாறு முறையிட்டான். சோமசுந்தரப்பெருமானும் தாமே வந்து அந்த யானையைக் கொல்வதாகவும் அதற் காக நகரத்திற்குக் கிழக்குப்பகுதியில் உயரமான பதினறு கால் மண்டபம் ஒன்றை அமைக்கும்படியும் கட்டளையிட் டார். அவ்வாறே பாண்டியனும் அமைத்தான் அதுவே இன்று வண்டியூர்த் தெப்பத்திற்கு வடமேற்கேயுள்ள பதினறுகால் மண்டபமாகும். சோமசுந்தரப்பெருமான் ஒரு வில்வீரனுக அம்மண்டபத்தின்மேல்எழுந்தருளிச் சம ணர்கள் விடுத்த யானையை அம்பால் எய்தார். யானை

இறந்து ஒரு மலையாக மாறியது. அதுவே இன்று மதுரைக்கு வடகிழக்கே மேலூர் நெடுஞ்சாலையிலுள்ள யானைமலையாகும். சிவபெருமான்விடுத்த அம்பே நரசிங்கவடிவமாக அம்மலைக்கு மேற்கே கோயில் கொண்டுள்ளது.

தங்கள் முயற்சியில் தோல்வியுற்ற சமணர்கள் பின்னொரு காலத்தில் மற்றுமொரு மாயவேள்வி நடத்தி அதிலிருந்து தோன்றிய ஒருபெரிய நாகத்தை மதுரையை அழிக்குமாறு ஏவினர். சோமசுந்தரப்பெருமான் அருளால் பாண்டியன் அந்நாகத்தையும் கொன்று நகரைக் காத்தான். அதுவே இன்று நாகமலையாக மதுரைக்கு மேற்கே இருந்து வருகிறது.

பின்னுமொருமுறை சமணர்கள் ஒரு மாயப்பசுவைத் தோற்றுவித்து மதுரையை அழிக்க ஏவினர். சிவநெறியைப் பின்பற்றுபவர்கள் பசுவைக் கொல்லமாட்டார்கள் என்ற எண்ணத்தில் சமணர்கள் அச்சூழ்ச்சியை மேற்கொண்டனர். பாண்டியன் சிவபெருமானிடம் முறையிடச் சிவபெருமானும் தம்முடைய காளையை அனுப்பிப் பசுவை வெல்லும்படி செய்தார். காளையைக் கண்ட உடனேயே அப்பசு தன்வீரியத்தை இழந்து மாண்டது. அப்பசுவே மதுரைக்குத் தென்மேற்கில் பசுமலையாக இன்று விளங்குகின்றது. சிவபெருமானின் காளையே மதுரைக்கு வடக்கில் இடபமலை என்று வழங்கும் அழகர்கோயில் மலையாகவும், பழமுதிர்சோலையாகவும் விளங்குகின்றது.

பிறிதொரு காலத்தில் கடல்கோளின் காரணமாக மதுரைநகரம் முழுவதும்அழிக்கப்பட்டது. சோமசுந்தரப்

பெருமானுடைய கோவில்மட்டும்அழியாதிருந்தது.வெள்ளம் வற்றியபின் பாண்டியன்நகரத்தை மறுபடியும்அமைக்க எண்ணியபொழுது எல்லைகளைக் கண்டறியமுடியாது திகைத்தான். அவன் ஆண்டவனை வேண்டிக்கொள்ளச் சோமசுந்தரப்பெருமான் ஒருசித்தர் உருவத்தில் கோவில் விமானத்திற்கு வடபுறம் எழுந்தருளித் தம்முடைய கையில் கங்கணமாக அணிந்திருந்த ஒருபாம்பை விடுத்து நகரின் எல்லைகளைக்காட்டச்செய்தார். பாம்பும் நகரத்தை வளைந்து தன்வாலை வாயில்வைத்து எல்லையைக்காட்டிற்று அதன் காரணமாக நகருக்கு 'ஆலவாய்நகர்' என்னும்பெயர் ஏற்பட்டது.

## ''அரசர்கட்கருளிய திருவிளையாடல்கள்''

இவ்வாறு மதுரைநகருக்கு வந்த இடையூறுகளை நீக்கியருளிய சோமசுந்தரப்பெருமான், பாண்டியர்களுக்குத் துணைபுரியப் பலதிருவிளையாடல்களைச் செய்தார். பாண்டியன் ஒருவனுக்கு முடிசூட்ட அமைச்சர்களும் மக்களும எல்லாஏற்பாடுகளும் செய்தகாலத்தில் பரம்பரையாக இருந்த இரத்தினகிரீடத்தைப் பகைமை காரணமாகச் சிலர் திருடிச்சென்றுவிட்டனர். இரத்தின கிரீடமில்லாது முடிசூட்டுவிழாநின்றுவிடுமோஎன மக்கள் ஐயமுற்றனர். அப்பொழுது சிவபெருமானே ஓர்இரத்தினவியாபாரியாக வடிவங்கொண்டு அம்முடிக்கேற்ற மாணிக்கங்களைக்கொடுத்தருளினார்.

மற்றொரு பாண்டியன் பலகலைகளிலும் தேர்ச்சிபெற எண்ணிப் பரதநாட்டியக்கலையைப் பயின்றான். பயிலும்

பொழுது தன்கால்கள் மிக வருந்துவதை உணர்ந்து வெள்ளியம்பலத்தில் இரவுபகலாக நடனமாடும் சிவபெருமானுடைய திருப்பாதங்கள் எவ்வாறு நோகுமோ என்று எண்ணி வருத்தமுற்ருன். நேராகக் கோயிலுக்குச்சென்று வழிபட்டு, ''நின்ற திருவடியை எடுத்துவீசி, எடுத்த திருவடியைக் கீழே ஊன்றிக் கால் மாறி ஆடவேண்டும்'' என்று இறைவனிடம் விண்ணப்பித்துக்கொண்டான். ''அவ்வாறு செய்யாவிடில் என்னுயிரை மாய்த்துக்கொள்வேன்'' என்று அவன் தன் உடைவாளை நாட்டி அதன்மேல் விழத்துணிந்தான். அன்பர்க்கெளியவராகிய சிவபெருமான், அதுகண்டு தன் இடப்பாதத்தை ஊன்றி வலப்பாதத்தைத் தூக்கி மாறியாடி அவனுடைய கவலையை நீக்கினர். அதுவே மதுரையில் சுவாமிசன்னிதியிலுள்ள மாறியாடிய நடராசமூர்த்தியாவார். பின்னெருகாலத்தில் வரகுணபாண்டியன் என்பவனுக்கு அருள்வதற்காகச் சிவலோகக்காட்சியையே மதுரையில் காட்டியருளினர்.

பாண்டியன் நீதிவழுவாது அரசுபுரியவும் சோமசுந்தரப்பெருமான் பலதிருவிளையாடல்களைச்செய்து அருளினர். பார்ப்பனன் ஒருவன் காட்டுவழியாகத் தன்மனைவியுடன் போய்க்கொண்டிருந்தான். ஓர் ஆலமரத்தடியில் மனைவியை இளைப்பாறவிட்டுத் தண்ணீர்கொணர அவன் சென்றபொழுது அம்மரக்கிளையில் தொங்கிக்கொண்டிருந்த அம்பொன்று காற்றினல் தள்ளப்பெற்றுக் கீழே படுத்திருந்த அவன் மனைவியின் வயிற்றில் பாய்ந்தது. அதனல் அவள் இரத்தப்பெருக்கெடுத்து மாண்டாள். பிராமணன்வந்து அதனைப்பார்த்து இக்கொலைச்செயலைச்

செய்த கொடியவன் யாரோ எனத் திகைத்தான்; அச்சமயம் அதேமரத்தடியின் மற்றொருபகுதியில் இளைப்பாறிக்கொண்டிருந்த ஒருவேடனையும், அவன்கையிலிருந்த வில்லையும் அம்பையும்கண்டு அவன்தான் கொலைசெய்தவன் என்று துணிபுகொண்டான். அவனைக்கூட்டிச் சென்று அரசனிடம் நீதிவழங்குமாறு முறையிட்டான். வேடன், 'நான் ஒன்றும் அறியேன்' என்று கூறினன். தண்டித்துக்கேட்டும் அவன் அதையேகூறி நன்றாக ஆராயுங்கள் என்றான். பாண்டியன் மன அமைதிகொள்ளாது சோமசுந்தரப்பெருமானிடம் சென்று உண்மையை விளக்குமாறு வேண்டிக்கொண்டான். பெருமானும் உண்மையை விளக்குவதாகக்கூறி அந்நகரில் அன்றிரவு நடைபெறும் ஒரு திருமணத்திற்குப் பிராமணனையும் அழைத்துக்கொண்டு பாண்டியனை வரச்சொன்னர். அரசனும் அவ்வாறேசென்றான். அங்கு எமதூதர் இருவர் மணமகன் உயிரைக்கொண்டுசெல்ல வந்திருந்தனர். நல்ல உடற்கட்டுடன்விளங்கும்அவன்உயிரைத்திடீரென்றுஎப்படிக்கவர்வதென ஒருவன் மற்றொருவனைக்கேட்டான். அதற்கு, "நாம் ஏதாவதொரு தந்திரம் செய்வோம்; நேற்று மரத்தடியில் படுத்திருந்த ஒருபிராமணத்தியின் உயிரை எப்படி மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த ஓர் அம்பினுல் கவர்ந்தோமோ அதுபோல்இதற்குமொருவழியைச்செய்வோம்" என்றான் அவன். இப்பேச்சை அரசனும் பிராமணனும் மட்டுமே கடவுளருளால்கேட்டு உண்மையை அறிந்து கொண்டனர். அவர்கள் அப்பேச்சின்படி நடப்பதை எதிர்பார்த்திருந்தார்கள். அச்சமயம் வாத்திய ஒலியினால் வெருண்ட ஒருபசு கட்டறுத்தோடிவந்து மணப்பந்தலிலிருந்த மணமகனை முட்டிக்கொன்றது. இதனால், "ஊழிற்

பெருவலி யாவுள மற்றொன்று,சூழினுந் தான்முந் துறும்''
என்ற உண்மையையும் பாண்டியனுக்குச் சிவபெருமான்
உணர்த்தியருளினர்.

பாண்டியநாட்டில் ஒருகாலத்தில் பெரியபஞ்சம் ஏற்பட்டது. குடிமக்கள் பசியினால் மிகவருந்தினர். அரசன் தன் செல்வமனைத்தையும் அதற்காகச் செலவழித்தும் பஞ்சம்தீரவில்லை. குறைநீக்கப் பாண்டியன் சோமசுந்தரப் பெருமானை வேண்டிக்கொண்டான். கனவில் சிவபெருமான் சித்தராகத் தோன்றி, எடுக்க எடுக்கக் குறையாது பொன்கொடுக்கும் உலவாக்கிழியொன்றைக் கொடுத்து நீதிதவறாது ஆட்சிசெலுத்திவருமாறு அருளிமறைந்தார். பாண்டியன் விழித்தெழுந்து உலவாக்கிழி தன்கையில் இருப்பதைக்கண்டு மிகமகிழ்ச்சியுற்றான். அதன் உதவியால் நாட்டில் தோன்றிய பஞ்சத்தைப் போக்கியதல்லாமல் சோமசுந்தரப்பெருமானின்விமானத்தையும் மீனாட்சியம்மனின் விமானத்தையும் ஆறுகால் பீடங்களையும் பொன்னாற் பொதிந்தான்.

பாண்டியர்க்கேயன்றிச் சோழமன்னர்கட்கும் அருள் பாலித்த திருவிளையாடல்களும் உண்டு. ஒருகாலத்தில் சோழன் மதுரைக்குச் சென்று சோமசுந்தரப்பெருமானைத் தரிசிக்க வேண்டுமென்று பெருவிருப்பங்கொண்டிருந்தான். பகை அரசனாகிய பாண்டியன்நாட்டிற்கு எவ்வாறு செல்வது என்ற கவலையும் அவனுக்கு இருந்தது. இதையறிந்த சோமசுந்தரப்பெருமான் சோழனுடைய கனவில்தோன்றி ''நீ மாறுவேடங்கொண்டு தனியாக மதுரைக்கு இரவில்வந்து தரிசனம்செய்துபோகுக'' என்று கூறியருளினர். சோழனும் அவ்வாறே சென்றபொழுது

வைகைநதி பெருக்கெடுத்தோடுவதைக்கண்டு, கடந்து செல்ல வழியின்றி ஏக்கமுற்று வடகரையில் நின்றான். அப்பொழுது சோமசுந்தரப்பெருமான் சித்தராக எழுந்தருளி வைகைநதியை வற்றும்படிசெய்து சோழனை அழைத்துக்கொண்டு சென்று பாண்டியனது மீனமுத்திரை பொறித்திருந்த வடக்கு வாயிலைத்திறந்து கோயிலுக்குள் அழைத்துச்சென்றார். சோழஅரசன் சோமசுந்தரப்பெருமானையும் அம்மையையும் கண்குளிரக்கண்டு வணங்கி வந்தவழியே திரும்பித் தன்னாடுசென்றான். வடக்குவாயிலை முன்னிருந்தபடியே பூட்டிச் சோமசுந்தரப்பெருமான் தம்முடைய முத்திரையாகிய விடைஇலச்சினையை அதிற்பொறித்தார். மறுநாள் முத்திரை மாற்றத்தை அறிந்த பாண்டியன் திகைப்புற்றான். சோமசுந்தரப்பெருமான் அவன் கனவில்தோன்றி உண்மையை விளக்கி அவன் கவலையைத் தீர்த்தருளினார். சோழனும் பாண்டியனுடன் நட்புக்கொண்டு அடிக்கடி மதுரைக்குச் சென்று சோமசுந்தரப்பெருமானை வணங்கவேண்டும்என எண்ணிப் பாண்டியனுடைய தம்பிக்குத் தன் மகளைத் திருமணம் செய்துவைத்தான். எனினும் சிலநாட்களில் பாண்டியனுக்கும் சோழனுக்கும் பகைமைதோன்றியது. சோழன் பெரும்படையுடன் பாண்டியநாட்டின்மீது படையெடுத்தான். பாண்டியன், 'யாது செய்வேன்' என்று கவலையுற்றுச் சோமசுந்தரப்பெருமானைக் காக்குமாறு வேண்டினான். சோமசுந்தரப்பெருமானும் பாண்டியனைப் பார்த்துக் "கவலைகொள்ளாதே! நீ போர்க்களத்திற்கு உன்சேனையுடன் செல்லுக. வெற்றி உனக்குக்கிடைக்கும்படி செய்வோம்" என்று அசரீரியாகக்கூறினார். பாண்டியனும் அவ்வாறே செய்தான். பெரும்போர் நடைபெற்றது. வெயிலின் கொடுமையும் மிகுதியாக இருந்தது

அதனால் தண்ணீர்த்தாகமுற்று இருசேனைகளும் வருந்தின. அப்பொழுது சோமசுந்தரப்பெருமான் பாண்டியர்களின் சேனை நடுவிலே ஒரு தண்ணீர்ப்பந்தலை அமைத்துப் பாண்டியன் வீரர்களின் தாகத்தைத் தணித்தது மன்றித் தம் அருளால் அவர்கட்கு வலிமையையும் ஊட்டினார். அதன் காரணமாக அப்போரில் பாண்டியன் வெற்றியடைந்தான்.

பிறிதொரு காலத்தில் ஒரு சோழனுக்கும் பாண்டியனுக்கும் போர்மூண்டது. சோழர்படை வலிமையுடையதாக இருந்தது. அதைக்கண்டு பாண்டியன் அஞ்சிச் சோமசுந்தரப்பெருமானே காக்கவேண்டும் என்று திருக்கோயிலில்வந்து சரணடைந்தான். பெருமானும் அவனுக்கு அபயங்கொடுத்துத் தாமே ஒரு வேடன் வடிவங்கொண்டு வேலாயுதத்தை ஏந்திச் சோழனை எதிர்த்துப் போரிட்டார். சோழன் தோல்வியுற்றுப் போர்க்களத்தினின்றும் ஓடினான். பாண்டியன் அவனைத் துரத்திக்கொண்டு சென்றான். வேடஉருவில் இருந்த சிவபெருமானும் மறைந்தருளினார். இதை அறிந்தசோழன் பாண்டியனை எதிர்த்துத்தாக்கினான். பாண்டியனும் பின்வாங்கி ஓடிவரச் சோழனும் துரத்திவந்தான். இருவரும் மதுரைக்கு மேற்புறமுள்ள ஓர் ஆழமான மடுவில்விழுந்து கரையேறமுடியாது தவித்தனர். பாண்டியன் சிவபெருமானருளால் கரையேறினான். சோழன் அதில் அமிழ்ந்து இறந்தான். இதேபோன்று ஒருகாலத்தில் சோழனுக்கும் பாண்டியனுக்கும் போர்நடந்தபொழுது பாண்டியனுக்குத்துணைபுரியச் சோமசுந்தரப்பெருமான் ஒருவில்வீரனாக வந்து சுந்தரேசர் என்ற தம்பெயர் பொறித்த அம்புகளை விடுத்துப் பாண்டியனுக்கு வெற்றிதேடித் தந்தார்.

சோமசுந்தரப்பெருமான் மதுரைமக்களுக்கு அருள் பாலிப்பதற்காகச் சித்தராகத் தோன்றிப் பலசித்து விளையாடல்களைச் செய்தருளிக்கொண்டிருந்தார். சோம சுந்தரப்பெருமானே சித்தராக வந்திருக்கிறார் என்பதை அறியாத பாண்டியன் ஒருவன் அவருடைய வல்லமை யைப் பரிசோதிக்க எண்ணிக் "கோயிலிலிருந்த ஒரு கல் யானையைக் கரும்பு தின்னச் செய்யமுடியுமா?" என்றான். சித்தரும் முடியும் என்று சொல்லி அதைச் செய்துகாட் டப் பாண்டியன் அஞ்சி, இதுசோமசுந்தரப்பெருமானின் திருவிளையாடலே என அறிந்து தன் அறியாமையைப் பொறுத்தருள வேண்டுமெனப் பெருமானை வேண்டிக் கொண்டான்.

## 'மக்களுக்கருளிய திருவிளையாடல்கள்'

இவ்வாறு பாண்டிய மன்னர்க்காகப் பல திருவிளை யாடல்களைச்செய்த சிவபெருமான் மக்களுக்கு அருள் பாலிக்க மேலும் பல திருவிளையாடல்களைச் செய்தருளி னார். அவைகளில் ஒன்று இது. மதுரையில் ஒருபிரா மணன் இருந்தான். தவப்பயனாகக் கௌரி என்ற பெண் அவனுக்குப் பிறந்தாள். சிறுவயதிலேயே அவள் சிவவழி பாட்டில் ஈடுபட்டுவந்தாள். அவளுக்குத் திருமணத்திற் குரிய வயதுவந்தபொழுது அப்பிராமணன் தன்வீட்டிற் குப் பிச்சைகேட்டுவந்த ஒரு வைணவப் பிரமச்சாரிக்குக் கௌரியைக் கன்னிகாதானம் செய்துகொடுத்தான். அந்த வைணவப் பிராமணன் தன் மனைவியை அழைத் துக்கொண்டு தன் வீடுசென்றான். அவனுடைய தாய்தந் தையர் கௌரியின் சிவவேடத்தைக்கண்டு வெறுப்புற்று

அவனை வேருக ஒதுக்கிவைத்தனர். ஒருநாள் கௌரியைத் தனியேவைத்து வீட்டைப்பூட்டிக்கொண்டு எல்லோரும் அயலூர்க்குச் சென்றுவிட்டனர். கௌரி எப்பொழுதும் சிவனையே சிந்தித்துக்கொண்டிருந்தாள். அப்போது சிவபெருமான் ஒருகிழப்பிராமணர் உருவில்விபூதிஉருத்திராட்சங்களுடன் தோன்றி அன்னமிடுமாறு கௌரியை வேண்டினுர். சிவனடியாரையே சிவனுகக் கருதும் கௌரியும் மிக்க மகிழ்ச்சியுற்று அவருக்கு அன்னமிட விரும்பினுள். ஆனுல் வீடு பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு கவலையுற்ருள். அக்கிழவர் ''நான்பூட்டைத்திறக்கச்செய்கிறேன்; நீ உணவு தயார்செய்'' என்றுகூறி அவ்வாறே பூட்டைத் திறக்கச்செய்தார். கௌரியும் உணவுதயாரித்துக் கிழப்பிராமணர்க்கு அமுதுசெய்வித்தாள். திடீரென்று அக்கிழப்பிராமணர் பதினுறுவயது அழகுடைய ஒரு வாலிபனுகமாறிப் புன்னகை பூத்தார். அதுகண்டு கௌரி நடுநடுங்கித் திகைத்து ஒருபுறத்தே ஒதுங்கி நின்ருள். அப்பொழுது வெளியூர் சென்றிருந்த கணவனும் மாமன் மாமியும் வந்து வீட்டிற் புகுந்தனர். அப்போது வாலிப உருவிலிருந்த சிவபெருமான் ஒருகைக்குழந்தையாகமாறிக் காற்பெருவிரலைச் சுவைத்து அழுதுகொண்டிருந்தருளினுர். மாமியார் இக்குழந்தை யாருடையதெனக் கேட்கத் ''தத்தனுடைய மனைவி இக்குழந்தையை விட்டுச்சென்ருள்'' எனக் கூறினுள் கௌரி. அவர்கள், ''குழந்தையைத் தூக்கிக்கொண்டு வெளியிற்செல்'' என்று கௌரியை வெளியேற்றினர். குழந்தையும் கையுமாக வெளியேறிய கௌரி தெருவிற்குவர, அக்குழந்தை மறைந்தது. சிவபெருமான் இடபவாகனத்துடன் விண்ணிலே தோன்றிப் பலரும் கண்டு வணங்கக்

கௌரியை உமாதேவியின் வடிவாக்கித், தம்முடன் அழைத்துச்சென்றார்.

ஒரு பிராமணன் மனத்தாலும் நினைக்கமுடியாத மாபாதகங்களைச் செய்தான். அதனால் அவன் கொடுநோயுற்று அலைந்துதிரிந்துகொண்டிருந்தான். அப்பாதகனுக்கும் சிவபெருமான் நல்வழிகாட்டி உய்வித்தருளினார்.

வாள்வித்தை பயிற்றுவிக்கும் ஆசிரியர் ஒருவர் பயிற்சிப்பள்ளி ஒன்றுவைத்துப் பலமாணவர்கட்கு வாள் வித்தை கற்றுக்கொடுத்து வந்தார். அவர் வயதுமுதிர்ந்தவர்; சோமசுந்தரப்பெருமானை அன்போடு நாளும் வழிபட்டுவருபவர். அவரிடம் பயின்ற மாணாக்கன் ஒருவன் தன் ஆசிரியர்க்கெதிராக ஒரு பயிற்சிக்கூடம் அமைத்தான். அதனுடன் நில்லாது தன் ஆசிரியரின் மனைவியாரிடம் தகாத இச்சைகொண்டான். இதையறிந்த கற்பிற்சிறந்த அவ்வம்மையார் சோமசுந்தரப்பெருமான்தான் அவனுக்குத் தண்டனைகொடுத்துத் தம்மைக் காப்பாற்றவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். பெருமானும் அவள் கணவன்போல் உருவங்கொண்டு அக்கயவனிடம் சென்று வாட்போருக்கு வருமாறு அவனை அழைத்தார். வயதான ஆசிரியனைவெல்வது எளிதென்று அவனும் அதனை ஏற்றுக்கொண்டான். மறுநாள் குறிப்பிட்ட இடத்தில் பலர் முன்னிலையில் இருவருக்கும் வாட்போர் நடைபெற்றது. போரில் சிவபெருமான் அவனுடைய அங்கங்களை ஒவ்வொன்றாக வெட்டிவீழ்த்தி வெற்றிகண்டு அங்கிருந்து மறைந்தருளினார். வாட்போரைக்கண்ட மாணவர்கள் ஆசிரியரைக்காணாது அவர்வீட்டிற்குச் சென்றனர். ஆசிரியர் அப்போதுதான் கோயிலிலிருந்து வீட்டிற்கு

வந்தார். "போர்க்களத்தில் வாட்போர் முடிந்ததும் உங்களைக்காணுது வீடுதேடிவந்தோம்" என்றனர் மாணவர்கள். அதுகேட்ட ஆசிரியர் வியப்புற்றுத் தாம் கோயிலிலிருந்து வருவதாகவும் வாட்போர் நிகழ்ந்ததே தமக்குத் தெரியாதென்றும் கூறினுர். தம்மனைவி, முன்பு நடந்தவற்றையெல்லாம் சொல்லக்கேட்ட ஆசிரியர், சோமசுந்தரப்பெருமானே இவ்வாறு தம்முருவில்வந்து வாட்போர் நடத்தித்தம் பகைவனைக்கொன்ருர் என்பதை அறிந்து மனைவியாருடன் கோயிலுக்குச்சென்று இறைவனை வாழ்த்தி வணங்கினுர்.

திருப்பூவணம் என்னும் ஊரில் பொன்னனையாள் என்ற உருத்திரகணிகை இருந்தாள். அவள் கோயிற் பணியே தனது தலையாய பணியாகக்கொண்டு வாழ்ந்து வந்தாள். அவளுக்குச் சிவபெருமான் உருவத்தைப் பொன்னிஞற்செய்து பார்க்கவேண்டுமென்ற விருப்பம் பலநாளாக இருந்தது. தன்வருவாயை எல்லாம் செலவிட்டுச் சிவனடியார்கட்கு அன்னமிட்டதுபோக மிஞ்சிய தொகையினுல் அவளுடைய விருப்பம் நிறைவேருதிருந்தது. அதனுல் அவள் மிகவருத்தமுற்றிருந்தாள். சிவபெருமான் அவள் விருப்பத்தை நிறைவேற்றி அவளுக்கருள்புரிய உள்ளங்கொண்டார். சித்தர்வேடத்தில் வந்து அவள் கவலையைத் தீர்ப்பதாகக்கூறி அவளிடத்திலிருந்த பித்தளை, ஈயம், இரும்பு, முதலிய உலோகங்களாலான பாத்திரங்களைக்கொணரச்செய்து தம்மிடமிருந்த திருநீற்ருல் அவையனைத்தையும் பொன்னுகமாற்றி மறைந்தருளினுர். அவளும் பெருமானின் திருவருளைக்கண்டு வியந்து அதைக்கொண்டு சிவபெருமானின் திருவுருவத்

தைப் பொன்னினல் வார்ப்பித்தாள். அவ்வுருவத்தின் அழகைக்கண்டு அதன் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள். அத்திருவுருவத்தைக் கோயிலில் எழுந்தருளச் செய்து அதற்குப் பலவிழாக்களும் நடைபெற ஏற்பாடுகளைச் செய்தாள்.

மதுரையில் அடியார்க்கு நல்லான் என்ற வேளாளன் ஒருவன் இருந்தான். அவன் சிவபக்தியிற் சிறந்தவன்; சிவனடியார்கட்கு மகேசுரபூசை செய்வதையே தன்குறிக்கோளாகக்கொண்டு வாழ்ந்துவந்தான். ஒருகாலத்தில் அவன் நிலத்தில்விளைவுகுன்றியது. அதனல்அவன் வழக்கமாகச் செய்துவரும் மகேசுரபூசைக்கு இடையூறு ஏற்பட்டது. பலரிடத்தில் கடன்வாங்கித் தன்தொண்டினைச் செய்தான்; தானுந் தன்மனைவியும் பட்டினி இருந்து சிவனடியார்கட்கு அன்னமிட்டான். இனிக் கடன்கொடுப்பார் எவருமில்லை என்ற நிலை ஏற்பட்டதை அறிந்து அவனும் அவன்மனைவியும் சிவபெருமானிடம் முறையிட்டு உயிரை மாய்த்துக்கொள்வோம் என்றுமுடிவுசெய்தனர்; கோவிலுக்குச்சென்று முறையிட்டனர். அப்பொழுது ஓர் அசரீரி தோன்றி, அன்பனே! அஞ்சாதே, நாம் இன்று உன்வீட்டில் எடுக்குந்தோறும் சிறிதும் குறையாத ஓர் அரிசிக்கோட்டையை வைத்துள்ளோம். அதைக் கொண்டு எப்போதும்போல் உன் மகேசுர பூசையை நடத்திவருவாயாக'' என அருளியது. வேளாளன் வீடு சென்று பார்த்தபொழுது அவ்வாறே ஓர் உலவாக் கோட்டை இருப்பதைக்கண்டு மகிழ்ச்சியுற்று இறைவனை வணங்கி வழக்கம்போல் தன் திருப்பணியைச் செய்து வந்தான்.

தனபதி என்ற செல்வந்தன் ஒருவனிருந்தான்; அவனுக்கு மக்கட்பேறில்லாது தன் தங்கையின் மகனைத் தன் வளர்ப்பு மகனாக ஏற்றுக்கொண்டான்; செல்வமனைத்தையும் தன் மருமகனுக்கே அளித்துவிட்டுநற்கதிவேண்டி மனையாளுடன் துறவறம் பூண்டு தீர்த்தயாத்திரை சென்றான் இதுகண்டு அவனுடைய தாயத்தார்கள் வழக்குப் பேசி அவன் விட்டுச் சென்ற செல்வத்தை யெல்லாம் கவர்ந்து கொண்டனர். மருமகனும் அவன் தாயாரும் அதனால் தளர்வடைந்து சோமசுந்தரப் பொருமானே இதற்கு வழிசெய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். அன்றிரவு இறைவன் ஒருபிராமணன்வடிவில் அவன் கனவில்தோன்றி, '' நாளை அரசசபையில் வழக்குத்தொடர்வாயாக; நாம் வந்து வழக்கைத் தீர்க்கின்றோம்'' என்று கூறி மறைந்தார். அவர்களும் அவ்வாறே செய்தனர். அச்சமயம் சோமசுந்தரப் பெருமானே யாத்திரை சென்ற தனபதியின் உருவத்தில் வந்து தாமே தம் சொத்துக்கள் அனைத்தையும் தம்மருமகனுக்குக் கொடுத்ததாகச் சாட்சி கூறினார். அதனால் தாயத்தாரின் வழக்குத் தோற்றது. தனபதியாக வந்த பெருமானும் மறைந்தருளினார்.

பாண்டியன் அவைக்கு வடதேசத்திலிருந்து ஏமநாதன் என்ற யாழிசைவல்லோன் ஒருவன் வந்தான். அவனுடைய இசைப் புலமையைக்கண்டு பாண்டியன் அவனுக்குத் தக்க பரிசில்களை வழங்கினான். அதைப்பெற்ற ஏமநாதன் தனக்கு ஒப்பார் இந்நாட்டில் இல்லை என்று செருக்குற்றான். அவனுடைய செருக்கையடக்க வேண்டும் என்று அரசன் தன் அவையிலிருந்த பாணபத்திரனை

அழைத்து ஏமநாதனுடன் இசைபாடி அவனை வெல்ல வேண்டும் என்று கூறினன். பாணபத்திரனும் "சோமசுந்தரப் பெருமானின் அருளால் அரசரின் விருப்பத்தை நிறைவேற்றுவேன்" என்று கூறி மறுநாள் சபையில் ஏமநாதனுடன் பாடுவதாக இணங்கினன். எனினும் ஏமநாதனின் இசைத்திறனை எண்ணி அவனை எப்படி வெல்வதென்று அஞ்சியிருந்தான்; சோமசுந்தரப் பெருமானே துணை செய்து அருளவேண்டும் என்று கோவிலுக்குச் சென்று வேண்டிக்கொண்டான். அடியார்க்கு எளியாராகிய சிவபெருமான் அவனுடைய வேண்டுகோளிற்கிணங்கி ஒரு வயது முதிர்ந்த விறகு வெட்டியாக உருக்கொண்டு தலையில் விறகுக்கட்டைச் சுமந்து தோளில் ஒருயாழையும் தொங்கவிட்டுக்கொண்டு வந்தார்; ஏமநாதன் தங்கியிருக்கும் வீட்டிற்கு முன் வந்து விறகுக்கட்டைத்திண்ணையில் சார்த்திஅமர்ந்து இளைப்பாறிக்கொண்டிருந்தார். அப்பொழுது மாலை நேரம். தம் யாழை மீட்டிச்சற்று இசைபாடினர். உள்ளேயிருந்த ஏமநாதன் அதனைக்கேட்டு அவ்விசையின் இனிமையை உணர்ந்து வெளியே வந்து யாரெனக் கேட்டான். அதற்கு விறகுச் சுமையாளர், நான் பாணபத்திரருடைய அடிமையாய் அவரிடம் இசை கற்றுக் கொண்டிருந்தேன். ஒருநாள் அவர் என்னைப்பார்த்து 'உனக்கு வயது முதிர்ந்துவிட்டது. இனி உன்னல் இசைகற்க முடியாதெனச் சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அதனல் நான் விறகு விற்றுப் பிழைக்கின்றேன்' என்றார். ஏமநாதன் அவர் பாடிய பாட்டை மறுபடியும் பாடச்சொன்னன். விறகுவெட்டியும் தேவகானம்போல் இசையைப் பாடினர். அதைக் கேட்ட ஏமநாதன் பாணபத்திரனல் தள்ளப்பட்ட கிழவ

னின் இசை இதுவாயின் அவனுடைய இசை எவ்வாறிருக்குமோ! நானே எப்படி அவனுடன் முடிவில் அவன் இசை வாது செய்வேன்'' என்று கவலை கொண்டான். தப்பிச் செல்வதே நல்லதென்று முடிவு செய்து இரவில் தன்னுடன்வந்த மாணாக்கர்களுடன் ஊரை விட்டு ஓடிவிட்டான். இச்செய்தியைச் சிவபெருமான் பாணபத்திரனுக்குக் கனவிலே தோன்றி அறிவுறுத்தினர். இதை உணர்ந்த பாணபத்திரனும் பாண்டியனும் அன்பனுக்காக விறகுக்கட்டையும் சுமக்க முன் வந்த சோமசுந்தரப் பெருமானின் திருவருளை எண்ணி எண்ணி வழுத்தினர்கள். பாண்டியன் பாணபத்திரனை அன்றுமுதல் அரச அவையில் பாடுவதை நிறுத்தித்திருக்கோயிலிற் சென்று பாடுமாறு கூறினன். பாணபத்திரனும் நாளுந்தவறாது கோவிலில் இசைபாடும் பணியைச் செய்துவந்தான். ஒரு சமயம் அவன் வறுமையுற்று வருந்திய காலத்துப் பாண்டியனுடைய பொன்னறையினின்றும் சோமசுந்தரப் பெருமான் திரவியங்களை எடுத்துவந்து அவ்வப்பொழுது அவனுக்குக் கொடுத்து உதவினர். அப்படியும் அவன் வறுமை நீங்காதது கண்டு சேர அரசனுக்கு ஓர் ஓலை எழுதிக் கொடுத்துப் பாணபத்திரனுக்குப் பொருளுதவி செய்யுமாறு கூறினர். பாணபத்திரனும் அத்திருமுகத்தைக் கொண்டு சென்று சேரமானைக் கண்டான். சேரமானுக்கும் சிவபெருமான் கனவில் தோன்றித் தாம் திருமுகம் கொடுத்தனுப்பியுள்ள செய்தியை அறிவித்திருந்தார். திருமுகத்தைப் பெற்ற சேரமான் பாணபத்திரனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து, மீண்டும் மதுரை சென்று குபேரன்போல வாழச்செய்தான். பாணபத்திரனும் நாளும் திருக்கோவிலில் தன் இசைத்தொண்டினை

மறவாது செய்துவந்தான். ஒருநாள் இவன் பாடவேண்டிய வேளையில் பெருமழை பெய்துகொண்டிருந்தது. வழக்கமாக நின்று பாடும் இடமும் மிகச் சேறுகிவிட்டது. ஆயினும் பாண்பத்திரன் இதனைப் பொருட்படுத்தாது சேற்றில் தன் கால்கள் புதையும் வண்ணம் நின்று மழையில் நனைந்து கொண்டு உருக்கமாக இசைபாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது சிவபெருமான் தோன்றி அவனுக்கு ஒரு பலகையைக் கொடுத்து அதன்மேல் நின்று பாடுக என்று அருளி மறைந்தார்.

பாண்டியனுடைய காமக்கிழத்தி ஒருத்தி இசைபாடுவதில் மிகவல்லவளாக இருந்தாள். பாணபத்திரனுடைய மனைவி இசைபாடுவதில் தன்னினும் சிறந்தவளாக இருப்பதைக் கண்டு அவள் பொருமை கொண்டாள்; பாணபத்திரனுடைய மனைவியை இழிவுபடுத்த வேண்டுமென்று பாண்டியனிடம் கூறினள். பாண்டியனும் தன் காமக்கிழத்தியின் பேச்சைத் தட்டமுடியாது அப்படியே செய்வதாகக் கூறினன். அதற்காக ஈழநாட்டிலிருந்து ஒரு விறலியை அழைத்துப் பாணபத்திரன் மனைவியுடன் இசைவாது நடத்தச் செய்தான். இசைவாதில் தோற்றவர்கள் வென்றவரைத் தம் தோளில் தூக்கவேண்டும் என்ற ஒப்பந்தத்தில் இசைவாது நடைபெற்றது. இசைப் போட்டியில் பாணபத்திரன் மனைவியே வென்றும் அரசன் ஓரவஞ்சமாக விறலியே வென்றதாக இரண்டு நாட்கள் கூறிவிட்டான். இதைக்கண்ட பாணபத்திரன் மனைவி வருத்தமுற்று, மூன்றும் நாளாகிய கடைசிநாட் போட்டியைச் சோமசுந்தரப் பெருமானின் முன்னிலையில் நடத்த வேண்டும் என்றும் அப்பொழுது தான் தன்னுற் பாட

வியலும் என்றும் கூறிவிட்டாள். விறலியும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொள்ள, மறுநாள் சோமசுந்தரப் பெருமான் சன்னிதியில் இசைப்போட்டி நடைபெற்றது. அரசனும் புலவர் பெருமக்களும் சபையில் இருந்தனர் சோமசுந்தரப் பெருமான் ஒரு புலவராக வந்து சபையில் வீற்றிருந்தார். இசைப்போட்டி முடிவில் தன்னையறியாத வகையில் பாணபத்திரனின் மனைவி வென்றதாகப் பாண்டியனே கூறிவிட்டான். ஒப்பந்தப்படி விறலி பாணபத்திரன் மனைவியைத் தன் தோளில் தூக்கிக் கொண்டாள். அதைக்கண்டு புலவராக வீற்றிருந்த சோமசுந்தரப் பெருமான் "இது அற்புதம்! அற்புதம்!" எனக்கூறி மறைந்தருளினார். அதைக்கண்ட மற்றனைவரும் இது பெருமானின் திருவிளையாடலே என எண்ணிப் பேரானந்தக் கடலில் மூழ்கித் திளைத்தார்கள்.

ஓர் ஊரில் செல்வமிக்க வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரேமகள் இருந்தாள். அவளை மதுரையிலிருக்கும் தன் மருமகனுக்கே மணமுடித்துக் கொடுக்கப்போவதாகச் சுற்றத்தார் அறியச் சொல்லிக்கொண்டிருந்தான். ஆனால் அவன் எண்ணம் நிறைவேறும்முன் திடீரென இறந்துவிட்டான். அவன் மனைவியும் அவனுடன் இறந்துவிட்டாள். இதையறிந்த மருமகன் வந்து வணிகனின் மகளை அழைத்துக்கொண்டு மதுரைக்குச் சென்று மணமுடித்துக்கொள்ள எண்ணினான். வழியில் அவனை ஒரு பாம்பு தீண்ட அவன் இறந்துவிட்டான் அதைக்கண்ட உடன்வந்த அப்பெண் அறிவிழந்து மயங்கி விழுந்தாள். அச்சமயம் அவ்வழியேவந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் நிகழ்ந்ததைக் கேள்வியுற்று அப்பெண்ணின்பால்

இரக்கங்கொண்டு பாம்பு தீண்டி இறந்தவனை உயிர் பெற்று எழும்படி செய்தார். இருவரும் ஊர் சென்று அங்குத் திருமணம் செய்துகொள்ளவிருப்பதை அறிந்து அவ்விடத்திலேயே அவர்கள் திருமணம் செய்துகொண்டால் வழிப்போக்கிற்கு ஒருவர்க்கொருவர் மேலும் உதவியாக இருப்பர் என்று ஞானசம்பந்தர் கருதினர். சுற்றத்தார் ஒருவருமில்லாது எப்படி மணம் செய்துகொள்வது என்று அவ்விருவரும் தயங்கினர். ஞானசம்பந்தர் அங்குள்ள சிவலிங்கத்தையும், கிணற்றையும், வன்னிமரத்தையும் சுட்டிக்காட்டி இவைகள் உங்கட்குச் சாட்சியாக இருக்கும் என்று கூறி இருவர்க்கும் மணமுடித்து வைத்தார். அவர்கள் மதுரையை அடைந்து உறவினர்க்கு நடந்தவற்றைக் கூறி இல்லறம் நடத்தி வந்தனர். ஒரு சமயம் வணிகனுடைய மூத்த மனைவிக்கும் இவளுக்கும் ஏற்பட்ட வாய்ச்சண்டையில் மூத்தவள். இளையவளைப் பார்த்து. " நீ என் கணவனை மணம் செய்ததை யாரறிவார்? ஒருவரும் இல்லை. ஆகவே நீ எப்படி மனைவியாக முடியும்? காமக்கிழத்திதானே நீ" என்று கூறினள். இதைக்கேட்ட இளையவள் மனம் நொந்து கோயிலுக்குச் சென்று வன்னியும் கிணறும் சிவலிங்கமும் சாட்சியாக நான் மணந்துகொண்டும் இப்பழிச் சொல் எனக்கேற்பட்டுள்ளதே! அதை நீதான் போக்கியருளவேண்டும்" என்று இறைவனிடம் முறையிட்டு அச்சாட்சிகள் இங்குத் தோன்றுவிடில் நான் உயிர்விடுவேன்" என்று சபதம் கூறினள். சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் அச்சாட்சிகள் மூன்றும் கோயிலின் ஈசான மூலையில் வந்து தோன்றின. அதுகண்ட அனைவரும் இளையவளின் கற்பினையும் தெய்வபக்தியையும் கண்டு மகிழ்ச்சி அடைந்த

னர். அக்கிணற்றையும் சிவலிங்கத்தையும் கல்லாற் செதுக்கப்பெற்ற வன்னிமரத்தையும் சுவாமி கோவிலின் முதற்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் இன்றும் காணலாம்

சிவபெருமான் பிட்சாடனர் வடிவங்கொண்டு தேவதாரு வனத்திற்குச் சென்று முனிவர்கள் இல்லந்தோறும் பிச்சை கேட்டார். பிச்சையிடவந்த முனிபத்தினியர் அவருடைய பேரழகைக்கண்டு மதிமயங்கிக் காமநோய் கொண்டனர். இதைக்கண்ட முனிவர்கள் கோபங் கொண்டு அவர்களைத் தேவலோகத்தைவிட்டு மதுரை நகரில் மானிடப் பெண்களாய்ப் பிறக்கச் சபித்தார்கள். தங்களை மன்னிக்குமாறு அவர்கள் வேண்டிச் சாபம் எப்போது நீங்கும் எனக் கேட்டனர். சோமசுந்தரப்பெருமான் உங்களைக் கைதீண்டும்போது இச்சாபம் நீங்கும் என முனிவர்கள் கூறினர். அதுபோலவே பின்னொரு காலத்தில் சோமசுந்தரப் பெருமான் வளையல் விற்கும் வணிகர் உருக்கொண்டு வளையல் விற்று அந்த வைசியப் பெண்டிரின் கைகளைத்தீண்டி அவர்களுடைய சாபத்தைப் போக்கினர்.

## "புலவர்களுக்காக அருளிய திருவிளையாடல்கள்"

சோமசுந்தரப்பெருமான் தமிழ்ப்புலவர்கட்காகவும் பல திருவிளையாடல்களைச் செய்தருளினர். ஒருசமயம் புலவர்களில் யார் சிறந்தவர் என்பதை முடிவு செய்வதில் சங்கப்புலவர்களுக்குள் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளைப் போக்குவதற்காகச் சிவபெருமான் புலமையை அளக்க வல்ல ஒரு பலகையைக் கொடுத்தருளினர். சிறந்த புலவர்

களைக்காணின் அதுவளர்ந்து இடங்கொடுக்கும்சக்திவாய்ந்தது. சங்கப்புலவர்களிடையே அவரவர்செய்தபாடல்கள் எவையெவை யென்றுகண்டறியாதநிலையிலேஒரு பெருங்குழப்பம் ஒருமுறை ஏற்பட்டது. அச்சமயம் சோமசுந்தரப்பெருமான் ஒரு புலவராய் வந்து அவரவர் பாடல்களை அவரவர்க்கு எடுத்துக் கொடுத்தார். சங்கப்புலவர்கள் மிகமகிழ்ந்து அவரையும் தங்களுடன்ஒருபுலவராக வீற்றிருக்க வேண்டினர். பெருமானும் அவ்வாறே சங்கப்புலவர்களிடையே நடுநாயகமான ஒரு புலவராக வீற்றிருந்தார்.

பாண்டியன் ஒருநாள் தன் தேவியுடன் பூங்காவில் வீற்றிருந்தான். அச்சமயம் தென்றல்காற்றுடன் ஒரு நறுமணம் வீசியது. அம்மணம் எங்கிருந்து வருகிறது என்பதை ஆராய்ந்து அது தன் தேவியின்கூந்தலினின்றும் வருவதை உணர்ந்தான்; அம்மணம் கூந்தலுக்கு இயற்கையோ செயற்கையோ என ஐயுற்முன். தான் ஐயுற்ற கருத்தை யாராயினும் அறிந்து பாடல் இயற்றுவராயின் அவர்க்கு ஆயிரம் பொன் பரிசு கொடுக்கப்படும் என்று அறிவித்து ஒரு பொற்கிழியைச் சங்க மண்டபத்தின்முன் தொங்கவைத்தான். தருமி என்ற ஆதிசைவனொருவன் தன்னுடைய திருமணச்செலவிற்குவேண்டியபொருளில்லாது கவலையுடனிருந்தான். அவன் சோமசுந்தரப்பெருமானை வணங்கித் தன் கவலையைத் தீர்ப்பதற்கு ஒரு செய்யுள் செய்தருளினல் பாண்டியனிடம் கொடுத்துப் பொற்கிழியைப் பெற்றுக் கொள்வேன் என்று வேண்டிக் கொண்டான். பெருமானும் அவனுக்கருள்புரிய அவ்வாறே ஒரு செய்யுள் இயற்றிக் கொடுத்தார். அந்த ஆதிசைவன் வணங்கி அதை ஏற்றுக்கொண்டு பாண்டி

யனும் புலவர்களும் அச்செய்யுளைப் பாராட்டிப் பரிசுக்குரிய பொற்கிழியை அவனுக்கே உரியதாகுமென்று முடிவு செய்தனர். அதைக்கண்ட நக்கீரர் இச்செய்யுளில் குற்றம் இருக்கிறதென்று கூறித் தருமி பரிசுபெறுவதைத் தடுத்தார். தருமி சோமசுந்தரப்பெருமானிடஞ்சென்று நான் வறுமையில் வருந்துவதைவிடப் பெருமான் இயற்றிய செய்யுளில் புலவர்ஒருவர் குற்றம் கண்டதைக் கேட்டு மிகவும் வருத்தமடைகின்றேன்'' என்று கூறி முறையிட்டான். அதைக்கேட்ட சோமசுந்தரப்பெருமான் தாமே ஒரு புலவர் வடிவங்கொண்டு சங்கமண்டபத்திற்கு வந்து எனது செய்யுளில் குற்றம் கண்டவர் யார்?'' எனக்கேட்டார். நக்கீரர் அஞ்சாது, ''நானே கண்டேன்'' என்று கூறி அச்செய்யுளில் கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டு எனக் கூறப்பட்டிருப்பது சரியன்று என்றும், எவர் கூந்தலுக்கும் மலரின் சார்பினுல் செயற்கை மணமே உண்டாகும்என்றும் கூறி இச்செய்யுள்பொருட்குற்றம்உடையது என்ருர்.அதற்குப் புலவர் வடிவிலிருந்த சிவபெருமான், நீ வழிபடும் திருக்காளத்தி அப்பனின் சக்தியாகிய ஞானப்பூங்கோதையின் கூந்தலும் அத்தன்மையதோ?'' என்று வினவினுர். அதற்கு நக்கீரர், ''அதுவும் அத்தன்மையதே'' என்ருர். சிவபெருமான் கோபமுற்றுத் தமது நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்துகாட்டினுர். அஞ்சாநெஞ்சங் கொண்ட நக்கீரர், ''இந்திரனைப் போல உமது உடல் முழுதும் கண்ணுனுலும், உமது பாடலிலுள்ள குற்றம் குற்றமேயாம்'' என்ருர்.நெற்றிக்கண்ணினின்றும்கிளம்பியவெப்பம் தாங்கமுடியாது நக்கீரர், வெப்பநோயினுல் வருந்திப் பொற்ருமரையில் விழுந்து அழுந்தினுர். இதைக்கண்ட

மற்றைப் புலவர்கள் வருத்தமுற்றுப் பெருமானை அடி பணிந்துவணங்கி, "நக்கீரர் செய்த பிழையைப் பொறுத் தருளவேண்டும்" என வேண்டிக்கொண்டனர். பெருமா னும் அதற்கு இரங்கி நக்கீரரைப் பொற்றாமரையினின் றும் கரையேற்றிவிட்டுத்திருவருள் சுரந்து அகத்தியரிடம் அவரைத் தமிழ்ப்பயிலுமாறு செய்வித்தார்.

மற்றொரு சமயம் சங்கப் புலவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டபொழுது சோமசுந்தரப் பெருமானி டம் முறையிட்டு உண்மையை உணர்த்துமாறு அவர்கள் வேண்டினர். சிவபெருமானும் ஒருபுலவராய்த் தோன்றி, "இந்நகரில் தனபதி என்ற ஒரு வணிகர் இருக்கிறார். ஐந்து வயதில் அவருக்கு உருத்திரசருமன் என்ற ஊமை மகன் இருக்கிறான். அவனிடம் உங்கள் உரைகளைக் கூறுங்கள். சிறப்புமிக்க உரைகளைக் கேட்டதும், அவன் கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் சிலிர்ப்பத் தலையசைத்து மகிழ்ச்சி யடைவான். அதைக்கொண்டு எது சிறந்தது என்று நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள்" என்று கூறியருளி னார்.

கல்வியிற் சிறந்து சங்கப்பலகை ஏறிய பாண்டியன் ஒருவனிருந்தான். கபிலருடைய நண்பராகிய இடைக் காடர் என்னும் ஒரு தமிழ்ப்புலவர் தாம் இயற்றிய கவி தையைப் பாடி இப்புலமைமிக்க பாண்டியனிடம் பாராட்டுதலைப் பெறவேண்டும் என்று வந்தார். அவர் கவிதையைக் கேட்ட பாண்டியன் அக்கவிதை மிகவும் சிறப்புடையதாக இருப்பதைக்கண்டு புலவர்பால் பொறாமைகொண்டு யாதும் பேசாது வாளாவிருந்தான்.

இதைக்கண்ட இடைக்காடர் மனம்நொந்து அவையை விட்டு வெளியேறித் திருக்கோயிலுக்குச் சென்ருர். "தமிழறியும் பெருமானே! பாண்டியன் என்னை அவமதித்தான் அது, என்னை அவமதித்ததாகாது. சொல் வடிவமாகிய உமாதேவியாரையும் சொற்பொருள் வடிவாகிய உம்மையுமே இகழ்ந்ததாகும்" எனக்கூறி வணங்கிவிட்டு அவ்வூரைவிட்டு வடதிசை நோக்கிச் சென்ருர். அன்றிரவு சோமசுந்தரப்பெருமானும் மீனுட்சியம்மையாரும் கோயிலைவிட்டு வெளியேறி வைகையாற்றங் கரையில் எழுந்தருளி இருந்தார்கள். காலையில் கோயிலைத் திறந்து சிவாச்சாரியார் கருவறையில் சிவலிங்கத் திருமேனியைக் காணுது பாண்டியனிடம் சென்று முறையிட்டனர். பாண்டியன் அதிர்ச்சியுற்று ஏவலாளர்களை விட்டு எங்கும் தேடச்செய்தான். வைகைக்கரையில் சிவலிங்கமும் மீனுட்சியும் எழுந்தருளியிருப்பது கண்டு அரசனிடம் கூற அவன் விரைந்துசென்று வணங்கிக் கண்ணீர்வார்த்து நாக்குழறத் தவறேதும் நடந்ததோ என்று விண்ணப்பித்துத் துதித்தான். அதற்குச் சோமசுந்தரப்பெருமான், "நீ இடைக்காடன் செய்த செய்யுளை இகழ்ந்தாய்; அவனிடத்து வைத்த அருளிஞல் நாம் அது பொறுக்கமாட்டாது இங்கே வந்தோம்" என்று அசரீரி வாக்கிஞல் அருளிச்செய்தார். அதைக் கேட்ட பாண்டியன் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டி இடைக்காடரைச் சங்கப் புலவர்களோடு அழைத்துக் கொண்டு போய்த் தன் மாளிகையில் வைத்து உபசரித்துத் தான் செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு அவரையும் புலவர்களையும் வேண்டிக்கொண்டான். இவ்வாறு இடைக்காடருக்காகக் கோயிலைவிட்டு வெளியேறி வைகைக் கரையில் சோமசுந்தரப் பெருமான் எழுந்தருளியிருந்த

இடமே இப்போது பழைய சொக்கநாதர் கோயில் என வழங்கப்படுகிறது.

சங்கத்திலமர்ந்து தமிழ்ப் புலவர்களுடன் அளவளாவிய சோமசுந்தரப் பெருமான் ஒருகாலத்தில் நைமிசாரணிய முனிவர்கட்கு வேதத்தின் பொருளை ஓதி அருளினார். முனிவர்களின் வேண்டுகோளிற்கிணங்கச் சோமசுந்தரப்பெருமான் தட்சிணா மூர்த்தியாக உருக்கொண்டு வந்து வேதத்தின் பொருளை விளக்கினார். இதுபோன்று சோமசுந்தரப்பெருமான் முருகப் பெருமானுக்குப் பால் கொடுத்த இயக்கப் பெண்கள் அறுவர்க்கும் ஆச்சாரியாராகத் தோன்றி அட்டமாசித்திகளை உபதேசம் செய்தருளினார்.

பாண்டிய நாட்டுக் கிழக்குச் சமுத்திரக் கரையில் பரதவர்குல அரசன் ஒருவனிருந்தான். அவன் பிள்ளைப் பேறு இல்லாதிருந்தான். முப்பிறப்பின் தவப்பயனால் உமாதேவியாரே ஒரு குழந்தையாய்க் கடற்கரையில் ஒரு புன்னைமர நிழலில் அழுதுகொண்டு கிடந்தார். அதைக் கண்ட பரதவர் அரசன் பிள்ளைப்பேறு இல்லாத எனக்குச் சிவபெருமானே இக்குழந்தையைத் தந்தருளியுள்ளார் என்று மனமகிழ்ந்து அக்குழந்தையை எடுத்துக்கொண்டு போய்த் தன்மனையாளிடம் கொடுத்தான். அவளும் பெரு மகிழ்வுடன் அக்குழந்தையை வளர்த்து வந்தாள். ஒரு காலத்தில் சிவபெருமான் பணித்திருந்தபடி திருநந்தி தேவர் ஒரு பெரிய சுறு மீன் வடிவங்கொண்டு அச்சமுத்திரத்தில் திரிந்துவந்தார். கடலில் செல்லும் மரக்கலங்களுக்கெல்லாம் அச்சுறுமீன் பெரும் தொல்லைகொடுத்து

வந்தது. பரதவ அரசன் எவ்வளவோ முயன்றும் அம் மீனைப் பிடிக்க முடியவில்லை. தன்னுடைய மகள் மணப் பருவம் அடைந்ததை எண்ணி அம்மீனைப் பிடிப்பவர்க்கு அவளைத் திருமணம் செய்துகொடுப்பதாக அறிவித்தான். பலர் முயன்றும் பிடிக்க முடியவில்லை. ஒருநாள் சோம சுந்தரப் பெருமானே ஒரு வலையராக வந்து அம் மீனைப் பிடித்துப் பரதவ அரசன் மகளைத் திருமணம் செய்து கொண்டார். திருமணக் கோலத்தில் மணமக்கள், சிவ பெருமானாகவும் உமாதேவியாராகவும் எல்லோர்க்கும் காட்சி கொடுத்து மறைந்தருளினர்.

## "விலங்குகளுக்காக அருளிய திருவிளையாடல்கள்:"

இவ்வாறு மக்களுக்கேயன்றிப் பிற உயிரினங்கட்கும் அருள்பாலிக்கச் சோமசுந்தரப் பெருமான் பல திருவிளை யாடல்களைச் செய்தருளினார் ஒருசமயம் இந்திரனுடைய வெள்ளையானை, முனிவரின் சாபத்தினால் காட்டு யானை யாகிப் பூவுலகில் திரிந்துகொண்டிருந்தது. அந்த யானை கடம்பவனத்திலிருந்த சொக்கநாதப் பெருமானை வலம் வந்து வழிபட்டதன் பயனாகத் தன் சாபம் நீங்கப் பெற் றது.

ஒருவேளாளனுடைய பன்னிரண்டு புதல்வர்கள்ஒரு முனிவரின் சாபத்தால் பன்றிக்குட்டிகளாகப் பிறந்தனர். பாண்டியன் ஒருவன் பன்றி வேட்டைக்குச் சென்ற பொழுது அக்குட்டிகளின் தாயும் தந்தையுமாகிய பன்றி கள் அவனாற்கொல்லப்பட்டன. குட்டிகள் தாயை இழந்து திகைத்தோடின; பசியால் வருத்தமுற்றன. அக்குட்டி

களின் மீது திருவுளம் இரங்கிச் சோமசுந்தரப்பெருமான் இறந்த தாய்ப்பன்றியின் வடிவங்கொண்டு அக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தார். அதனுல் முன்சாபம் நீங்கப் பெற்று அப்பன்றிக் குட்டிகள் மனித உருப்பெற்றன. பெருமானருளால் அவர்கள் சகல கலைகளிலும் வேதாகமங்களிலும் தேர்ச்சியுற்றனர். பாண்டியன் அவர்களைத் தன் அமைச்சர்களாக ஏற்றுக்கொண்டான்.

## ''பறவைகளுக்காக அருளிய திருவிளையாடல்கள்''

ஒருகருங்குருவி முற்பிறவியின் தவப்பயனுய் மதுரைப் பொற்றாமரைக் குளத்தின் பெருமையை உணர்ந்து நாளும் அதில் மூழ்கிக் கோயிலை வலம்வந்து இறைவனை வணங்கிச் சென்று கொண்டிருந்தது. பெருமான் அதற்கு அருள்புரிய எண்ணி. ''நீ யாது விரும்புகின்றனை?'' என்ருர். அதற்கு அக்குருவி. 'பறவை இனத்தில் நான் எளியனுயினேன். ஆகையினுல், மற்றைத் தீய பறவைகளெல்லாம் எனக்கு எப்பொழுதும் தொல்லை கொடுக்கின்றன. அதனுல், நானும் என்னினத்தைச் சேர்ந்த பிற கருங்குருவிகளும் மற்றைப் பறவைகளைவிட வலிமையுடையோமாக இருக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டது. இறைவனும் அவ்வாறே அருளினுர்.

நாரையொன்று குளங்களில் உள்ள மீன்களைப் புசித்து வாழ்ந்து வந்தது. ஒருநாள் ஒரு புண்ணியகுளத்தில் பல முனிவர்கள் நீராடிக்கொண்டிருந்தனர். மீன்கள் அவர்கள் சடைகளின் மேலும் உடம்பிலும் விழுந்து புரண்டு கொண்டிருந்தன. இதைக்கண்ட நாரை அம்முனிவர்களின் திருமேனியைத் தீண்டிய மீன்களை நாம்

உண்ணலாகாது என்று இரையை வெறுத்திருந்தது. முன்வினைப்பயனால் அந்நாரை மதுரைப் பொற்றாமரைக் குளத்திற்கு வந்தது. அங்குள்ள மீன்களைக் கண்டு அவற்றைப் பிடித்து உண்ணச்சற்று இச்சை கொண்டது. ஆனால் சிவனருளால் அறிவுவர இப்புண்ணிய தீர்த்தத்தில் மீன்களைப் பிடித்துண்பது பாவமன்றோ என்று எண்ணித் தனக்கு நல்வழி காட்டவேண்டுமென வேண்டிக் கொண்டது. சோமசுந்தரப் பெருமானும் மனமிரங்கி, 'நீ விரும்புவது யாது'? எனக் கேட்டார். 'இப்புண்ணிய தீர்த்தத்தில் நான், மீனை உண்டு பாவம் செய்ய நினைத்தேன். இதுபோல் என்னினத்தைச் சேர்ந்த மற்றை நாரைகளும் அப்பாவத் தொழிலைச் செய்வதினின்றும் தடுத்தல்வேண்டும். அதற்காக இப்பொற்றாமரைக்குளத்தில் மீன்களே இல்லாது அருளவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டது. பெருமானும் அவ்வாறே அருளினார்.

## ''மாணிக்கவாசகருக்கு அருளிய திருவிளையாடல்''

திருவாதவூரில் சிவனெறியில் தழைத்த ஒரு குடும்பத்தில் மாணிக்கவாசகர் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் தோன்றினார். அவர்க்குத் தாய்தந்தையர் இட்டபெயர் திருவாதவூரர் என்பது அவர் இளமையிலேயேநீதிநூல்களையும்மற்றையகலைகளையும் பயின்றுதேர்ச்சி பெற்றிருந்தார். அதையறிந்த அரிமர்த்தன பாண்டியன் அவரைத் தன் அமைச்சராக வைத்துக்கொண்டான். ஒரு சமயம் பாண்டியனுடைய படைக்குக் குதிரைகள் தேவைப்பட்டன. கடற்கரைக்கு அரபு நாட்டினின்றும் குதிரைகள் வந்திருப்

பதைக் கேள்வியுற்ற அரசன். திருவாதவூரரை அனுப்பிக் குதிரைகள் வாங்கிவரக் கூறினன். அமைச்சரும் கருவூலத்தினின்றும் வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு சோமசுந்தரப்பெருமானை வணங்கிக் குதிரை வாங்கச் சென்றார். வழியில் திருப்பெருந்துறையில் உள்ள திருக்கோயிலை வழிபட்டு வலம் வந்த பொழுது ஒரு குருந்த மரத்தடியில் சிவஞான போதப் புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு பரமாச்சாரியார் யோகாசனத்திலிருப்பதைக் கண்டார் திருவாதவூரர் அவரை வணங்கி மனமுருகிச் சிவபெருமானுடைய திருவருளாகிய வலையில் அகப்பட்டு மெய்ம்மறந்தார். அந்த ஞானச்சாரியாரின் அருட்டிரு நோக்கால் அழலிடைப்பட்ட நெய்போல் உருகி நாத்தழுதழுத்து அன்புமயமான பழுதில்லாத சொற்களினால் பாமாலைகள் சார்த்தினர். இதனைச் செவியுற்ற ஞானச்சாரியாராகிய சிவபெருமான் 'மாணிக்கவாசகர்' என்னும் பெயரை இவர்க்குக்கொடுத்தருளினர். இவ்வாறு மெய்ஞ்ஞானம் பெற்ற மாணிக்கவாசகர் தாம் அரசர்க்காகக் குதிரைகள் வாங்க வந்தமையை மறந்து அதற்காகக் கொண்டுவந்த பொருளையெல்லாம் கோயில் திருப்பணிக்குச் செலவு செய்துகொண்டிருந்தார். தம் உடன்வந்தவர்களைப் பாண்டியனிடம் ஆடி மாதத்தில் குதிரைகள் வருமெனக்கூறுமாறு அனுப்பிவிட்டுத் தாம் அங்கேயே தங்கியிருந்தார். அவ்வாறு ஆடிமாதத்தில் குதிரைகள் வாராதது கண்டு பாண்டியன், மாணிக்கவாசகரை அழைத்துவரச் செய்து கோபங்கொண்டு அவரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தினன். ஆனல் மாணிக்கவாசகர் "குறித்த நேரத்தில் குதிரைகள் வந்து சேர்ந்துவிடும்" என்று கூறிக்கொண்டிருந்தார். சிறைக்கூடத்தில்

தமது மெய்யன்பர் அல்லற்படுவதைக் கண்ட சிவபெருமான் காட்டிலிருக்கும் நரிகளனைத்தையும் குதிரைகளாக்கித் தம்முடைய கணங்களைக் குதிரைச் சேவகர்களாக்கித் தாமும் ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு ஆவணிமூலத்தில் மதுரை வந்துசேர்ந்தார். எண்ணற்ற உயர்சாதிக்குதிரைகளைக் கண்டபாண்டியன் மகிழ்ச்சியுற்றுத் திருவாதவூரரைச்சிறையினின்றும்விடுவித்துஅவரைப்பாராட்டினான். அக்குதிரைகள் பாண்டியனுடைய குதிரைக் கொட்டடியில் அன்றிரவு அடைக்கப்பட்டிருந்தன. நடுநிசியில் அக்குதிரைகள் எல்லாம் மீண்டும் நரிகளாக மாறி ஊளையிட்டுக்கொண்டு மற்றைக் குதிரைகளுக்கும் ஊறுசெய்து வெளியேறி ஊரெங்குஞ்சுற்றிக் காட்டிற்குள் ஓடின. இதைகண்ட நகரமக்கள்எல்லாம்மிகஅஞ்சிப் பாண்டியனிடம்சென்றுமுறையிட்டனர். பாண்டியன் சினங்கொண்டு திருவாதவூரரை அழைத்துத் தன்னை இவ்வாறு ஏமாற்றிய குற்றத்திற்காக உச்சிப் பொழுதிலே சூரியனைப் பார்க்கும்படி நிறுத்தி, நெற்றியிலும் கைகளிலும் கற்களைத் தூக்கிவைக்கச்செய்து வருத்தினான். துன்பத்தைத் தாங்கமுடியாது மாணிக்கவாசகர் சோமசுந்தரப் பெருமானை வணங்கி அழுதார். பெருமான், அவருக்கு அருள் பாலிக்க எண்ணி வைகையாற்றில் வெள்ளப் பெருக்கெடுக்கச்செய்து மதுரைநகரின்வீடுகளையும் மதில்களையும் வீழ்த்தி உள்ளேநீர்போகும் வண்ணம் செய்தார். வெள்ளத்தினின்றும் தப்பிப்பிழைக்க நகரமக்கள் தங்கள் பொருள்களைத் தூக்கிக்கொண்டு ஓடினர். மாணிக்க வாசகரை ஒறுத்த தண்டலர்களும் அவரைவிட்டுத் தங்கள்உயிரைக் காக்க ஓடினர். மாணிக்கவாசகர் திருக்கோயிலுக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளைத் துதித்து வணங்கிச்

சித்திரம் போல் அசைவற்று நின்ருர். வைகை நீர்ப் பெருக்கால் ஏற்பட்ட தொல்லையைத் தவிர்ப்பதற்குப் பாண்டியன் மக்கட்கு ஒரு கட்டளை பிறப்பித்தான். குடிமக்கள் அனைவர்க்கும் வைகைக் கரையில் ஒவ்வோர் எல்லை குறிப்பிட்டுக் கரையை அவர்கள் கட்டவேண்டும் என்பதே அக்கட்டளையாகும். அவ்வாறே மக்களெல்லோரும் அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் கரைகட்டிக்கொண்டிருந்தனர். பிட்டு விற்பனை செய்யும் வந்தி என்கின்ற கிழவி ஒருத்தி அக்காலத்தில் இங்குஇருந்தாள். அவளுக்கு வேறு உறவினர் இல்லை. நாள்தோறும் தான் தயாரிக்கும் பிட்டை முதலில் சோமசுந்தரக் கடவுளுக்கு அன்பினுல் படைத்துப் பின் விற்பனை செய்வாள். அரசன் கட்டளைப்படி அவளுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் கரைகட்ட அவளுக்குக் கூலியாள் கிடைக்கவில்லை. அரசன் தண்டிப்பான் என அஞ்சிச் சோமசுந்தரப்பெருமானை நினைத்து, ''இந்நிலையில் எனக்குத் துணையாவார் எவருமில்லையே! என்செய்வேன்'' என்று அவள் கண்ணீர் சொரிந்தாள். பெருமான், அவளுக்குஅருள்பாலிக்க எண்ணினுர். ஒருகூலியாள் உருக்கொண்டு கூடையும் மண்வெட்டியும் ஏந்தி, வந்திமுன்தோன்றி, ''வேலைக்கு ஆள்வேண்டுமா?'' என்ருர். அதைக்கேட்ட வந்தி மகிழ்ச்சியுடன், ''எனக்குவிடப்பட்ட கரையை அடைத்துத் தருவாயா?'' எனக்கேட்டாள். அதற்குப்பெருமான், ''அடைக்கின்றேன்; கூலியாக உதிர்ந்தபிட்டை முதலில் தரவேண்டும். நான் உண்டு இளைப்பாறி உன்பகுதியைக் கட்டுவேன்'' என்று கூறினுர். அவளும் அதற்கிசைந்து பிட்டைக் கொடுத்து உண்ணச்செய்தாள். உண்ட கூலியாள் வைகைக்கரைக்குச் சென்று வந்தியின் பகுதியை அடை

யாது விளையாடிக்கொண்டு இருந்ததுமன்றி அடிக்கடி அவளிடம் வந்து பிட்டையும் வாங்கி உண்டுகொண்டிருந்தார். மற்றைப் பகுதிகள் எல்லாம் அடைக்கப்பட்டு, வந்திக்கொதுக்கிய பகுதிமட்டும் அடைக்கப்படாமல் இருப்பதைக்கண்ட ஏவலர், அரசனிடம் சென்றுகூறினர். அரசன் மிக்க சினங்கொண்டு அத்தலத்திற்கு வந்து "வந்தியின் கூலியாள்எங்கே?" என்று கேட்டான். ஏவலர் கூலியாளைக் காண்பித்தனர். அரசன் தன்கையிலிருந்த பொற்பிரம்பால் அவரை முதுகில் அடித்தான். சிவபெருமானுகிய கூலியாள் ஒருகூடை மண்ணையள்ளி அவ்வுடைப்பிலே கொட்ட அது மலைபோல் உயர்ந்தது. அதன் பின்னர் அவர் மறைந்தருளினுர். தேவர்கள் பூமழைபொழிய வந்தியும் சிவகணங்களால் தேவலோகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். பாண்டியன், இறைவனுடைய முதுகிலே அடித்த அடி எல்லோர் முதுகிலும் விழுந்ததாக யாவரும் உணர்ந்தனர். ஓர் அசரீரி உண்மையை உணர்த்தப் பாண்டியன் திருவாதவூரர்க்குத் தான்செய்த கொடுமையை எண்ணி அவரைத் தேடிச்சென்ருன். திருக்கோயிலையடைந்து அங்கே அவரைக்கண்டு அடிபணிந்து வணங்கிப் பிழையைப் பொறுக்குமாறு வேண்டிக்கொண்டான்.

## "திருஞானசம்பந்தர்க்கருளிய திருவிளையாடல்"

கூன்பாண்டியன் கி. பி. 640-ல் தீவினைப்பயனுகச் சமணர்களுடைய போதனையில் அகப்பட்டுச் சைவ நெறியைவிட்டு அவர்கள் நெறியைத் தழுவினுன். 'அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகள்" என்றபடி நாட்டு மக்கள் அனைவரும் சமணநெறியைப் பின்பற்றினர். பாண்

டியன் மனைவியாகிய மங்கையர்க்கரசியும் அமைச்சர்குலச்சிறையாரும் ஆகிய இருவர்மட்டுமே சைவநெறியை வழுவாது பின்பற்றியிருந்தனர். நாட்டுநிலைகண்டு யாது செய்வதென அறியாது இருவரும் மிகக்கவலையுற்றனர்; அச்சமயம் திருஞானசம்பந்தரைப் பற்றியும் சோழநாட்டில் அவர் செய்துவரும் அற்புதங்களைப் பற்றியும், கேள்வியுற்று, அவரை மதுரைக்கு அழைக்க எண்ணினர்; திருஞானசம்பந்தப்பெருமானுக்கு ஓர் ஓலை எழுதித் தங்களுடைய எண்ணத்தைத் தெரிவித்து மதுரைக்கெழுந்தருளி நாட்டில் சைவத்தை மறுபடியும் நிலைநாட்டவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டனர். ஓலையைக்கண்டு ஞானசம்பந்தரும் உடனே புறப்பட்டு மதுரைவந்தார். மங்கயர்க்கரசியும் குலச்சிறையாரும் எதிர்கொண்டு அழைத்து அவரை ஒரு திருமடத்தில் தங்கச்செய்தனர். இதனை அறிந்த சமணர்கள் இரவில் அம்மடத்திற்குத் தீயிட்டனர். அத்தீயைக்கண்ட ஞானசம்பந்தர், ''பையவே சென்று பாண்டியர்க்காகவே''என்றுபாடினார். அது உடனே அரசனுக்கு வெப்புநோயாகி அவனை வருத்தலாயிற்று மருத்துவர்களின் மருந்தினாலும் சமணர்களின் மந்திரத்தினாலும் அந்நோய் மாறவில்லை." ஞானசம்பந்தரே இந்த நோயைத் தீர்க்கவல்லவர்" என்று மங்கையர்க்கரசி கூறினார். ''அப்படியாயின் அவரை அழைத்துவருக'' என்றுஅரசன் குலச்சிறையாரை அனுப்பினான். திருஞானசம்பந்தமூர்த்தியும் வந்து, 'மந்திரமாவது நீறு'' எனத் துவங்கும் திருப்பதிகத்தைப் பாடி அரசன் மேனியிலே திருநீற்றைப்பூச, அவனுடைய வெப்புநோய் நீங்கியது. அதனுடன் அவனுக்கு முன்னிருந்த கூனும் மறைந்தது பாண்டியன் சைவ சமயத்தையேற்றுச் சௌந்தர

பாண்டியன் என்ற அழகிய பெயரையும் பெற்றான். மக்களும் அரசனைப் பின்பற்றிச் சமணசமயத்தை இகழ்ந்து சைவநெறியைப் பின்பற்றினர்.

இதைக்கண்ட சமணர்கள் ஞானசம்பந்தரை வாதுக் கழைத்தனர். பாண்டியனின் அவைக்களத்தில் நடைபெறும் வாதில் தோற்றவர்கள் கழுவில் ஏறவேண்டும் என்று முடிவுசெய்யப்பெற்றது. முதலில் தீவாதம் நடைபெற்றது. ஒருகிடங்கில் தீ மூட்டப்பட்டது. சமணர்கள் தங்கள் மந்திரங்களைப் பச்சை ஓலையில் எழுதித் தீயிலிட்டனர். அது உடனே கரிந்து சாம்பலாயிற்று. திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகம் ஒன்றைத் தம்கையால் ஏட்டில் எழுதி நெருப்பிலிட்டார். அவ்வோலை எரியாது பச்சையாக இருந்தது. அதுகண்ட அரசனும் மற்றவர்களும் வியந்து திருஞானசம்பந்தரைப் போற்றித் துதித்தனர். அடுத்து நீர்வாதம் நடத்தவேண்டுமென்றனர் சமணர்கள். இருவர் ஏடுகளையும் வைகையாற்றில் விடுவதென்றும், யாருடைய ஏடு நீரை எதிர்த்துச் செல்லுமோ அவரே வென்றவர்என்று கருதவேண்டுமென்றும் முடிவு செய்யப்பெற்றது. அவ்வாறே சமணர், தம் ஏடுவிட்டதும் அது நீருடனே கடலை நோக்கிச் சென்றது. திருஞானசம்பந்தர் விடுத்த திருப்பதிக ஏடு நீரைஎதிர்த்து மேற்கு நோக்கிச் சென்றது. இதைக்கண்ட சமணர்கள் தங்களுடைய தோல்வியை ஒப்புக்கொண்டு கழுவேறினர். பாண்டியநாட்டில் சைவம் நிலைபெற்றது. திருஞானசம்பந்தர் வைகையில்விடுத்த ஏடு எதிர்த்துச் சென்ற இடந்தான் இப்போது 'திருவேடகம்' என்ற பெயரில் வழங்கி வருகிறது.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணத்தில் காணப்பெறாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று திரு விளையாடல்கள், பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவால வாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் காணப்படு கின்றன.

## "மூர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடல்"

மூர்த்தியார் என்ற வணிகர் நாள்தோறும் சோமசுந் தரப் பெருமானுக்குச் சந்தனம் அரைத்துச் சார்த்து வதைத் தம் பணியாகக்கொண்டு வாழ்ந்து வந்தார். அச்சமயம் ஒரு கர்நாடகமன்னன் மதுரையைக் கைப்பற் றினான். அவன் சமணசமயத்தைத் தழுவியவன்; ஆகவே வைதீக முறைகளை ஒழிப்பதற்கான வழிகளை மேற்கொண் டான். மூர்த்தியாரின் சந்தனம் சார்த்தும் திருப்பணி யைத் தடுக்க எண்ணி அவர்க்குச் சந்தனக்கட்டைகள் கிடையாதவாறு செய்தான். மூர்த்தியாரோ சற்றும் மனங்கலங்காது தம் முழங்கையையே சந்தனக்கட்டை யாகப் பாவித்துக் கல்லில் தேய்த்தார். இரத்தம் பெருக் கெடுத்தோடியது. இறைவன் அவருடைய அன்பினைக் கண்டு அவர்க்கு அருள்பாலிக்க எண்ணி, 'இன்று இரவு கர்நாடக மன்னன் இறந்துவிடுவான்; நீ இந்நாட்டிற்கரச ஞகிப் பணிசெய்து மகிழ்வாயாக!" என்று அசரீரியாகக் கூறி மறைந்தார். அவ்வாறே அன்றிரவில் மண்மழை பெய்து வடுகவேந்தன் இறந்தான். வழியோர் யாரும் இல்லாது அவன் இறந்தபடியால் அமைச்சர்கள் அரச னைத் தேர்ந்தெடுக்க ஒரு யானையை விட்டனர். யானை,

கோயிலை வலம்வந்து மூர்த்தியாரைத் தன் முதுகில் ஏற்றி வந்தது. மக்களும் அவரையே அரசராக ஏற்றனர்.

### "காரியார், நாரியார்—பாப்பகுந்த திருவிளையாடல்"

காரியார், நாரியார் என்ற இருபுலவர்கள் வடநாட்டி னின்றும் பாண்டியன்மீது கவிதைபாட மதுரை நோக்கி வந்தனர். வரும் வழியில் அடர்ந்த காடொன்றில் வழியறி யாது திகைத்தனர். அச்சமயத்தில் சோமசுந்தரப்பெரு மான், ஓர் இடையன் வடிவில் மாடுமேய்த்துக் கொண்டு அங்கு வந்தார். புலவர்கள் அவரிடம் வழி கேட்டனர். அவர்கள் எதற்காக மதுரைக்குச் செல்கின்றனர் என் பதை அறிந்துகொண்டு, பாண்டியன்மீது பாடியுள்ள பாடல்களில் பாதியைத் தம்மீது பாடினுல்தான் வழி கூறுவேன் என்றும், தம்பெயர் சொக்கக்கோன் என்றும் கூறினுர். புலவர்கள் வேறு வழியின்றி அவ்வாறே பாடி னர். சொக்கக்கோனுக வந்த இறைவனும் அவர்கட்கு வழிகாட்டி மறைந்தார்.

### 'புலிமுலைப்பால் புல்வாய்க்கருளின திருவிளையாடல்'

கடம்பவனத்தில் குட்டியை ஈன்ற மானென்று தண் ணீர் குடிக்கச் சென்றவிடத்தில் ஒரு வேடனுற் கொல்லப் பட்டது. தாயை இழந்த குட்டி தவிப்பதைக் கண்ட சோமசுந்தரப்பெருமான் ஒரு புலியை அதற்குப் பால் கொடுக்குமாறு செய்தார். புலிமுலைப்பாலைக் குடித்து மான்குட்டி வளர்ந்து புலியுடன் விளையாடிக்கொண்டி ருந்தது. கடம்பவனத்தில் இருந்த சிவலிங்க உருவத்தை

யும் பொற்றுமரையையும் ஒரு வணிகன் மூலம் மணலூரி லிருந்த பாண்டியன் கேள்விப்பட்டான். அவற்றைக் காண விரும்பி அவன் வரும்பொழுது, மான்குட்டி புலிப் பாலைக் குடித்து அதனுடன் விளையாடுவதைக் கண்டு வியந்து, ஒரு நகரம் அமைப்பதற்குச் சிறந்த இடம் அதுவே என்று அவ்விடத்திலேயே மதுரை நகரை அமைத்தான்.

---



சுவாமிகோயில் தங்கவிமானம்
(பக்கம் 155)



அட்ட சக்தி மண்டபம்
(பக்கம் 147)



மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது நிலைக் கோபுரங்கள்

# பிற்காலத்தில் நிகழ்ந்த சில அற்புதங்கள்

## "கல்யானை கரும்பு தின்றது"

கி. பி. 1310 ஆம் ஆண்டு சூன்மாதம் 20 ஆம் நாள் மாலிக்காபூர் மதுரையை முற்றுகையிட்டுப் பாண்டியன் கோட்டையைக் கைப்பற்றினான்; கோட்டையையும் ஊரிலிருந்த பல கோயில்களையும் இடித்தான். மீனாட்சி சுந்தரர் திருக்கோயிலின் பெரும்பகுதி இடிபட்டது. அப்பொழுது மாலிக்காபூர் படையைச்சேர்ந்த திருயேகம் பகராயர் என்பவர் கோயிலைப்பார்க்கவந்திருந்தார். சுவாமிகோயில் முதற் பிரகாரத்தைச் சுற்றிவரும் பொழுது கருவறையைச்சுற்றி யானைகளின் உருவங்கள் எட்டு இருப்பதைக்கண்டு அதன் விவரம் என்ன வென்றுகேட்டார். அச்சமயம் எல்லாம் வல்ல சித்தர் சன்னிதியில் தியானம் செய்துகொண்டிருந்த சொக்க நாதர் என்ற ஒரு துறவி "அவ்யானைகளைப் பற்றி விளக்கியதுடன் கல்யானைக்குக் கரும்புகொடுத்த திருவிளையாடலையும்" விவரமாகக் கூறினார். அதைக்கேட்ட இராயர். "அஃது உண்மையாயின் இந்தயானை இப்பொழுது கரும்

யைத் தின்னுமோ?'' என்று வினவினர். ''அவ்வாறே தின்னும்'' என்று துறவி கூற இராயர், மாலிக்காபூரையும் அவ்வதிசயத்தைக்காண அழைத்துவந்தார். துறவி, மாலிக்காபூரிடமே கரும்பைக்கொடுத்து யானைக்குத்தரச் சொன்னார். அவன் கைநீட்டித்தந்தான் விமானத்திலிருந்த கல்யானை தன் துதிக்கையை நீட்டிக் கரும்பை வாங்கித் தின்றது. அவ் வற்புதத்தைக்கண்ட மாலிக்காபூர், 'ஆகா! இங்கு அல்லா இருக்கிறார்!'' என்றுகூறி, ''மேற்கொண்டு கோயிலை இடிக்கவேண்டாம்'' என்று கட்டளையிட்டான். ஆனால் அதற்குள் கபாலியுடையவர் திருமதிலுக்கு வெளியிலுள்ள பெரும்பகுதிகள் இடிக்கப்பட்டுவிட்டன. அத் திருமதிலுக்குட்பட்ட சுவாமிகோயில் கருவறை முதல் ஆறுகால்பீடம்வரை உள்ள பகுதிகள்மட்டும் மாலிக்காபூரின் ஆணையின்படி இடிபடாமல் தப்பின. துறவியைத் தேடும்பொழுது அவர் அங்கு காணப்படவில்லை. இது சோமசுந்தரப்பெருமானின் திருவிளையாடலே என்று கருதப்பெற்றது.

[இவ்வாறு திருக்கோயிலிலுள்ள சிதளப்புத்தகத்தில் குறிக்கப்பெற்றுள்ளது.]

## ''கம்பண்ணர் போர்வாள் பெற்றது''

கி. பி. 1330-ல் மதுரைநகர் மகமதிய ஆட்சிக்கு உட்பட்டதிலிருந்து கோயில்களில் நாள்வழிபாடுகள் ஒன்றும் நடைபெறவில்லை. இடிபட்டகோயில்கள் சீர்படுத்தப் படாமல் கிடந்தன. இந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற விசய நகரவேந்தர் குமாரகம்பண்ணர் ஒரு பெரும்

படையுடன் மதுரைக்கு வந்தார். அவ்வாறு அவர் படையெடுக்க முடிவுசெய்ததற்கு அவர்கண்ட ஒருகனவே காரணமாகும். ஒருநாள் இரவு குமாரகம்பண்ணர் கனவில் மதுரை மீனாட்சியம்மன் தோன்றிப் பாண்டிய நாட்டில் மகமதியரின் ஆட்சியினால் மக்களடையும் பெருந் துன்பத்தையும், திருக்கோயில்களெல்லாம் இடிபடுவதை யும், இந்துசமய ஒழுக்கங்கள் இழிவுபடுத்தப்படுவதையும் கூறித்தம்கையிலுள்ள வாளினை அவர் கையிற்கொடுத்து, "இது சிவபெருமானுக்கு விசுவகர்மாவினால் கொடுக்கப் பெற்றது. அதைச் சிவபெருமான் பாண்டி யர்க்குக் கொடுத்தார். ஆனால் இதனை எடுத்துப் போர் புரியும் வன்மையைப் பாண்டியர்கள் இழந்துவிட்டனர். ஆகவே அகத்தியர் இதனை என்னிடம் கொடுத்து உன் கையிற்கொடுக்கும்படி கூறினார். நீ இவ்வாளினால் மகமதி யரை வென்று பாண்டியநாட்டையும் மக்களையும் காப்பா யாக" என்று கூறி மறைந்தருளினார்.

[கம்பண்ணர் படையெடுப்பையும் வெற்றியையும் குறித்து அவர் மனைவி கங்காதேவி வடமொழியில் எழுதியுள்ள 'மதுராவிஜயம்' என்னும் நூலில் மேற்கண்ட நிகழ்ச்சி விவரமாக உள்ளது.]

**கம்பண்ணர் கண்ட காட்சி:-**

கி. பி. 1330-ல் மகமதியர்கள் தமிழ்நாட்டில் புகுந்து கொள்ளையிட்டு வந்தபொழுது வாளால் விழித்துறங்கும் பராக்கிரம பாண்டியன் மதுரையைவிட்டுக் காளையார் கோயிலுக்கு ஓடிவிட்டான். அப்பொழுது கோயில் ஸ்தா

னீகர்கள் சுவாமிகோயில் கருவறையில் சிவலிங்கத்திரு மேனியை மூடி ஒருகிளிக்கூடு அமைத்து அதன்மேல் மணலைப்பரப்பிக் கருவறை வாயிலையும் கல்லினால் சுவரெடுத்து அடைத்தனர்; அதற்கு முன்புள்ள அர்த்தமண்டபத்தில் வேறொரு சிவலிங்கத்தை வைத்துவிட்டனர்; அம்மன்கோயில் கருவறையிலிருந்த மீனாட்சியம்மனைப் பெயர்த்தெடுத்து விமானத்தின் மேற்போக்கில் மறைத்து வைத்துக் கீழே வேறுசிலையொன்றை வைத்துவிட்டனர்; உற்சவமூர்த்தி, இளையநயினார் முதலிய விக்கிரகங்களை முசுகுந்தீசுவரர் சன்னிதியிற் புதைத்து வைத்தனர்; சொர்ண விக்கிரகங்களை மட்டும் எடுத்துக்கொண்டு நாஞ்சில்நாட்டுக் கிலுகிலுப்பைக்காடுபோய்ச்சேர்ந்தனர்.

பின்னர் மகமதிய ஆட்சியையொழித்துக்கம்பண்ணர் மதுரையை மீட்டபொழுது கோயில் ஸ்தானீகர்களை அழைத்துக் கோயிலைத் திறக்கச் சொன்னார், அதன்படி கருவறை வாயிற்சுவர் இடிக்கப்பட்டது. மணல்மேடும் அப்புறப்படுத்தப்பட்டுக் கிளிக்கூட்டை எடுத்தபொழுது அங்கு எல்லோரும் வியக்கத்தக்க ஒரு காட்சியைக் கண்டனர். 48 ஆண்டுகளுக்கு முன் கருவறை அடைக்கப்பட்டபொழுது சிவலிங்கத்திற்குச் சார்த்தப்பட்ட சந்தனமும் செண்பகப்பூமாலையும் அன்று காலையிற் சார்த்தியன போன்றே இருந்ததுடன், இரண்டு வெள்ளிக்குத்துவிளக்குகளும் சுடர்விட்டு எரிந்து ஒளிவீசிக்கொண்டிருந்தன.

[சீதளப்புத்தகத்தில் இவ்விவரம் குறிக்கப்பட்டிருக்கிறது.]

## ''குருஞானசம்பந்தர் சிவலிங்கம் பெற்றது''

தருமபுர ஆதீனத்தை ஆதியில் நிறுவிய தவத்திரு குருஞான சம்பந்தர் கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்தார். தம்தாய்தந்தையருடன் மதுரைக்குச் சொக்கநாதரை வழிபடவந்த பொழுது இறையருளில் ஈடுபட்டு மெய்ம்மறந்து தாம் மட்டும் மதுரையிலேயே தங்கிவிட்டார். பொற்றாமரைக் கரையில் சிவனடியார் சிலர் நாளும் சிவபூசையில் ஈடுபட்டிருப்பதைக்கண்டு, தாமும் அவ்வாறு வழிபடவேண்டுமென எண்ணினார். அன்றிரவு சோமசுந்தரப்பெருமான் கனவில்தோன்றி ''நாம் பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஈசானமூலையில் இருக்கின்றோம்; எடுத்துப்பூசித்து இணையில்லாப் பேரின்பத்தைப்பெறுக'' என்றுகூறி மறைந்தருளினார். அவ்வாறே மறுநாள்காலையில் பொற்றாமரையில் நீராடிக் குறித்த இடத்தில் தேடினார். அச்சமயம் அவருடைய கைகளில் சொக்கநாதர் சிவலிங்கவடிவில் தாமே எழுந்தருளினார். குருஞான சம்பந்தர் பேரானந்தத்தில் மூழ்கிக் கோயிலுக்குச்சென்று பெருமானை வழிபட்டுத் தமக்குச் சிவலிங்கபூசை முறையை அறிவிக்கும் ஆச்சாரியார் ஒருவரைத் தெரிவிக்குமாறு வேண்டிக்கொண்டார். அன்றிரவு பெருமான் கனவில்தோன்றித் ''திருவாரூரில் உள்ள கமலை ஞானப்பிரகாசரிடஞ் சென்று உபதேசம் பெறுக'' என்றுகூறி மறைந்தருளினார். அவ்வாறே இவரும் தம்குருநாதரைத் தேடிச்சென்று உபதேசம் பெற்றுத்தருமையில் எழுந்தருளினார்.

[தருமபுர ஆதீனவரலாற்றில் முழுவிவரம் காண்க]

110036

## "திருமலைநாயக்கரை மதுரையிலிருக்கச் செய்தது"

திருமலைநாயக்கர்காலத்தில் முதலில் திருச்சிராப்பள்ளியே அவர் தலைநகராக இருந்து வந்தது. கி. பி. 1634-ல் தலைநகரைத் திருச்சியினின்றும் மதுரைக்கு மாற்றிவிட்டார். அவ்வாறு தலைநகரை மாற்றியதற்கு ஒரு காரணம் கூறப்படுகிறது. சிலகாலமாக மண்டைச்சளி நோயால் நாயக்கர் வருந்திவந்தார். அச்சமயம் மதுரைக் கோயிலில் நடைபெற்ற பெருவிழாவிற்கு அவர் போகவேண்டியிருந்தது. புறப்பட்டு வரும் வழியில் திண்டுக்கல்லில் தங்கியிருந்தபொழுது அவர்க்கு நோய்மிகுதியாகி மிகவும் துன்பப்பட்டார்; மதுரைக்குச் செல்வதையும் நிறுத்திவிட எண்ணினர். ஆனல் அன்றிரவு சோமசுந்தரப்பெருமான் நாயக்கர் கனவில் ஒரு சித்தர் வடிவில் தோன்றி, நீ மதுரையைத் தலைநகராகக் கொண்டு அங்கயற்கண்ணம்மையையும் சொக்கநாதரையும் வழிபட்டு ஆட்சிபுரிந்து வந்தால் உன் நோய் நீங்கும்" என்று கூறித் திருநீற்றையும் கொடுத்து மறைந்தருளினர். நாயக்கர் விழித்தெழுந்து தம் கையில் திருநீற்றைக்கண்டு ஆண்டவன் திருவருள் என்று மதுரைக்குப் புறப்பட்டுச்சென்ருர். மறுநாளே அவர்நோயும் நீங்கியது. அதுமுதல் மதுரையையே தலைநகராகக்கொண்டார்.

['மதுரை நாயக்கர் வரலாறு' எனும் நூலில் காணப்பெறுகிறது.]

## "குமரகுருபரருக்கு முத்துமாலை அணிவித்தது"

ஸ்ரீவைகுண்டத்திலே தோன்றித் திருச்செந்தூர் முருகப்பெருமானின் அருளைப்பெற்ற குமரகுருபரசுவாமி

கள் வடநாட்டிற்குச் செல்லும் வழியில் மதுரை வந்தார். திருமலைநாயக்கர் வேண்டுகோளிற்கிணங்க மதுரை மீனுட்சியம்மையின் பெயரில் பிள்ளைத்தமிழ் ஒன்றுபாடினுர். அந்நூலின் அரங்கேற்றுவிழா அம்மன்சன்னிதி ஆறுகாற்பீடத்தில் நடைபெற்றது. திருமலைநாயக்கரும் அவ்வவையில் இருந்து பிள்ளைத்தமிழ்ப் பாடல்களைக்கேட்டு இன்புற்றுர். வருகைப்பருவத்து ஒன்பதாவது செய்யுளாகிய 'தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே' எனத்துவங்கும் பாடலைக் குமரகுருபரர் பாடியபொழுது அங்கயற்கண்ணம்மை ஓர் அர்ச்சகரின் பெண் குழந்தை வடிவில்வந்து அரசர்கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபரரின் கழுத்திலிட்டு மறைந்தருளினுர். திருமலைநாயக்கரும் அவையினரும் அன்னையின் அருளை வியந்தனர்.

## ''பத்திரகாளியின் கண்களில் ஒளிவீசியது''

கி.பி. 1756-ல் மதுரைநாடு மகபூசுகானின் ஆட்சியில் இருக்கும்பொழுது ஒரு மகமதியப்பக்கிரி இராயகோபுரத்தின் திருநிலைக்காலில் கூடாரம் கட்டிக்கொண்டு கோபுர மேடையில் மசூதி ஒன்றைக் கட்டத்துவங்கினுன். பலர் அவ்வாறு செய்யவேண்டா என்று பணிவுடன் வேண்டிக் கொண்டும் அவன் கேட்கவில்லை. அதனுல் மக்கள் கவலையுடன் இருந்தனர். அப்பொழுது திருக்கோயிலில் ஓர் அற்புத நிகழ்ச்சி நடைபெற்றது. யுவ வருடம் தைமாதம் 3 ஆம் நாள் காலை சுமார் 7 மணிக்குச் சுவாமிகோயில் கம்பத்தடி மண்டபத்திலுள்ள வாதாடும் பத்திரகாளியம்மனின் கண்களில் உயிர் ஒளி வீசியது. அவ்வாறு 5 ஆம்

நாள் காலேவரை ஒளிவீசிக்கொண்டிருந்து; பின்பு மறைந்தது. அவ்விரண்டு நாட்களும் மதுரைமக்கள் திரள் திரளாகவந்து அவ்வதிசயத்தைக் கண்டு சென்றனர். பின்னர் மகமது யூசுப்கானின் ஆட்சியில் இராயகோபுரத்தின் மேலிருந்த பக்கிரி பலவந்தமாக அப்புறப்படுத்தப் பட்டான்.

[இந்நிகழ்ச்சி மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'திருப்பணிமாலே' என்னும் நூலில் மதுரைத்தல வரலாறு என்ற பகுதியில் காணப்பெறுகிறது. அந்நூல் பழைய ஏட்டுப்பிரதிகளில்இருந்து திரு. பொ. பாண்டித்துரைச்சாமித் தேவரவர்களால் நன்கு ஆய்ந்து வெளியிடப் பெற்றதாகும்.]

## "ஓர் ஆங்கிலேயருக்கு அருளியது"

கி. பி. 1812 ஆம் ஆண்டு ரோஸ் பீட்டர் (Rous Peter) எனும் ஆங்கிலேயர் மதுரைக் கலெக்டராக இருந்தார். அவர் தம் அலுவல் காரணமாகக் குதிரையேறிச் செல்லும்பொழுது மதுரைத் திருக்கோயிலேச் சுற்றிச்செல்வது வழக்கம். அவர், கன்னிவாடி, பெரியகுளம், போடிநாயக்கனூர் முதலிய பகுதிகளில் இருந்துவந்த காட்டுயானைகளின் தொல்லேயைத் தீர்த்துவைத்தார். மேலும் மக்களிடம் அன்புள்ளவராக இருந்தபடியால் அவரை எல்லோரும் பீட்டர்பாண்டியன் என்றே அழைத்தனர். (Madura Gazetteer) ஒருநாள் அவர் தம்வீட்டில் படுக்கையறையில் படுத்திருக்கும்பொழுது நள்ளிரவில் இடிமுழக்கத்துடன் பெருமழை பெய்தது. நன்ருக உறங்கிக் கொண்டிருந்த பீட்டரை ஒரு பெண்குழந்தை தட்டி



அம்மன் மேற்கு 5 நிலைக் கோபுரம்
(பக்கம் 161)



சுவாமி மேற்கு 5 நிலைக் கோபுரம்
(பக்கம் 166)



5 நிலை வடக்குக் கோபுரம்
(பக்கம் 167)



நடுக்கட்டுக் கோபுரம்
பக்கம் 165)

எழுப்பி வெளியில் வருமாறு அழைத்தது அவரும் திடுக்கிட்டு அக்குழந்தையைத்தொடர்ந்து தம் படுக்கையறையைவிட்டு வெளியில்வந்தார். மறுவிநாடியே ஓரிடி அவ்வறையின்மேல் விழுந்தது. பீட்டர் வெளியில் வந்ததனால் உயிர்தப்பினார். அக்குழந்தையும் அங்குகாணப்பெறவில்லை இச்செயல் மீனாட்சியின் அருள் என்று அவர் கருதினார். அதனால்அம்மையின் குதிரை வாகனத்திற்கு விலையுயர்ந்த கற்கள் பதித்து பொன்னாற் செய்யப்பெற்ற கால்மிதி இரண்டினைத்தம் காணிக்கையாகப் பீட்டர் கொடுத்தார். இன்றும்அக்கால்மிதிகள் கோயிலில் இருந்துவருகின்றன. அவர் இறந்தவுடன் அவருடலை மதுரைநகர் நடுவிலுள்ள மெய்காட்டுப்பொட்டலில் (ஜான்சிராணிபார்க், Main GuardSquare) உள்ள மாதாகோயிலில் புதைத்தனர். அச்சமாதிஇன்றும் அங்கு இருந்துவருகிறது.

[இந்நிகழ்ச்சிகளைக்குறித்துப் ''பீட்டர்ப் பாண்டியன் அம்மானை'' என்ற பெயரால் நாட்டுப்பாடலொன்று அக்காலத்தில் வழங்கிவந்தது.]

## மாபெரும் திருப்பணி செய்வித்தது

இவ்வாறு அன்று பல அற்புதங்களைச் செய்துவந்த சோமசுந்தரப்பெருமானும் அங்கயற்கண்ணம்மையும் இன்றும்நாள்தோறும் பல அற்புதங்களைச்செய்துகொண்டுதான் வருகின்றார்கள் குறிப்பாக ஒன்றுமட்டும் இங்கே கூறுவது பொருத்தமுடையதாகும். கி. பி. 1960-வது ஆண்டு மதுரைத் திருக்கோயிலின் மாபெரும் திருப்பணி துவங்கப்பெற்றது. அதற்கு20 முதல் 30 இலட்சரூபாய்கள்

வரை செலவாகுமென்று மதிப்பீடும் செய்யப்பெற்றது. இவ்வளவு பெரும்பொருளை இக்காலத்தில் எங்கு எப்படித்திரட்டுவது? என்ற ஐயம் திருப்பணிக்குழுவைச் சேர்ந்த அனைவருக்கும் இருந்துவந்தது. ஆனால் திருப்பணிக்குழுத்தலைவர், பொதுப்பணியில் ஈடுபட்டுப் புகழ்வாய்ந்த உத்தமபாளையமுதலியார் குடும்பத்தைச் சேர்ந்த தமிழவேள் உயர்திரு. பி. டி. இராசனவர்கள் மட்டும் இவ்வாறு சிறிதும் ஐயங்கொள்ளவில்லை. மீனாட்சியம்மனின் சன்னிதியிலேயே அவர்கள், "அம்பிகையே! நீ பணம்கொடுத்தால் நாங்கள் திருப்பணிவேலைகளைச் செய்கின்றோம்; நாங்கள்செய்யும்வேலைகளில்உனக்குவிருப்பமிருந்தால்எங்கட்குப்பணம்கொடு; இல்லையென்றால் நாங்கள் விட்டுவிடுகின்றோம்" என்று அடிக்கடி கூறுவதுவழக்கம். அதுபோலவே திருப்பணிவேலைக்குத் தடங்கல்ஏற்படாது அவ்வப்பொழுது வேண்டிய பணம் ஏதாவதொரு வகையில் மீனாட்சியம்மை கொடுத்துக்கொண்டுவந்தார். அதில் ஒரு சிறப்பு என்னவெனில் அன்றாடத் தேவைக்கு அதிகமாகவும் கொடுப்பதில்லை; குறைவாகவும் கொடுப்பதில்லை; இதுவும் அன்னையின் திருவிளையாடலேயாகும். மேலும், திட்டப்படி திருப்பணி வேலைகள் முடிவுபெற ஐந்து ஆண்டுகளாகும் என்றுபலர் மதிப்பிட்டனர். ஆனால் இப்பொழுது மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே இவ்வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன என்பதை எண்ணினால் இதுவும் சோமசுந்தரப்பெருமானின் திருவருளே என்பதை எவரும் மறுக்கமுடியாது.

# மதுரைத் திருக்கோயில் தோற்றமும் வளர்ச்சியும்

மதுரை மீனுட்சிசுந்தரர் திருக்கோயிலின் பெரும் பகுதிகள் கி. பி. 12ஆம் நூற்ருண்டின் முற்பகுதியிலிருந்து கி. பி. 18ஆம் நூற்ருண்டு முடியக்கட்டப்பெற்றனவாகும். மேற்கண்ட 600 ஆண்டுகளில் இக்கோயில் பல பெருந் தகைகளால் தனித்தனியாக அவ்வப்பொழுது ஒவ்வொரு பகுதியாகக் கட்டப்பெற்ருலும் இன்று காணப்படும் கோயிலின் அமைப்பு, ஒருவரே திட்டமிட்டு ஆங்காங்கு மண்டபங்கள், கூடங்கள், கோபுரங்கள் முதலியவற்றை அமைத்ததுபோல் சிறப்பாகக் காட்சியளிக்கின்றது. அவற்றைக் கட்டியவர்களைப்பற்றிய முழுவரலாற்றைத் தெரிந்துகொள்வதற்குமுன் இக்கோயிலின் முக்கியப் பகுதிகள் ஒவ்வொரு நூற்ருண்டிலும் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியது இன்றிமையாததாகும்.

## முதல் தோற்றம்:

திருவாலவாய்ச் சொக்கநாதர்ஆலயம் ஆதியில் மதுரைமாநகரில் எப்பொழுது தோன்றியது? யாரால்

தோற்றுவிக்கப்பெற்றது? என்பவைகளைத் தலபுராணங்களின் மூலமே நாம் தெரிந்துகொள்ளமுடியும். அவ்வரலாற்றைக் கூறும் புராணங்கள் வடமொழியிலும் தமிழிலும் பல உள்ளன. அவைகளின் சுருக்கத்தை இந்நூலில் புராணவரலாறு என்னும் பகுதியிற்காணலாம்.

அப்புராணங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவெனில் ஆதியில் ஓர் அடர்ந்தகாட்டின் நடுவே ஒரு கடம்பமரத்தடியில் சிவலிங்கம் ஒன்று இருந்தது. அதை முதன் முதலில் தேவேந்திரன் கண்டு வழிபட்டு அதற்கு ஒரு கருவறையும் விமானமும் கட்டினன்,என்பதுமேயாகும். இதுவே மதுரைச் சொக்கநாதர் கோயிலின் முதற்றோற்றம் என்று கூறலாம். பின்னர் ஒருகாலத்தில் தனஞ்சயன் என்ற ஒரு வணிகன் அக்காட்டுவழியாகச் செல்லும்பொழுது தற்செயலாக இக்கோயிலைக்கண்டான். அவன் அவ்வாறு ஒருகோயிலைக்கண்ட விவரத்தை அச்சமயம் மணலூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிசெய்து வந்த குலசேகரபாண்டியனிடம் கூறினன். அதன்பின்பே பாண்டியன் சென்று அக்கோயிலைக்கண்டு அதைச்சுற்றியுள்ள காடுகளையழித்து அங்கொரு நகரத்தை அமைத்தான். அதுவே மதுரைநகரமாகும்.

மேற்கண்ட யாவும் புராணவரலாறே. அவை எத்தனை ஆண்டுகளுக்குமுன் நடைபெற்றன என்பதைக் கூறுதற்குச் சரியான சான்றுகள் இல்லை. எனினும் இறையனர் அகப்பொருளுக்கு உரைகண்ட நக்கீரனர் கூற்றுப்படி இற்றைக்குஏறக்குறைய 3600 ஆண்டுகளுக்குமுன் இடைச்சங்கம் இருந்த கபாடபுரம் கடல்கோளினல் மறைந்தது

என்பதை அறிகின்றோம். அங்கிருந்த பாண்டியன் முடத் திருமாறன் தப்பிவந்து மணலூரில் தங்கியிருந்து பின்பு மதுரையில் கடைச்சங்கத்தைத் தோற்றுவித்தான் என்பது வரலாற்றாசிரியர்களின் முடிவு. இவைகளை ஆதாரங்களாகக்கொண்டால் மதுரைக்கோயிலும் நகரமும் ஏறக்குறைய 3600 ஆண்டுகட்குமுன்பே தோன்றியிருக்க வேண்டுமென்று முடிவுகட்டலாம்.

ஆதியில் தேவேந்திரனால் அமைக்கப்பெற்றன என்று கருதப்படுவன சொக்கலிங்கத்தின் கருவறையும் விமானமுமேயாகும். இற்றைக்கு 3600 ஆண்டுகட்குமுன் அவை கட்டப்பெற்றன என்றால் அவை மரத்தினாலேயே அமைக்கப்பெற்றனவாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் கி.மு.5ஆம் நூற்றாண்டிற்குப்பின்பே சுட்டசெங்கற்களால் தமிழ்நாட்டில் கட்டடங்கள் கட்டப்பெற்றன. அதுவரை மரத்தாலான அக்கோயில் நன்றாகப் பாதுகாக்கப்பெற்று, அடிக்கடி திருப்பணிகளும் செய்யப்பெற்று, ஆயிரம் ஆண்டுகட்குமேல் போற்றப்பெற்றிருக்க வேண்டும் கி. மு. 5 ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே அக்கோயிலுக்குச் செங்கற்களினால் திருப்பணிகள் செய்யப்பெற்றிருக்க வேண்டும். பின்பு சுமார் 1200 ஆண்டுகள் அதாவது கி. பி. 7 ஆம் நூற்றாண்டுவரை அது செங்கற்கோயிலாகவே இருந்திருக்கவேண்டும். ஏனெனில் அதற்குப்பின்பே தமிழ்நாட்டில் கோயில்களைக் கட்டுவதற்குக் கருங்கற்கள் பயன்படுத்தப்பெற்றன.

## கி. பி. 7 ஆம் நூற்றாண்டில்

மதுரைக்கோயில் எவ்வாறு தோற்றமளித்தது? என்பதைக் கி. பி. 640-ல் அதை நேரிற்கண்ட திருஞான

சம்பந்தப்பெருமான் அவர்களின் வாயிலாக ஒரு சிறிது தெரிந்துகொள்ளலாம். அவர் அன்றிருந்த மதுரைக் கோயிலைக் ''கோபுரஞ்சூழ் மணிக்கோயில்'' * என்றும் ''கபாலிநீள் கடிமதில் கூடல்ஆலவாய்** என்றும் வருணிக்கின்றார். இதிலிருந்து அக்கோயில் மிக அழகான அமைப்புடையதாக அமைந்ததென்றும் அதைச்சுற்றி உறுதியான உயர்ந்த கபாலி என்று வழங்கும் ஒருமதில் இருந்ததென்றும், அக்கோயில் கூடல்ஆலவாய் என்ற பெயருடன் விளங்கியதுஎன்றும் தெரிகிறது. கபாலிமதில் என்பது இன்றுள்ள சுவாமிகோயிலின் முதற்பிரகாரச் சுற்றுத் திருமதிலேயாகும். ஆகவே அன்று ஞானசம் பந்தர் வந்தபொழுது கோயில் அந்தஅளவில்தான் இருந்த தென்பது தெளிவு.

## கி. பி. 12 ஆம் நூற்றாண்டில்

ஆதியில் மதுரைநகரை அமைத்தவன் குலசேகர பாண்டியன் என்பதைப் புராணவாயிலாக நாம் தெரிந்து கொண்டோம். ஆனால் அக்குலசேகரபாண்டியன் எக்கா லத்தவன்என்பதற்கு வரலாற்றுச்சான்றுகள்கிடைத்தில. ''திருவாலவாயுடையார் திருப்பணிமாலை''*** என்னும் பழைய நூலில் குலசேகரபாண்டியன், ''சுவாமிகோயில்

---

* திருஞானசம்பந்தர்தேவாரம்'கணங்களாய்வரினும்' என்ற பாடல்.

** திருஞானசம்பந்தர் தேவாரம் ''வீடலாலவாயி லாய்'' என்ற பாடல்.

*** மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு.

அர்த்தமண்டபம், மணிமண்டபம், மகாமண்டபம், ஆறு கால்பீடம், சன்னிதிக்கோபுரம், மூலப்பிரகாரத்திருமதில்களும் சூழப்பத்தியும், நாயகர்கோயிலும் சூரியாதி சண்டேசுரர் தேவதைப் பிரகாரத் திருமதிலும், கோட்டையகழும், "மலைமகள் கோயிலும்" கட்டினான் எனக்கூறுகிறது. கி. பி. 13 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் விசயநகரமன்னர்கள் காலத்தில்தான் அம்பிகைக்குத்தனிக்கோயில் கட்டப்பெற்றது என்று "பெர்சி பிரௌன்"** போன்ற ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனினும் அதற்குமுன்பே கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் காமாட்சியம்மனுக்குத் தனிக்கோயில்*** கட்டப்பட்டிருக்கின்றபடியால் அன்றுதொட்டே கோயில் அமைப்புக்களில் அம்மனுக்குத் தனியிடம் ஏற்பட்டுவந்தது என்று துணிந்து கூறலாம். மேலும் கற்களினால் கோயில்கள் அமைக்கத் துவங்கியது முன்கூறியபடி கி.பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரேயாகும். இதிலிருந்து 3600 ஆண்டுகட்குமுன்பு மதுரைநகரை அமைத்த குலசேகரபாண்டியன் அம்மனுக்குத் தனியான கோயிலையோ கற்களினால் ஆன கோயிலையோ அமைத்திருக்கமுடியாது என்று கூறுவது தவறாகாது. ஆகவே மதுரை மீனாட்சியம்மனுக்குத் தனிக்கோயில் அமைத்த குலசேகரபாண்டியன் கி. பி. 11ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவனாகத்தான் இருக்கவேண்டும். இதைநோக்கும்பொழுது கி. பி. 1168 முதல் 1175 வரை மதுரையை ஆண்ட சடையவர்மன் குலசேகர பாண்டியன் என்பவனே இத்திருப்பணியைச் செய்திருப்

** Indian Architecture By Percy Brown pp 109.
*** சோழர் கோயிற்பணிகள் pp. 15.

பான் என்று கருதவேண்டியிருக்கிறது. ஏனெனில் இப் பாண்டியன் தன்நாட்டின் ஆட்சியைப் பெறுவதற்கு இரண்டாவது இராசாதிராசன் என்ற சோழனின் உதவி யைப் பெற்றான் என்பதையும் அதனால் சிலகாலம் அவ னுக்கு அடங்கியிருந்தான் என்பதையும் பாண்டிய நாட் டின் அரசியல் வரலாற்றிலிருந்து நாம் தெரிந்து கொள் கிறோம். சோழநாட்டில் கி. பி. 1165 முதல் 1179 முடிய இராசாதி ராசன் அரசாண்டான். அவனுடைய ஆதிக் கத்திற்கு உட்பட்டுப் பல சிற்றரசர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் கோயிற்றிருப்பணிகளில் ஈடுபட்டிருந் தார்களென்றும் பல கல்வெட்டுக்கள்* மூலம் நாம் அறி கின்றோம். ஆகவே இச்சோழனின் செல்வாக்கிற்குட்பட் டிருந்த குலசேகரபாண்டியனும் அவ்வாறே கோயிற்றிருப் பணிகளில் ஈடுபட்டிருந்தது வியப்பாகாது.

மேற்கூறியவாறு மதுரைக்கோயிலுக்குத் திருப்பணி கள் செய்த குலசேகரபாண்டியன் மதுரைக்கோட்டைக்கு வெளியில் நான்கு திக்குகளிலும் காவல் தெய்வங்களை அமைத்து அவைகளுக்குக் கோயில்களையும் கட்டினான்.** கிழக்கில் ஆலவாய்தருமமூர்த்தி என்றஐயனார்கோயிலும், தெற்கில் சத்தமாதர்களுடன் விநாயகர்கோயிலும், மேற் கில் கரியமால்பெருமாள் கோயிலும்*** வடக்கில் காளிகோயிலும் அமைக்கப்பெற்றன. கிழக்கில் அமைத்த ஐயனார் கோயில் இன்று கீழைமாசிவீதியில் தேர்நிலையங்

---

* Ins 433 of 1924

** திருப்பணிமாலை

*** பெரும்பற்றப் புலியூர்நம்பி திருவிளையாடல்

கட்கு அண்மையில் இருக்கின்றது. சத்த மாதர்கோயில் தெற்குமாசிவீதி மஞ்சனக்காரத் தெருவில் ஒருவிநாயகர்கோயிலாக இன்று இருந்துவருகின்றது. அதிலிருந்த சத்தமாதர்களின் திரு வுருவங்களைக்கொண்டுவந்து சுவாமிகோயிலில் முதற் பிரகாரம் தட்சிணாமூர்த்திக்கு எதிராகப் பிற்காலத்தில் வைக்கப்பட்டன. மேற்கில் மேலமாசிவீதிக்கு மேல்புறம் கரியமால் பெருமாள் கோயிலும் தெப்பக்குளமும் இருந்தன. பின்னர் மகமதியர் படையெடுப்பால் அக்கோ யில் இடிபட்டது. அவ்விடத்தில் இன்று ஒரு கிறித்தவ மாதாகோயில் இருந்துவருகிறது. அக்கோயிலுக்கு முன் னிருந்த தெப்பக்குளம் மட்டும் இன்றும் இருந்துவருகின் றது. அத்தெப்பக்குளம், பெருமாள்கோயில் தெப்பக் குளம் என வழங்கியபடியால் மதுரையில் தென்மேற்குப் பகுதியிலுள்ள கூடலழகப்பெருமாள்கோயிலைச் சேர்ந்த தென்று இப்பொழுது கருதப்படுகிறது. வடக்கில் வடக்கு மாசிவீதியை யொட்டிக் காளிகோயில் ஒன்று இருக் கிறது. அது செல்லத்தம்மன்கோயில் என்றும் செல்லி யம்மன் கோயிலென்றும் இன்று வழங்கிவருகின்றது.

## கி. பி. 13 ஆம் நூற்றாண்டில்

கபாலிமதில் அளவில் 250 அடிநீளம் 156 அடி அகலமு டன்இருந்தசொக்கநாதர்கோயிலைக் கி.பி.1216 முதல் 1238 வரை மதுரையைஆண்ட மாறவர்மன் சுந்தரபாண்டியன் மேலும் விரிவுபடுத்தினான். கபாலிமதிலைச் சுற்றி 430 அடி நீளமும் 310 அடி அகலமும் உடையகோயிலாக இரண் டாம் பிரகாரம் ஒன்றை அமைத்து அதற்கு நான்குபுற

மும் திருமதில்களை அமைத்தான். அதற்குச் "சுந்தர மாறன் திருமதில்" என்பது பெயர். சுவாமிசன்னிதி முன் பாகக் கிழக்கில் அத்திருமதிலுக்குச் சுமார் 400 அடிகளுக் கப்பால் ஒன்பது நிலையுள்ள ஒரு கோபுரம் கட்டினான். மேலும் சுந்தரபாண்டியன் அம்மன்கோயிலில் இரண் டாம் பிரகாரத்திருமதிலையும் சன்னிதிமண்டபத்தையும் கட்டுவித்தான். அம்மண்டபத்திற்குச் "சுந்தரபாண்டிய மண்டபம்" எனப் பெயர்.

அம்மன் கோயில் சன்னிதி வாயிலில் மூன்று நிலை களையுடைய ஒரு சிறு கோபுரத்தை ஆனந்தத்தாண்டவ நம்பி என்பவர் கி. பி. 1228-ல் கட்டுவித்தார். 13ஆம் நூற் றாண்டின் இறுதியில் இரண்டு விமானங்களும் இரண்டு மூன்றுநிலைக் கோபுரங்களுமே மதுரைக் கோயிலுக்கு இருந்தன.

## கி. பி. 14 ஆம் நூற்றாண்டில்

மேற்கூறியவாறு மாறவர்மன் சுந்தரபாண்டியனால் விரிவு செய்யப்பெற்ற கோயில் ஏறக்குறைய ஒரு நூற் றாண்டுவரை யாதொரு மாறுதலும் இல்லாது இருந்து வந்திருக்கின்றது. கி. பி. 1323-ல் பராக்கிரம பாண்டியன் ஒன்பது நிலைக் கோபுரம் ஒன்றைக் கட்டுவித்தான். கிழக் குத் திக்கில் சுவாமி கோயிலுக்குச்சுந்தர பாண்டியன் கட் டிய கோபுரத்திற்குஒப்ப மேற்குத் திக்கில் அதை அமைத்தான். அதுவே மேலக்கோபுரம் என்று இன்று அழைக்கப்பெறுகிறது. இக்கோபுரம் கட்டப்பட்டு ஏறக் குறைய ஐம்பது ஆண்டுகட்குப் பின் கி. பி. 1372-ல் சுவாமி சன்னிதியில் கிழக்கு ஐந்து நிலைக் கோபுரத்தை

வசுவப்பன் என்பவர் கட்டினர். கி. பி. 1374-ல் மேற்குப் புறம் ஐந்து நிலைக் கோபுரத்தை மல்லப்பன் என்பவர் கட்டினர். இவ்விரு கோபுரங்களும் சுந்தரமாறன் திருமதிலின் வாயில்களாக இருந்தன. வசுவப்பன் கட்டிய ஐந்து நிலைக் கோபுரம் சுவாமி சன்னிதி கம்பத்தடி மண்டபத்திற்குக் கீழ்புறமுள்ள கோபுரமாகும். மல்லப்பன் கட்டிய கோபுரம் மேற்கு ஆடி வீதியில் ஒன்பதுநிலை மேலைக் கோபுரத்திற்கு எதிராக இருப்பதாகும்.

## கி. பி. 15ஆம் நூற்றுண்டில்

பதினைன்காம் நூற்றுண்டில் 2 ஒன்பது நிலைக் கோபுரங்கள், 2 ஐந்துநிலைக் கோபுரங்கள், 2 மூன்றுநிலைக் கோபுரங்கள், 2 விமானங்கள் ஆகிய எட்டுக் கோபுரங்களையுடைய மதுரைத் திருக்கோயிலுக்குக் கி. பி. 1477ல் சிராமலைச் செவ்வந்தி செட்டி என்பவர் தெற்காடி வீதியில் ஒன்பதுநிலைக் கோபுரம் ஒன்றை அமைத்தார்.

## கி. பி. 16ஆம் நூற்றுண்டில்

தெற்கு ஒன்பதுநிலைக் கோபுரம் கட்டிய பின் சுமார் 80 ஆண்டுகள் கோயிலில் புதிதாக ஏதும் கோபுரங்கள் கட்டப்படவில்லை. கி. பி. 1559-ல் முக்குறுணிப்பிள்ளையார்க்கு முன்னுள்ள தெற்கு ஐந்து நிலைக் கோபுரத்தைச் செவ்வந்திமூர்த்தியும் வடக்கு ஐந்துநிலைக் கோபுரத்தைச் செவ்வந்திவேலனும் கட்டுவித்தனர். இவை இரண்டும் சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்திலுள்ள சுந்தர மாறன் திருமதிலில் அமைந்துள்ளன. அம்மன் கோயிலுக்குத் தளவாய் அரியநாதரின் குமாரர் காளத்திநாத முதலி

யார் கி. பி. 1570-ல் ஏழுநிலைக் கோபுரம் ஒன்றைக் கட்டுவித்தார். அம்மன் சன்னிதியில் இதுவே பெரிய கோபுரமாகும். அதே ஆண்டில் மேற்குஆடிவீதியில் அம்மன் கோயிலுக்கு ஐந்து நிலைக்கோபுரம் ஒன்றை வீரத்தும்மசி என்பவர் கட்டுவித்தார். தளவாய் அரியநாத முதலியாரும் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டியது அதே ஆண்டில் தான். வடக்காடி வீதியில் ஒன்பது நிலைக் கோபுரம் ஒன்றில்லாது இருந்தது. கிருஷ்ணவீரப்ப நாயக்கர் கி. பி. 1572-ல் அங்கு ஓர் ஒன்பது நிலைக் கோபுரத்தைக் கட்டி அக்குறையை நீக்கினர். அவ்வாண்டிலேயே கிருஷ்ண வீரப்ப நாயக்கர் சுவாமி கோயில் கம்பத்தடி மண்டபத்தையும் கட்டுவித்தார். ஆடிவீதி வெளிச்சுற்று மதில்களைக் கி. பி. 1584-ல் திருநோக்கு அழகியார் என்பவர் கட்டுவித்தார். 847 அடி நீளமும் 792 அடி அகலமும் கொண்ட ஒரு நீண்ட சதுர அமைப்பில் கட்டப்பட்ட இம்மதிற் சுவர்கள் இன்று மதுரைக் கோயிலின் எல்லாப் பகுதிகளையும் தம்முள் அடக்கியிருக்கின்றன. இன்று மதுரைக் கோயிலில் காணப்பெறும் பதினன்கு கோபுரங்களில் மொட்டைக் கோபுரம் என வழங்கும் வடக்கு ஒன்பது நிலைக் கோபுரமே இறுதியாகக் கட்டப்பெற்ற கோபுரமாகும்.

### கி. பி. 17-ம் நூற்ருண்டில்

பதினன்கு கோபுரங்களையுடைய மதுரைத்திருக் கோயிலில் ஆயிரக்கால் மண்டபத்திற்குமுன்பு கி. பி. 1611-ல் முத்துவீரப்பநாயக்கர், வீரவசந்தராயர்மண்டபம் என்ற ஓர் அழகிய மண்டபத்தைக் கட்டுவித்தார். கி. பி. 1635-ல் திருமலைநாயக்கர், கோயிலுக்குப்

பதினன்கு கோபுரங்கள் போதாதென்று மிகப்பெரிய கோபுரம் ஒன்று அமைப்பதற்காகக் கல்வரிசைகளைக் கட்டினர். ஆனல் அது முற்றுப்பெருமல் நின்றுவிட்டது. அதுவே "இராயகோபுரம்" என்று வழங்குகிறது. இந்த இராயகோபுரத்திற்கும் சுவாமிசன்னிதி ஒன்பதுநிலைக் கிழக்குக்கோபுரத்திற்கும் இடையே புகழ்பெற்ற வசந்த மண்டபம்என்னும் புதுமண்டபத்தைத் திருமலைநாயக்கர் கட்டுவித்தார்.

அம்மன்சன்னிதியிலுள்ள கிளிக்கூட்டு மண்டபத்தைத் திருமலைநாயக்கர், அபிசேகபண்டாரம் என்பவர் மூலம் கட்டுவித்தார். அம்மன்கோயிலின் முன்னுள்ள அஷ்டசக்திமண்டபத்தைத்திருமலைநாயக்கரின் மனைவியர் உருத்திராபதியம்மாள், தோளியம்மாள் ஆகிய இருவரும் கட்டுவித்தனர். அதற்கு முன்புள்ள நகராமண்டபத்தைக் கி. பி. 1635-ல் அச்சரராயர் என்பவர் கட்டுவித்தார்.

## கி பி. 18-ம் நூற்ருண்டில்

கி. பி. 1708-ல் அம்மன்சன்னிதி ஏழுநிலைக் கோபுரத்திற்குமுன்பாக சமுகம் மீனுட்சிநாயக்கர் ஒரு பெரிய மண்டபத்தை அமைத்தார். அது மீனுட்சிநாயக்கர் மண்டபம் என வழங்குகிறது. கி. பி 1711-ல் விசயரெங்க சொக்கநாத நாயக்கர் திருக்கலியாண மண்டபத்தைக் கட்டுவித்தார். இவ்வாறு 12 ஆம் நூற்ருண்டில் தொடங்கி 18 ஆம் நூற்ருண்டின் முற்பகுதிக்குள். இன்று மதுரைக்கோயிலில் காணப்பெறும் முக்கியமான பகுதிகள் எல்லாம் கட்டப்பட்டன.

# திருப்பணி விவரம்

(திருவாலவாயுடையார் திருப்பணி விவரம், திருப்பணிமாலை, சீதளப் புத்தகம் முதலியவற்றினின்றும் தொகுக்கப்பெற்றது.)

* இவ்வடையாளமிட்டவர்களின் வரலாறு அடுத்த பகுதியில் குறிக்கப்பெற்றுள்ளது.

| எண் | ஆதியில் கட்டியவர் | காலம் கி. பி. | கட்டப்பெற்றவை |
|---|---|---|---|
| 1 | குலசேகர பாண்டியன் | 1168—1175 | சுவாமிகோயில் அர்த்தமண்டபம், மணி மண்டபம், மகாமண்டபம், ஆறுகால்பீடம், சன்னிதிகோபுரம், மூலப்பிரகாரத்திருமதில், சூழப்பத்தி, நாயகர்கோயில் சூரியாதி சண்டேசுர தேவதையர், பிரகாரத்திருமதில், அம்மன்கோயில்;<br><br>கோட்டையகழ், கோட்டைக்கு வெளியில் கிழக்குத்திசையில் ஐயனார்கோயில்; தெற்கில் சத்தமாதர்கோயில், விநாயகர் கோயில்; மேற்கில் திருமால்கோயில்; வடக்கில் காளிகோயில்; |

| | | | |
|---|---|---|---|
| 2 | *மாறவர்மன் சுந்தர பாண்டியன் | 1216—1238 | சுவாமிசன்னிதி ஒன்பதுநிலைக் கிழக்குக் கோபுரம், அம்மன்கோயில் சுந்தரபாண்டிய மண்டபம், சுவாமிகோயில் சுந்தரமாறன் திருமதில், மேலைமாசிவீதியிலுள்ள இம்மையில் நன்மைதருவார்கோயில் |
| 3 | *ஆனந்தத்தாண்டவ நம்பி | 1227—1228 | அம்மன்சன்னிதியிலுள்ள மூன்று நிலைக் கோபுரம் |
| 4 | *விக்கிரமபாண்டியன் | 1253—1268 | எல்லாம் வல்ல சித்தர் கோயில் சொக்கர் அட்டாலை மண்டபம் |
| 5 | *பராக்கிரமபாண்டியன் | 1315—1347 | மேற்காடிவீதி ஒன்பது நிலைக் கோபுரம் |
| 6 | வசுவப்பன் | 1372— | சுவாமி சன்னிதி ஐந்து நிலைக் கிழக்குக் கோபுரம் |
| 7 | மல்லப்பன் | 1374— | சுவாமிகோயில் இரண்டாம் பிரகார மேற்கு ஐந்து நிலைக் கோபுரம், அம்மன்கோயில் கொடிக்கம்பம் |

| | | | |
|---|---|---|---|
| 8 | *மாவலிவாணுதிராயர் | 1452— | குலசேகரபாண்டியன் அமைத்த சுவாமி கோயில் ஆறுகால் பீடம், மகாமண்டபம் ஆகியவற்றின் திருப்பணி. சுவாமி சன்னிதியில் திருக்காவனப்பத்தி, அம்மன் சன்னிதியில் மகாமண்டபம், பள்ளியறை, முதற் பிரகாரம் முதலியன கட்டினுர். |
| 9 | *சின்னப்ப நாயக்கர் | 1526— | மடைப்பள்ளி அருகிலுள்ள சின்னீச்சுரர் கோயிலில் அகஅணைகள், புறஅணைகள்; சனீசுவரர்க்கு அருகில் உள்ள மண்டபநாயகம் என்னும் நூற்றுக்கால் மண்டபம். |
| 10 | *விசுவநாத நாயக்கர் | 1559—1563 | சுவாமி கோயில் தங்கக் கோபுரத்திற்குப் பொன்பூசித் திருப்பணி செய்தார். |
| 11 | *சிராமலைச்செவந்தி மூர்த்திசெட்டி | 1559— | ஒன்பதுநிலைத் தெற்குக் கோபுரம், முக்குறுணி விநாயகர் முன்னுள்ள ஐந்து நிலைக் கோபுரம், சொக்கர் கோயில் சிகரத்திற்குப் பொற்குடம் முப்பத்திரண்டு, அம்மனுக்குப் பொன் விமானம், பிட்டுத்தோப்பில் திருவிளையாடல் மண்டபம். |

| | | | |
|---|---|---|---|
| 12 | *செவ்வந்தி வேலப்பச் செட்டி | 1560— | வடக்காடி வீதியில் சுவாமிகோயில் ஐந்து நிலைக் கோபுரம். |
| 13 | பெருமாள் | 1562— | சுவாமிகோயில் நடுக்கோபுர மண்டபம், துவாரபாலகர், பொற்றாமரை வடபுற மண்டபமும் படிக்கட்டுகளும். |
| 14 | *திருஅம்பலச்செட்டி | 1562— | அம்மன்சன்னிதி மூர்த்தி மண்டபம் (ஊஞ்சல் மண்டபம்) |
| 15 | *செட்டியப்ப நாயக்கர் | 1563— | பொற்றாமரைக்கு மேற்குக்கரையில் மூர்த்தி மண்டபத்திற்கு முன் மண்டபம்; அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரமும் சுற்று மண்டபமும். |
| 16 | செல்லப்பெண் மாணிக்கம் | 1563— | வண்ணியடி நடராசர் மண்டபம், அன்னக் குழி மண்டபம். |
| 17 | *கல்லூர்ச் செவ்வந்தி | 1564— | பொற்றாமரைக்கு மேற்குக் கரையில் செவ்வந்தீசுரர் கோயில். |
| 18 | திம்மப்ப நாயக்கர் | 1564— | புருஷாமிருக மண்டபம் (சங்கிலி மண்டபத்திற்குத் தெற்கு மண்டபம்), கண்டர கண்டன் குறடு. |

| | | | |
|---|---|---|---|
| 19 | திம்மு ராவுத்தர் | 1564— | எழுகடலின் தென்மேற்குக் கரை மண்டபம். |
| 20 | தித்தியப்ப செட்டி | 1565— | சுவாமிசன்னிதியில் உட்பிரகார மேற்புற மண்டபம், அம்மன்சன்னிதி இரண்டாம் பிரகாரத் தென்புற மண்டபம். |
| 21 | *கிருஷ்ணவீரப்ப நாயக்கர் | 1564— 1572 | சுவாமிகோயில் கொடிக்கம்ப மண்டபம், இரண்டாம் பிரகாரச் சுற்றுமண்டபம், ஆடி வீதி வடக்கு ஒன்பதுநிலைக்கோபுரம், சம்பந்தர் கோயில் மண்டபம், வெள்ளியம்பலம், செவ்வீச்சுரம், திருமடைப்பள்ளி, மூர்த்தி அம்மன் மண்டபம் (உற்சவர்).<br>சுவாமி கோயில் கொடிக்கம்பத்துமுன்னர் வீரப்பமண்டபம்.<br>மல்லப்பன் நட்ட அம்மன்கோயில் கொடிக் கம்பத்திற்குப் பொன் பூசினர்.<br>முத்தளக்கும் கோபுரத்திற்குச் செங்கற் படை, அம்மன்கோயில் இரண்டாம் பிரகாரத்தில் வடபுற, மேற்புற மண்டபங்கள். |
| 22 | *காளத்தியப்ப முதலியார் | 1569— | அரியீச்சுரர் சன்னிதி, அம்மன் சன்னிதி ஏழுநிலைக் கோபுரம். |

| | | | |
|---|---|---|---|
| 23 | *பட்டுத்திருமலை நாயக்கர் | 1569— | கங்காளநாதர் முன்னுள்ள மண்டபம் (சுவாமிகோயில் முதற்பிரகாரத்தில் வடபுறம்) |
| 24 | *அரியநாத முதலியார் | 1569— | சுவாமிகோயில் இரண்டாம்பிரகாரத் தென்வரிசையில் அறுபத்துமூவர் மண்டபம், அறச்சாலைமண்டபம், காளத்தீசுரம் கோயில், ஆயிரக்கால் மண்டபம், கீழமாசி வீதி அம்மன்தேர் மண்டபம். |
| 25 | வீரத்தும்மசி | 1570— | அம்மன்கோயில் இரண்டாம்பிரகார மேற்கு ஐந்து நிலைக் கோபுரம். |
| 26 | *வீரப்பநாயக்கர் | 1572—1595 | சுவாமிகோயில் மூலத்தானக் கற்குறடு, சுவாமிகோயில் கோபுரவாயிற்கதவு, சுவாமிசன்னிதி தென்புற வாயிற்படிக்கட்டு, வெள்ளியம்பல நடராசர் கோயில் தளவரிசை, திருப்பள்ளியறைப் படிகள், அம்மன்கோயில் தளவரிசை, சொக்கநாதர் மண்டபம். |
| 27 | குப்பையாண்டி | 1573— | பொற்றாமரைக்குக் கிழக்கே மண்டபமும் திருமதிற் படிகளும். |

| | | | |
|---|---|---|---|
| 28 | *கல்லூர்ச் சின்னச் செவ்வந்தி | 1574— | செவ்வந்தீசுரச்சுற்றுமதில், சன்னிதி மண்டபம். |
| 29 | அப்பன் பிள்ளை | 1578— | பொற்றாமரைக்குத் தென்மேற்கில் விசுவநாதர் கோயிலும், பொற்றாமரைத் தென்புற மண்டபமும், படிகளும், திருமதிலும். |
| 30 | திருநோக்கழகியார் | 1584— | ஆடிவீதிப் பெரிய திருமதில்கள். |
| 31 | விருப்பணன் | 1588— | சுவாமிகோயில் இரண்டாம்பிரகாரத் திருநாண்மண்டபம் எனவழங்கும் நிருதி மூலமண்டபம். |
| 32 | *விசுவப்ப நாயக்கர் | 1600— | சுவாமிசன்னிதி கிழைக்கோபுரத்திற்கு வடமேற்கே விசுவீச்சுரம் எனும் கோயில் (தற்போதில்லை) |
| 33 | *முத்துவீரப்ப நாயக்கர் | 1611— | சுவாமி கோயில் ஆயிரக்கால் மண்டபத்திற்குத் தென்புறம் கீழ் மேலாகஉள்ள வீரவசந்த மண்டபம். |
| 34 | *குஞ்சமழகிரி நாயக்கர் | 1611— | சுவாமி கோயில் முதற் பிரகாரத்தில் மேற்புறம், வடபுறம் தளவரிசை. |
| 35 | கடந்தை முதலியார் | 1613— | அம்மன் சன்னிதியில் முதலிப்பிள்ளை மண்டபம் |

| | | | |
|---|---|---|---|
| 36 | *திருமலை நாயக்கர் | 1623—1659 | புதுமண்டபம், மாரியம்மன் தெப்பக்குளம், அம்மன், சுவாமி கொடிக் கம்பங்கட்குப் பொன் பூசினார். அம்மன், சுவாமி கோயில்களில் செப்பாற் செய்த துவாரபாலகர்களை அமைத்தார். சுவாமி சன்னிதியில் இராயகோபுரம் கட்டினார். கோயில் முழுதும் செப்பஞ்செய்து திருப்பணி செய்தார். |
| 37 | *உருத்திராபதியம்மாள், தோளியம்மாள் | 1623—1659 | அம்மன்சன்னிதியில் அட்டசக்தி மண்டபம். |
| 38 | *அபிசேகபண்டாரம் | 1623— | சுவாமி கோயில் இரண்டாவது பிரகாரத்தில் தெற்கு, வடக்கு, மேற்குப் பிரகார மண்டபங்கள், கிளிக் கூட்டு மண்டபம் (சங்கிலி மண்டபம்) |
| 39 | *அச்சயராயன் | 1635— | அம்மன்சன்னிதியில் நகராமண்டபம். |
| 40 | *பேச்சியக்காள் பிட்டுச்சொக்குப் பண்டாரம் மூலம் | 1658— | சுவாமி சன்னிதிக்கருகில் திருக்கலியாண மண்டபத்திற்கு வடபுறமுள்ள இருபத்தெட்டுகால் மண்டபம் (பேச்சக்காள் மண்டபம்) |

| | | | |
|---|---|---|---|
| 41 | *இராணி மங்கம்மாள் | 1689—1706 | ஆடிவீதிச் சுற்று மண்டபங்கள். |
| 42 | *விசயரெங்கசொக்க நாதநாயக்கர் | 1706—1732 | திருக்கலியாணமண்டபம், பள்ளியறைக்கு முன்னுள்ள சிங்கார அறை. |
| 43 | *சமுகம் மீனாட்சி நாயக்கர் | 1708— | அம்பன்சன்னிதியில் ஏழுநிலைக் கோபுரத்திற்கும் அட்டசக்தி மண்டபத்திற்கும் இடையிலுள்ள பெரிய மண்டபம். |
| 44 | தும்மச்சி நாயக்கர் | 1758— | ஆடிவீதி நிருதி மூலை மண்டபம். |
| 45 | *ஆறுமுத்த முதலியார் | 1760— | ஆடி வீதி அக்கினி மூலை மண்டபம். |
| 46 | அருணாசல முதலியார் | 1768— | திருவாப்படையார் கோயிலில் விக்கிரகங்கள் அமைத்துக் கும்பாபிடேகம் செய்தார். |
| 47 | வேங்கடேசுவர முதலியார் | 1772— | ஆடிவீதி ஈசானமூலை தட்டுச்சுற்றுப் பதினாறுகால் மண்டபம். |
| 48 | *மருதப்பசேர்வை காரர் | 1795— | சேர்வைகாரர் மண்டபம் (திருக்கலியாண மண்டபத்திற்கெதிரில்) |
| 49 | சின்னியான் | — | கிளிக்கூட்டிற்கு வடபுறத்தில் மடைப் பள்ளிக்கு எதிரிலுள்ள மண்டம். |
| 50 | *செவ்வந்தியாண்டி செட்டியார் | — | எழுகடலுக்குத் தென்பால் மண்டபம் |

| | | | |
|---|---|---|---|
| 51 | நல்லபெண் | — | சுவாமிசன்னிதியில் வடக்கு முகமாகத் திருவாயிலின்உட்புறம் நந்திசுரவர் பிரதிட்டை. |
| 52 | கம்பலராயர் | — | சுவாமிகோயில் முதற்பிரகாரத்தில் கருப்பக்கிருக விமானத்தோடு சேர்ந்த தட்சிணுமூர்த்தி மண்டம், மாலடிகண்டறியாத சிவலிங்க மண்டபம், துர்க்கை மண்டபம் முதலியன. |
| 53 | கம்பலராசி | — | சுவாமிசன்னிதியில் நான்குகால் நந்தி மண்டபம் |
| 54 | சங்கரநாகரசன் | — | திருநோக்கழகியார் செய்த ஆடிவீதிச் சுற்று மதிலைப் புதுப்பித்தார். |
| 55 | *கிருஷ்ணப்பநாயக்கர் | — | அம்மன்சன்னிதியில் குமரருக்குக் கோயில் கட்டிப் பிரதிட்டை செய்தார். |
| 56 | இராமப்பநாயக்கர் | — | மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு வடமேற்கு மூலை பதினறுகால்மண்டபம். |
| 57 | *அனந்தாழ்வான்ஐயன் | 1795— | கீழமாசிவீதியில் சுவாமி தேர்நிலைமண்டபம், சுவாமி சன்னிதி பலிபீடம். |

| | | | |
|---|---|---|---|
| 58 | *வீரராகவன் | — | முத்தளக்கும் கோபுரத்திற்கு வண்ணம் பூசினார். |
| 59 | நாகு செட்டியாரும் அவர் மாப்பிள்ளை பெத்தப்பசெட்டியாரும் | — | சுவாமி கோயில் இரண்டாவது பிரகாரச் சுற்றெல்லாம் தளவரிசை. |
| 60 | பாப்பு செட்டியார் | — | அம்மன் தேர்நிலையம், அறுபத்து மூவருடன் ஐம்பத்தொரு சிவலிங்கமும் சுவாமி கோயிலின் முதற் பிரகாரத்து வடபுறத்தே அமைத்தார். |
| 61 | *பாப்பெல்லப்பசெட்டி | — | அம்மன் கோயில் தளவரிசை |
| 62 | நாரணப்பன் | — | ஆடிவீதியில் அக்கினி மூலை மண்டபம். |
| 63 | கோனேரி நாரணன் | — | வாகன அறை. |

# திருப்பணி செய்வித்தோர் வரலாறு

## 1. மாறவர்மன் சுந்தரபாண்டியன்

மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1216 முதல் 1238 முடிய மதுரையில் ஆண்டுவந்தான். இவனுக்கு முன் அரசாண்ட சடையவர்மன் குலசேகரபாண்டியனின் தம்பியே இவனென்று கருதப்படுகிறது. கல்வெட்டுக்களின் மூலம் புரட்டாசித் திங்கள் அவிட்ட நாளில் பிறந்தான் எனத் தெரிகிறது. இவனுடைய மெய்க்கீர்த்திகள் இவனாற் கட்டப்பட்ட சுவாமிசன்னிதி கிழக்கு ஒன்பது நிலைக் கோபுரத்தின் இரண்டாவது நிலையிலுள்ள தூண்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து இப்பாண்டியனின் வரலாற்றை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். இவனுடைய முன்னோர்களான பாண்டியர்கள் பல ஆண்டுகளாகச் சோழர்களுக்குக் கீழ்ப்பட்டுத் திறை செலுத்திவந்தனர். இவன் சிறுவனாக இருக்கும்பொழுது மூன்றாம் குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து அங்குப் பல கொடுமைகளைச் செய்தனன். அவை இவன் மனத்தில் உறுத்திக்கொண்டிருந்தன. இவன் பட்டத்திற்கு வந்த சமயம் மூன்றாவது இராசராச சோழன் சோழநாட்டை ஆண்டுவந்தான்.

அவன், ஆட்சிபுரியும் ஆற்றலும் ஆண்மையும் இல்லாதவனாக இருந்தான். அதையறிந்தசுந்தரபாண்டியன் அதுவே தக்க தருணமென்று கி. பி. 1219-ல் சோழநாட்டின் மீது படையெடுத்துச் சென்றான். சோழனைவென்று சோழநாட்டையும் கைப்பற்றிக்கொண்டான். பழிக்குப்பழி வாங்கும் எண்ணத்தில் பாண்டியநாட்டுப் போர்வீரர்கள் சோழநாட்டைச்சேர்ந்த, தஞ்சாவூர், உறையூர் ஆகிய இரு நகரங்களையும் கொளுத்தி மாடமாளிகைகளையும், மணிமண்டபங்களையும் கூடகோபுரங்களையும், இடித்தனர். சோழன், தலைநகரைவிட்டு ஓடினான். வெற்றிபெற்ற சுந்தரபாண்டியன், சோழனுடைய இரண்டாம் தலைநகராகிய பழையாறைக்குச் சென்று முடிசூட்டு மண்டபத்தில் வீராபிடேகம் செய்துகொண்டான். பின்னர் தில்லைக்குச் சென்று பொன்னம்பலவாணரை வழிபட்டுத் தன்நாட்டிற்குத் திரும்பும் வழியில் பொன்னமராவதியில் சிலநாட்கள் தங்கியிருந்தான். அங்கிருக்கும்பொழுது முடியிழந்தசோழனை அழைத்துவரச்செய்து சோழநாட்டைத் திரும்ப அவனிடம் ஒப்புவித்துத் தனக்கு ஆண்டு தோறும் திறைசெலுத்தி வருமாறு ஆணையிட்டான். சோழனும் மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுத் தன் நன்றியைத் தெரிவிக்கத் தன்மகனுக்குப் பாண்டியனின் பெயரையே இட்டான். ஆனால் சிறிதுகாலம் சென்றபின் சோழன், பாண்டியனுக்குத் திறைசெலுத்த மறுத்து விட்டான். அதைக்கேட்டுச் சினங்கொண்ட பாண்டியன் கி. பி. 1231-ல் மீண்டும் சோழநாட்டின்மீது படையெடுத்துப் போரிட்டு வெற்றியடைந்தான். சோழன், நாட்டை விட்டு ஓடினான். அவ்வாறு ஓடிய சோழனைக் குறுநில மன்னனாகிய கோப்பெருஞ்சிங்கன் பிடித்துச் சிறையில்

அடைத்தான். வெற்றிபெற்ற சுந்தரபாண்டியன் முடி கொண்ட சோழபுரத்திற்குச் சென்று அங்கு வீராபிடேக மும் விசயாபிடேகமும் செய்துகொண்டான். பின்னர் கி. பி. 1232-ல் போசள மன்னனாகிய வீரநரசிம்மன் பெரும் படையுடன் வந்து சோழனைச் சிறைமீட்டுவித்து, சுந்தர பாண்டியனையும் போரில்வென்று, சோழநாட்டை இராச ராசனுக்குக் கொடுத்தான்.

சுந்தரபாண்டியனுடைய மனைவியின் பெயர் 'உலக முழுதுடையாள்' எனக்கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகிறது.

## 2. ஆனந்தத்தாண்டவநம்பி

இவர் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புரா ணம் இயற்றிய செல்விநாட்டுப் பெரும்பற்றப்புலியூர்நம்பி பரம்பரையைச் சேர்ந்தவர். வேம்பத்தூர் சோழியபிரா மணர் வகுப்பினராவார். கரிவலம்வந்தநல்லூரில் அரசு புரிந்த வரதுங்கராமபாண்டியன் அவையில் பெரும்பற் றப்புலியூர்நம்பி தானியற்றிய திருவிளையாடற்புரா ணத்தை அரங்கேற்றினர். அப்பொழுது அதைக்கேட்டு அரசன் மகிழ்ச்சியுற்று அவருக்குப் பல்லக்கு முதலான பரிசுகளைக் கொடுத்து அவர் பிறந்த செல்விநாட்டையும் அதனைச்சார்ந்த ஊர்களையும் அவரும் அவர் பரம்பரை யினரும் அனுபவிக்கும்படி கொடுத்தான்.* அந்நாடும் அதனைச்சார்ந்த ஊர்களும் செல்விநாடு எனவழங்கப்பட்டு

*பெரும்பற்றப்புலியூர்நம்பி திருவிளையாடல்—உ. வே. சாமிநாதய்யர் முன்னுரை.

வந்தது. அதன் காரணமாக அவர் பரம்பரையினர் செல்வ முடையவர்களாக விளங்கினர். இப்பரம்பரையைச் சேர்ந்தவர்தான் ஆனந்தத்தாண்டவநம்பி. அம்மன் சன்னிதியில் மூன்றுநிலைக் கோபுரத்தை ஆனந்தத்தாண்டவநம்பி கட்டினார் என்று ஒரு குறிப்பும், அவர் மனைவி கட்டினார் என்று மற்றொரு குறிப்பும் கூறுகின்றன. இது கட்டப்பட்ட காலம் கி. பி. 1227.

## 3 சடையவர்மன் விக்கிரம பாண்டியன்

இவன் கி. பி. 1251-ல் இருந்த சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவன். தொண்டை மண்டலத்திலும் நடுநாட்டிலும் சில ஆண்டுகள் அரசப்பிரதிநிதியாக இருந்தவன். சடையவர்மன் சுந்தர பாண்டியனின் ஆட்சியில் நடைபெற்ற போர்களில் இவன் படைத் தலைமை ஏற்றுப் போரிட்டான் என்று கருதப்படுகின்றது. இவனுக்குப் 'புவனேகவீரன்' என்ற சிறப்புப்பெயர் ஒன்று அந்நாளில் வழங்கியது.

## 4. பராக்கிரம பாண்டியன்

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டில் மகமதியர்கள் படையெடுத்து வந்தபொழுது பாண்டியர்களில் மதுரையிலிருந்த சடையவர்மன் பராக்கிரம பாண்டியனும்ஒருவன். இவனுடைய ஆட்சிக்காலம் கி. பி. 1315 முதல் 1347 வரையாகும். சீதளப் புத்தகத்தில் இவன் வாளால் விழித்துறங்கும் பராக்கிரம பாண்டியன் என்று குறிக்கப்பெற்றிருக்கின்றது; மகமதியர் படையெடுத்துவந்தபொழுது இவன் மதுரையை விட்டுக்

காளையார்கோயிலுக்கு ஓடிவிட்டான் என்றும் மகமதியர்கள் இவனைச் சிறைப்படுத்திச் சென்றனர் என்றும் கூறுகின்றது.

## 5. மாவலிவாணுதிராயர்

வாணுதிராயர் என்பவர்கள் பாண்டிய சிற்றரசர்கட்கு அமைச்சர்களாக இருந்தவர்கள். இவர்கள் திருமாலிருஞ்சோலையைத் தமக்கு இருப்பிடமாகக்கொண்டிருந்தார்கள். இவர்கள் பாலாற்றங் கரையிலிருந்த வாணநாட்டில் சோழர்கட்குட்பட்ட சிற்றரசர்களாக இருந்தவர்கள். இவர்கள் தங்களைப் பண்டைய பாண்டியர் வழியில் வந்தோர் எனக்கூறிக்கொண்டனர். கி. பி. 1261-72ல் மூன்ருவது குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியபொழுது அந்நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு இவ்வாணுதிராயர்கள் பாண்டிய நாட்டில் குடியேற்றப்பட்டவர்கள். அவர்களிற்சிலர் வானரவீரமதுரை என்னும் மானுமதுரைப் பகுதியில் மாவலி வாணுதிராயர் என்ற பட்டத்துடன் சிற்றரசர்களாக இருந்துவந்தார்கள். சுந்தரமாவலி என்ற வாணுதிராயர் திருப்பணி செய்த காலம் கி. பி. 1452.

## 6. சின்னப்ப நாயக்கர்

இவர் விசயநகரப் பிரதிநிதியாக இருந்து கி. பி. 1526 முதல் 1530 வரை மதுரையை ஆண்டவர்.

## 7. விசுவநாதநாயக்கர்

மதுரை நாயக்கர்களின் பரம்பரை இவர் காலத்தி

விருந்துதான் தொடங்கியது. இவர் கி. பி. 1529 முதல் 1564 வரை அரசாண்டார். சிறுவயதுமுதலே படைப் பயிற்சி பெற்றுப் போர்த்தொழிலில் சிறப்புடன் விளங்கினார். விசயநகர ராயர், இவர் தகப்பனாராகிய நாகமநாயக்கரைப் பாண்டியனுக்கு உதவிசெய்ய மதுரைக்கனுப்பிய பொழுது அவர் இராயரின் கட்டளையை மீறி மதுரையைத் தாமே ஆட்சி செய்யத் தொடங்கிவிட்டார். இதைக்கண்ட இராயர் கோபமுற்று, அந்த நாகம நாயக்கரைச் சிறைப்பிடித்துத் தண்டிக்கத் தம்முடைய அரசவையில், வீரர்கள் ஒருவருமில்லையா? எனக் கேட்டார், அப்பொழுது அவையிலிருந்த விசுவநாதநாயக்கர் எழுந்து தாமே அப்பணியைச் செய்வதாக முன்வந்தார். இராயரும் அவருடைய இராசபக்தியைப் போற்றி அவர் தலைமையில் ஒரு படையை மதுரைக்கனுப்பினார். விசுவநாதர் மதுரையில் தம் தந்தையுடன் போரிட்டு அவரைச் சிறைப் பிடித்து இராயர்முன் கொண்டுவந்து நிறுத்தினார். தம் தந்தையென்றும் பாராது வாக்குறுதியை நிறைவேற்றிய விசுவநாதரின் செயலைப் பாராட்டி அவரையே மதுரைக்கு மண்டலாதிபதியாக இராயர் நியமித்தார். அவருக்குத் துணையாக, தளவாய் அரியநாத முதலியாரையும் அனுப்பிவைத்தார். விசுவநாதர் தம் ஆட்சியில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். முக்கியமாக மதுரையிலிருந்த பாண்டியர்களின் பழைய கோட்டையை இடித்து வலிமையான புதிய அரண்களைக் கட்டினார். வைகையாற்றில் பேரணை, சிற்றணைகளைக் கட்டியவர் இவரே. பாண்டிய நாட்டில் 72 பாளையங்கள் வகுக்கப்பட்டதும் இவர் காலத்தில்தான்.

## 8. சிராமலைச் செவ்வந்திமூர்த்தி செட்டி

இவர் சைவவேளாள இனத்தைச் சேர்ந்தவர். சிராமலை என்னும் திருச்சிராப்பள்ளியே இவரது சொந்த ஊர். பெருநிலக்கிழாராக இருந்தவரென்றும் தமிழ் மொழியில் நல்ல பயிற்சியுடையவர் என்றும் இவருடைய தந்தையார் பெயர் மாறுகரன் செட்டி என்றும் திருப்பணி மாலையினின்று நாம் தெரிந்துகொள்கின்றோம். இவரும் இவர் மக்களும் பல திருப்பணிகளை மதுரைத் திருக்கோயிலுக்குச் செய்துள்ளனர். இவர் திருப்பணிசெய்த காலம் கி. பி. 1559 ஆகும். மதுரைக் கோயிலுக்குச் சில திருப்பணிகளைச் செய்த செவ்வந்திவேலப்பச் செட்டியும், திருவம்பலச் செட்டியும் இச்சிராமலைச் செவ்வந்திமூர்த்தி செட்டியின் குமாரர்கள் ஆவார்கள்.

## 9. செட்டியப்ப நாயக்கர்

இவர் காஞ்சிபுரம் பொப்பன்னபூபாலரின் மைந்தர்.

## 10. கல்லூர்ச் செவ்வந்தி

இவர் கல்லூர்ச் சனிப்பெருமாள் என்பவரின் புதல்வர். மதுரைத் திருவிளையாடற் கதைகளை விரித்துக்கூறும் 'சுந்தரபாண்டியம்' என்னும் நூலியற்றிய அநதாரி என்னும் புலவர் பெருமானால் அந்நூலில் ஆங்காங்கே புகழப் பெற்ற கல்லூர்அதிபனான மன்றைத்திருவிருந்தான் என்பவர்க்கு இவர் சகோதரர். இவர் கிருஷ்ணவீரப்ப நாயக்கரால் பெரிதும் பாராட்டப்பெற்றவர். இவர் காலம் கி. பி. 1564.

## 11. கிருஷ்ணவீரப்ப நாயக்கர்

இவர் விசுவநாத நாயக்கரின் குமாரர். இவர் குமார கிருஷ்ணப்பர் என்றும் பெரிய கிருஷ்ணப்பர் என்றும் அழைக்கப்பெற்ருர். கி. பி. 1564 முதல் 1572 வரை மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்தார். இவர் காலத்தில் தளவாய் அரியநாத முதலியார் விசயநகரத்திற்குச் சென்றிருந்த சமயம் பாளையக்காரர்களில் ஒருவரான தும்பிச்சி நாயக்கர் தம்முடன் பல பாளையக்காரர்களைச் சேர்த்துக் கொண்டு நாயக்கருக்கு விரோதமாகக் கலகம் செய்தார். ஆனால் வெற்றிபெறவில்லை. தும்பிச்சிக்கு இலங்கை அரசன் கண்டிராஜா உதவி செய்தான் என்பதைக் கேள்வியுற்றுக் கிருஷ்ணவீரப்பர் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று வெற்றிபெற்றுத் தம் மைத்துனர் விசயகோபால நாயக்கரை இலங்கைக்குப் பிரதிநிதியாக ஆக்கினர். இவர் திருநெல்வேலியை அடுத்த பாளையங்கோட்டை கிருஷ்ணபுரம் கோயிலையும் கடயம் கிருஷ்ணபுரம் கோயிலையும் கட்டுவித்தார்.

## 12. அரியநாயக முதலியார்

அரியநாயகமுதலியார், அரியநாத முதலியார் என்றும் நயினத்தை என்றும் வழங்கப்பெறுவார். இவர் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள மெய்ப்பேடு என்னும் கிராமத்தில் ஓர் ஏழை வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். குழந்தைப் பருவத்திலும் சிறுவனக இருக்கும்பொழுதும் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் இவர் அடையப்போகும் புகழுக்கு அறிகுறிகளாக விளங்கின. குழந்

தையாக இருக்கும்பொழுது ஒரு நல்லபாம்பு இவர் உடலைச் சுற்றிக்கொண்டு தலைக்குமேல் படம் எடுத்துக் கொண்டிருந்ததாம். அது ஒரு நல்லஅறிகுறி என்று கருதப்பட்டது. இவர் சிறுவனாக விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது அவ்வழியேசென்ற சோதிடப்பிராமணன் ஒருவன் இவருடைய கைரேகைகளைப் பார்த்து ''உனக்கு அரசயோகம் இருக்கின்றது; ஆகையால் நீ விசயநகரத்திற்குச் சென்று இராயரிடம் எப்படியாவது தொடர்புகொள்'' என்று கூறினனாம். அரியநாயகர் முதலில் அதை விளையாட்டாக எண்ணி ''அவ்வாறுநான் பெரிய பதவியைப்பெற்றால்நீர்கேட்பதைத்தருகின்றேன்'' என்று கூறினராம். சோதிடனும், 'சரி, அப்பொழுது நான் வந்தால் உன்சொத்தில் கால்பாகம் கொடு, போதும்' என்றானாம். பின்னர் அதன்படியே அரியநாயகர் செல்வாக்குடன் விசயநகரத்திலிருக்கும்பொழுது அச் சோதிடரின் குமாரன் வந்து தன்தந்தையார் கொடுத்த ஓலையைக் காட்டினன். அரியநாயகரும் அது, தான் விளையாட்டுப்பிள்ளையாயிருக்கும்பொழுது கொடுத்த உறுதிமொழியென்று கருதாது உடனே தம்சொத்தில் கால் பாகத்தைக்கொடுக்க முன்வந்தார். ஆனல் சோதிடன் மகனே அவரது பெருந்தன்மையைக்கண்டு வியப்புற்றுத் தமக்குக் காசிக்குச் செல்வதற்கு மட்டும் உதவினல் போதும் என்று அவர் கொடுத்த பெருஞ்செல்வத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான்.

இவ்வாறு நேர்மையுள்ளம்படைத்த அரியநாதர் கணிதத்திலும், மற்போரிலும் வல்லவராக இருந்தார். அவர் விசயநகரம் சென்று முதலில் நாகமநாயக்கரிடம்

கணக்குப்பிள்ளையாக இருந்தார். அதனால் அரண்மனையில் தொடர்புகொள்ள அவருக்குப் பல வாய்ப்புகள் ஏற்பட்டன. ஒரு சிக்கலான கணிதத்திற்கு இவர் கூறிய விடையும், நவராத்திரியின்பொழுது காட்டு எருமையைப் பலியிடுவதற்குக் கூறிய அரிய யோசனையும் இவரது ஆற்றலைக் கிருஷ்ணதேவராயருக்குத் தெரியப்படுத்தின. உடனே அவருக்கு அரண்மனைக் கணக்கர்பதவி கொடுக்கப்பெற்றது.

ஒரு நாள் இராயர்அவையில் மற்போர்செய்வோன் ஒருவன் வந்து தன்னுடன் மற்போர் செய்ய யாரும் உண்டோ என்று அறைகூவினான். அவ்வவையிலிருந்தோர்களில் அரியநாயகர் ஒருவரே எழுந்து அவனுடன் போர்புரியத் துணிந்து நின்றார். போர்செய்து வெற்றியும் கண்டார். அதைக்கண்ட கிருஷ்ணதேவராயர் மகிழ்ச்சியுற்று அன்றுமுதல் அரியநாயகரைத் தம் படைத்தலைவர்களுள் ஒருவராக ஆக்கிக்கொண்டார்.

பின்னர் விசுவநாதநாயக்கரை இராயர் மதுரைக்கு அனுப்பும்பொழுது, அவருக்குத் துணையாக அரியநாயகரையும் அனுப்பிவைத்தார். அரியநாயகர் விசுவநாத நாயக்கருக்குப் பலவழிகளிலும் பேருதவியாக இருந்துவந்தார். அதை எண்ணி விசுவநாதநாயக்கர் மதுரை ஆட்சியை ஏற்றபொழுது அரியநாயகரைத் தம் முதல் அமைச்சராகவும், தளவாயாகவும் நியமித்து முதலியார் என்று அவரைப் பாராட்டியழைத்தார்; அதாவது பாண்டிய நாட்டு நாயுடு 'சமஸ்தான'த்திற்கு முதன்மையானவர் என்பது பொருள்.

தளவாய் அரியநாயக முதலியார் நூறுண்டுகட்குமேல் வாழ்ந்திருந்தார். அவர் வாழ்க்கையின் பெரும்பகுதியாகிய கி. பி. 1529 முதல் 1600 வரை 71 ஆண்டுகள் நான்கு நாயக்கர்கள் தலைமுறைக்கு அமைச்சராகவும், தளவாயாகவும் இருந்து புகழ்பெற்ருர். அப்பொழுது அவர் பாண்டிய நாட்டிற்குச் செய்த பணிகள் மிகப் பலவாகும்.

மதுரைக் கோயிலைச் சுற்றியிருந்த பாண்டியர்களுடையபழைய கோட்டைச்சுவர்களை இடித்து இரட்டைச் சுவர் கோட்டையைக் கட்டுவித்தார். வைகையாற்றில் பேரணை சிற்றணைகளைக் கட்டி, உழவுத் தொழிலுக்குப் பாசன வசதிகளைச் செய்து கொடுத்தார். திருச்சிராப்பள்ளிக் கோட்டையையும் புதுப்பித்து அதற்குள் பல வாய்க்கால்களையும், குளங்களையும் வெட்டி, தெருக்களை அமைத்தார். சோழவந்தானில் தன் இனத்தவரான தொண்டைமண்டல வேளாளர்களைக் குடியேற்றினுர். அப்பகுதி முதலியார்கோட்டை என்று இன்றும் வழங்கப் படுகின்றது. 72 பாளையப்பட்டுகளை உருவாக்கினவர் இவர்தான். மதுரைக் கோயிலில் ஆயிரக்கால் மண்டபமும் கட்டிப் பல கட்டளைகளையும் உண்டுபண்ணினுர். இவருடைய உருவச்சிலை ஆயிரக்கால் மண்டபத்தின் வாயிலில் குதிரைமேல் இருப்பதுபோல் இருக்கின்றது.

## 13. காளத்தியப்பர்

இவர் தளவாய் அரியநாதமுதலியாரின் புதல்வர்.

## 14. பட்டுத்திருமலை நாயக்கர்

தஞ்சாவூரைச்சேர்ந்த பலவன் என்பவரின் புதல்வர்.

### 15. கல்லூர்ச் சின்னச்செவ்வந்தி

இவர் கல்லூர்ச் செவ்வந்தி செட்டியின் குமாரர்

### 16. விசுவப்ப நாயக்கர்

இவர் கி: பி 1572 முதல் 1595 வரை ஆட்சிபுரிந்த வீரப்பநாயக்கரின் இரண்டாவது குமாரர். இவருக்கு மூத்தவரான கிருஷ்ணப்பநாயக்கர் கி. பி. 1595-இல் பட்டத்திற்கு வந்தபொழுது விசுவப்பரும் இளவரசராக இருந்து ஆட்சிபுரிந்துவந்தார். இருசகோதரர்களும் தளவாய் அரியநாத முதலியாரிடம் மிகப்பணிவுடன் இருந்தனர். கி. பி. 1600-இல் இவர் காலத்தில்தான் அரியநாதமுதலியார் காலமானார்.

### 17. முத்துவீரப்பர்

இவர் முத்துக்கிருஷ்ணப்பநாயக்கரின்புதல்வர். இவர் கி. பி. 1609 முதல் 1623 வரை மதுரையை ஆட்சிபுரிந்தார். இவருடைய இளைய சகோதரரே திருமலைநாயக்கர், இம்முத்துவீரப்பர் தஞ்சையரசன், மைசூர் அரசன், மகமதியர் முதலியோர்களை வெற்றிகொண்டவர். இவர்காலத்தில் பிரான்சிஸ் சேவியர் (Frausis Xavier) பெர்னன்டே பாதிரியார் (Father Fernandey), இராபர்ட் நோபிலிபஸ் (Robert Nobilibus) ஆகியோர் தென்னாட்டில் விளங்கினர்.

### 18 குஞ்சமழகிரி நாயக்கர்

இவர் முத்துவீரப்பநாயக்கரிடம் பணிபுரிந்தவரெனத் தெரிகிறது.

## 19 உருத்திராபதியம்மாள், தோளியம்மாள்

இவர்கள் இருவரும் திருமலைநாயக்கரின் பட்டத்தரசியராவர்.

## 20. அபிசேக பண்டாரம்

இவர் திருமலைநாயக்கர்காலத்தில் கோயில்விசாரணையாளராக இருந்து மேற்பார்த்து வந்தவர். இவர்காலத்தில் கோயில் நிர்வாகத்தில் பல ஊழல்கள் ஏற்பட்டதால் அப்பதவியினின்றும் திருமலைநாயக்கர் இவரை விலக்கிவிட்டுக் கோயிலாட்சியைத் தாமே ஏற்றுக்கொண்டார். அதற்காக நாயக்கர், அவருக்குப் பெரும்பொருளைக் கொடுத்தார். அப்பொருளைவைத்து சுவாமிகோயிலின் இரண்டாம் பிரகாரத்தை அபிசேகபண்டாரம் கட்டுவித்தார். இவருடைய உருவச்சிலை சுவாமிசன்னிதிக்கு அருகில் உள்ள அனுக்யவிநாயகரின் முன்னுள்ள தூணில் இருக்கிறது. இவர் கரியமாணிக்கப்பெருமாள் கோயிலின் முன்னிருந்த மண்டபத்தைப் பிரித்து அம்மன்சன்னிதிக்குமுன் கட்டினார். அதுவே கிளிக்கூட்டு மண்டபமாகும். இத்திருப்பணிகள் செய்வதற்கு வீடுதோறும் புதுக்கலயங்களைக் கொடுத்து ஒவ்வொருநாளும் சமையல் செய்வதற்கு முன் அவ்வீட்டார் ஒருபிடிஅரிசி அதில்போடவேண்டுமென ஏற்பாடுசெய்தார். இவ்வாறு சேர்ந்த அரிசியை விற்று அப்பொருளைக்கொண்டு திருப்பணியை நடத்தினார்.

## 21. அச்சயரராயர்

இவர் கி. பி. 1635-இல் இராணிமங்கம்மாவிடம் அமைச்சராக இருந்தவர்.

## 22. பேச்சியக்காள்

இவர் கோயில் இடைச்சிப் பெண்ணவார்.

## 23. சமுகம் மீனாட்சி நாயக்கர்

இவர் விசயரெங்க சொக்கநாதரிடம் பிரதானியாக இருந்தவர்.

## 24. ஆறுமுத்த முதலியார்

இவர் நந்தியம்பாக்கம் வன்னியப்ப முதலியாரின் புதல்வர்.

## 25. செவ்வந்தியாண்டி செட்டி

இவர் தாண்டவச் செட்டியாரின் புதல்வர். எழுகடல் அக்கிரகாரத்தை அமைத்தவர் இவரே.

## 26. மருது பாண்டியர்

மருது பாண்டியர் என்பவர்கள் பெரியமருது, சின்ன மருது என்ற இரு சகோதரர்கள் ஆவார்கள். மூத்தவரான பெரியமருதுவை வெள்ளை மருது என்று அழைப்பார்கள். வெள்ளைமருது மிகவும் வலிமையான உடற்கட்டும் வீரமும் அஞ்சா நெஞ்சுமுடையவர். புலி வேட்டையாடுவதில் மிக விருப்பமுடையவர். அவர் வேட்டைக்குச் சென்றால் துப்பாக்கி தேவையில்லை. புலியின் வாலைப் பிடித்து பரபரவென்று இழுத்துப் பின்னங்கால்களைப் பற்றிச்

சுழற்றித் தரையில் அடித்துக் கொன்றுவிடுவார். இதனால் அவர் பெரும்பாலும் காட்டில் வாழ்வதையே விரும்பினர்.

சின்னமருது அண்ணனைப் போல் அவ்வளவு பெரிய உருவமுடையவரல்லர் எனினும் கம்பீரமான தோற்றம் உடையவர். அண்ணனைக் காட்டிலும் உலகியல் அறிவிலும் அரசியல் தந்திரத்திலும் மிகவும் வல்லவர். யாருடனும் இனிமையாகப் பழகும் இயல்புடையவர்.

இவ்விரு சகோதரர்களும் தொடக்கத்தில் சிவகங்கை மன்னரது படையைச் சார்ந்த போர்வீரர்களாகவேயிருந்தனர். அவர்களுடைய வீரத்தாலும் பண்பாலும், கடமையுணர்ச்சியாலும் அவர்கள் படிப்படியாக உயர்ந்து மறவர் நாட்டில் மிகுதியான செல்வாக்கைப்பெற்றனர். இறுதியில் சிவகங்கை மன்னரான முத்துவடுகநாதர் எதற்கும் மருதுபாண்டியர்களையே நம்பி வாழும் நிலை ஏற்பட்டது. ஆங்கிலேயர் துணையுடன் ஆர்க்காட்டு நவாபு, சிவகங்கை மன்னனுடன் போர் தொடுத்தான். அப்போரில் முத்துவடுகநாதர் வீரமரணமெய்தினர். அவருடைய மனைவி வேலுநாச்சியாரை மருதுபாண்டியர்கள் காப்பாற்றித் திண்டுக்கல்லிற்கு அழைத்துச்சென்று ஐதரலியின் பாதுகாப்பில் சிலகாலம் வைத்தனர். பின்னர் சமாதானம் ஏற்பட்டு மருதுபாண்டியர்கள் சிவகங்கைக்குத் திரும்பிவந்து வேலுநாச்சியாரையே அரசியாக்கினர்கள். ஆனால் சின்னமருதுவே நாட்டின் நிருவாகம் முழுவதையும் கவனித்துவந்தார். 1800ஆம் ஆண்டில் வேலுநாச்சியார் இறந்தவுடன் மருதுபாண்டியர்களே நாட்டின் ஆட்சியை ஏற்றுக்கொண்டனர்.

ஆங்கிலேயருக்கும் இவர்களுக்கும் தொடர்ந்து பகைமை இருந்துகொண்டே இருந்தது. பாஞ்சாலங் குறிச்சிக் கட்டப்பொம்மனுடன் சேர்ந்து இவர்கள் ஆங் கிலேயருடன் வீரப்போர் புரிந்தனர். முடிவில் இந்த இணையற்ற வீரர்களை ஆங்கிலேயர்கள் பிடித்துத்திருப்புத் தூர் கோட்டையில் தூக்கிலிட்டனர். அவர்களுடைய கடைசி விருப்பம் என்ன என்று கேட்டபொழுது அவர் கள் கூறியது: "நாங்கள் முள்ளால் கீறியவையும், சொல் லால் கூறியவையும், எள்ளால் இறைத்தவையும் ஆகிய பொருள்களை அவரவர்கட்கே அளித்துவிட வேண்டும் என்பதும், நாங்கள் ஆர்வத்தோடு கட்டிய காளையார் கோயில் சோமேசுவரசுவாமி ஆலயத்தின் கோபுரவாயிற் படிக்கு நேர் எதிரிலேயே எங்கள் உடலைச் சமாதிவைக்க வேண்டும்" என்பதுமேயாகும்.

மருது சகோதர்கள் கோயில் திருப்பணிகளில் மிகவும் ஈடுபட்டிருந்தனர். குன்றக்குடிக்கோயிலைக்கட்டி சுவாமிக் குத் தங்கக்கவசமும் செய்துவைத்தனர். திருப்புத்தூர், திருமோகூர் கோயில்களிலும் இவர்கள் திருப்பணி செய் துள்ளனர். காளையார்கோயிலில் மூன்றுசன்னிதிகள் கொண்ட திருக்கோயிலைக் கட்டிப் பெரியதேர் ஒன்றும் செய்து ஆனைமடு என்ற தெப்பக்குளத்தையும் புதுப்பித் தனர். இக்கோயில்திருப்பணிக்கு மானாமதுரையிலி ருந்து வரிசையாக ஆட்களை நிறுத்தி, கைமாற்றாகவே செங்கற்களைக் கொண்டுவந்தார்களாம். இந்நிகழ்ச்சி இவர்களிடம் மக்கள் எவ்வளவு அன்புடன் இருந்தார்கள் என்பதை விளக்குவதாகும்.

மதுரை மீனுட்சிகோயிலில் திருக்கலியாணமண்டபத் திற்குஎதிரிலுள்ள'சேர்வைகாரர்'மண்டபம்என்பதுஇவர் களாற் கட்டப்பெற்றதாகும். மேலும் சன்னிதியிலுள்ள திருவாச்சிவிளக்குகளும் இவர்கள் உபயமேயாகும் அதற் காக ஆவியூர்என்னும் கிராமத்தைஇறையிலியாகவிட்டுள் ளனர்.மேலும் இவர்கள் மதுரைக்குச் சுவாமிதரிசனத்திற் காக ஒருமுறை வந்தபொழுது தெற்குஆடிவீதியில் கிழக்குக்கோடியில் உள்ள மண்டபத்தில் சில மகமதி யர்கள் தங்கிப் பாத்தியா ஓதிக்கொண்டு அங்குத் தங்கள் கொடியைக் கட்டியிருந்தார்கள். இவர்கள் அதைக்கண்டு சினங்கொண்டு ''நாங்கள் கோயிலுக்குட் சென்று வருவ தற்குள் இவ்விடத்தைக் காலிசெய்து கொடுக்கவேண்டும்; தவறினுல் கடுமையான தண்டனைக்குள்ளாவீர்கள்'' என்று கூறிச்சென்றனர். மறுவிநாடியே அவ்விடத்தை அவர்கள் காலிசெய்துவிட்டனர்; இன்றும் மசூதி ஒன்றின் அடையாளத்தை அம்மண்டபத்திற் காணலாம். இவர் களுள் பெரியமருதுவின் உருவச்சிலே சேர்வைகாரர் மண் டபத்திலுள்ள தூணில் இருக்கின்றது.

## 27. கிருஷ்ணப்ப நாயக்கர்

இவர் தென்காசியிலிருந்தவர்.

## 28. அனந்தாழ்வான் ஐயன்

இவர் தொண்டைநாட்டைச் சேர்ந்த பிராமணர் குலத்திற் பிறந்தவர்.

## 29. வீரராகவன்

இவர் திருவாமாத்தூர் என்னும் ஊரில் வாழ்ந்தவர்.

## 30. பாப்பெல்லப்ப செட்டி

இவர் கச்சிக் குப்பணனின் புதல்வர்.

கீழ்க்கண்டோரைப்பற்றிய விவரங்களை அரசியல் வரலாறு, ஆலய ஆட்சி வரலாறு என்னும் பகுதிகளில் விரிவாகக் காணலாம்.

1. திருமலை நாயக்கர்
2. வீரப்ப நாயக்கர்
3. இராணி மங்கம்மா
4. விசயரெங்க சொக்கநாத நாயக்கர்

# ஆலய அமைப்பின் அழகும் சிறப்பும்

திருக்கோயில்களுள் மதுரைக் கோயிலுக்குப் பல தனிப் பழக்கவழக்கங்களும் சிறப்புக்களும் உண்டு. இவ்வாலயத்தில் முதலில் மீனுட்சி அம்மனுக்குத்தான் வழிபாடு நடைபெறுவது வழக்கம். அதனுல் கோயிலுக்கு வருபவர்களும் அம்மன் சன்னிதி வாயில் வழியாக வருவதையே பல ஆண்டுகள் வழக்கமாகக்கொண்டுவிட்டனர்.

## அட்டசக்தி மண்டபம்

18 அடி அகலமும் 25 அடி உயரமும் கொண்ட அம்மன் சன்னிதி வாயில், தெரு மட்டத்தில் மிக அழகாக அமைந்துள்ளது. கோயிலின் மற்ற வாயில்களில் உள்ளது போன்று இதில் பெரிய கோபுரம் எதுவுமில்லை. ஆனுல் முகப்பில் விநாயகர், சுப்பிரமணியர் உருவங்களும் நடுவே ஸ்ரீ மீனுட்சிசுந்தரர் திருக்கலியாண உருவமும் சுதைகளாய்ச் செய்யப்பெற்று வாயிலின்மேல் அழகாக அமைக்கப்பெற்றுள்ளன. இவ்வாயில்வழியாக நுழைந்ததும் கண்களைக் கவரும் சிற்பங்களும் சித்திரங்களும் நிறைந்த ஒரு

மண்டபத்தைக் காண்கின்றோம். 46 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்ட இம்மண்டபத்தின் மேல்தளம் அரை வட்ட வடிவில் வளைவு முகடாக அமைந்துள்ளது. இதனை அட்டசக்தி மண்டபம் என்றும் அட்டலட்சுமி மண்டபமென்றும் அழைக்கின்றனர். இம்மண்டபத்தின் இரு புறங்களில் உள்ள தூண்களில், இடதுபுறம் கௌமாரி, ரௌத்ரி, வைணவி, மகாலட்சுமியும், வலதுபுறம் எக்ஞ ரூபணி சாமளை, மகேசுவரி, மனோன்மணியும் ஆகிய எட்டு அம்பிகைகளின் சிலைகள் இடம்பெற்றுள்ளனவாதலின் இதற்கு ''அட்டசக்தி மண்டபம்'' என்ற பெயர் உண்டாயிற்று. இவ்வுருவங்களைத் தவிர முகப்பில், துவாரபாலகிகளும், உட்புறம் அழகான வல்லப கணபதியின் சிலையும், சண்முகரின் சிலையும் இருக்கின்றன. மண்டபத்தின் மேற்பகுதியில் அழகான சித்திரங்களும், சுதையினால் செய்யப்பெற்று வண்ணம் பூசப்பெற்ற உருவங்களும் காட்சியளிக்கின்றன. அவையனைத்தும் திருவிளையாடற் கதைகள் சிலவற்றை விளக்குவனவாம். காஞ்சனமாலையிடம், ''நான், உன் மகளாகத் தோன்றுகிறேன்'' என்று மீனாட்சியம்மை வரங்கொடுத்தல், மீனாட்சியின் திருவவதாரம், முடிசூட்டு விழா, அரசாட்சி செய்தல், சிவபெருமானுடன் போர்புரிதல், சுந்தரரும் மீனாட்சியும், சோமசுந்தரர் அரசு செலுத்துதல், உக்கிரபாண்டியன் திருவவதாரம், உக்கிரபாண்டியரின் முடிசூட்டு விழா, உக்கிரபாண்டியன் அரசாட்சி ஆகிய திருவிளையாடல்கள் அங்கே சித்திரங்களினாலும், சுதையினாலும் சித்திரிக்கப் பெற்றுள்ளன. கீழ்புறம் மீனாட்சி சன்னிதியை நோக்கிச் சைவசமயாச்சாரியர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகியநால்வர் உருவங்களும்,மீனாட்சியம்மையின் உருவமும்

புதிதாக 1960-63 திருப்பணியின்பொழுது அமைக்கப் பெற்றன.

மேற்குறிப்பிடப்பெற்றவைகளில் மீனாட்சி முடிசூட்டு விழாச்சித்திரத்தை எழுதும்பொழுது ஒரு சுவைமிக்க நிகழ்ச்சி நடைபெற்றது. அப்படத்தில் முடிசூட்டுவிழா வைக்காணப் பலர் சூழ்ந்திருப்பதைக்காணலாம் கூர்ந்து நோக்கினால் அத்திருக்கூட்டத்தில் அண்ணல் காந்தியடி களின் உருவமும் காட்சியளிப்பதுதெரியும். அச்சித்திரங் கள் 1923-இல் எழுதப்பெற்றன. அப்பொழுதுநாட்டுவிடு தலைக்காகக் காந்தியடிகள் ஆங்கில அரசுடன் போராடிக் கொண்டிருந்த காலம் மக்களிடையே அவருடைய செல் வாக்கைக் குறைக்கவேண்டுமென்று அரசினர் கடுமை யான நடவடிக்கைகளை எடுத்துவந்தனர். கோயிலின் முக்கியமான இவ்விடத்தில் காந்தியாரின் படம் எழுதப் பெற்றிருப்பதை நீக்கிவிட வேண்டுமென்று அரசினர் கோவிலதிகாரிகளுக்கு ஆணையிட்டனர். வேறுவழியின்றி அப்படத்தை நீக்கிவிடும்படி கோயிலார் சித்திரக்கார ரான புகழ்பெற்ற சுப்பாநாயுடுவிடம் கூறினர். அவரும் அவ்வாறே செய்வதாகக்கூறி. நுட்பமாக ஒரு வேலைசெய் தார். நல்ல எண்ணெய் வர்ணங்களினால் எழுதப்பெற்ற அண்ணல்காந்தியின் படத்தின்மேல், விரைவாக அழிந்து விடக்கூடிய நீர்வர்ணத்தால் காந்திக்குச் சடைமுடிகளை எழுதி ஒரு முனிவரைப்போல் தோற்றமளிக்குமாறு செய்துவிட்டார். அரசினரும் அதைக்கண்டு மன நிறைவுகொண்டனர். சித்திர வேலைகளெல்லாம் முடிந் தன. அதற்காகக் கட்டப்பெற்ற சாரங்களும் அப்புறப் படுத்தப்பெற்றன. மூன்று மாதங்களில் காந்தியாருக்கு வைக்கப்பெற்ற சடைமுடி, தானே மறைந்துவிட்டது.

அதனால் முதலில் எழுதிய காந்தியடிகளின் உருவம் நிலைத்து நின்றது. 1960-63 திருப்பணியின் பொழுது அச்சித்திரங்களுக்குப் புதிதாக வண்ணம் தீட்டப்பட்ட பொழுது பழைய அமைப்பு அப்படியே இருக்குமாறு செய்யப்பெற்றது. சுதை உருவங்களும் புதிப்பிக்கப் பெற்று வண்ணங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

இத்துணை அழகான அட்டசக்தி மண்டபத்தை 1623-ஆம் ஆண்டில் திருமலை நாயக்கரின் பட்டமனைவியர் உருத்ராபதியம்மையும், தோளியம்மையும் கட்டுவித்தனர். இம்மண்டபம், நாள்தோறும் வழிபாட்டிற்குவரும் அயலூர் மக்களுக்கு உணவு வழங்குவதற்காகக் கட்டப் பெற்றது. இப்பொழுது மண்டபத்தின் இரு பக்கங்களிலும் வரிசையாகத் தேங்காய் பழக்கடைகள் இருக்கின்றன.

## மீனாட்சிநாயக்கர் மண்டபம்

அட்டசக்திமண்டபத்தை அடுத்து 160 அடி நீளமும் 110 அடி அகலமும் உள்ள ஒரு பெரிய மண்டபத்தைக் காணலாம். ஒரேகல்லிற் செதுக்கப்பெற்ற 22 அடி உயரமுள்ள 110 தூண்களை ஆறு வரிசைகளிற் கொண்டுள்ள இம்மண்டபம் 'மீனாட்சிநாயக்கர் மண்டபம்' என வழங்கப்படுகிறது. ஒவ்வொரு தூணிலும் மேற்பகுதியில் யாளியின் உருவமும் கீழ்ப்பகுதியில் சிறிய சிற்பவேலைப் பாடுகளும் காணப்படுகின்றன. பொதுவாக நாயக்கர்கால மண்டபங்களில் காணப்படும் பெரிய சிலைகளும் கட்டியவரின் உருவச்சிலையும் இங்குக் காணப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஆனால்சிலசிலைகள் அரைகுறையாகச் செதுக்கப்பெற்று, முற்றுப்பெறாமல் இருக்கின்றன.

அட்டசக்திமண்டபத்தையும் மீனாட்சிநாயக்கர்மண்டபத்தையும் இணைத்து ஒருமண்டபம் இருக்கின்றது. அதில் தென்புறம் பார்வதிஅம்மையின் உருவம் ஒன்றிருக்கிறது. அதன் தலைக்குமேலாக ஐந்துதலைநாகமொன்று படமெடுத்துக்கொண்டிருப்பது போலவும் கையில் சூலாயுதத்துடன் நடனமாடுவதுபோலவும் தோற்றமளிக்கின்றது. அதைச்சிலர் வேட்டுவச்சியின்சிலை என்றுகருதுகின்றனர். அச்சிலைக்கெதிரே வடபுறமுள்ள தூணில் ஒரு வேடுவன் பறவை, குரங்கு, வலை முதலியவற்றை வைத்துக்கொண்டு நிற்பதுபோல இருக்கிறது. ஒவ்வொரு சிலையும் 8 அடி உயரத்துடன் மிகக்கம்பீரமான தோற்றத்துடன் விளங்குகிறது. இவ்வாறு சன்னிதிக்குள் நுழையும் வாயிலில் இவ்விருசிலைகளையும் அமைத்ததற்கு ஒரு காரணமு முண்டு. ஒருகாலத்தில் கொடிய பாவங்களைச் செய்த மாபாவிக்கு நற்கதிகொடுக்க, சோமசுந்தரப்பெருமானும் மீனாட்சியம்மையும் வேடன், வேட்டுவச்சி உருக்கொண்டு கோயில்வாயிலில் இருந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. ஆகவே எத்தகைய பாவங்களைச் செய்தோரும் அதற்காக மனம் வருந்திநம்பிக்கையுடன்கோயிலுக்கு வருவார்களேயானல் சோமசுந்தரப் பெருமானும் மீனாட்சியம்மையும் அவர்கட்கு அருள்பாலிப்பார்கள் என்பதை உணர்த்தவே அச்சிலைகள் அவ்விடத்தில் அமைக்கப்பெற்றுள்ளன மீனாட்சிநாயக்கர் மண்டபத்தின் மேல்விட்டத்தில் திருவாச்சிக்கு முன்பாக உள்ள மத்தியப் பகுதியில் பன்னிரண்டு இராசிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஆதியில் இம்மண்டபத்தின் நடுவே 20 அடி அகலமுள்ள பாதைக்கு இரு பக்கங்

களிலும் கோயில் யானைகள், ஒட்டகங்கள், காளைகள் முதலியன கட்டப்பெற்றிருந்தன. இப்பொழுது வடக்கு வரிசையில் பூக்கடைகளும் தெற்கு வரிசையில் விளையாட்டுப் பொருள்கள்விற்கும் கடைகளும் வளையற்கடைகளும் இருக்கின்றன. மண்டபத்தின் மேற்குக்கோடியில் வலது புறமும் இடதுபுறமும் இரு அறைகள் உள்ளன. அவற்றில் கோயில் விருது, குடை, சுருட்டி முதலியன வைக்கப்பெற்றிருக்கின்றன. 30 அடி உயரமுள்ள இம்மண்டபத்தில் நுழைந்ததும் மேற்குக்கோடியில் 25 அடி உயரமுள்ள 1008 விளக்குகளைக்கொண்ட பித்தளை உலோகத்தாலான திருவாச்சி, அனைவர் கண்களையும் கவரும். இம் மண்டபம் கி.பி. 1707-இல் சமுகம் மீனாட்சிநாயக்கர் என்பவரால் கட்டப்பெற்றது. இவர் விசயரெங்க சொக்கநாத நாயக்கரின் பிரதானிகளில் ஒருவராவார். மேற்கூறிய பித்தளைத் திருவாச்சி மருதுபாண்டியரால் வைக்கப்பெற்று இன்றும் சிவகங்கை அரசைச் சேர்ந்த அறநிலையத்தாரால் அவ்விளக்குகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

1960-63 திருப்பணியில் இம்மண்டபத்தின் உட்புறம் முழுவதும் வண்ணச் சித்திரங்கள் வரையப்பெற்றுத் தூண்கள் சுத்தம் செய்யப்பெற்றுள்ளன, அதனால் மண்டபம் மிகப் பொலிவுடன் விளங்குகிறது.

### சித்திரக் கோபுரம்

மீனாட்சிநாயக்கர் மண்டபத்தினின்றும் கோயிலுக்குள் நுழையும் வாயிலில் ஏழுநிலைகளையுடைய கோபுரம் ஒன்றிருக்கிறது. இதுவே அம்மன்சன்னிதியில் பெரிய



பொற்றாமரையும் சித்திரக்கோபுரமும்
(பக்கம் 152, 154)



திருக்கலியாண மண்டபம்

(பக்கம் 177)

கோபுரமாகும். ஆடிவீதியில் யானைகட்டுமிடத்திற்கு முன்நின்றோ அல்லது பொற்றாமரைக்கு மேற்குக் கரையில் நின்றோ பார்த்தால்தான் இக்கோபுரம் இருப்பது தெரியும். இதில் மிகவும் அரிதான சுதை வேலைப்பாடுகளுள்ள சிலைகள் மிக்கஅழகுடன் அமைக் கப்பெற்றிருப்பதால் இதற்குச் 'சித்திரக்கோபுரம்' எனப் பெயர் ஏற்பட்டது. இக்கோபுரத்தின் உயரம் 117 அடி; அடித்தளம் 38 அடி அகலமும், 78 அடி நீளமும் உடையது. இதில் 730 சுதைகள் உள்ளன. இதைத் தளவாய் அரிய நாதமுதலியாரின் குமாரர் காளத்தியப்ப முதலியார் கி. பி. 1569-இல் கட்டினார்.

1960-63-இல் நடைபெற்ற திருப்பணியில் இக் கோபுரத்திலிருந்த சுதைகள் முழுவதும் பழுது பார்க்கப் பெற்று வண்ணம் தீட்டப்பெற்றன.

## முதலிப்பிள்ளை மண்டபம்

சித்திரக்கோபுரத்தை அடுத்து 25 அடி அகலமும் 60 அடி நீளமும் உள்ள ஒருமண்டபம் உள்ளது. அதனை முதலிப்பிள்ளை மண்டபம், முதலிமண்டபம், இருட்டு மண்டபம் என்று பலவாறு அழைப்பர். இம்மண்டபத் தின் இருபுறமும் சிற்பவேலைப்பாடுகள் நிறைந்த அழ கான சிலைகளையுடைய தூண்கள் இருக்கின்றன. அத் தூண்களில் உள்ள சிலைகளனைத்தும் புராணவரலாறு ஒன்றைக்குறிப்பனவாகும். தாருகாவனத்து முனிவர் களின் பத்தினியர், பிச்சாடனர்வடிவில்வந்த சிவபெரு மானிடம் மோகம் கொண்டனர். காமவேட்கைபால் அவர்கள் உடைநெகிழத் தம்மைமறந்து அங்குநின்றனர்.

20

இங்கிலையிலுள்ள பெண்களைச் சித்திரிக்கும் சிற்பமும் கலைத்திறன் மிகுந்ததாக அமைந்துள்ளது. பிச்சாடனர் சிற்பமும் மிக அழகாக அமைந்துள்ளது. இம்மண்டபத்தைக் கி. பி.1613-இல் கட்டிய கடந்தைமுதலியாரின் சிலையும் அங்குள்ளது. விநாயகர், சுப்பிரமணியர் சிலைகளும் அங்கு வழிபாட்டிற்காகவைக்கப்பெற்றுள்ளன.

1960-63 திருப்பணியில், இதுவரை இருட்டு மண்டபமாக இருந்துவந்த இதனை மாற்றும்வகையில் ஒளியும் காற்றும் உள்ளே புகும்வண்ணம் வடபுறத்தில் மண்டப நீளத்திற்குச் சுவரை இடித்துச் சன்னல்கள் வைக்கப்பெற்றுள்ளன.

### பொற்றாமரைக் குளம்

முதலிப்பிள்ளைமண்டபத்தைத் தாண்டி உள்ளே சென்றால், கண்டோர்மனத்தைக் கொள்ளைகொள்ளும் ஒரு காட்சியை அங்குக்காணலாம். 165 அடி நீளமும் 120 அடி அகலமுமுடைய நீண்ட சதுரவடிவில் நான்குபுறமும் கருங்கற்களாலான அழகான படிக்கட்டுகளையுடைய பொற்றாமரைக்குளமும் அதன் தென்மேற்கு மூலையில் வெளிப்பிரகாரத்திலுள்ள கம்பீரமான தெற்குக்கோபுரமும் காட்சியளிக்கின்றன. மதுரைக்கோயிலை வெளியிடங்களுக்கு அறிமுகப்படுத்தும் புகைப்படங்களில் பெரும்பாலானவை இக்காட்சியைக் காட்டுவனவாகவே இருக்கும்.

பொற்றாமரைக் குளத்தைச்சுற்றி நான்கு கரைகளிலும் நடைபாதை மண்டபங்களிருக்கின்றன. வடகரையிலுள்ளமண்டபம் அம்மன் சன்னிதிக்கு நேராக அமைந்துள்ளது. இரண்டு பத்திகளையுடைய இம்மண்டபத்தி

லுள்ள தூண்களில் சங்கப்புலவர்களின் உருவங்கள் செதுக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு புலவரின் கையிலும், ஏடும் எழுத்தாணியும் இருக்கின்றன. கடைச்சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரில் இருபத்து நான்கு புலவர்களின் உருவங்களே அங்குக் காணப்படுகின்றன. இம்மண்டபத்தின் நடுவில், பொற்றாமரைக் கரையிலுள்ள தூண்கள் இரண்டில், ஆதியில் இக்கோயிலையும் மதுரை நகரையும் அமைத்த குலசேகரபாண்டியனின் உருவம் கிழக்குமுகமாகவும், அதற்கெதிரில், கடம்பவனத்தில் சிவலிங்கமூர்த்தியைக்கண்டு பாண்டியனுக்குரைத்த தனஞ்சயனின் உருவம் மேற்குமுகமாகவும் இருக்கின்றன.

இறைவனின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் சித்திரிக்கும் வண்ணப்படங்கள் பலகைகளில் எழுதப் பெற்றுப் பொற்றாமரையின் வடக்குக்கரை, கிழக்குக்கரை மண்டபச்சுவர்களில் பொருத்தப்பட்டுள்ளன. வடக்குப் புறச்சுவரின் மேல்பகுதியில் சுவாமி, அம்மன்கோயில் களின் இரண்டுமாதிரிச் சித்திரங்கள்வண்ணமுறத்தீட்டப் பெற்றுள்ளன. இப்படங்கள் 1894-ஆம் ஆண்டில் எழுதப் பெற்றவை. ஆனால் அதற்குமுன் அப்படங்கள் சுவரிலேயே எழுதப்பட்டிருந்தன. அவைகள் அப்படியே இருக்க, அவற்றின்மேல் இப்பலகைப்படங்கள்பொருத்தப்பெற்றுள்ளன கீழ்புறமண்டபத்தின் நடுவிலிருந்து மேற்குநோக்கிப்பார்த்தால் எட்டுப்பெரிய, சிறிய கோபுரங்களுக்கு இடையே சுவாமி, அம்மன்கோயில்களின் தங்க விமானங்கள் இரண்டும் தெரியும். அத்தங்கவிமானங்களுக்குக் கீழேதான் சுவாமி, அம்மன் கருவறைகள் இருக்கின்றன. பொற்றாமரைக் கிழக்குக்கரையில் நின்று, அவ்விரு விமானங்களை

யும் பார்க்குமிடத்தின் மேல்முகட்டில் நால்வர்படங்கள் வரையப்பெற்றுள்ளன. அவை 1960-63 திருப்பணியின் போது வரையப்பெற்றவையாகும். தெற்குக்கரை மண்டபத்தில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயற்றிய 1330 திருக்குறட்பாக்களும் சலவைக்கற்களால் செதுக்கப் பெற்றுவரிசையாகச் சுவரில் பொருத்தப்பெற்றுள்ளன. இத்திருக்குறட் கல்வெட்டுகளும், பொற்றாமரைக்குளத்தில்மிதக்கவிடப்பட்டிருக்கும் பொன்னாலான தாமரையும் திருப்பனந்தாள் ஆதீனத்தலைவர் அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகளின் அன்பளிப்பாகும்.

இப்பொற்றாமரையின் வடக்குப்புறமண்டபமும் படிக்கட்டுகளும் கி. பி. 1562-இல் பெருமாள் என்பவரால் கட்டப்பெற்றன. கிழக்குப்புற மண்டபமும் படிக்கட்டுகளும் கி.பி.1573-இல் குப்பையாண்டி என்பவரால்கட்டப் பெற்றன. தெற்குப்புற மண்டபமும் படிக்கட்டுகளும் கி. பி. 1578-இல் அப்பன்பிள்ளை என்பவரால் கட்டப் பெற்றன.

1960-63 திருப்பணியில் பொற்றாமரைச்சுற்று மதில்களின் மேல்விதானத்தில் வண்ணக்கமலச் சித்திரங்கள் வரையப்பெற்றுள்ளன. மேல்தளத்தில் நான்குபுறமும் கைபிடிச்சுவர்கள் எழுப்பப்பெற்றுள்ளன.

### ஊஞ்சல் மண்டபம்

பொற்றாமரைக்குளத்தை வலமாகச் சுற்றி அம்மன் சன்னிதிக்குப் போகும் வழியில் ஊஞ்சல்மண்டபம் இருக்

கின்றது. இம்மண்டபத்தின் மேற்குப்புறத்தில் கருஞ் சலவைக் கல் தூண்களையுடைய ஊஞ்சல்மேடை இருக் கிறது. இங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையிலும் சுவாமி, அம்பிகையின் சுவர்ண விக்கிரகங்களை ஊஞ்ச லில் வைத்து வழிபடுவார்கள். மற்ற நாட்களில் ஊஞ்சல் மேடைக்கு முன், கோயில் ஓதுவாமூர்த்திகள் அமர்ந்து தமிழ்மறையினை ஓதுவார்கள். இம்மேடைக்கு மேலுள்ள சுற்றுவிட்டங்களில் திருமுருகனின் ஆறுபடை வீடுகளும் சித்திரிக்கப்பெற்றுள்ளன. இச்சித்திரங்களும் மண்டப விதானத்திலுள்ள சித்திரங்களும் 1960-63 திருப்பணி யில் புதுப்பிக்கப்பெற்றனவாகும். இவ்வூஞ்சல் மண்டபத் தின் கிழக்குப்பகுதி பொற்றாமரையின் மேற்குக்கரையை ஊடுருவிச்சென்று ஓர் அழகிய நிலமாடமாக அமைந்துள் ளது. இதன் விதானத்தில் மங்கம்மா காலத்தில் வரை யப்பெற்ற வண்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. அங்கு மங்கம்மா உருவமும், அவருடைய அமைச்சர் இராமப் பய்யனின் உருவமும், பேரன் விசயரங்கசொக்கநாதரின் உருவமும் இருப்பதைக் காணலாம். இம்மண்டபத்தைக் கி. பி. 1563-இல் செட்டியப்ப நாயக்கர் என்பவர் கட்டிய தாகத் தெரிகிறது.

## கிளிக்கூட்டு மண்டபம்

ஊஞ்சல் மண்டபத்தையடுத்து அம்மன் சன்னிதி வாயி லுக்கு முன்னுள்ள அழகான மண்டபமே கிளிக்கூட்டு மண்டபமாகும். இதனைச் சங்கிலி மண்டபம் என்றும் கூறுவர். இங்கு ஒரு பெரிய கூண்டில் கிளிகளை வளர்ப்ப தால் கிளிக்கூட்டு மண்டபம் என்று இதற்குப் பெயர்

ஏற்பட்டது. கோலாட்டுத் திருவிழா நடை பெறும்பொழுது பள்ளிச் சிறுமியர் இம்மண்டபத்தில் வண்ணக் கயிறுகளைத் தொங்கவிட்டு அவற்றைப் பிடித் துக்கொண்டு கோலாட்டம் ஆடுவர். அக்கயிறுகள் அழகாகச் சங்கிலிபோல் தாமே பின்னிக்கொள்ளும் முறையில் அச்சிறுமியர் சுற்றிச்சுற்றி வருவர். அதனல் அம்மண்டபத்திற்குச் சங்கிலிமண்டபம் என்ற பெயர் ஏற் பட்டது. இப்பொழுது இவ்விளையாட்டு நடைபெறுவ தில்லை. இம்மண்டபத்திலேயே கோயிலின் பிரதான சித்திவிநாயகர் சன்னிதியும், குமரர் சன்னிதியும் இருக் கின்றன. இங்குள்ள 28 தூண்கள் அனைத்தும் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தனவாகும். பஞ்சபாண்ட வர்களாகிய தருமர், பீமன், அருச்சுனன், நகுலன், சகா தேவன் ஆகியோர் உருவங்களும் அவர்தம் மனைவி திரௌபதியின் உருவமும் வாலி, சுக்கிரீவன் ஆகியோர் உருவங்களும் அங்குள்ள தூண்களில் இருக்கின்றன. அம் மன்சன்னிதிக்கு நேரில் பலிபீடத்திற்கு இருபுறத்திலு முள்ள தூண்களில் பீமனும் மனிதமிருகமும் ஒருவரோ டொருவர் கதாயுதத்தால் போரிடும் பாணியில் அமைக் கப்பெற்றிருக்கின்றன. அவை மிக்க அழகான தோற்றத் துடன் விளங்குகின்றன. இவ்வுருவங்களை முக்கியமான இவ்விடத்தில் அமைத்தவர்களின்நோக்கம், மக்கள் நடுவு நிலைமை தவறக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்து தற்கேயாம் என்று எண்ணவேண்டியிருக்கிறது. மனித மிருகத்தின் ஆட்சிக்குட்பட்ட காட்டிற்குள் வருவோர் எவரேனும் பிடிபட்டால் அம்மிருகத்திற்கு உரியவராக வேண்டும் என்பது நியதி. அக்காட்டினுள் ஒருசமயம் பீமன் வழிதவறிச் சென்றுவிட்டான். மனிதமிருகம் அவனைத் துரத்திப்பிடிக்கமுயன்றது. பீமனும் ஓடிக்காட்

டின் எல்லைக்குவெளியே ஒரு காலை வைத்துவிட்டான். ஆனால் மற்றொருகால் எல்லையின் உட்புறமிருக்கும் பொழுதே மனிதமிருகம் அவனைப் பிடித்துவிட்டது. அதனால் பீமன் தனக்கு அடிமையாக வேண்டுமென்று அது கூறியது. பீமன், தான் காட்டைத் தாண்டி விட்டதால் அவ்வாறு அடிமையாக வேண்டுமென்பது நியாயமில்லை எனக் கூறினான் இருவரும் முடிவில் தருமரிடம் தங்கள் வழக்கைக்கூறி, அவர் முடிவை ஏற்றுக்கொள்வோம் என்று சென்றனர். அவர்கள் வழக்கைக்கேட்ட தருமர், பீமன் தன் உடன்பிறந்த தம்பியென்றும் பாராது நடுநிலைமையுடன் அவனுடைய பாதி உடல் மனிதமிருகத்தைச் சேரவேண்டுமெனக் கூறிவிட்டார், தருமரின் இத்தகைய நடுநிலையைக்கண்டு மனிதமிருகம் வியந்து தன் உரிமையை விட்டுக்கொடுத்து விட்டது.

இம் மண்டபத்தின் தூண்களுக்கு மேலுள்ள சுற்றுவிட்டத்தில் இறைவனின் திருவிளையாடல்கள் அறுபத்து நான்கும் சிற்பங்களாகக் கருங்கற்களில் செதுக்கப்பட்டுள்ளன. இவைகள் உருவத்தில் சிறியனவாக இருந்தாலும் மிகுந்த கலையுணர்வுடன் செய்யப்பெற்றுள்ளன. மண்டபத்தின் மேல்விதானத்தில் விநாயகர்முதல் இந்து சமய தெய்வங்களின் பலவிதத்தோற்றங்கள் வண்ணச் சித்திரங்களாக வரையப்பெற்றுள்ளன. அம்மன்சன்னிதிக்கு நேரில் மீனாட்சியம்மனின் திருக்கலியாணச்சித்திரம் அனைவர் கண்களையும் கருத்தினையும் கவரும் வண்ணம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1960-63 திருப்பணியில் இச்சித்திரங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பெற்றன. முன்னிருந்த சித்திரங்கள் நீர் வண்

ணத்தில் எழுதப்பெற்றிருந்தன. புதுப்பிக்கும்பொழுது அவைகள் எண்ணெய் வண்ணங்களால் (Oil Paint) தீட்டப்பெற்றிருக்கின்றன. இம்மண்டபம் கி.பி. 1623-இல் அபிசேகபண்டாரம் என்பவரால் கட்டப்பெற்றது என்று தெரிகிறது. இதிற் காணப்படும் சில தூண்கள், கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலின் முன்மண்டபம் இடிபட்டபோது அங்கிருந்து கொண்டுவரப்பெற்றவை எனக் கருதப்படுகின்றது.

### அம்மன்கோயில்

கிளிக்கூட்டு மண்டபத்திலிருந்து ஒரு சிறு கோபுர வழியாக அம்மன் கோயிலுக்குச் செல்லவேண்டும். அவ் வாயிலின்மேலுள்ள கோபுரம் 40 அடி உயரமும் 3 நிலைகளும் உடையதாகும். அதன் அடித்தளம் 27 அடி நீளமும் 20 அடி அகலமுமுடையது. இதில் 46 சுதைகள் உள்ளன: பொற்றாமரையின் கிழக்குக்கரையிலிருந்து மட்டுமே இக் கோபுரத்தைக் காணமுடியும்! இக் கோபுரம் கி. பி. 1227-இல். வேம்பத்தூர் ஆனந்தத் தாண்டவநம்பி என்பவரால் கட்டப்பெற்றது. அதனால் இக்கோபுரத்தை 'வேம்பத்தூரார் கோபுரம்' என வழங்குகின்றனர். 1960-63 திருப்பணியில் இக்கோபுரமே முதன்முதலாகப் பழுதுபார்க்கப் பெற்றுப் பரிசோதனைக்காக வண்ணந் தீட்டப்பெற்றது. இக்கோபுர வாயிலின் உட்புறம், இரண்டு அழகிய ஓவியங்கள் பலகையில் எழுதப்பெற்றுப் பொறுத்தப்பட்டுள்ளன. ஒன்று, ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் திருமணக்கோலத்தையும், மற்றொன்று ஸ்ரீ மீனாட்சி முடிசூட்டுங்கோலத்தையும் குறிப்பனவாகும். இந்துக்

களல்லாதோர் இக்கோபுரவாயிலைக் கடந்து உள்ளே நுழைய ஒப்புதல் அளிக்கப்படுவதில்லை.

இவ்வாயிலின் வழியாக உள்ளே சென்றால் தங்கக் கவசம் இடப்பெற்ற கொடிமரத்தைக் காணலாம். அஃது இருக்குமிடம் அம்மன் கோயிலின் இரண்டாம் பிரகார மாகும். இப்பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் திருமலை நாயக்கரின் சிலையொன்று அவர்தம் இரு மனைவியருடன் மேற்கு நோக்கி இருப்பதைக் காணலாம். அச்சிலைக்கு இடதுபுறம், தெற்குப் பிரகாரத்தில், திருமலைநாயக்கரின் கட்டளையறை உள்ளது. அக்கட்டளைகள் தமது நேர்பார் வையிலேயே நடைபெறல் வேண்டும் என்ற குறிப்புட னேயே அச்சிலை அங்கு அமைக்கப்பெற்றதாகும். அப்பிர காரத்தின் மேற்குக் கோடியில் கொலுமண்டபம் இருக் கின்றது. சலவைக் கற்களாலான இவ்வழகிய மண்டபத் தில், ஆண்டுதோறும் புரட்டாசித் திங்களில் நவராத்திரி விழாவின்போது நாள்தோறும் அம்மனின் கொலுக் காட்சி நடைபெறும். இம்மண்டபத்தை வலமாகச் சுற்றி மேற்குப் பிரகாரத்திற்குவந்தால், கோபுரவாயிலொன்று தென்படும். அது 'அம்மன் கோயில் மேற்கு ஐந்துநிலைக் கோபுரத்'தின் வாயிலாகும். அதன் உயரம் 64 அடி; அடித்தளத்தின் நீளம் 50 அடி; அகலம் 28 அடி. மேற்கு ஆடிவீதியினின்றும் இக்கோபுரத்தைக் காணலாம். 1960-63 திருப்பணியில் இக்கோபுரத்திலுள்ள 228 சுதை களும் திருத்தி அமைக்கப்பெற்றுப் பிறபகுதிகளும் பழுது பார்க்கப்பெற்று முழுதும் வண்ணம் பூசப்பெற்றன. மேலும் பல ஆண்டுகளாகச் சுவர் எழுப்பப்பெற்று மூடப் பெற்றிருந்த இக்கோபுர வாயில் திறந்துவிடப்பெற்றுப் புதிய கதவுகளும் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

கோபுரத்தின் கற்படைகளில் உடைந்துபோன பகுதிகள் சிமெண்டினுல் திருத்தம் செய்யப்பெற்றன; பாதுகாப்புக்காக ஆடிவீதியில் கம்பிக்கிராதிகளும் போடப்பெற்றன.

பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் கிழக்கு நோக்கிக் கூடற்குமரர் சன்னிதி உள்ளது. அச்சன்னிதியில் அருணகிரிநாதர் இத்தலத்திற் பாடிய திருப்புகழ்ப் பாக்கள், 1960-இல் கல்வெட்டில் செதுக்கிவைக்கப்பெற்றுள்ளன. மதுரைத் திருப்புகழ்ச் சபையார் ஒவ்வொரு திங்களும் கார்த்திகை நாளன்று இங்கு விசேட அபிடேகங்கள் நடத்திவருகின்றனர்.

வடக்குப் பிரகாரத்தில் கிழக்கு மூலையில் மேற்தளத்திலிருந்த சில பாவுகற்களும் உத்திரக் கல் ஒன்றும் உடைபட்டு நீண்ட நாட்களாக முட்டுக்கொடுக்கப்பெற்றிருந்தன. 1960-63 திருப்பணியின்போது அவ்வுடைந்த கற்களையும் மற்றும் பல பழுதான கற்களையும் நீக்கிவிட்டுப் புதிதாகச் செம்மைப்படுத்தியுள்ளனர். வடகிழக்கு மூலையில், வடபுறச் சுவரில், சுவாமி கோயிலின் இரண்டாம் பிரகாரத்திற்குச் செல்லும் வகையில் புதிய வாயிலொன்று 1956-ஆம் ஆண்டில் அறநிலைய ஆணையர் உத்தண்டராம பிள்ளை அவர்கள் முயற்சியால் திறக்கப்பெற்றுள்ளது.

இப்பிரகாரத்தைச் சுற்றி, முன் கூறப்பெற்ற அம்மன் சன்னிதிக் கம்பத்தடிக்கு மீண்டும்வந்து ஆறுகால் பீடத்தின் வழியாக உள்ளே செல்ல வேண்டும். இவ் ஆறுகால் பீடம், வரலாற்றுப் புகழ்பெற்றது. இம்மண்டபத்திலேயே ஸ்ரீ குமரகுருபர அடிகள், தாம் பாடிய மீனாட்சி

யம்மை பிள்ளைத் தமிழைத் திருமலைநாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றஞ் செய்தார். அப்போது மீனாட்சியம்மையே ஒரு பெண்குழந்தை உருவத்தில் ஆங்குத் தோன்றி அருள் செய்தனள். மதுரையையாட்சி புரிந்த நாயக்க மன்னர்கள் திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்ட காலத்திலுங்கூட, இம்மண்டபத்திலேயே செங்கோல் வாங்கி ஆட்சி செலுத்தினர். மீனாட்சியம்மனுக்கு ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் நடைபெறும் முடிசூட்டுவிழாவும் இம்மண்டபத்திலேயே நடைபெற்றுவருகின்றது.

இம்மண்டபத்திற்காணப்பெறும் செப்பினாலான இரு அழகிய துவாரபாலகர்களின் சிலைகள் திருமலை நாயக்கரால் செய்யப்பெற்றவையாகும். இச்சிலைகட்குப்பின்புறமுள்ள சுவர்களில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் சில பாடல்கள் கல்லில் பொறித்துவைக்கப்பெற்றுள்ளன. இதனைக் கடந்து உள்ளே சென்றால் அம்மன்கோயில் மகாமண்டபம் இருக்கின்றது. இதிலுள்ள தூண்களும் மேல்விட்டங்களும் அழகான சிற்பவேலைப்பாடுகள் உடையன. முழுதும் கல்லாலான சிறுமணியொன்றும் மேலே தொங்குவதைக் காணலாம். இம்மகாமண்டபத்தின் மேற்குப்பகுதியில் மீனாட்சி அம்மையின் அர்த்தமண்டபமும் கருவறையும் உள்ளன. மகாமண்டபத்தில் கம்பித்தடுப்புகள் வரிசையாக அமைக்கப்பெற்றுள்ளன. இங்கிருந்து, கருவறையில், நின்ற திருக்கோலத்துடன் அருள்பாலிக்கும் கண்களுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கும் அங்கயற்கண்ணியின் அழகிய திருவுருவத்தைக்கண்டுவழிபடலாம்.

அம்மனைச் சுற்றிவரும் முதற்பிரகாரம் இம்மண்டபத்தி லேயே தொடங்கி இதிலேயே முடிவு பெறுகின்றது. இப்பிரகாரத்தின் தென்மேற்கில் விநாயகர்கோயிலும் வடமேற்கில் முத்துக்குமரர்கோயிலும் அமைந்துள்ளன. இவ்விரு கோயில்களும் மிகவும் பழுதடைந்திருந்தமையா லும், மேற்சுவர்கள் மண்ணால் கட்டப்பெற்றிருந்தமை யாலும், அவைகள்அனைத்தையும் இடித்துவிட்டு 1960-63 திருப்பணியில் கருங்கற்களினால் மண்டபங்களைப் புதிதாகக் கட்டியுள்ளனர். மேலும் மகாமண்டபத்தி லுள்ள பள்ளியறையும் செப்பனிடப்பெற்று உட்புறம் சலவைக் கல்லினால் அமைக்கப்பெற்றுள்ளது. இவ்விரண் டாம் பிரகாரமுட்பட அம்மன்கோயிலின் நீளம் 225 அடி, அகலம் 150 அடி ஆகும்.

பள்ளியறைக்குக் கிழக்கே இரண்டாம் பிரகாரத்துக் குச் செல்வதற்கெனப்புதிய வாயிலொன்று 1960-63 திருப்பணியில் திறக்கப்பெற்றுள்ளது. அவ்விடத்தில் வாயில் அமைக்கலாமெனச் சில சிற்பிகளும், அமைக்கக் கூடாதெனச் சில சிற்பிகளும் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் பொதுமக்களின் நலனைமுன்னிட்டு ஒருவாயில் திறப்பது பொருத்தமெனத் திருப்பணிக்குழுத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள் கருதினர். முடிவில் மீனாட்சி அம்மையின் உத்திரவுகேட்டுச் செய்ய லாமென எண்ணி, அம்மையின் திருமுன்னர்ப் பூக்கட்டிப் பார்த்ததில், வாயில் திறப்பதற்குரிய பூவே கிடைத்தது. அதன்பிறகே அவ்விடத்தில் வாயில் திறக்கப்பெற்றது.

**சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரம்**

அம்மன் கோயிலிலிருந்து சுவாமி கோயிலுக்குச்

செல்ல வேண்டுமானால், கிளிக்கூட்டு மண்டபத்திற்கு வந்து, அம்மண்டபத்தின் வடகோடியிலுள்ள கோபுர வாயில் வழியாகச் செல்ல வேண்டும். அக்கோபுரத்தை ''நடுக்கட்டுக்கோபுரம்'' என்று கூறுவர். இது, சிராமலைச் செவ்வந்திமூர்த்தி செட்டியாரால் கி. பி. 1559-இல் கட்டப்பெற்றது. ஐந்து நிலையுள்ள இக்கோபுரத்தின் உயரம் 69 அடி. அடித்தளம் 44 அடி நீளமும் 33 அடி அகலமும் உடையது, இக்கோபுரத்திலுள்ள 112 சுதைகளும் 1960-63 திருப்பணியில் புதுப்பிக்கப்பெற்று வண்ணம் பூசப்பெற்றுள்ளன. இக்கோபுரத்தின் கற்படையில் மிக அழகான சிற்பங்கள் காணப்படுகின்றன. இதனைத்தாண்டி உள்ளேசென்றால் 8 அடி உயரமுள்ளமுக்குறுணிப் பிள்ளையார் உருவத்தைக் காணலாம். இது, திருமலை நாயக்கர் வண்டியூர்த் தெப்பக்குளத்தைத் தோண்டுங் காலத்துக் கண்டெடுக்கப்பெற்றதெனக் கூறுவர். ஆனால், இவ்விநாயகரைப் புதிதாகப் பிரதிட்டை செய்தவர், 'கந்தப் பொடிபெத்து செட்டி' எனத் திருவாலவாயுடையார் கோயிற்றிருப்பணிமாலை கூறுகின்றது. (பாடல் 88) விநாயக சதுர்த்தியன்று முக்குறுணியரிசியால் ஒரே கொழுக்கட்டை செய்து இவருக்குப் படைக்கின்றனர். ஆதலால் இவர், 'முக்குறுணிப்பிள்ளையார்' எனப்பட்டார். இவ்விநாயகர், சுவாமிகோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் தென்புறமாக உள்ளது. இப்பிள்ளையார் சன்னிதிக்கு நேராகத் தெற்குக் கோபுரவாயில் அமைந்துள்ளது.

இவ்விரண்டாம் பிரகாரத்தின் வெளிச்சுற்றுமதில் 'சுந்தரபாண்டியன் மதில்' எனப்படும். உட்சுற்றுமதில்

'கபாலி மதில்' எனப்படும். வெளிச்சுற்று மதில் 420 அடி நீளமும் 310 அடி அகலமும் உடையது; கபாலி மதில் 250 அடி நீளமும் 156 அடி அகலமும் உடையது. இப்பிர காரம் கிருஷ்ணவீரப்பநாயக்கர், அபிசேகபண்டாரம் ஆகியோரால் கட்டப்பெற்றது. இப்பிரகாரத்தில் வல மாகவந்தால் மேல்புறம் ஐந்துநிலைக்கோபுரவாயில் ஒன் றைக் காணலாம். இதனைக் கி. பி. 1374-இல் மல்லப்பன் என்பவர் கட்டுவித்தார். இதன் உயரம் 72 அடி; அடித் தளநீளம் 48 அடி; அகலம் 31 அடி. இதில் 340 சுதைகள் உள்ளன. 1960-63 திருப்பணியின்போது இது புதுப்பிக் கப்பெற்றது. சுதைகள் பளபளப்பில்லாத வண்ணம் பூசப்பெற்றுப் பொதுமக்களின் கருத்தினை அறிவதற்காக வைக்கப்பெற்றிருந்தன. முடிவில் பெரும்பான்மையோர் கருத்தின்படி எண்ணெய் வண்ணம் (Oil Paint) பூசப் பெற்று, அடைபட்டுக்கிடந்த கோபுரவாயிலும் திறக்கப் பெற்றுக் கதவுகள் போடப்பட்டன; பாதுகாப்பிற்காக வெளியில் கம்பிக்கிராதிகளும் போடப்பெற்றுள்ளன. இக்கோபுரம் மேலஆடிவீதியிலுள்ள ஒன்பதுநிலைப் பெரிய கோபுரத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இதைக் கடந்து சென்றால் மூலையில் சங்கத்தார்கோயில் உள்ள தைக் காணலாம். அங்கு நாற்பத்தொன்பது கடைச் சங்கப் புலவர்களின் திருவுருவங்கள் உள்ளன.

வடக்குப் பிரகாரத்தின்வடபுறம் உள்ளமண்டபத்தில் 'கரியமாணிக்கப் பெருமாள் கோயில்' இருந்ததாகச் சிலர் கூறுவர். இப்போது அம்மண்டபத்தில் வாரந்தோறும் கூட்டுவழிபாடு நடைபெறுகின்றது. இம்மண்டபத்தை யொட்டி ஐந்துநிலைக்கோபுரமொன்று உள்ளது. இதனைக் கி. பி. 1560-இல் செவ்வந்திவேலப்ப செட்டியார்

கட்டுவித்தார். இதன் உயரம் 71 அடி; அடித்தளநீளம் 45 அடி; அகலம் 34 அடி. இதில் 184 சுதைகள் இருக்கின்றன. இக்கோபுரம் 'இடபக்குறியிட்டகோபுரம்' எனவழங்கப்பெறும். சோழனுக்காகக் கதவைத் திறந்துவிட்டுச் சொக்கநாதப் பெருமான், தமது இலச்சினையை இட்டார் எனத் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது (இதன் விரிவை இந்நூல் பக்கம் 65ல் காணலாம்.) இத் திருவிளையாடலைக் குறிக்கும் வகையில் இக்கோபுரத்தின் மேல்புற நிலையில் மேற்பகுதியில் இடப முத்திரைக் குறியும் கல்லில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். 1960-63 திருப்பணியில் இக்கோபுரம் முழுதும் செப்பனிடப்பெற்று வண்ணம் பூசப்பெற்றுள்ளது; புதிதாகக் கதவுகள் போடப்பெற்றுக் கம்பிக்கிராதிகளும் அமைக்கப்பெற்றுள்ளன. இது, தெற்காடிவீதித் தெற்குக் கோபுரத்திற்கு (மொட்டைக் கோபுரம்) எதிரில் அமைந்துள்ளது. இதிலும், கற்படையில் அழகான சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில், உயரமான பகுதியிலுள்ள மண்டபம் 'மண்டப நாயகம்' எனப்படும். நூறு கால்களையுடைய இம்மண்டபத்தில் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளனவாதலால், மண்டபங்களிலெல்லாம் சிறப்புடையது எனும் பொருள்பட 'மண்டப நாயகம்' எனும் பெயரைத் தாங்கி நிற்கின்றது. இம் மண்டபத்தில் நடராசர் திருவுருவச் சிலை அமைந்துள்ளது. இதனைக் கி. பி. 1526-இல் சின்னப்ப நாயக்கர் என்பார் கட்டுவித்தார். நடராசர் திருவுருவத்திற்கு நேர் எதிரில் அதாவது, இப்பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில்

ஞானசம்பந்தர் கோயில் உள்ளது. இக்கோயிலில் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், கூன்பாண்டியன், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் முதலியோர் திருவுருவச் சிலைகள் அமைந்துள்ளன. இம்மண்டபத்தைக் கட்டுவித்தவர் கிருஷ்ணவீரப்ப நாயக்கராவார்.

## கம்பத்தடி மண்டபம்

மதுரைக் கோயிலில், பார்ப்போர் மனத்தைக்கொள்ளைகொள்ளும் வகையில் சிற்பங்கள் நிறைந்த இடம் 'கம்பத்தடி மண்டபம்' ஆகும். இஃது இரண்டாம் பிரகாரத்தில் சுவாமி சன்னதியில் உள்ளது. நந்திமண்டபம், பலிபீடம், தங்கக்கொடிக்கம்பம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள உயரமான எட்டுக்கருங்கல் தூண்களிலும், இறைவனின் பல்வேறுபட்ட தோற்றங்களைச் சிற்பங்களாக வடித்துள்ளனர். புகழ்பெற்ற மீனாட்சி திருமணக்கோலத்தைச் சித்தரிக்கும் சிற்பம், இங்கேதான் அமைந்துள்ளது. அதில் மணமகன் கோலத்தில் நிற்கும் சிவபெருமானின் கம்பீரமான தோற்றமும், மணமகள் கோலத்தில் நிற்கும் மீனாட்சியம்மையின் நாணமும் புன்சிரிப்பும் கொண்ட முகத்தோற்றமும், எத்தகையோர்தம் நெஞ்சையும் ஈர்க்க வல்லனவாய் அமைந்துள்ளன! பிற தூண்களிலும் சிறந்த வேலைப்பாடமைந்த சிற்பங்கள் இருக்கின்றன. தூணின் நாற்புறங்களிலும் சிற்பங்கள் அமைந்துள்ள பெருஞ்சிறப்பினை வேறெங்கும் காண்பது அரிது! திருமணச்சிற்பமுள்ள முதல் தூணில் திரிபுரம்எரித்தசிவனும் சோமசுந்தரரும் இருக்கின்றனர். வலப்புறமாக வந்தால், இரண்டாவது தூணில் மார்க்கண்டேயனுக்காகக் காலனைக்கொல்லும் காட்சி வெளிப்புறத்திலும், சுகஆசனர்



ஸ்ரீ மீனாட்சி சுந்தரர் திருமணம்
(கம்பத்தடி மண்டபம், பக்கம் 168)



கம்பத்தடி மண்டபம் (பக்கம் 168)

திருவுருவம் உட்புறத்திலும் உள்ளமை காணலாம். மூன்ருவது தூணில் நடராசரும்,காமதகனரும் உள்ளனர். நான்காவது தூணில் சந்திரசேகரர், காளைவாகனத்தில் சிவபெருமான், மாலடிகாணுச் சிவபெருமான், இராவணன் கயிலை தூக்கும் காட்சி-காணப்படுகின்றன. ஐந்தாவது தூணில் சக்கரதரர், ஏகபாதமூர்த்தி, ரிசபாரூடர், அர்த்தநாரீசுவரர், சங்கரநாராயணர் ஆகியோர் காட்சியளிக்கின்றனர். நான்கு, ஐந்து தூண்களிரண்டும் சன்னிதிக்கு நேர் எதிரில் இருப்பனவாகும். ஆருவது தூணில் சலந்திரஅனுக்கிரகர் வெளிப்புறத்திலும், தட்சிணுமூர்த்தி உட்புறத்திலும் உள்ளனர். ஏழாவது தூணில் வெளிப்புறம் யானைத்தோல்போர்த்திய சிவபெருமானும், உட்புறம் சண்டேசுவரர்க்கு மாலையிடும் சிவபெருமானும் உள்ளனர். எட்டாவது தூணில் பிச்சாடனர், உருத்திரர், கிராத-அர்ச்சுனர், சோமசுகந்தர் உள்ளனர். இதிலுள்ள உருத்திரரின் கையும், சூலாயுதமும் உடைபட்டுப்போயிருந்தன. 1960-63 திருப்பணியின்போது அவைகள் சிமெண்டினுல் புதிதாகச் செய்யப்பெற்று இணைக்கப்பெற்றுள்ளன. இவைகளைத்தவிரச் சிலதூண்களின் கீழ்புறத்தில் திருமாலின் தசாவதாரக்காட்சிகள் காணப்படுகின்றன. இத்தூண்களுக்கு உள்ளே அமைந்துள்ள நந்திமண்டபம், மிகவும் நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்டது. இதன் நான்கு தூண்களுக்கு மேலுள்ள, சிற்பவேலைப்பாடுகள் நிறைந்த பரப்புக்கல், ஒரே கல்லாலாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. அதன் மேற் கட்டப்பெற்றுள்ள விமானத்தின் சுதைவேலைகள் 1960-63 திருப்பணியில் புதுப்பிக்கப்பெற்றனவாகும்.

கி.பி. 1564-இல் கிருஷ்ணவீரப்பநாயக்கர் கொடிக் கம்பமண்டபத்தை அமைத்தார். பின்னர்க்கி.பி.1877-இல் ஏழுகோயில்நகரத்தார்கள், கோயில் திருப்பணியை மேற் கொண்டபோது, இம்மண்டபத்தைப் புதுப்பித்து இவ் வாறு சிறப்புறச் செய்தனர். இக்கம்பத்தடி மண்டபத் திற்குக் கிழக்கே வடபுறம் உள்ள இரண்டு தூண்களில் அக்கினி வீரபத்திரர், அகோரவீரபத்திரர் உருவங்களும் தென்புறம் உள்ள இரண்டு தூண்களில் ஊர்த்துவ தாண்டவர், வாதாடும் பத்திரகாளி உருவங்களும் மிகக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. சுவாமி கோயிலுக்குச் செல்லும் வழியில், தென்புறம் அனுக்ய விநாயகரும், வட புறம் பழனியாண்டவரும் உள்ளனர்.

## சுவாமிகோயில்

கம்பத்தடி மண்டபத்திலிருந்து சுவாமிகோயிலுக்கு நுழையும் வாயிலில் இருபுறங்களிலும் 12 அடி உயர முள்ள ஒரே கல்லாற் செய்யப்பெற்ற துவாரபாலகர் களின் சிலைகள் 4½ அடி பீடங்களின் மேல் வைக்கப் பெற்றுள்ளன. துவாரபாலகர்களுக்கருகே உள்ள இருபுறத் தூண்களில் ஐந்து தலை யுடைய சிவபெருமான் அம்மையுடன் வீற்றிருக்கும் காட்சி, ஐந்து தலையுடைய அம்மன் அமர்ந்திருக்கும் காட்சி-இவற்றைக் காணலாம். கோயிலுக்கு உள்ளே நுழையுந் தறுவாயில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணி வாசகர் ஆகிய நால்வர் சிலைகளையும் காணலாம். அடுத்து சுவாமி சன்னிதியின் மூன்று நிலைக்கோபுரம் இருக்கிறது. இதன் உயரம் 41 அடி. அடித்தளத்தின் நீளம் 31 அடி; அகலம் 18அடி, இதில் 36சுதைகள் இருக்கின்றன. இதனைக்

கி. பி. 1168-இல் கட்டுவித்தவர் குலசேகர பாண்டியனுவார். 1960-63 திருப்பணியில் இது புதுப்பிக்கப் பெற்றுள்ளது. இக்கோபுர வாயிலின் உட்புறம் அதிகார நந்தியும், சாமுண்டியும் உள்ளனர். உள்ளே நுழைந்ததும் எதிரில் ஆறுகால்பீடம் அமைந்துள்ளது. இங்குதான் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் அரங்கேற்றப்பெற்றது. இப்பீடத்தை நோக்கி எதிரே அமைந்துள்ள தூண்களில் பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாத முனிவரும் கை கூப்பி நிற்கின்றனர். இவ் ஆறுகாற் பீடத்திலுள்ள செப்பாலான துவாரபாலகர்கள், திருமலை நாயக்கரால் அளிக்கப்பெற்றவையாகும். சுவாமி கோயிலுக்கு இதுவே முதற்பிரகாரமாகும். இதனை வலமாகச் சுற்றிவந்தால், வலப்புறம் திருவிளையாடல்களிற் பல, வண்ணச் சுதைகளில் அமைக்கப்பெற்றுள்ளன. அவ்விடத்தில் முன்னர் இருந்தவை, அத்துணைப் பொலிவுடையனவாக இன்மையால், 1960-63 திருப்பணியின்போது முற்றிலும் கை தேர்ந்த சிற்பிகளைக்கொண்டு செப்பஞ்செய்யப்பெற்றதுடன், விடுபட்ட பல திருவிளையாடல்களும் புதிதாகச்செய்யப்பெற்றுள்ளன. இவைகளனைத்தும் சுவாமி கோயில் மகாமண்டபத்தைச் சுற்றியுள்ள சுவரில் வெளிப்புறம் உள்ளன.

இப்பிரகாரத்தின் தென்புறச் சுற்றுமண்டபத்தில் அறுபத்துமூவர் திருவுருவங்களும், நாமகள் சன்னிதியும் இருக்கின்றன. தென்மேற்கு மூலையில் உற்சவமூர்த்தி கோயிலும், வடமேற்கு மூலையில் காசிவிசுவநாதர் கோயிலும், பிச்சாடனர்கோயிலும் உள்ளன. வடக்குப்பிரகாரத்தில் சித்தர்கோயில் இருக்கின்றது. அக்கோயிலின்

முன்பகுதி, வலமாகச் சுற்றிவருபவர்க்கு இடைஞ்சலாக இருந்தமையால், 1960-63 திருப்பணியில், படிக்கட்டுகளையும் குறுக்குச் சுவர்களையும் இடித்து, அப்பாதையை விரிவுபடுத்தியுள்ளனர். மேலும் சித்தரின் உருவம் சிதைந்திருந்தபடியால் அதையும் சீர்செய்துள்ளனர். ஆதி கடம்ப மரமும் இப்பிரகாரத்தில்தான் அமைந்துள்ளது. கனக சபை, யாகசாலை, திருமகள், இரத்தினசபை, வன்னியும் கிணறும் பிற பரிவார தெய்வங்களும் இப்பிரகாரத்திலேயேவுள்ளன.

ஆறுகால் பீடத்தின் வழியே உள்ளே சென்றால் மகா மண்டபத்தைக் காணலாம். இது 'வெள்ளியம்பலம்' என்றும் வழங்கப்பெறும். கால்மாறியாடிய நடராசர் திருவுருவம் இங்கேதான் உள்ளது. அறுபத்துமூவர் உற்சவமூர்த்திகளும் இம்மண்டபத்தில் உள்ளனர். 1960-63 திருப்பணியில், வெள்ளியம்பலம், பொன்னம்பலம், இரத்தினசபை, தாமிரசபை, சித்திரசபை-ஆகிய தலங்களின் வண்ணப்படங்கள் பலகைகளில் வரையப்பெற்று இம்மண்டபத்தில் வைக்கப்பெற்றுள்ளன. சுவாமிகோயில் மூலத்தானம் 'இந்திரவிமானம்' என்று வழங்கப்பெறும். இந்த விமானத்தின் சிறப்பு என்னவெனில், ஒவ்வொரு பக்கமும் இரண்டு யானைகள்வீதம், நான்குபக்கங்களிலும் எட்டுயானைகள் தாங்குவனபோல் அமைக்கப்பெற்றுள்ளதேயாகும். அவற்றில் இரண்டுயானைகள், அர்த்தமண்டபத்தில் காணப்படும், தென்புறம் தட்சிணாமூர்த்தி சன்னிதிக்கிருபுறம் இரண்டுயானைகளும், மேல்புறம் இலிங்கோற்பவர் சன்னிதிக்கிருபுறம் இரண்டுயானைகளும், வடபுறம் துர்க்கை சன்னிதிக்கிருபுறம் இரண்டுயானைகளுமாக எட்டுயானைகள் உள்ளன. இவை தவிரப் பக்கத்

துக்கு எட்டுச் சிங்கங்கள் வீதம் நான்கு பக்கங்கட்கு முப்பத்திரண்டு சிங்கங்களும், பக்கத்துக்குப் பதினறு பூதகணங்கள் வீதம் நான்குபக்கங்கட்கு அறுபத்திநான்கு பூதகணங்களும் உள்ளன. இத்தகு சிறப்புடைய இந்திர விமானத்தில் சொக்கநாதப்பெருமான் இலிங்க வடிவத்திற் காட்சியளிக்கின்ருர்.

கம்பத்தடிமண்டபம், சுவாமிகோயில் உட்பிரகாரம், மகாமண்டபம் முதலியவற்றின் விதானங்கள் முழுதும் 1960-63 திருப்பணியின்போது வண்ணச்சித்திரங்களால் புதிதாகத் தீட்டப்பெற்றுள்ளன.

முன்கூறப்பெற்ற கம்பத்தடி மண்டபத்திற்கு நேர்கிழக்கே ஒரு கோபுரவாயில் உள்ளது. ஐந்து நிலைகளையுடைய இக்கோபுரம் 66 அடி உயரமுடையது. இதன் அடித்தளத்தின் நீளம் 42 அடி, அகலம் 33 அடி. இதில் 280 சுதைகள் இருக்கின்றன. இது வசுவப்பன் என்பவரால் கி பி. 1372-இல் கட்டப்பெற்றதாகும். கிழக்கு ஆடிவீதி, பதினறுகால் மண்டபத்தின் முன்னின்று பார்த்தால் இக்கோபுரம் நன்கு தெரியும். இதுவும் 1960-63 திருப்பணியின்போது முற்றிலும் புதுப்பிக்கப்பெற்று வண்ணம் தீட்டப்பெற்றுள்ளது.

### வீரவசந்தராயர் மண்டபம்

இக்கோபுர வாயிலில் உள்ள பேச்சியக்காள் மண்டபத்தின் வழியாக நேர்கிழக்கே சென்ருல் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் 46 தூண்களைக்கொண்ட ஒரு பெரிய மண்டபத்தைக் காணலாம். அதன் இருபுறங்களிலும் பல வகையான கடைகள் நிறைந்திருக்கின்றன. இம்மண்டபத்திற்கு வீரவசந்தராயர் மண்டபம் என்று பெயர். இதனைக்

கட்டியவர் திருமலை நாயக்கரின் தமையனாரான முத்து வீரப்பநாயக்கராவர். அவர் இதனைக் கி. பி. 1611-இல் கட்டுவித்தார். ஆயிரக்கால் மண்டபம் கட்டப்பெற்ற பின்பு அதற்குத் தென்புறம் சுவாமிசன்னிதிக்கு நேராக இது கட்டப்பெற்றது. இதைப் போன்ற ஒரு மண்டபம் அம்மன் சன்னிதியிலும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலேயே கி. பி. 1708-இல் மீனாட்சிநாயக்கர் மண்டபமும் கட்டப்பெற்றது. வீரவசந்தராயர் மண்டபத்தில் சுவாமி சன்னிதிக்கு நேராக நந்தி ஒன்று வைக்கப்பெற்றுள்ளது. இங்குள்ள உயரமான திருவாச்சி, மருதுபாண்டியர்களால் அமைக்கப்பெற்றதாகும். இப்பொழுது சிவகங்கைத் தேவத்தானத்தார் அதன் விளக்குகளையேற்றிவருகின்றனர். இம்மண்டபத்தின் தூண்களின் மேலுள்ள விட்டங்களில் பல சிறிய சிற்பங்கள் வரிசையாக அமைக்கப்பெற்றுள்ளன; கீழ்புறமுள்ள தூண்களில் கீழ்க்கண்ட மிக அழகான, பெரிய சிற்பங்கள் இம்மண்டபத்தை அணிசெய்கின்றன. 1 மார்க்கண்டேயனுக்காகக் காலனை ஒறுத்த சிவபெருமான், 2 வேடனொருவன் தன்மனைவியைத் தோளில் தூக்கிவைத்திருத்தல், 3 சிவபெருமானின் வீரத் தோற்றம், 4 நடனமாடும் பத்திரகாளி, 5 துவாரபாலகர்கள்.

1960-63 திருப்பணியில் இம்மண்டபத்தின் நடு விதானத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

## ஆயிரக்கால் மண்டபம்

வீரவசந்தராயர் மண்டபத்தையொட்டி வடபுறம்எடுப்பான தோற்றத்துடன் மிகப்பெரிதாகக் காட்சியளிக்கும்

மண்டபமே புகழ்பெற்ற 'ஆயிரக்கால் மண்டப'மா கும். ஓர் அரிய கலைக்கூடமாக விளங்கும் இம்மண்டபத் தைக் கட்டிய பெருமைக்குரியவர் தளவாய் அரியநாத முதலியாராவார். அவர் இதனைக் கி. பி. 1569-இல் கட்டு வித்தார். இஃது ஆயிரக்கால் மண்டபம் எனும் பெய ரைப்பெற்றிருந்தாலும் இங்கு 985 கற்றூண்களே உள் ளன. ஆனால் எஞ்சிய 15 தூண்கள் இருக்கவேண்டிய பகுதியில் இரு சிறிய கோயில்கள் இருக்கின்றன. இம் மண்டபத்தை எப்பக்கமிருந்து நோக்கினும், தூண்கள் முன்பின் இல்லாது, கோடு இழுத்தாற்போல் ஒரேவரிசை யாகக் காட்சியளிப்பன வியப்பிற்குரியது. இம்மண்ட பத்தின் நீளம் 250 அடி, அகலம் 240 அடி; இம்மண்டபத் தின் நுழைவாயிலில் இதனைக்கட்டி முடித்த தோன்றல் அரியநாதமுதலியார் அழகான குதிரைமீது கம்பீரமாக வீற்றிருப்பதைக் காணலாம். இவ்வழகிய சிற்பம் வாயிலின் இடதுபுறமுள்ள தூணில் அமைக்கப்பெற்றுள் ளது. நுழைவாயிலின் மேல்விதானத்தில் தமிழ்வருடங் கள் அறுபதினையும் சித்திரிக்கும் சக்கரம்ஒன்று செதுக் கப்பட்டுள்ளது. கலையார்வமிகுந்த பலவெளிநாட்டினரும், நம்நாட்டினரும் தம்மை மெய்மறந்தநிலையில் நீண்டநேரம் நின்றுகொண்டு, கலைக்கவின்மிக்க சிற்பங்களைக் கண்டு களிக்கும் காட்சியை நாள்தோறும் இங்குக்காணலாம். கீழ்க்கண்டவைகளே, அவ்வாறு அவர்கள் மனத்தைக் கவரும் சிற்பங்களாம்:

(முன்வரிசைத் தூண்களிலுள்ள சிற்பங்கள்)

1. அசுரனைக்கொல்லும் சிவபெருமான், 2. கண்ணப்ப நாயனர், 3. பிச்சாடனர், 4. தளவாய் அரியநாதர், 5. அரிச்சந்திரன், 6. சந்திரமதி, 7. குறத்தி, 8. குறவன்.

(மண்டபத்தினுள் அமைந்த சிற்பங்கள்) —

1. பாண்டியன், 2. சிவவீரன். 3. நிருத்தகணபதி, 4, 5. துவாரபாலகர்கள், 6. சுப்ரமணியர். 7. நாகராசன், 8. கலைமகள், 9. திருமால், 10. அருச்சுணன், 11. திரௌபதி, 12. பிச்சாடணர், 13. தருமர், 14. பீமன், 15. இரதி, 16. வீரபத்திரர், 17. அக்கினி. 18. மன்மதன், 19. மனிதமிருகம், 20. மோகினி.

**மங்கையர்க்கரசி மண்டபம்**

ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து வீரவசந்தராயர் மண்டபத்தின் வழியாகத் தெற்கு நோக்கிச்சென்றால், திறந்தவெளி முற்றத்தில் புதிதாக உருவாக்கப்பெற்ற மண்டபம் ஒன்றைக்காணலாம். 1960-63 திருப்பணியின் நினைவாக, இக்காலக் கலைத்திறனைக் காட்டக்கூடியவகையில் மண்டபம் ஒன்று அமைக்கவேண்டுமென்று திருப்பணிக்குழுவினர் கருதினர்.

''மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி''

என்று தமிழ்மறையில் திருஞானசம்பந்தப்பெருமானால் சிறப்பிக்கப்பெற்றவரும், பாண்டியநாட்டில் சிவநெறியை நிலைக்கச்செய்து அதன்வாயிலாகச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச் செய்தவருமாகிய பாண்டிமாதேவி மங்கயர்க்கரசியை மறவாதிருத்தல் தமிழ்மக்களின் தலையாய கடமையெனத் திருப்பணிக்குழுத்தலைவர் தமிழவேள் பி. டி. இராசனவர்கள் கருதினர். அதற்கிணங்க அறநிலைய அமைச்சர் மேதகு எம். பக்தவத்சலம் அவர்கள்



ஆயிரக்கால் மண்டபம் (பக்கம் 174)



இசைத் தூண் (பக்கம் 185)

11-3-1963-இல் மங்கையர்க்கரசி மண்டபத்திற்கு அடித் தளக்கல்நாட்டினுர்கள் இம்மண்டபம் 28—6—1963-ஆம் நாள் கும்பாபிடேகத்தின்போது திறக்கப்பெற்றது. இக் காலக்கட்டிடங்களில்பயன்படுத்தப்படும் சிமிண்டு, இரும் புக்கம்பிகள், செங்கல் ஆகியமூன்று பொருள்களைக்கொண் டே இம்மண்டபம் அழகாக அமைக்கப்பெற்றுள்ளது. இதில்மங்கையர்க்கரசி, குலச்சிறையார், கூன்பாண்டியன், ஞானசம்பந்தர் ஆகியோரின் திருவுருவங்களும் சிவபெரு மானின் இலிங்கவடிவமும் அமைக்கப்பெற்றுள்ளன. இம்மண்டபத்திற்குஎதிரே திருக்கலியாண மண்டபத்தை யொட்டியுள்ள மண்டபத்தைக் கட்டியவர் சிவகலியாண சுந்தரமுதலியாராவர்.

## சேர்வைகாரர் மண்டபம்

மங்கையர்க்கரசிமண்டபத்திற்குத்தென்புறமுள்ளதே மருதுபாண்டியர்களாற் கட்டப்பெற்ற மண்டபமாகும். இதனைச் 'சேர்வைகாரர் மண்டபம்' என வழங்குகின் றனர். இடதுபுறமுள்ள தூணில் பெரியமருதுவின் உரு வச்சிலை உள்ளது. இம்மண்டபம், திருக்கலியாண மண்ட பத்திற்கு எதிரில் கி. பி. 1795-இல் கட்டப்பெற்றது.

## திருக்கலியாண மண்டபம்

ஸ்ரீ மீனாட்சியம்மனுக்குத் திருக்கலியாணம் நடை பெறும் மேடையும், அதற்குமுன்னுள்ள கருங்கல் மண்ட பமும், விசயரெங்கச் சொக்கநாதரால் (கி. பி. 1706-32) கட்டப்பெற்றனவாகும். அவரின் உருவச்சிலை, மேடை யின் தென்புறத்து முதற்றூணில் வடதிசை நோக்கி

அமைந்துள்ளது. அம்மேடையின் தென்புற, வடபுறச் சுவர்களில், பெரிய வட்டவடிவத்தில் அண்டங்களின் தோற்றத்தையும், உயிரினங்களின் தோற்றத்தையுங் காட்டும் பழைய இரண்டு ஓவியங்கள்காணப்படுகின்றன. பின்னர் இக்கலியாண மண்டபத்தை விரிவுபடுத்தும் வகையில் 97 அடி நீளம், 47 அடி அகலமுடைய பெரிய கூடமொன்று கட்டப்பெற்றுள்ளது. இதன் மேல்விதானம் மரத்திலைான அழகிய விட்டங்களை உடையது. சுற்றிலுமுள்ள மேல் உத்திரப் பகுதிகளில் திருவிளையாடற் சித்திரங்கள் வரையப்பெற்றுள்ளன. இங்கே, இப் பகுதியைக் கட்டிய வயிநாகரம் வெங்கடாசலஞ் செட்டியார், நாகப்பச்செட்டியார் ஆகியோரின் படங்கள் தீட்டப் பெற்றுள்ளன. அதற்கு மேலுள்ள கூரை, செப்புத் தகட்டினல்அமைக்கப்பட்டதாகும். 1960-63திருப்பணியில்இவ் விதானத்திலுள்ள ஓவியங்களும், நுழைவாயிலின்கண் அமைந்துள்ள பெரிய நிலைக்கண்ணுடிப் பெட்டிகளில் காணப்படும் ஓவியங்களும் புதுப்பிக்கப்பெற்று வண்ணம் பூசப்பெற்றுள்ளன. மேலும் கூரையிலிருந்த செப்புத் தகடுகளனைத்தும் நீக்கப்பட்டு வேறு புதிய தகடுகள் போடப்பெற்றுள்ளன.

### ஆடி வீதிகள்

திருக்கலியாண மண்டபத்திலிருந்தும் அம்மன் சன்னிதிக்கு வரும் வழியில் உள்ள முத்துராமையர் மண்டபத்தையும், மீனுட்சிநாயக்கர் மண்டபத்தையும் கடந்து தெற்கே வந்தால் கற்கள் பாவப்பெற்ற முற்றத்தைக் காணலாம். அதுவே ஆடிவீதி எனப்படும். இது கோயிலுக்குள், சுவாமி-அம்மன்கோயில்கள் இரண்டினையும் ஒருங்கே வலம் வருவதற்கேற்ற வகையில் அமைத்த

பெருவீதியாகும். இதைச்சுற்றியுள்ள பெரியமதிலே கோயிலின் வெளிச்சுற்றுமதிலாகும். அது 847 அடி நீளம் 792 அடி அகலமுள்ள நீண்டசதுர அமைப்புடையது. கீழ ஆடிவீதி, பெரும்பாலும் மண்டபங்களைக்கொண்டதாக அமைந்துவிட்டது. தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று ஆடிவீதிகள் மட்டுமே திறந்த வெளிகளாக உள்ளன. பெரிய திருமதிற் சுவர்களைச் சுற்றி அமைந்துள்ள இவ் ஆடிவீதிகளில் சுற்று மண்டபங்கள் உள்ளன. இவை அரசி மங்கம்மாவால் (கி. பி. 1689-1706) கட்டப்பெற்றவையாகும். இப்பொழுது, அம்மண்டபங்கள், பல அறைகளாகத் தடுக்கப்பெற்றுள்ளன; ஆங்கே பல அலுவலகங்கள் அமைந்துள்ளன.

### தெற்காடிவீதி

தெற்காடிவீதியில் ஒன்பதுநிலைத் தெற்குக்கோபுரத்திற்குக் கிழக்கே, யானைகட்டுமிடம், கோயில்நால்நிலையம், தேவாரப் பாடசாலை, திருப்புகழ்ச்சபை, கோயில் ஊழியர்கள் சங்கம், தெய்வநெறிக் கழகம், பன்னிருதிருமுறை மன்றம், தண்டபாணிதிருப்புகழ்ச்சங்கம், முதலியன இருக்கின்றன.

திருப்புகழ்ச்சபை, 1919-ஆம் ஆண்டு இராமநாதபுர அரசவை சங்கீதவித்துவானாக இருந்த உலகநாதய்யரவர்களால் தோற்றுவிக்கப்பெற்று இன்றும் சீரும்சிறப்புமுடன் திகழ்ந்துவருகின்றது. நாள்தோறும் திரு. தியாகராச ஐயரைக்கொண்டு திருப்புகழ் வகுப்புநடத்துதலும், திங்கள்தோறும் திருமுருக கிருபானந்தவாரியாரவர்களைக்கொண்டு சிறப்புச்சொற்பொழிவுகள் நடத்துதலும். ஆகிய தெய்வப்பணிகளைச் செய்துவருகின்றது.

மதுரை நகரமக்களிடையே ஓரளவு தெய்வநெறியை வளர்த்துவரும் பெருமை இச்சபைக்குரியது.

அதனையடுத்துள்ள, கோயில் ஊழியர் சங்கம் 1954-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பெற்றது. இப்போது திரு. அய்யாச்சாமிக் கோனார் என்பவர் அதன் தலைவராக இருந்து வருகின்றார். கோயில் ஊழியர்களின் ஒற்றுமைக்காகவும் நன்மைக்காகவும் இச்சங்கம் உழைத்து வருகின்றது.

அதனையடுத்துச் சுவாமி சிவானந்த சரசுவதியவர்களின் கொள்கைகளைப் பரப்பும் வகையில் தெய்வநெறிக் கழகம் ஒன்று தோற்றுவிக்கப்பெற்றுள்ளது. திரு. வானமாமலை என்பவர் இதன் ஆக்கவேலைக்குப் பாடுபட்டுவருகின்றார்.

அதனையடுத்து அமைந்துள்ள பன்னிருதிருமுறை மன்றம், கி. பி. 1953-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்றதாகும். திருவாளர்கள். ம. க. சுந்தரேசபட்டர், தருமலிங்க முதலியார், சீனிவாசபிள்ளை ஆகியோர்தம் அரிய உழைப்புடன் இம்மன்றம் சைவப்பணியைத் தளராமற் செய்துவருகின்றது. முன்னாள் அறநிலைய ஆணையராகவிருந்த திரு. ஏ. உத்தண்டராமபிள்ளை யவர்களைக் கொண்டு, அறுபத்துமூன்று நாயன்மார்களின் திருநட்சத்திரத்திருநாளன்று ஆடிவீதியில் நாயன்மார் திருவுருவங்களை எழுந்தருளச்செய்வித்த சிறப்பும் இம்மன்றத்திற்குண்டு. மேலும் இங்கு நாள்தோறும் தமிழ்மறையாகிய தேவாரம் ஓதப்பெற்று வருகின்றது.

அடுத்துத் தண்டபாணி திருப்புகழ்ச்சங்கம் ஒன்று

இருக்கின்றது. அது கி. பி. 1924-இல் தோற்றுவிக்கப் பட்டதாகும்.

தெற்குக் கோபுரம்

மதுரைக் கோயிலிலுள்ள கோபுரங்களில் இதுவே மிகவும் உயரமானது. இதன் உயரம் 160 அடி. அடித் தளத்தின் நீளம் 108 அடி, அகலம் 67 அடி. இக்கோபுரத் திலுள்ள 1511 சுதை உருவங்களெல்லாம் மிகப் பெரியன வாகும். இக்கோபுரத்தின் உச்சியில் இரண்டு பக்கங்களி லுமுள்ள யாளி முகத்திற் காணப்படும் கண்களின் குறுக் களவு மட்டும் இரண்டரை அடி என்ருல், பிறபகுதிகள் எத்துணைப் பெரியனவாக இருக்குமென்பதை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். 1960-63 திருப்பணி யில் இக்கோபுரத்திலேயே முதன்முதலாக வேலை தொடங்கப்பெற்றது. 14—9—1960-இல் மத்திய அரசு அமைச்சர் டாக்டர் திரு. பி. சுப்பராயன் அவர்கள் இக் கோபுரத்தின் திருப்பணி வேலையைத் தொடங்கி வைத்த னர். இதற்குச் சாரம் கட்டுவதற்கு மட்டும் நான்கு மாதங்களாயின. ஏறத்தாழ ரூ. 40,000 பெறுமானமுள்ள சவுக்கு மரங்கள் தேவைப்பட்டன. அச்சாரத்தில் இலட்ச இணைப்பு முடிப்புகள் போடப்பட்டன. சுதைகள் முழு வதும் புதுப்பிக்கப்பெற்று வண்ணம் தீட்டப்பெற்றுள் ளன. சிறிதாக இருந்த கோபுர வாயில் இப்போது பெரி தாக அமைக்கப்பெற்றுள்ளது. பள்ளமாக இருந்த வாயி லின் அடித்தளம் ஆடிவீதியின் மட்டத்திற்கு உயர்த்தப் பெற்றுள்ளது. அவ்வழியாக மக்கள் எளிதாகச் செல்லு தற்கெனக் கைபிடித்தடுப்புகளும்வைக்கப்பெற்றுள்ளன. இப்பெரிய தெற்குக் கோபுரத்தைக் கி. பி. 1559-இல் சிராமலைச் செவ்வந்திமூர்த்தி செட்டியார் கட்டுவித்தார்.

இத்தெற்காடி வீதியில் கோபுரத்திற்குக் கீழ்புறம் கோயில் இறைபணியாளர் அலுவலகமும், திருப்பணிக் குழு அலுவலகமும் இருக்கின்றன.

### மேற்கு ஆடிவீதி

இவ் ஆடிவீதியில், பெரிய மேலக்கோபுரத்திற்குத் தென்புறமுள்ள சுற்றுமண்டபங்களில் பசுமடமும், வடபுறமுள்ள மண்டபங்களில் சிவகங்கைத்தேவத்தான அலுவலகமும், திருப்பணி மராமத்து இலாகா அலுவல கமும் இருக்கின்றன.

மேலக் கோபுரம்

மதுரைப் புகைவண்டி நிலையத்திலிருந்து கோயிலுக்கு வருவோர்களின் பார்வையிற்படும் முதற் கோபுரம் இதுவேயாகும். இதன் உயரம் 154 அடி; அடித்தளத்தின் நீளம் 101 அடி; அகலம் 63 அடியாகும். இதில் 1124 சுதைகள் உள்ளன. இதனைப் பராக்கிரம பாண்டியன் (கி. பி. 1315-47) கட்டுவித்தான். இக்கோபுரவாயில், தெரு மட்டத்தில் அமைந்துள்ளபடியால், கோயிலுக்கான பொருட்களைக்கொண்டுவரும் வண்டிகள் முதலியன இதன் வழியாக வந்து போகும். 1960-63 திருப்பணியின்போது முற்றிலும் புதுப்பிக்கப்பெற்று இதற்கு வண்ணம் தீட்டப்பெற்றுள்ளது. இக்கோபுரவாயிலின் வடபுறச்சுவரில் கிழக்குக் கோடியில் இரண்டு பாடல்கள் எவரும் எளிதில் படிக்கத்தக்க வகையில் கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளன.

மேற்காடி வீதியில் இப்பெரிய கோபுரத்தைத் தவிர, இரண்டு ஐந்துநிலைக் கோபுரங்களும் இருக்கின்றன. (161, 166ஆம் பக்கங்களில் பார்க்கவும்)

## வடக்காடிவீதி

வடக்காடி வீதியின் வடமேற்கு மூலையில் 'திருப்புகழ் மண்டபம்' ஒன்று இருக்கின்றது. சமயச் சொற்பொழிவுக் கூட்டங்கள் இம்மண்டபத்தில் அடிக்கடி நிகழும். இது, கி. பி. 1952-இல் கட்டப்பெற்றது.

## மதுரைத் திருவள்ளுவர் கழகம்

வடக்குக் கோபுரத்தையடுத்து மேல்புறம் காணப்படும் மண்டபமே, மதுரைத் திருவள்ளுவர் கழகம் ஆகும். இது, கி. பி. 1941-ஆம் ஆண்டு, திருக்குறள் அட்டாவதானம் தி. ப. சுப்பிரமணிய தாசு அவர்களின் பெருமுயற்சியால் தோற்றுவிக்கப்பெற்றதாகும். தமிழ்ச் சங்கச் செயலரும் வழக்கறிஞருமான திரு. டி. சி. சீனிவாசையங்கார் தலைமையில், தமிழவேள் திரு. பி. டி. இராசனவர்கள், இக்கழகத்தினை மதுரை ஒய். எம். சி ஏ. மன்றத்தில் தொடங்கிவைத்தனர். அன்று முதல் தமிழவேளவர்களே இக்கழகத்தின் பெருமைதரு தலைவராக இருந்து வருவதுடன், ஆண்டுதோறும் இக்கழகத்தில் நடைபெற்றுவரும் சிறப்பு விழாக்களனைத்தையும் அவர்களே தொடங்கிவைத்தும் வருகின்றனர். இதுவே இக்கழகத்தின் மரபாக இருந்துவருகின்றது. உத்தமபாளையம் முதலியார் குடும்பத்தைச் சார்ந்த திரு. எம். டி. சுப்பிரமணிய

முதலியாரவர்களின் அருமைத் திருமகனார் திரு. சு. சண்முகவேல்ராசனவர்கள், கழகத்தின் முதல் தலைவராக வும், இந்நூலாசிரியர் திரு. கி. பழநியப்பனவர்கள் முதல் செயலராகவும் இருந்து பணிபுரிந்தனர். தற்போது பைந் தமிழ்ப் பாவலர் பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனார் அவர்கள் தலைவராகவும், பண்டித திரு. மீ. கந்தசாமிப் புலவரவர்கள் செயலராகவும் இருந்துவருகின்றனர். இக் கழகத்தைத் தோற்றுவித்த தி. ப. சுப்பிரமணியதாசு அவர்கள் 1951-இல் மறைந்த பின்னர்க் கழக ஆசிரியரா கத் திரு. மீ. கந்தசாமிப் புலவரவர்கள் பணிபுரிந்துவரு கின்றனர். இங்கு நாள்தோறும் தமிழ் வகுப்புகளும், வெள்ளி, செவ்வாய், ஞாயிறு ஆகிய கிழமைகளில் இலக் கியம், சமயம் பற்றியும், பொது அறிவு வளர்த்தற்குரியன பற்றியும், தக்க அறிஞர்களைக்கொண்டு சொற்பொழி வுகள் நடத்தப்பெற்றுவருகின்றன. இதுகாறும் தகரக் கொட்டகையாக இருந்துவந்த இக்கழகமன்றம், 1960-63 திருப்பணியின்போது கோயிலாரால் ஓர் அழகிய மண்ட பமாகக் கட்டிக்கொடுக்கப்பெற்றுள்ளது.

## வடக்குக் கோபுரம்

வடக்கு ஒன்பதுநிலைக் கோபுரம் 'மொட்டைக் கோபு ரம்' என வழங்கப்படுகின்றது. இதனைக் கிருஷ்ணவீரப்ப நாயக்கர் (கி. பி. 1564-72) கட்டுவித்தார். ஆனால், யாது காரணத்தாலோ, மேற்பூச்சு முற்றுப்பெறாமல் நின்று போயிற்று. அதன் பின்னர், நகரத்தாரும், அபிசேக பண் டாரமும் கோயில் திருப்பணியை மேற்கொண்டபோது இக்கோபுரம் முழுதையும் சாந்திறைற் பூசி முடித்தனர்.



திருமலைநாயக்கர் கற்சிலை (புதுமண்டபம்)



விநாயகர் (கோபுரத்திலுள்ள சுதை)

நீண்டநாட்கள் மேற்பூச்சுப் பூசப்பெருமல் நின்று போயிருந்தமையால் இதனை 'மொட்டைக்கோபுரம்' என்றுஅழைத்தனர். இன்றும் இதுவே பெருவழக்கில் இருந்துவருகின்றது.

இக்கோபுரத்து வாயிலின் மேற்புறம் சித்திரைவீதியில் 'மொட்டைக் கோபுர முனியாண்டி கோயில்' ஒன்று உள்ளது. வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமைகளில் இங்கு வழிபாடு செய்ய வருபவர்கள், மொட்டைக் கோபுர முழுவதற்குமே நீண்ட மாலைகளை அணிவிப்பர்!

இக்கோபுரத்தின் உயரம்152 அடி. அடித் தளத்தின் நீளம் 111 அடி; அகலம் 66 அடி. இதில் 404 சுதைகளே இருக்கின்றன. மற்றைக் கோபுரங்களைவிட இதில் சுதைகள் குறைவாகவே இருப்பதாலும் இது மொட்டைக் கோபுரம் என்று அழைக்கப்பட்டது என்று கருதுவாருமுளர். 1960-63 திருப்பணியில், கடைசியாகப் புதுப்பிக்கப்பெற்ற கோபுரம் இதுவேயாகும். தெற்குக் கோபுரத்தைப் போன்றே இக்கோபுர வாயிலும் பெரிதுபடுத்தப்பெற்று நடைபாதைக் கைபிடிகளும் வைக்கப்பெற்றுள்ளன.

ஆடிவீதியில் இக்கோபுரத்தையடுத்து ஐந்து தனித்தூண்கள் இருக்கின்றன. ஒரே கல்லில் செதுக்கப்பெற்ற இத்தூணில்பல சிறிய தூண்களும் அமைக்கப்பெற்றுள்ளன. அவற்றைத்தட்டினுல் ஒவ்வொன்றும் ஒவ்வொருவித இசையைக்கொடுக்கும். அதனுல் இது 'இசைத் தூண்' என்னும் பெயரைப்பெற்றது. இதுபோன்ற தூண்கள் ஆயிரக்கால் மண்டபத்திலுமுள்ளன.

வடக்குக்கோபுரத்திற்கு எதிரில் வடக்காடிவீதியில் சிறிய ஐந்துநிலைக்கோபுரம் ஒன்று உள்ளது. (இதனைப் பற்றிய குறிப்பை இந்நூலின் 166ஆம் பக்கத்திற்காணலாம்)

28—6—1963 இல் நடைபெற்ற கும்பாபிடேகத்திற்குரிய யாகசாலை, இவ் வடக்காடிவீதியின் கீழ்க்கோடியில் தான் அமைக்கப்பெற்றது.

அதனையடுத்துக் கீழஆடிவீதியில் 'பதினாறுகால் மண்டபம்' ஒன்று உள்ளது. இதனைத் 'தட்டுச்சுற்று மண்டபம்' என்றுங்கூறுவர். இது, கி. பி. 1772-இல் வேங்கடேசுரமுதலியாரால் கட்டப்பெற்றது. இதன் விதானத்தில் மாணிக்கவாசகர் திருவிளையாடல்கள் எழுதப்பெற்றிருந்தன. 1960-63 திருப்பணியில் அவைகளும், மேல் கைபிடிச்சுவர்கள், உருவங்கள் ஆகியவைகளும் புதுப்பிக்கப்பெற்றன.

கோயிலின் வெளிப்புறத்திருமதில்களிலும் உட்புறத் திருமதில்களிலும் அமைந்துள்ள எல்லா பூதகணங்களும் 1960-63 திருப்பணியின்போது புதுப்பிக்கப்பெற்று வண்ணம் தீட்டப்பெற்றனவாகும்.

கிழக்குக்கோபுரம்

பதினாறுகால் மண்டபத்தினின்று சுவாமிசன்னிதி வழியாக வீரவசந்தராயர் மண்டபத்திற்கு வந்தால், அதனையடுத்துக் கீழ்புறம் சுவாமிசன்னிதியின் பெரிய ஒன்பதுநிலைக்கோபுரத்தைக் (கிழக்குக்கோபுரம்) காண

லாம். பெரிய கோபுரங்களுள் மிகவும் பழமையானது இதுவேயாகும். மாறவர்மசுந்தரபாண்டியனால் (கி. பி. 1216-38) இது கட்டப்பெற்றதாதலின் இதற்குச் 'சுந்தர பாண்டியன்கோபுரம்' என்ற பெயருமுண்டு. இதன் உயரம் 153 அடி, அடித்தள நீளம் 111 அடி; அகலம் 65 அடி; இதில் 1011 சுதைகள் உள்ளன. 1960-63 திருப்பணியில் இவைகள் புதுப்பிக்கப்பெற்றுக்கோபுரமுழுதும் வண்ணந் தீட்டப்பெற்றுள்ளது. இக்கோபுரவாயில் கீழச் சித்திரைவீதியின் தரைமட்டத்திற்கும் கீழாக இருந்தது; எனவே கோயிலுக்கு வருவோர் பலபடிக்கட்டுகளில் ஏறி இறங்கிச் செல்ல வேண்டியிருந்தது. இதனால் பலர் இவ்வாயில் வழியாக வந்துபோவது இல்லை! மேலும் விசயரெங்கச் சொக்கநாதர் காலத்தில் (கி. பி. 1706-32) கோயில் ஊழியர் ஒருவர் இக்கோபுரத்தினின்றும் விழுந்து தற்கொலை செய்துகொண்டமையாலும், இவ்வழியினைப் பலரும் பயன்படுத்தவில்லை! 1960-63 திருப்பணியில், இவ்வாயிலின் தளம், வீரவசந்தராயர் மண்டபத்தின் தள மட்டத்திற்கு உயர்த்தப்பட்டது. அதனால் இப்போது, பொதுமக்கள் பலரும் இவ்வாயிலின் வழியாக வந்துபோகும் பழக்கத்தை மேற்கொள்ளலாயினர்.

இக்கோபுர வாயிலிலிருந்த இரண்டு பழைய கதவுகளில் ஒன்றை எடுத்து ஆயிரக்கால் மண்டபத்தின் முன் வீரவசந்தராயர் மண்டபத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பெற்றுள்ளது. இம்மரக் கதவின் நீளம் $30\frac{1}{2}$ அடி, அகலம் $7\frac{1}{4}$ அடி, கனம் 10 அங்குலம்.

தரை மட்டத்திற்கு உயர்த்தத் தொடங்கியபோது, வாயிற்படிக்கட்டுகளில் உள்ளசிலகல்வெட்டுகள்மறைந்து போகாவண்ணம்பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதும்

ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

கிழக்குச் சித்திரை வீதியில் கோபுரத்தையொட்டித் தென்புறம் மதுரைவீரசுவாமி கோயில் இருக்கிறது. அக் கோயிலிற்கும் அம்மன்சன்னிதி அட்டசக்தி மண்டபத்திற்கும் இடையே காந்தியடிகளின் நினைவுச் சின்னம் வைக்கப்பெற்றுள்ளது.

கிழக்குக் கோபுரத்தின் உட்புறச் சுவரிலும் இரண்டாவது நிலைத் தூண்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

## புதுமண்டபம்

கிழைக் கோபுரத்திற்கு எதிரில், கிழச்சித்திரைவீதிக்கும், கிழாவணிமூல வீதிக்கும் இடையில் அமைந்துள்ள மண்டபமே புகழ்பெற்ற 'புதுமண்டபம்' ஆகும். இது 333 அடி நீளமும் 105 அடி அகலமும் உடையது. 25 அடி உயரமுள்ள 124 தூண்கள், நான்கு வரிசைகளாக அமைக்கப்பெற்றுள்ளன. இம்மண்டபத்தைச் சுற்றிலும், திருவிழாக் காலத்தில் தண்ணீர் தேங்குவதற்கேற்றவாறு சிறிய அகழிகள் கட்டப்பெற்றுள்ளன. அதற்குத் 'திருவடிவாரம்' என்று பெயர். விளாமிச்சி வேர்த் தட்டிகளைத் தொங்கவிடுவதற்காக மேல் கொடுங்கைகளில் இரண்டடிக்கொன்ருகச் சிறு துவாரங்கள் போடப்பெற்றிருந்தன. பின்னர் அக்கொடுங்கைகளை உடைத்தெடுத்துவிட்டனர். இம்மண்டபத்தின் நடுப்பகுதியில் திருமலைநாயக்கர் உள்ளிட்ட நாயக்க மன்னர் பதின்மரின் உருவச் சிலைகள் அழகுறச் செதுக்கப்பெற்றுள்ளன. இம்மண்டபத்தின் மேல்புறத்தில் கருங்கல் மண்டபமும், மேடையும் இருக்கின்றன. திருவிழாக் காலத்தில் சுவாமி இம்மேடையில் எழுந்தருளும், மண்டபத்தின் கிழக்கு, மேற்குப் புறத்

தூண்களில் கண்களைக் கவரும் சிற்பங்கள் பல காட்சி யளிக்கின்றன. அவைகளில் கீழ்க்கண்டவை குறிப்பிடத் தக்கன:-

1) மீனாட்சியம்மையின் திருமணக்கோலம் 2) பத்திர காளி 3) நடராசர் 4) கல்யாணைக்குக் கரும்பளித்தது 5) ஏகபாதமூர்த்தி 6) சூரியசந்திரர் 7) மீனாட்சி மூன்று தனங்களுடன் தோற்றமளிக்கும் காட்சி 8) பன்றிக் குட்டிகட்குப் பால் கொடுத்த திருவிளையாடல் 9) புலி முலைப் புல்வாய்க்கருளிய திருவிளையாடல் 10) கருங் குருவிக்குபதேசித்த திருவிளையாடல் 11) இராவணன், கைலாய மலை தூக்கிய காட்சி.

திருமலை நாயக்கரே இம்மண்டபத்தைக் கட்டுவித் தார். மண்டப வேலைநடைபெற்றுக்கொண்டிருந்தபோது அவரே நேரடியாக மேற்பார்வை செய்ததாகத் தெரிகின் றது. இதனைக் கட்டுவதற்குச் சுவாமி சன்னிதியின் முன் னுள்ள இப்பகுதியே சிறந்ததென நாயக்கர் கருதினார். ஆனால், இவ்விடத்தில் கோயில் பட்டர்களின் வீடுகள் இருந்தன. எனவே, திருமலை நாயக்கர், கோயிலை மேற் பார்த்துவந்த அபிசேக பண்டாரத்தின் வீட் டிற்குத் தாமே நேரிற்சென்று, தம் கருத்தைக் கூறினார். அரசர் கருத்தை நிறைவேற்ற உடன்பட்ட அபிசேகபண்டாரமும், பட்டர்கள் குடியிருப் பதற்கென வேறுவீடுகள் கட்டித்தருமாறு வேண்டினார். நாயக்கரும் மனமகிழ்ந்து, மொட்டைக்கோபுரத்திற்கு வடக்கே அவர்களுக்கென வீடுகளைக் கட்டிக்கொடுத்தார். விக்கிரமபாண்டிய பட்டர் வகையினருக்குப் பதினாறுவீடு களும், குலசேகரபாண்டியபட்டர் வகையினருக்குப்

பன்னிரண்டு வீடுகளும் கட்டிக்கொடுத்துவிட்டு, இப்போதுள்ள புதுமண்டப இடத்தைக் கைப்பற்றினர். சுமந்திரமூர்த்தி ஆச்சாரி என்னும் புகழ்பெற்ற சிற்பியிடம் இம்மண்டபவேலை ஒப்புவிக்கப்பெற்றது. கி. பி. 1628 அட்சய ஆண்டு வைகாசித் திங்கள் 10-ஆம் நாளில் வேலைதொடங்கப் பெற்றது.

அம் மண்டபத்தில், ஏகபாதமூர்த்தியின் உருவமுடைய தூண் ஒன்றை நிறுத்துவதற்கென ஆயத்தம் செய்யப்பெற்றபோது, வைணவர் சிலர் அதனைநிறுத்தக் கூடாதென எதிர்ப்புத்தெரிவித்தனர். எனவே, திருமலை நாயக்கர், சைவ-வைணவ சமயசாத்திரங்களில் தேர்ச்சி பெற்றோரைக்கொண்டு, இத்தூணை வைக்கலாமா வேண்டாமா என முடிவுகட்டுமாறு ஏற்பாடுசெய்தார். தூணை வைக்கலாம் என நீலகண்ட தீட்சிதரும், வைக்கக்கூடாது என ஜயா தீட்சிதரும், பற்பல காரணங்களை எடுத்துக் காட்டினர். இவ்விருவரின் வாதம்தொடர்ந்து ஆறுமாதம் நடந்தது. இறுதியில் 'தூண் வைப்பது சரியே' எனமுடிவு செய்யப்பெற்றது. அத்தூண், புதுமண்டபத்தின்கீழ்ப் புறம், தொற்குக்கோடியில் உள்ளதை இன்றும் காணலாம்.

புதுமண்டபவேலையைத் திருமலை நாயக்கர், நேரடியாகச்சென்று மேற்பார்வைசெய்து வருவது வழக்கம். ஒருநாள் சுமந்திரமூர்த்தி ஆச்சாரி, எல்லாம்வல்ல சித்தர் கல்யானையைக் கரும்புதின்னச்செய்த திருவிளையாடற் சிற்பத்தைச் செதுக்கிக்கொண்டிருக்கும்போது, அவர் பக்கத்தில் வெற்றிலை பாக்கு வைக்கப்பெற்றிருந்தன.

வெற்றிலைபோடுவதையு மறந்து, அவர் தம்வேலையில் ஈடுபட்டிருப்பதைத் திருமலைநாயக்கர் கண்டு, தாமே அவ்வெற்றிலையைச் சுருலாகச்செய்து, பின்புறமாக நின்றுகொண்டு அவரிடம்கொடுத்தார், யாரோ வேலையாள் கொடுப்பதாக எண்ணிய அச்சிற்பியும் அதனை வாங்கி வாயிற்போட்டுக்கொண்டார். அதன் பின்னரே அவ்வாறு கொடுத்தவர் அரசரே என்பதை அவர் தெரிந்துகொண்டார். தாம்செய்த தவற்றை உணர்ந்து, வெற்றிலைவாங்கிய தம் கைவிரல்கள் இரண்டையும் சுத்தியலால் அடித்து நசுக்கிக்கொண்டார். நாயக்கர் அவரது அன்பையும், பக்தியையும் கண்டு வியந்து அவருக்குப் பரிசுகள் பல ஈந்து பாராட்டினர். இந்தச்சிற்பம் மண்டபத்தின் உட்புறம் அமைந்துள்ள மேடைக்கு பின்புறம் உள்ள தூணில் இருக்கின்றது.

ஒருமுறை, சுமந்திரமூர்த்தி ஆச்சாரி, திருமலைநாயக்கரின் சிலையையும், அவர்தம் மனைவியர் சிலைகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கும்போது, எத்துணையோ கவனமாக இருந்தும், அம்மையார் ஒருவரின் பெருந்தொடையில் ஓர் ஊனம் ஏற்பட்டுவிட்டது. ஆச்சாரியார் வருத்தமுற்று இரண்டாம் முறையாக வேறொரு கல்லிற் சமைத்தார். அக்கல்லிலும் அதேயிடத்தில் அதுபோன்ற ஊனம் ஏற்பட்டது. அச்சமயம் அங்குவந்த நாயக்கரின் அமைச்சரான நீலகண்டதீட்சிதர், இதனையறிந்து 'அது அப்படியே இருக்கட்டும்; விட்டுவிடு!' என்று கூறிச்சென்றுவிட்டார். சிற்பியும் அந்தத் தூணை அவ்வாறே விட்டுவிட்டார். பின்பு, திருமலைநாயக்கர் அதனைப்பார்க்கும் போது, அவ்வூனத்தைக் கண்டு அவ்வாறு ஏற்படக்

காரணமென்ன என வினவினுர். ஆச்சாரியார், நடந்த வற்றைக்கூறி, நீலகண்ட தீட்சிதர் கூறியதையும் எடுத்துச் சொன்னுர். அதைக்கேட்ட நாயக்கருக்குத் தீட்சிதர்பால் ஐயமும் கோபமும் ஏற்பட்டன. தம் மனைவியின் பெருந் தொடையில், சிலையில் ஊனம் காணப்படும் இடத்தில் தழும்பு ஒன்று இருந்ததைத் தீட்சிதர் எங்ஙனம் அறிவார் என்ற ஐயத்தினுலேயே நாயக்கருக்குக் கோபம் உண்டா யிற்று. உடனே தீட்சிதரை அழைத்துவரக் கட்டளையிட் டார். வீட்டில் பூசையிலமர்ந்திருந்த தீட்சிதருக்குத் திருவருள் எவ்வாருே இதை உணர்த்திற்று. உடனே வழிபாட்டிற்காகக் கொளுத்தப்பட்ட சூடனைத் தம் இரு கண்களிலும் வைத்து அவித்துக்கொண்டார். இதைக் கேள்வியுற்ற நாயக்கர், தாம் செய்த தவற்றை எண்ணி ஆராக் கவலையுற்ருர். தீட்சிதரோ, தாம் பிழை செய்யா மலிருந்தால் அன்னைமீனுட்சி, கண்பார்வை கொடுத்தருள் வாள் என்றுகூறி 'மீனுட்சி ஆனந்த சாகரஸ்தவம்' என்ற நூலை வடமொழியிற் பாடினுர். அம்மையின் திருவருளால் அவர் மீண்டும் கண்ணொளி பெற்ருர்.

மற்ருெரு சமயம் சிற்பி, சிலை ஒன்றைச் செதுக்கிக் கொண்டிருக்கும்போது அவர்தம் மகனெருவன், தனக்கு மாம்பழம் வேண்டுமென அழுதுகொண்டிருந்தான். மாம்பழம் கிடைக்காத காலமாதலின், எங்குச் சென்று தேடியும் அது கிடைக்கவில்லை. அவனே அழுகையை நிறுத்தாமல், சிற்பியின்வேலைக்கு இடையூருக இருந்தான். தற்செயலாக அவ்விடத்திற்குவந்த நாயக்கர், சிறுவனின் விடாப்பிடியையறிந்து, தம்அரண்மனையிலிருந்து தங்கத் தாலான மாம்பழங்களைக் கொண்டுவந்து கொடுக்கச்



சுவாமி கோயில் முதற்பிரகாரத் திருவிளையாடற் சுதைகள்

செப்புச் சிலைகள்



கூன்பாண்டியன்



மங்கையர்க்கரசி



சம்பந்தர்



குலச்சிறையார்

செய்தார். அதன் பின்னரே அவனின் அழுகை ஓய்ந்தது. அன்றுமுதல் அக்குடும்பத்தார்க்கு 'மாம்பழம்' என்ற சிறப்புப் பெயரும் வழங்குவதாயிற்று. அன்னவர் வழியில் வந்தவரே புகழ்பெற்ற 'மாம்பழக் கவிச்சிங்க நாவலர்' ஆவார்.

இவ்வாறு புதுமண்டபம் என வழங்கப்பெறும் இவ் வசந்த மண்டபம் கி. பி. 1635-ஆம் ஆண்டு வைகாசி மாதம் கட்டிமுடிக்கப்பெற்றது. அவ்வாண்டே திருமலை நாயக்கர், பத்துநாள் வசந்தோற்சவத்தைத் தம்மேற் பார்வையிலேயே நடத்தினர். அம்முதலாண்டில் மட்டும் தாம் நேரில் பரிவட்டம் கட்டிக்கொண்டார். அடுத்த ஆண்டுமுதல் இம்மண்டபத்திலுள்ள, தம் உருவத்திற்குப் பரிவட்டம் கட்ட ஏற்பாடு செய்தார். இன்றும் அந்த முறையே கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

இவ்வழகான புதுமண்டபத்தில் தற்போது பலவித மான புத்தகக்கடைகளும், பாத்திரக்கடைகளும், துணிக் கடைகளும் நிறைந்துள்ளன. சில சமயங்களில், மண்ட பத்தின் நடுப்பகுதி, பொது விசேட நிகழ்ச்சிகட்குப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

## இராயகோபுரம்

இப்புதுமண்டபத்திற்குக் கிழக்கே, பெரிய கோபுர மொன்றின் அடித்தளத்தைப் பார்க்கலாம். அது இராய கோபுரம் என்றுவழங்கப்படுகின்றது. இதன் அடித்தளம் 174 அடி நீளமும் 117 அடி அகலமுங்கொண்டது. நிலையின்

உயரம் 57 அடி. அக்கோபுரம் முழுதும் கட்டி முடிக்கப் பெற்றிருந்தால், உலகத்திலேயே மிகப்பெரிய கோபுர மாக விளங்கியிருக்கும். இது கி. பி. 1654-ஆம் ஆண்டு திருமலைநாயக்கரால் கட்டப்பெற்றது.

### நகரா மண்டபம்

சுவாமி சன்னிதியில் புதுமண்டபம் இருப்பது போன்று, அம்மன் சன்னிதியில் சித்திரை வீதியில் நகராமண்டபம் இருக்கின்றது. இம்மண்டபத்தின்மேல் நாள்தோறும் மாலை நேரத்தில் நகரா அடிக்கப்படுவதால் இதற்கு 'நகராமண்டபம்' என்ற பெயர் வரலாயிற்று. இதில் இப்போது பழக்கடைகளும், பிறகடைகளும் இருக்கின்றன. இது, அச்சயராயன் என்பவரால் கி. பி. 1635-இல் கட்டப்பெற்றது.

### விட்டவாசல்

சுவாமிசன்னிதியில் இராயகோபுரம் இருப்பதுபோல் அம்மன்சன்னிதியில் விட்டவாசல் என்று ஒரு கட்டிடம் உள்ளது. அது பாண்டியர்களின் பழையகோட்டையைச்சேர்ந்ததாகும். நகரத்தை விரிவுபடுத்தும் பொழுது கோட்டைச்சுவர்கள் இடிக்கப்பட்டன. இவ் விட்டவாசற்பகுதிமட்டும் இடிபடாமல் விடப்பட்டது. அதனால் இவ்வாயில் விட்டவாசல் என வழங்கலாயிற்று. இது இப்போது அரசினரின் பண்டையச் சின்னங்கள் பாதுகாப்பு இலாகாவின் மேற்பார்வையில் இருந்துவரு கிறது.

### வண்டியூர்த் தெப்பக்குளம்

இது, கோயிலுக்கு நேர்கிழக்கே இரண்டுகல் தொலை வில் மதுரைநகர் எல்லையையடுத்து அமைந்துள்ளது.

இதனை வண்டியூர்த் தெப்பக்குளம், மாரியம்மன் தெப் பக்குளம், பெரியதெப்பக்குளம்' என்ற பல பெயர்களால் அழைப்பர். இத்தெப்பக்குளம் வண்டியூரை அடுத்திருப் பதால் வண்டியூர்த் தெப்பக்குளம் என்றும். இதன் வடகரையில் மாரியம்மன்கோயில் ஒன்று இருப்பதால் மாரியம்மன் தெப்பக்குளம் என்றும் பெயர்கள் ஏற்பட லாயின. இதன் நீளம் 1000 அடி; அகலம் 950 அடி பக்கம் ஒன்றுக்கு மூன்று படித்துறைகள் வீதம் பன்னிரண்டு படித்துறைகள் இருக்கின்றன. குளத்தைச்சுற்றியுள்ள, கருங்கல்லாலான அழகான கைபிடிச்சுவரையொட்டி ஐந்தடி அகலத்தில் நடைபாதையொன்று உட்புறம் அமைக்கப்பெற்றுள்ளது. இக்குளத்தின் மத்தியில்,பெரிய கோபுரத்தையுடைய ஒரு மைய மண்டபமும், அதனைச் சுற்றிய நான்கு மூலைகளிலும் நான்கு சிறியகோபுரங்களு டன்கூடிய மண்டபங்களும் இருக்கின்றன. அம் மைய மண்டபத்திலுள்ள உயரமான மரங்களும், செடிகொடி களும் அம்மண்டபத்திற்கு மேலும் ஓர் அழகிய தோற்றத் தைக் கொடுப்பனவாய் உள்ளன. இதுவும் திருமலைநாயக் கரால் கட்டப்பெற்றதாகும். அவர்தம் பிறந்தநாளாகிய தைப்பூசத்தன்று, மீனாட்சிசுந்தரரைத் தெப்பத்தில் எழுந்தருளச் செய்து, விழா நடைபெறவும் அவர் ஏற்பாடு செய்தார். ஆண்டுதோறும் அவ்விழா, மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. 1960-63 திருப்பணி யின்போது மாரியம்மன்கோயில் புதுப்பிக்கப்பெற்ற துடன், மையமண்டபத்தில் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல்களைக் குறிப்பிடும் சுதைகளும் வைக்கப் பெற்றுள்ளன.

# ஆலய ஆட்சி வரலாறு

முதன் முதலில் மதுரைக் கோயிலையும், நகரத்தையும் அமைத்த குலசேகரபாண்டியன், கோயிலில் பூசை முதலிய வழிபாடுகளை நடத்துதற்கென, வடக்கேயிருந்து சில கௌடபிராமணர்களை வரவழைத்தான். அப்பிராமணர்கள் 'பரம்பரையாகக் கோயில் பூசை முதலியவற்றைச் செய்து வந்தனர். பாண்டியராட்சியின் இறுதியில் 'வாளால் விழித்துறங்கும் பராக்கிரம பாண்டியன்' காலத்தில் (கி. பி. 1315—1347) கோயிலின் ஆட்சி, ஆறு நிருவாகிகளிடம் இருந்து வந்ததாகத் தெரிகின்றது. ஒவ்வொரு நிருவாகிக்கும் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்ட வேலைகள் ஒதுக்கப் பெற்றிருந்தன.

## முதல் நிருவாகம்

சுந்தரபாண்டிய பிரமாதிராயர். இவர் பூசா காரியமும், தேவகாரியமும் செய்துவர வேண்டும்.

## இரண்டாம் நிருவாகம்

மனுநீதிகண்ட பிரமாதிராயர். இவர் பிரதானமூர்த்திகளின் இரண்டு சன்னிதிகளிலும் பரிசாரகப் பணிவிடை

செய்துவர வேண்டும்; உற்சவமூர்த்தி, மாறியாடுவார், மற்றும் பரிவார தேவதைகட்குப் பூசாகாரியமும் தேவ காரியமும் செய்து வரவேண்டும்.

## மூன்றும் நிருவாகம்

கெட்டி முதலியார். ஸ்ரீபண்டாரம் (கருவூலம்), திரு மாலை கட்டுதல், திருமேனி காவல், திருவிளக்குப் பணி விடை முதல் தூர்வைப் பணிவிடை வரை மேற்பார்வை யிடுதல் வேண்டும்.

## நான்காம் நிருவாகம்

ஸ்ரீபண்டாரக் கணக்கெழுதல் வேண்டும்.

## ஐந்தாம் நிருவாகம்

முனிவறியாத பெருமாள்.

## ஆறும் நிருவாகம்

உலகுடைய பெருமாள். ஐந்து, ஆறும் நிருவாகிகள் இருவரும் ஸ்ரீபண்டாரம் முதல் திருக்கோயில் வரைக்கும் முத்திரைவைத்தல்,வேதபாராயணப்பணி,பரிவட்டங்கள் துவைத்தல், முதலிய எல்லா வேலைகளையும் ஒழுங்குற நடத்திவைக்க வேண்டும்.

இவ்வாறு பராக்கிரமபாண்டியன் காலத்தில் கோயில் நிருவாகம் நடைபெற்றுவந்தபொழுது

கி. பி. 1310-இல் மாலிக்காபூர், தமிழ்நாட்டின்மீது படையெடுத்துவந்து, கோயில்கள் பலவற்றைக் கொள்ளையிட்டான். இதைக்கேள்வியுற்ற பாண்டியன் மதுரையை விட்டுக் காளையார்கோயிலுக்கு ஓடிவிட்டான். கோயில் நிருவாகிகள், கோயிலின் பாதுகாவலை முன்னிட்டுக் கருவறையிலிருந்த மூர்த்திகளை மறைவிடத்தில் வைத்துவிட்டுத் தங்கவிக்கிரகங்களையும், நகைகளையும் மட்டும் எடுத்துக்கொண்டு, நாஞ்சில் நாட்டுக் கிலுகிலுப்பைக் காட்டுக்குச் சென்றுவிட்டனர். அவ்வாறு செல்லுமுன் அவர்கள், கோயிலைப் பூட்டிக் கரியமாணிக்கப் பெருமாள் கோயிலில் பூசை செய்யும் குலசேகரப்பெருமான் என்பாரிடம் சாவியைக் கொடுத்து, அவர்கள் வகையில் பின்னொருகாலத்தில் எவர் வந்து கேட்பினும் சாவியைத் திரும்பத் தந்துவிடவேண்டுமென்று செப்புப்பட்டயம் எழுதிப்பெற்றுக்கொண்டனர். இக்குலசேகரப்பெருமான் இரண்டாம் நிருவாகியாகிய மனுநீதிகண்ட பிரமாதிராயர் குடும்பத்தில் வளர்ப்புமகனாகச் சென்றவராவர். மாலிக்காபூரும் மதுரைக்கோயிலின் பெரும்பகுதிகளை இடித்துச் சென்றான். குலசேகரப்பெருமானே நீண்டநாட்களாகச் சூனியபூசையாகக் கோயிலில் செய்துவந்தார். பின்னர்க் கி. பி. 1378-இல் மகமதியர் ஆட்சியினின்று மதுரையை மீட்டுவித்த கம்பண்ண உடையார், பூட்டிக்கிடந்த கோயிலைத் திறக்கவிரும்பினார், அவர், கோயில் தானிகர் யாரென்று கேட்டபோது குலசேகரப் பெருமான், தானே தானிகர் என்றுகூறிக் கோயிலைத்திறந்து, மறைத்து வைக்கப்பெற்றிருந்த திருவுருவங்களைக் காட்டினார். கம்பண்ண உடையாரும் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து அட்டபந்தனக் கும்பாபிடேகமும் செய்தார்,

மேலும் நிருவாகத்தைக் கவனிப்பதற்காகக் குலசேகரப் பெருமானுக்கே ஆச்சாரியா அபிடேகம் செய்து மாளுவச் சக்கரவர்த்தி என்ற பட்டமுங் கொடுத்துப் பூசாகாரியமும், தேவகாரியமும் பண்ணிவரச் செய்தார்.

கம்பண்ண உடையாருக்குப்பின் அவர்மகன் எம்மண்ண உடையார் ஆட்சிக்குவந்தார். மாளுவச்சக்கரவர்த்தி குலசேகர பட்டர் தனியாளாக இருந்தமையால் கோயில் வேலைகளைச் சரிவரக்கவனிக்க முடியவில்லை. அதனால் எம்மண்ண உடையார் வடக்கேயிருந்து பின்குடுமிக்காரரான சதாசிவப்பட்டர் என்பவரைத் தருவித்தார். அவரை ஆதியில், முதல் நிருவாகம் சுந்தரபாண்டியப் பிரமாதிராயர் செய்துவந்த பணியினை மேற்கொள்ளச்செய்தார். அதற்காக அவருக்கும் ஆச்சாரியா அபிடேகஞ் செய்துவித்து விக்கிரமபாண்டியப்பட்டர் என்ற பட்டமுமளித்தார். குலசேகரபட்டரை ஆதியில் மனுநீதிகண்ட பிரமாதிராயர் செய்துவந்த பணியினை மேற்கொள்ளச் செய்தார். மூன்றும் நிருவாகம் கெட்டி முதலியார் வகையில் முதலியப்பன் என்பவரையும், அவர் தம்பி சொக்கநாதன் என்பவரையும் அழைத்துப் பெரியதேவமுதலி, தேவமுதலி என்ற பட்டங்களைக் கொடுத்து அவர்கட்கு ஏற்பட்டபணிகளை மேற்கொள்ளச்செய்தார்.

இவ்வாறு திட்டப்படி கோயில் நிருவாகம் நடைபெற்றுவந்தபோது, குலசேகரபட்டர் குடும்பத்திலிருந்து ஒருபெண்ணைச் சதாசிவபட்டர் குடும்பத்தினரிலொருவர் திருமணம் செய்துகொண்டார். அப்பெண்ணிற்குச் சீதனமாக ஏழு நாள் பரிசாரக உரிமையைக் குலசேகரபட்டர்,

கொடுத்தார், சதாசிவப்பட்டர், தமக்குத் துணையாள் வேண்டுமென்று நெட்டூர்ச் சோணியரில் ஒருகுடும்பத்தை வரவழைத்து ஆச்சாரியா அபிடேகம்செய்து வைத்தார். தமக்குத் தீட்டு வந்த காலங்களில் தம்வேலைகளைப் பார்க்கவும், பிறநாட்களில் சீதனமாகப் பெற்ற ஏழுநாள் பரிசாரக வேலையைச் செய்யவும் அவரை வைத்துக் கொண்டார்.

கோயில் நிருவாகம் முழுவதையும் மேற்பார்வையிடுதற்காக விசுவநாத நாயக்கர் (கி. பி. 1529—1564) அபிசேகபண்டாரம் என்பவரை ஏற்படுத்தினர். நாயக்கர், மதுரைக்கு வந்து முடிசூட்டிக்கொண்டவுடன் விசயநகரப் பேரரசருக்கு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் பிரசாதத்தை அனுப்பவேண்டுமென்று விரும்பினர். அவ்வாறுகொண்டு போகுமாறு கோயில் தானிகர்களுக்கு ஆணையிட்டார். அதன்படி குலசேகர பட்டர், மதுரையிலிருந்து கொண்டு சதாசிவப்பட்டரை விசயநகரத்துக்குஅனுப்பிவைத்தார். சதாசிவப் பட்டர் விசயநகரத்துக்குச் சென்றுவர நான்கு திங்கள்களாயின. அதற்காக ஏற்பட்ட போக்குவரத்துச் செலவில் குலசேகர பட்டருக்கான ஈவுத் தொகையை அவரால் கொடுக்க முடியவில்லை. எனவே, தாம் செய்து வந்த பரிசாரகப் பணியில் ஒன்பது நாள் உரிமையைச் சதாசிவப் பட்டருக்கு ஒத்தியாக விட்டுக்கொடுத்தார்.

வீரப்ப நாயக்கர் காலத்தில் (கி. பி. 1572-95) குலசேகர பட்டர் வகையினர், சதாசிவப்பட்டர் வகையினரிடம் ஒத்திப் பணத்தைக் கொடுத்துத் தங்கள் ஒன்பது நாள் பரிசாரகப் பணியைத் திரும்பக் கேட்டபொழுது அவர்கள் தர மறுத்துவிட்டனர். அதற்காகச்

சுவாமி சன்னிதி கோபுர வாயிலில் ஒரு பஞ்சாயத்து நடைபெற்றது. பஞ்சாயத்தார், குலசேகர பட்டர் வகையினரிடம் ஒத்திப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, ஒன்பது நாள் பரிசாரகப் பணியைத் திரும்பத் தந்துவிடுமாறு சதாசிவப்பட்டர் வகையினரிடம் தீர்ப்புக் கூறினர். எனினும் சதாசிவப்பட்டர் வகையினர் அதன்படி ஒப்படைப்பதற்கு நாட்களைக் கடத்திக்கொண்டுவந்தனர். அதனால் இவ்விருவகையினரிடையே மனத்தாங்கல் உண்டாயிற்று. இதுகாறும் அம்மனுக்கு முடிசூட்டுவிழா நடக்கும்போது, செங்கோலை இருவகைப் பட்டரும் எடுத்து அரசரிடம் கொடுப்பது வழக்கமாயிருந்துவந்தது. பட்டர்களுக்கிடையே ஏற்பட்ட மனக்கசப்பால், வலிமையுடையோரே செங்கோலை எடுத்துக் கொடுக்கும் நிலை உண்டாயிற்று. மேலும் ஒருவகையினர்க்கு ஆச்சாரியா அபிடேகம் நடைபெறும்போது மற்றவகையினர் அதற்கு இடையூறாக நின்றனர். அதனால் அவர்களிடையே அடிக்கடி சண்டை சச்சரவுகள் நிகழ்ந்துவந்தன.

கிருஷ்ணப்பநாயக்கர் காலத்தில் (கி.பி. 1595-1601) ஒரு சாராரைப் பிடித்து அடைத்துவிட்டு மற்றொரு சாராருக்கு ஆச்சாரியா அபிடேகம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர் முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் (கி. பி. 1609-23) அவர் தம் குலகுருவாகிய கேசவ தீட்சிதர் தலையிட்டால் தானிகர்களின் தகராறு ஒருவாறு தீர்ந்தது எனலாம். மேலும் தீட்சிதர் விருப்பப்படி முன்னர் நின்றுபோன நிருவாகங்கள் மீளவும் ஏற்படுத்தப்பெற்றுப் பழைய நிருவாகிகளின் வழியினர்க்குக் கொடுக்கப்பெற்றன. அதில் ஆறும் நிருவாகமான

உலகுடையபெருமாள் வழியினர் எவரும் இல்லாமை யால், கேசவதிட்சிதருக்கே அவ்வுரிமையைக் கி. பி. 1619-ஆம் ஆண்டில் நாயக்கர் வழங்கினர்.

திருமலை நாயக்கர்காலத்தில் (கி. பி. 1623-1659) இரு வகைப் பட்டர்களுக்கிடையே மீளவும் தகராறு ஏற்பட்டது. நாயக்கர் தலையிட்டு அவரவர்க்குரிய வேலைகளை அறுதியிட்டுக் கீழ்க்கண்டவாறு முடிவுசெய்தார்.

### சதாசிவப்பட்டர் வகையினர்

(1) இரண்டுகோயில்களின் பூசையும்பதினறு நாட்கள் பரிசாரகமும். (2) சித்திவிநாயகர்முதல் பரிவார தேவதைகள்வரை பதினைந்துநாட்கள் பூசை (3) மடாபத்தியம்.

### குலசேகரபட்டர் வகையினர்

(1) உற்சவமூர்த்தி, இளையநயினர், மாறியாடுவர்— பூசைகள். (2)பன்னிரண்டுநாட்கள் பரிசாரகம் (3) விநாயகர் முதல்பரிவாரதேவதைகள்வரை பதினைந்து நாட்கள் பூசை.

மேலும் திருமலைநாயக்கர், சோமசுந்தரப்பெருமானின் திருவிளையாடல்கள் பலவற்றைவிழாக்களாக நடத்த நினைத்துக் கீழ்க்கண்டவாறு திட்டமிட்டார்.

சதாசிவப்பட்டர் வகையினர் (1)அங்கம் வெட்டுவது (2) வளையல் விற்பது (3) பிட்டுக்குமண்சுமப்பது இவற்றைச்செய்தல்; குலசேகரபட்டர் வகையினர் (1) பொற்

கிழியளித்தல் (2) குதிரை கயிறுமாற்றம் (3) யானை யேற்றம் இவற்றைச் செய்தல்.

அரசி மங்கம்மா காலத்தில் (கி. பி. 1689-1706) கேசவதீட்சிதரின் மகன் சிவராமதீட்சிதர், தமக்குப்பிள்ளை யில்லாததால், தம் காணியாட்சியைக் கட்டியம் சுந்தரேச அய்யருக்குத் தானமாகக் கொடுத்துவிட்டார்.

மங்கம்மாவுக்குப்பின் அவருடைய பெயரர் விசய ரெங்கச் சொக்கநாதர் பட்டத்துக்குவந்தார், (கி. பி.1706 1732.) அவர் மிகவும் கடவுட்பற்றுடையவராயிருந்தமை யால்மிகுதியான சொத்துக்களை இறையிலியாக மதுரைக் கோயிலுக்கும் திருவரங்கக் கோயிலுக்கும் வழங்கினர். ஆனல் அச்சொத்துக்களின் வருவாய் சரியான முறையில் பயன்படுத்தப்பெறவில்லை. அதற்குத் தக்கவாறு பிரதானி கள் சிலரும் நேர்மையற்றவர்களாக இருந்தனர். ஒரு சம யம் கோயிலில் சுவாமி தூக்கும் வேலையாட்களுக்கு விசயரெங்கச்சொக்கநாதரால் கொடுக்கப்பெற்ற வரியிலா நிலங்கட்குப் பிரதானிகள் வரிவிதிக்கலாயினர். இதனை எதிர்த்து வேலையாட்கள் கிளர்ச்சி செய்தனர். தம் எதிர்ப்பை மேலும் வலியுறுத்தற்பொருட்டு அவ்வேலை யாட்களில் ஒருவர் சுவாமி கோயில் கிழக் கோபுரத்தி லேறிக் கீழே வீழ்ந்து தம் இன்னுயிரையும் இழந்தார். அதற்குப் பின்னரே வரிகள் நீக்கப்பெற்றன. அன்று முதல் கிழக்கோபுர வாயில் வழியாகக் கோயிலுக்குச் செல்வோர்தம் எண்ணிக்கை குறையலாயிற்று. விசயரெங் கச்சொக்கநாதர் ஒருநாள் மாறுவேடத்தில் கோயிலுக்குச் சென்றபோது அங்கு நிருவாகம் சீர்கெட்டநிலையில் இருந்த

தைக் கண்ணுற்றூர். ஆண்டிற்கு ரூபாய் எண்பத்தெட்டா யிரம் வருமானமுள்ள சொத்துக்களை விட்டும் கோயில் நிருவாகம் இத்துணைச் சீர்கேடான நிலையடைந்தமை கண்டு சினங்கொண்டார். சொத்துக்களனைத்தையும் பறி முதல் செய்து, தாமே நேரடி ஆட்சியினை மேற்கொண் டார். கோயில் பெரிய தேர்கள் இரண்டையும் இவரே செய்வித்தாரெனக் கூறப்படுகின்றது.

அரசி மீனாட்சி காலத்திலும் (கி பி. 1732-36) பங்காரு திருமலை நாயக்கர் காலத்திலும் இருவகைப் பட்டர்களும் ஆச்சாரியா அபிடேகம் செய்துகொள்வதில் மறுபடியும் சண்டையிட்டுக்கொண் டனர். அச்சமயம் சந்தாசாகிப் மதுரைமீது படையெடுத் துவந்தான். நாட்டினைப் பாதுகாப்பதற்காகத் தளவாய் முத்துசாமி ஐயர், கோயில் தானிகர்களைக் கேட்டுக் கருவூலத்திலிருந்த தங்கக் குடத்தையும் சிறிது பொருளை யும் கடனாக வாங்கிக்கொண்டார். ஆனால் அவர், போர்க் களத்தில் இறந்துவிட்டார். சந்தாசாகிப் வெற்றிபெற்ற தைக் கேள்வியுற்று ஆறு நிருவாகிகளும் இளையநயினாரை எழுந்தருளச்செய்து வானரவீரமதுரை (மானாமதுரை)க் குப்போயினர். அங்குச் சேதுபதியரசர், அவர்களை வர வேற்று முறையாகப் பூசைகள் நடத்துவதற்குப் பேருதவி செய்தார். இவ்வாறு வானர வீர மதுரையில் ஈராண்டு மூன்று திங்கள், மதுரைக் கோயில் உற்சவ மூர்த்திகள் இருந்து வந்தன. பின்னர்க் கி. பி. 1742-இல் நிருவாகிகள் வானர வீர மதுரையிலிருந்து இளைய நயினாருடன் மதுரைக்கு வந்து சேர்ந்தனர்.

கோயில் தானிகர்கள் கோயில் வேலைகளைக் கவனித்து வந்தாலும் பொதுவிசாரணைக்காக விசுவநாத நாயக்கர்

காலத்தில் அபிசேகபண்டாரம் என்பவர் ஏற்படுத்தப்பட்டார். கோயில் வரவுசெலவைப் பொருத்தவரை அரசருக்கடுத்தபடியாக அவரே முழு ஆணையும் பெற்றிருந்தார். கோயிலுக்கு விடப்பட்ட இறையிலி நிலங்களின்மேற்பார்வைஉரிமையும், மற்றும் உண்டியலின் வாயிலாக வரும் தொகைகளைப் பெறுதற்கான உரிமையும் அவருக்கே கொடுக்கப்பெற்றன. கோயில் வேலையாட்களையும், தேவதாசிகளையும் வேலையிலமர்த்துவதும், மேற்பார்வை செய்வதும் ஆகியன அவருக்குரிய வேலைகளாகும். விழாக்களை நடத்துபவரும், கணக்குகளை வைத்துக்கொள்பவரும் அவரேயாவார் சுருங்கக்கூறின் கோயிலைப்பொருத்தவரை அவரே தம் விருப்பம் போற் செய்யும் உரிமைகளைப் பெற்றிருந்தார் எனலாம். அதனுல் சில சமயங்களில் பொருட்களைக் கையாடல் செய்தற்கும் வாய்ப்புக்களிருந்தன.

திருமலைநாயக்கர் பட்டத்துக்கு வந்ததும் திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்குத் தம் தலைநகரை மாற்றிக் கோயில் ஆட்சியை நேரில் கவனிக்கத் தொடங்கினுர். அதில் ஊழல்கள் நிறைந்திருப்பதையும், பெருந்தொகை கையாடல் செய்யப்பட்டிருப்பதையும்அறிந்தார். உடனே விசாரணை செய்து அப்பண்டாரத்தை வேலையினின்றும் நீக்கிக் கோயில் ஆட்சியினைத் தாமே மேற்கொண்டார். அதற்காக அப்பண்டாரத்துக்குப் பெருந்தொகையொன்றினை நாயக்கர் அளித்தார். அத்தொகையைக் கொண்டு பண்டாரம், சுவாமிகோயில் இரண்டாம் பிரகாரத்தைக் கட்டுவித்தார். மன்னர், கோயில் ஆட்சியினை நேரடியாக மேற்கொண்டதைக் கோயில் தானிகர்கள் விரும்பவில்லை. நாயக்கர், அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறிக் கோயிலுக்குப் பன்னீராயிரம் பொன் (ரூ. 24,000)

வருமானமுள்ள ஊர்களைக் கொடுத்துத் தம்பெயரால் கட்டளைகளை உண்டாக்கினார். அக்கட்டளைகளிலிருந்து ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு உச்சிக்காலம், சாயரச்சை, அர்த்தசாம காலங்களில் பூசைகளும், ஸ்ரீ சொக்கநாதருக்கு உச்சிக்காலப்பூசையும் நடைபெற்று வருகின்றன.

கோயில் ஆட்சியைப் பற்றிச் சீதளப் புத்தகம் விரிவாகக் கூறுகின்றது. மேலும் கோயிலில் ஊழியஞ் செய்யும் ஒவ்வொருவருக்குமுரிய பணிகள் இவையிவையெனத் தெளிவாகவும் கூறுகின்றது. அவற்றுள் ஒரு சிறுபகுதி மட்டும் அதிலுள்ளவாறு எடுத்துக்காட்டாகக் கீழே கொடுக்கப்படுகின்றது:-

"கோயில் பூசை பண்ணுகிற நம்பியார் ஆகமசாஸ்திரம் வேதம நித்திய பூசாவிதி யெல்லாம் படிச்சு, தீர்மானமாய் அப்பால் அபிசேகம் பண்ணிக்கொண்டு நாற்பது வயதுக்குமேல் சுவாமியைப் பூசை பண்ணுகிறது. அர்ச்சனைகள் துறையுடைய* அர்ச்சனையும் தளவாயுடைய அர்ச்சனையும் நடப்பிவிக்கிறதேயல்லாமல் இரண்டாம்பேர் அர்ச்சனைகள் அரண்மனை உத்திரவில்லாமல் செய்யப் போகாது. துறை, தளவாய், மற்ற பிரபுக்கள், சுவாமி தரிசனத்துக்கு வந்தால் சித்திவிநாயகர் முதல் பிரதானம் எழு சன்னிதிக்கும் சுவர்ணபுஷ்பம் சாத்திவிச்சால் பத்துப்பணத்துக்கு இரண்டுபணம் நம்பியார் பரிசாரகன் சுதந்திரம் எடுத்துக்கொண்டு மற்ற காணிக்கை கருவேலம் சேருகிறது உண்டிவாசலில் உண்டியல் கலயம் வைத்திருப்பது. திருவிழாவில் வருகிற காணிக்கை அரண்மனையைச் சேருகிறது. அன்றாடம் முறை வீதம் அந்தந்த நம்பியார் பரிசாரகன் செய்வதேயல்லாமல் மற்றப்பேர் ஒருவரும் கை கலக்கப்படாது. உற்சவமூர்த்திக்குத் திருநாள் வந்தால்

---

* துறையுடைய = நாயக்கமன்னர்களுடைய

கைவிஸ்த்தாரி* இரண்டுபேர் யோக்கியமாய் நகை ஒப்புக்கொண்டு சாத்துவிச்சு மறுபடிக் கழிச்சுக் கையாட்சிக்காரரிடத்தில் ஒப்புவிக்கிறது. போக்குவரத்து கைவிஸ்த்தாரி ஒப்புவிக்கிறது. கருவேலத்தில் முத்திரைப்படியிருக்க, சொத்தியம்* வந்தால் இருவகைப்பட்டமாரும் தெளிஞ்சு கொடுக்கிறது. மெய்க்காவல் காரன் சம்மதி பண்ணுகிறது*. இரண்டு கோயில் பரிசாரகன் வசம் ஒப்புவித்திருக்கிற நகைகள், தட்டுமுட்டு, போக்குவரத்து,* பரிசாரகன் சம்மதி பண்ணுவிக்கிறது. மெய்க்காவல்காரன் வசம் ஒப்புவித்திருப்பதற்கு உத்திரவாதி மெய்க்காவல்காரன் சம்மதி பண்ணுகிறது. வாசல்காரன் காவலுக்கு உள்பட்டதிலே போனது ஷெயான் கொடுக்கிறது. உற்சவங்கள் உண்டானவயனம்* ஆதி யில் மாசித்திருநாள் மட்டும் நடக்கும். விநாயகர் முதல் பரிவார தேவதைகளுக்கு முதல் மண்டலோற்சவம் பெரியதிருநாள் தேரோட்டம் நடக்கும். அதன் பிறகு திருமலைசவுரி* நாளையில் ஆவணிமீ முதல் திருநாளும் சித்திரைத் திருநாளும் வையாசிமீ வசந்தஉற்சவமும் புதுமண்டபத்தில் சிறப்பாய் நடப்புவித்து வந்தார்கள். ஆனிமீ ஊஞ்சலும் ஆடித்திருவிழா அம்மனுக்கும் கார்த்திகைத் திருநாளும் மங்கம்மன்* அவர்கள் உண்டுபண்ணி வித்தார்கள். நவராத்திரி கொலுவிருக்கிறது புராண சித்தமாய் நெடுகநடந்து வருகிறது. பங்குனிமீ கோடைவசந்தம் வெள்ளி யம்பலத்தில் மாணிக்கசெட்டியன் நடப்புவிக்கிறது.''

---

* கைவிஸ்த்தாரி = கையாட்கள்
* சொத்தியம் = குறைவு
* சம்மதி பண்ணுகிறது = ஈடு செய்வது
* போக்குவரத்து = காணுமற்போவது
* வயனம் = விவரம்
* திருமலைசரிவு = திருமலைநாயக்கர்
* மங்கம்மன் = அரசி மங்கம்மா

திருமலைநாயக்கரைப்போன்று, விசயரெங்கச் சொக்க நாதநாயக்கரும் கோயில் ஆட்சியைத்தாமே நேரடியாகக் கவனித்துவந்தார்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சியில் மதுரைக் கோயில் சொத்துக்களனைத்தும் ஏழுகோயில் நிருவாகத்தைச் (Hafta Devasthanam) சேர்ந்தனவாக இருந்தன. இந்நிருவாக முறையைப் பெரும்பாலும் திருமலை நாயக்கரே ஏற்படுத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. கீழ்க்கண்டவைகளே இந்நிருவாகத்திற்குட்பட்ட ஏழுகோயில்களாகும்.

(1) ஸ்ரீ மீனாட்சிகோயில், (2) கள்ளழகர்கோயில், (3) கூடலழகர்கோயில், (4) திருப்பரங்குன்றம்கோயில், (5) தென்கரைக்கோயில், (6) திருவேடகம்கோயில், (7) குருவித்துறைக்கோயில்.

நாயக்கர் ஆட்சியினிறுதியில் ஏற்பட்ட குழப்பத்தினால் இக்கோயில்களின் சொத்துக்கள் பெரும்பாலும் பறிபோயின. எஞ்சியவற்றைச் சந்தாசாகிப் கைப்பற்றிக் கொண்டான். பின்னர் மகமது யூசுப் ஆட்சியில் கோயில் நிருவாகங்கட்குச் சிறிதுபொருளுதவி செய்யவேண்டுமென்று எண்ணினான். ஏழுகோயில் சொத்துக்களனைத்தையும் தன்பொறுப்பில் வைத்துக்கொண்டு அவற்றிற்கு மாறாகப் பன்னீராயிரம் சக்கரங்களை உதவித்தொகையாகத் தந்தான். பின்னர் அதனை ஆறாயிரம் சக்கரங்களாகக் குறைத்தான்.

கி. பி 1801-இல் ஆங்கிலேயர் ஆட்சியில், முதல் கலெக்டராக ஹூர்டிஸ் (Hurdis) என்பவர் ஏழுகோயில்

நிருவாகத்தை மேற்கொண்டார். அவர்தம் கணக்குப்படி அதன் ஆண்டு வருமானம் ரூ. 50,292/: ஆகும். ஆனால் பன்னீராயிரம் சக்கரங்கள் மட்டுமே ஏழுகோயில் நிருவாகத்திற்குக் கொடுத்தால் போதுமென்று அவர் முடிவு செய்தார். அதுமுதல் கலெக்டர்களே கோயில்மேலாளர்களாக இருந்து ஆட்சியைக் கவனித்துக்கொண்டு வந்தனர். கி. பி. 1841-ஆம் ஆண்டுவரை இவ்வாறு கலெக்டர்கள் ஆட்சிசெய்துவந்தனர். இந்துக்கோயில்களை ஆங்கிலேயர்கள் ஆட்சிசெலுத்தக் கூடாதெனக் கிறித்துவப்பாதிரியார்கள் கிளர்ச்சிசெய்தனர். அக்கிளர்ச்சிக்கு ஆங்கில அரசுபணிந்து, உடனடியாகக் கோயில்களின் ஆட்சி முழுவதையும் விட்டுவிடவேண்டுமென முடிவுசெய்தது. அதன்படி இராமநாதபுரம் சமீன் மேலாளராகவிருந்த முத்துச்செல்லத்தேவர் என்பவரை மதுரைக்கோயில் மேலாளராக அமர்த்தி உடனடியாகப் பதவியைக் கலெக்டரிடமிருந்து ஏற்றுக்கொள்ளுமாறு ஆணையிட்டது.

முத்துச்செல்லத் தேவருக்குப் பின் கி. பி. 1843-இல் தனசிங் (Dhansingh) என்பவர் அப்பதவியிலிருந்தார். பரம்பரைஉரிமைகளையும், பழக்கவழக்கங்களையும் மதிக்க வேண்டுமென்று உரியவர்களிடம் ஒப்பந்தஞ்செய்து கொள்ளுமாறு அவருக்கு அரசினர் ஆணையிட்டனர். கி. பி. 1849-இல் துக்காராம் துவாஜி (Thukaram Duvaji) என்பவர் அப்பொறுப்பை ஏற்றார். அவரது ஆட்சியில் ஊழல் நிறைந்திருந்தது. அதனால் அவர் கி. பி. 1854-இல் வேலையினின்றும் நீக்கப்பட்டார். இவ்வாறு தொடர்ந்து கோயில் ஆட்சியில் அரசினர் மேலும் தலையிட விரும்ப

வில்லை. மதுரைக் கோயில் ஆட்சியினைப் பொதுமக்கள் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டுமென்று அரசினர் கருதினர். அதன்படி மதுரையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் திருஞானசம்பந்தராதீனத் தலைவரைக் கோயில் மேலாளராக அமர்த்தவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. அரசினரும் அதனையேற்றுக் கி. பி. 1859-இல் திருஞானசம்பந்தமூர்த்தி மடத்தின் 288-ஆம் பட்டம் வகித்த தவத்திரு ஆறுமுகதேசிகர் அவர்களிடம் கோயிலை மேற்பார்க்கும் பொறுப்பினைத் தந்தனர். கி. பி. 1817-ஆம் ஆண்டுச் சட்டத்திற்குட்பட்டு அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவ்வேலை அவர்தம் வாணாள் முடியக் கொடுக்கப்பெற்றது. ஆனால் 1863-ஆம் ஆண்டு 20-ஆம் சட்டத்தின்படி கோயிலாட்சியைக் கவனிக்கக் குழு ஒன்றை அமைக்க வேண்டியதாயிற்று. அதன்படி, திருஞானசம்பந்தர் திருமடத்துத் தலைவரையே அக்குழுவின் தலைவராக அமர்த்துவதாகக் கூறிக் கோயில் மேலாளர் வேலையினின்றும் தாமாகவே விலகிக்கொள்ளச் செய்தனர். பின்னர் கீழ்க்கண்ட ஐவரைக்கொண்ட கோயில் ஆட்சிக் குழுவொன்று கி. பி. 1864-இல் முதல்முதலாக அமைக்கப்பெற்றது:-

1) திருஞானசம்பந்தர் திருமடத்துத் தலைவர்
2) குருசாமி சாத்திரி
3) ஆதிமூலம் பிள்ளை
4) வெங்கடாசலஞ் செட்டியார்
5) சிவகலியாணசுந்தர முதலியார்.

கோயிலின் அன்றாட நிருவாகத்தை மேற்பார்க்கும் பொறுப்பைத் தாசில்தாருக்குக் கொடுத்தனர்.

பிறகு கி. பி. 1891 முதல் கி. பி. 1922 வரை குழுவினால் அமர்த்தப்பெற்ற மேலாளர்களால் ஆட்சி நடத்தப்பட்டது. பின்பு 1925 வரை O. S. 4/1922 மதுரை நீதிமன்றத்தின் தீர்மானப்படி, முத்து. கரு. வெ. அழகப்பச் செட்டியார் கோயில் ரிசிவராக அமர்த்தப்பெற்றார். பிறகு O. S. 4/1927 மதுரை நீதிமன்றத்தின் தீர்மானப்படி. 1925 முதல் 30—3—1927 வரை தர்மகர்த்தாக்கள் ஆட்சிநடத்தினர். அரசினர் ஆணை G. O. 1195/29-3-1937 வெளியிட்டின்படி திரு. R. S. நாயுடு அவர்களை 30—3—1937 முதல், இக்கோயிலுக்கு இறைபணியாளராக (Executive Officer) அமர்த்தினர். அன்று முதல் இந்து அறநிலைய ஆணையர் உத்தரவுப்படி இறைபணியாளரைக்கொண்டு ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஐவருடன், கோயிலாட்சி நடைபெற்று வருகின்றது. இந்தக்கோயிலின் ஆட்சி இந்து அறநிலையச்சட்டத்தின் 22/1959இன்கீழ்அமர்த்தப்பெற்ற அலுவலர்களின் மேற்பார்வையில் இயங்கிவருகின்றது. அதன்படி, தற்போது இக்கோயிலின் ஆட்சிக்குழுத் தலைவராகத் திரு. அ. சிதம்பரமுதலியார், M. L. C. அவர்களும், உறுப்பினர்களாகத் திருவாளர்கள்: A. வெங்கடேசுவர ஐயர், B. A., B, L., K செல்லமணித் தேவர், M. K. சுந்தரராம ஐயர், S. N. சுப்பையா ஆகியோர்கள் இருந்துவருகின்றனர். இறைபணியாளராகத் திரு. M. பரமசிவம், M. A., LL. B., இருந்துவருகின்றார்.

கி. பி. 1864-இல் அமைக்கப்பெற்ற கோயில் ஆட்சிக்குழுவின் ஆணை எதுவென்பதனையும், அதற்குப் பின்னர்

அறநிலையப்பாதுகாப்புக்காக எவ்வகைச் சட்டங்கள் இயற்றப்பெற்றன என்பதனையும், அறநிலையப் பாதுகாப் பமைச்சர்: மேதகு. எம். பக்தவத்சலம் அவர்கள் 14—4—63-இல் 'தினமணி' நாளிதழில் 'ஆலயங்களின் அரும்பணிகள்' என்ற தலைப்பில் எழுதிய சிறப்புக் கட்டுரையின் வாயிலாக அறியலாம். அதன் ஒரு பகுதி யினைக் கீழே குறித்துள்ளோம்:—

"அரசாங்கம் 1863-இல் ஒரு சட்டம் இயற்றி, அறநிலையங்களின் சொத்துப் பராமரிப்புப் பணியை அதி காரச் சார்பற்றவர்கள் கொண்ட கமிட்டிகளிடம் ஒப்படைத்தது. ஆனால் அக்கமிட்டியின் அதிகார வரம்பு தெளிவாக நிர்ணயிக்கப்படவில்லை. நிருவாகம் நடத்த நிதி வசதியும் இல்லை. இந்தக்குறைகளை அகற்றும் முயற்சியில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. மாகாணத்தில் இப்படிச் சட்டங்கள் இயற்றப்பட்ட அதே சமயத்தில், மத்தியசட்டசபையிலும் இவ்வகையில் முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1897-ஆம்ஆண்டில் அனந் தாச்சாரி மசோதா, 1903-ஆம் ஆண்டில் சீனிவாச ராவ் மசோதா, 1908-ஆம் ஆண்டில் ராஷ்பிஹாரி கோஷ் மசோதா ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். ஆனால் இந்த மசோதாக்களை நிறைவேற்றிப் பயன் காணமுடிய வில்லை. இந்துஅறநிலையங்கள் மீது அரசாங்கத்துக்குத் திட்டவட்டமான கண்காணிப்பு அதிகாரம் இருக்கவேண் டும் என்ற எண்ணம் வலுப்பெற்றுவந்தது."

"1919-ஆம் ஆண்டில் அரசியல் சீர்திருத்தம் மூலம் சட்டசபை, சனநாயகச்சாயலோடுவிரிவுபடுத்தப்பட்டது.

அதையடுத்து 1922-ஆம் ஆண்டில் சென்னை முதலமைச்சர் பனகல் அரசர் ஒரு மசோதாக் கொண்டுவந்தார். 1925-இல் அந்த மசோதா சட்டமாகியது. பின்பு இச்சட்ட சரத்துக்களை உள்ளடக்கிய 1927-ஆம் ஆண்டுச் சட்டம் வந்தது. இச்சட்டப்படி சில குறிப்பிட்ட அதிகாரங்கள் கொண்ட கமிஷனர் போர்டு நிறுவப்பட்டது. அறநிலையங்கள் வரவு செலவுக் கணக்கு வைக்கவேண்டும் என்பது பற்றி அதில் திட்டம் செய்யப் பட்டது. 1925-ஆம் ஆண்டின் சட்டத்துக்குப் பின் 1954 வரை பத்துத் திருத்தச் சட்டங்கள் வந்தன. ஆலயப் பராமரிப்புக்காக, சம்பளம் பெறும் நிருவாக அதிகாரிகளை நியமிக்க வகை செய்யப் பட்டது."

புதிய அறநிலையப் பாதுகாப்புப் போர்டு தனது நிருவாக இயந்திரத்தைத் திறமையான முறையில் அமைத்துக்கொள்வதற்கு உதவி செய்வதற்காக" 1940-ல் ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ண அய்யர் நியமிக்கப்பட்டார். அறநிலையங்களின் பாதுகாப்பை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்றும், அரசாங்க இலாகாவின் மூலம் அவை நிருவகிக்கப்படலாம் என்றும் அவர் தம் அறிக்கையில் கூறினர். பல காலமாக மக்கள் மனதில் முகிழ்த்து வந்த எண்ணம் அவர் அறிக்கை மூலம் மேலும் வலுப்படுத்தப் பட்டது. இந்த அறநிலையப் பாதுகாப்புச் சட்ட அமுல் வேலைகளைப் பரிசீலிக்க 1942-இல் அதிகாரச் சார்பற்றவர்கள் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. அக்கமிட்டியின் சிபார்சுகளின் பேரில் 1944-ஆம் ஆண்டின் சட்டமும், 1946-ஆம் ஆண்டின் சட்டமும் இயற்றப்பட்டன."

1946-ஆம்ஆண்டின்சட்டம்மிகமுக்கியமானஅபிவிருத்திகளுக்கு வகை செய்தது. ஆலயங்கள், அறநிலையங்கள்

மடங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யவும், குறைகளை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அசாக்கிரதையால் அல்லது ஒழுங்கீனத்தால் அறநிலையச்சொத்துக்குநட்டம்ஏற்படுத்தியிருந்தால் டிரஸ்டிகளிடமிருந்து தொகைகளைத் திரும்பப் பெறவும் அச்சட்டம் வகை செய்தது. அறநிலையங்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் அபிவிருத்தி செய்வதிலும் இது மிக முக்கியமான நடவடிக்கையாகும்.''

''அறநிலையப் பாதுகாப்புப்போர்டுக்குப் போதுமான அதிகாரங்கள் இல்லாமல் இருந்தாலும், சில ஒழுங்கீனங்களைத் தடுக்கத் திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கும் முறையிலும் 1951-ம் ஆண்டுச் சட்டம் இயற்றப்பட்டது. 1954, 1956 ஆண்டுகளில் அதற்குத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அறநிலையப் பாதுகாப்புப் பிரச்சினைகளில் நீதி மன்றங்கள் எடுத்துக் காட்டிய குறைபாடுகளை நீக்கும் வகையில் 1959-ஆம் ஆண்டுச் சட்டம் இயற்றப்பட்டது.''

''முக்கியமான திருவிழாச் சமயங்களில் உண்டியல் பாதுகாப்பு மேற்பார்வை ஆகியவைகளுக்காக இலாகா, விசேட அலுவலகர்களை அனுப்பிவைக்கிறது. அறநிலையங்களின் சொத்துக்கள், நிலங்கள் முதலியவைகளைக் குத்தகைக்கு விடும்போது, ஏலம் எடுக்க வருவோர், தங்களுக்குள் உடன்பாடு செய்துகொண்டு, மோசடியாக நடக்காமல் தடுப்பதற்காகவும், ஆலயவருமான வழிகளைப் பாதுகாக்கவும் இலாகாஅதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர். இந்த ஏற்பாடுகள் காரணமாகவும், கண்டிப்பான நடவடிக்கைகளின் விளைவாகவும், அறநிலையங்களின்

சொத்துக்களிலிருந்து வருமானம் கணிசமாக அதிகரித்துள்ளது. செலவினங்களைக் குறைப்பதிலும் இலாகா தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதிகமான சங்கடங்கள் எதுவும் ஏற்படுத்தாமல், சாதாரண முறையில் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்ததன் மூலம், ரூ. 75 இலட்சத்துக்கு மேல் மிச்சமாகியது. கணக்குத் தணிக்கைக்கும் நகைகள், இதர விலைமதிப்புமிக்க பொருள்கள் தணிக்கை, பாதுகாப்பு ஆகியவைகளுக்கும் செவ்வையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.''

''இந்த அறநிலையப் பாதுகாப்புச் சட்டமும், அதையொட்டிய நடவடிக்கைகளும் மூன்றுவகைகளில் முக்கிய பலன்களை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆலய நிருவாகத்தில் இருந்துவந்த ஊழல்களும் சீர்கேடுகளும்ஒழிக்கப்பட்டன. கோயில்கள் அபிவிருத்தியும், திருப்பணிகளும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. ஒளியிலிருந்து ஒளி பரவுவதுபோல, இந்த அறநிலையங்கள், பல்வேறு அறச்செயல்களுக்கு ஊற்றாக உதவுகின்றன. அன்பும், அருளும், இறைவழிபாடு உணர்ச்சியும் பரவுவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் வளர்ந்து வருகின்றன.''

# மாபெரும் திருப்பணி

(1960-63)

தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களைத் தலைவராகக்கொண்ட திருப்பணிக்குழுவினரால் 1960-63-ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற மாபெரும் திருப்பணியைப் பற்றித் தெரிந்துகொள்வதற்குமுன், அதற்கு முன்னர் நடைபெற்ற திருப்பணிகளைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளவேண்டியது முறையே யாகும்.

மதுரைத் திருக்கோயில் தோன்றிய நாள் முதல் பல திருப்பணிகளும் கடவுள் மங்கலங்களும் (கும்பாபிடேகங்களும்) சிறப்பாக நடைபெற்றுவந்துள்ளன.

கி. பி. 1481-இல் விரோதிவருடம், கம்பண்ண உடையார், திருப்பணி செய்து, மூலப்பேர் நாச்சியார் என்ற ஸ்ரீ மீனுட்சியம்மைக்கு மட்டும் அட்டபந்தனக் கும்பாபிடேகம் செய்ததாகச் சீதளப் புத்தகத்தில் குறிக்கப் பெற்றுள்ளது. மகமதியரின் படையெடுப்பிற்கஞ்சி, மீனுட்சியம்மையைப் பெயர்த்தெடுத்து விமானத்தில்

மறைத்து வைத்திருந்தனரென்றும் சொக்கநாதரின் சிவலிங்க உருவமுள்ள கருவறையின் வாயிலைச் சுவரால் அடைத்துவைத்திருந்தனரென்றும் முன்னரே கூறப்பெற்றுள்ளது (இந்நூலின்99 ஆம்பக்கம் பார்க்கவும்)கம்பண்ண உடையார் வந்ததும், இடிந்த கோயிற் பகுதிகளைப் புதுப்பித்து மீனாட்சியம்மனுக்கு அட்டபந்தனம் செய்வித்தார். சுவாமிசன்னிதி, பழுதேதுமின்றி அப்படியே இருந்தமையால் அதற்கு அட்டபந்தனம் நடத்தவில்லைபோலும். அவர், கோயில் திருப்பணியினைச் செய்தகாலத்தில், கோயிலில் இருவிமானங்களுட்பட எட்டுக்கோபுரங்களே இருந்தன. அவற்றுள், ஒன்பது நிலைகளையுடையன இரண்டு; ஐந்துநிலைகளையுடையன இரண்டு; மூன்று நிலைகளையுடையன இரண்டு.

கி. பி. 1628 அட்சயவருடம் வைகாசி மாதம் 10-ஆம் நாள், திருமலை நாயக்கர் கோயில் திருப்பணிவேலைகளைத் தொடங்கினார். அப்போது அவர், கோயிலில் உடைந்து பழுதுபட்ட கற்கள், தூண்கள், உத்திரங்கள் முதலியவற்றை நீக்கிவிட்டுப் பெரும்பொருட்செலவு செய்து, அவற்றைப் புதியனவாக அமைத்தார். மேலும், கோபுரம் முதலியவற்றில், காரைகளாலாக்கப்பட்டபகுதிகளனைத்தையும் புதுப்பித்தார். அவைகளைப் புதுப்பிப்பதற்காகச் சுண்ணாம்புக் கலவைகள், கீழ்க்கண்டவாறு ஆக்கப்பெற்றன:—

அரைத்தசுண்ணாம்பை வெல்லச்சாறுவிட்டு நன்றாகக் குழைத்து, அதனுடன் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், உளுந்து ஆகிய நான்கையும் இருமுறை இடித்து,

நல்லதண்ணீரில் ஊறவைத்த சாற்றையும் சேர்த்துக் கலவைகள் உண்டாக்கப்பெற்றன. இவ்விவரத்தைக் கீழ்க்கண்ட திருப்பணிமாலைச் செய்யுளிற் (82) காணலாம்.

உரக்கவெகு ரொக்கங் கொடுத்துப் படங்குதா
ணுத்திர முதற்பழங்கல்
லொடிந்தன பிடுங்கிநல மாயமைத் துக்காரை
யோடுசீ ரணமகற்றி
யரைத்தசுண் ணும்பைவெல் லச்சாறு விட்டுநன்
ருய்க்குழைத் துச்செங்கலும்
அடுக்காப் பரப்பிக் கடுக்காயொ டாமலக
மரியதான் றிக்காயுமூந்
தொருக்கா லிருக்கா லிடித்துநன் னீரினி
லூறிய கடுஞ்சாறும்விட்
டுழிக்கா லங்களினு மசையாத வச்சிரக்
காரையிட் டோங்குமம்மை
சிரக்காலம் வாழவே மீனுட்சி கோயிலுஞ்
செப்பமிடு வித்துநன்ருய்ச்
செய்வித்த புண்ணியஞ் சதகோடி புண்ணியந்
திருமலை மகீப னுக்கே

மேற் கூறியவாறு, திருமலை நாயக்கர் கோயில் முழுவதும் புதுப்பித்ததுடன், வசந்தமண்டபம் என்ற புதுமண்டபத்தையும், பெரிய தெப்பக்குளத்தையும் அமைத்தார். இத்தகு திருப்பணிகளைச் செய்த நாயக்கர் பல விலைமதிப்புள்ள நகைகளைக் கொடுத்ததுடன், புதிய விழாக்கள் பல நடைபெறுவதற்கும் ஏற்பாடு செய்தார் என்ற குறிப்புக் காணப்படுகின்றதேயல்லாமல், கும்பாபி

டேகம் செய்ததாகக் குறிப்பொன்றும் கிடைக்கவில்லை. இராயகோபுரத்தைக் கட்டத் தொடங்கிய நாயக்கர், அதுவும் முற்றுப்பெற்ற பின்னர்க் கும்பாபிடேகம் நடத்தலாமென்ற எண்ணத்துடன் இருந்திருப்பார் எனக் கருத வேண்டியுளது.

கி. பி. 1708 சர்வதாரி வருடம் சித்திரை மாதம் 31-ஆம் நாள், சொக்கநாதருக்கு மட்டும் அட்டபந்தனக் கும்பாபிடேகம் நடந்ததாகச் சீதளப் புத்தகத்திலிருந்து அறிய முடிகின்றது. இது, விசயரெங்கச் சொக்கநாதர் காலத்தில், முத்துமலை முதலியார் மணியத்தில் நடைபெற்றது.

கி. பி. 1877 ஈசுவர வருடம் தை மாதம் 27-ஆம் நாள் ஏழுகோயில் நகரத்தார்களால் இக்கோயில் கும்பாபிடேகம் நடத்தப்பெற்றது. அப்போது, கம்பத்தடி மண்டபத்திலுள்ள, சிற்பங்கள் நிறைந்த எட்டுத் தூண்களையும் அதனைச் சுற்றியுள்ள சில பகுதிகளையும் உண்டாக்கினர். மொட்டைக் கோபுரமும் பழுதுபார்க்கப்பெற்றது. கும்பாபிடேகத்தின் நினைவாகக் கோயிலுக்கு இரண்டு தங்கக் குடங்கள் செய்துவைக்கப்பெற்றன. ஒவ்வொரு குடமும் 179 ரூபாய் எடையுள்ளதாகும். அக்குடங்கள், பழுதுபட்ட நிலையிலிருந்தபடியால் 1963-இல் கோயிலார்கள், அவற்றின் எடையை மேலுங்கூட்டிப்புதிதாகச்செய்துள்ளனர். இராபர்ட் சிவெல் என்பார் குறிப்பின்படி இத்திருப்பணிக்கென ரூபாய் இருபது இலட்சம் செலவிடப்பட்டதெனத் தெரிகின்றது.

கி. பி. 1923 சூலை மாதம் 1-ஆம் நாள்-ருத்ரோத்காரி வருடம் ஆனிமாதம் 17-ஆம்நாள் அட்டபந்தனக்

கும்பாபிடேகம் நடைபெற்றது. அச்சமயம் கோபுரமெது வும் புதுப்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இக்கும்பாபி டேகத்தைக் கோயில் ரிசீவராக இருந்த முத்து. கரு. வெ. அழகப்பச் செட்டியாரவர்கள் நடத்திவைத்தனர். திருவாவடுதுறையாதீனத் தலைவர் திரு. அம்பலவாண தேசிகர் அவர்கள் அக்கும்பாபிடேகத்திற்கு வருகைதந்து சிறப்பித்தனர்.

சரியாக நாற்பது ஆண்டுகட்குப் பின்னர் 1963 ஜூன் 28-ஆம் நாள், மகாகும்பாபிடேகம் சிறப்பாக நடைபெறு தற்கான ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. அச்சமயம் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ் ணன் அவர்களும், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களும் மற்றும் பல மடாதிபதிகளும், அமைச்சர்களும் கலந்துகொள்ள இருக் கின்றனர்.

இக்கும்பாபிடேகத்தை முன்னிட்டு இக்கோயிலிற் செய்யப்பெற்ற திருப்பணிகள் எவையெவை என்பதை இந்நூலில் 'ஆலய அமைப்பின் அழகும் சிறப்பும்' என்ற பகுதியில் ஆங்காங்குக் காணலாம். கும்பாபிடேகத் திற்குப் பின் தனி அறிக்கையொன்றை வெளியிடத் திருப்பணிக் குழுவினர் கருதியுள்ளனர். அதில் இத்திருப் பணியைப் பற்றிய முழு விபரங்களையும் காணலாம். எனி னும், இத்திருப்பணி எவ்வாறு தொடங்கப்பெற்றது, எங்ஙனம் நடைபெற்றது என்ற சில முக்கியமான விவரங் களை மட்டும் சுருக்கமாகக் காண்போம்.

இதுகாறும் நடைபெற்ற திருப்பணிகளைவிட இப்போது (1960—63) நடைபெற்ற திருப்பணி மிகவுஞ் சிறப்புடையதாகும். கோயிலிற் காணப்படும் பதினொறு கோபுரங்கட்கும் திருமலை நாயக்கருக்குப் பின் ஒரே முறையில் எவரும் திருப்பணி செய்திலர். நமது நாட்டில் மக்களாட்சி ஏற்பட்டபின், மதுரைக் கோயிலுக்கு மக்களால் நடத்தப்படும் முதல் திருப்பணியும் கும்பாபிடேகமும் இதுவேயாகும். நம் தமிழ்நாட்டில், கோபுரக்கட்டிடக் கலையில் வல்ல கலைஞர்கள், தமக்குப் போதியவளவில் தொழில் கிடைக்காமையால், தம் அரிய கலைத்திறனையே மறந்துபோகும் நிலையில் இருந்தனர். அத்தகு சமயத்தில் இம்மாபெருந் திருப்பணி தொடங்கப் பெற்றதன் மூலம் அவர்கட்கு ஊக்கந்தரப்பெற்றது; அரிய கோபுரக் கட்டிடக் கலை புத்துயிர் பெற்றது; வேலையில்லாக் கலைஞர்க்கு வேலை வாய்ப்பளிக்கப் பெற்றது; ஓவியமும் சிற்பமும் உயர்நிலையடைந்தன; புத்தம் புதிய கலைஞர்கள் மேலும் உருவாக்கப்பட்டனர். அதனால் மேலும் பல கோயில்கள் திருப்பணி செய்யத் துணிந்துள்ளன.

## நல்ல நாள்

இம்மாபெரும் மதுரைக் கோயில் திருப்பணி, மாணிக்கவாசகப் பெருமான் தோன்றிய திருவாதவூரில் தொடங்கிற்று எனலாம். திருவாதவூர்க் கோயில் திருப்பணி முடிந்ததும் 14—9—1959-இல் அங்குக் கும்பாபிடேகம் நடைபெற்றது. கும்பாபிடேகம் நிறைவேறியஅந்நாளில், கோயிற்கூடத்தில் பெருமக்கள் பலர் அமர்ந்திருந்தனர். அப்போது அங்கிருந்தோர் சிலர் உள்ளத்தில் மதுரைக்கோயிலைப்பற்றிய எண்ணம்

தோன்றிற்று. பழுதுபட்ட நிலையிலிருக்கும் மதுரைக் கோயில் கோபுரங்களையும், பிறபகுதிகளையும் உடனடியாகக் கவனித்துச் சீர்திருந்தஞ் செய்யாவிடில் அவைகள் சிதைவுகளுக்குட்பட்டுப் பழுதுபார்த்தற்கு இயலாத வகையினை எய்தும் என்று அவர்கள் கருதினர். எனவே மதுரைக்கோயில் திருப்பணியை உடனடியாகத்தொடங்குவதே நல்லது என்றும், அப்பொறுப்பை ஏற்று நடத்துவதற்குத் தகுந்த பெரியார் ஒருவர் உளர் என்றும் எண்ணினர். ஆகவே பெருமக்கள் பலர் குழுமியுள்ள அச்சமயத்தில் அப்பொறுப்பை அப்பெரியாரிடமே ஒப்படைத்து விடவேண்டுமென்று முடிவுசெய்தனர். உடனே அங்கிருந்த அமைச்சர் முன்னிலையில் வந்திருந்த பெருமக்கள் சார்பில் கீழ்க்கண்ட வேண்டுகோள்ஒன்று விடப்பெற்றது. "தமிழவேள் திரு. பி. டி. இராசனவர்கள், திருவாதவூர்க் கும்பாபிடேகத்தைச் சிறப்புறநடத்துவித்தார்கள் என்பதை நாமறிவோம். அதற்காக நாம் அவர்கட்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வேளையில் மற்றுமொரு வேண்டுகோளை விடுக்க எண்ணியுள்ளோம். தமிழவேளவர்களே தலைமையேற்று மதுரைக்கோயில் திருப்பணியையும் செய்துமுடிக்க வேண்டுமென்பதே எங்கள் வேண்டுகோளாகும். அவர்களால்மட்டுமே அதனைச் சிறப்பாக நிறைவேற்றமுடியும். எனவே, மதுரைக்கோயில் திருப்பணியை விரைவில் தொடங்கிவைக்கத் தமிழவேளவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்!"

இவ்வேண்டுகோளைச் சற்றும் எதிர்பாராத வகையிற் செவிமடுத்த தமிழவேளவர்கள், சிறிதுநேரம் திகைப்

புற்றனர். எனினும், அவர்கள், தமக்கே உரியமுறையில், ''என்னால் யாது முடியும்? பெரிய பொறுப்பாயிற்றே? அன்னை மீனாட்சி விரும்பினால், அது, தானே நடைபெறும்; ஏதோ பார்க்கலாம்!'' என்றனர்.

இந்த நல்லநாளே, மாபெரும் மதுரைக்கோயில் திருப்பணியின் தொடக்க நாள் எனலாம்!

*''சிறந்த பூசைக்குந் திருவிழாச் சிறப்புக்குஞ் செல்வம்*
*நிறைந்த ஆலயத் திருப்பணித் திறத்துக்கு நிரப்பி*
*அறந்த வாதபே ரன்பர்க்குஞ் செலுத்திஅத் தலத்தே*
*உறைந்(து) அவாவற இன்னணம் ஒழுகுநாள் கழிப்பார்''*
(பரஞ்சோதி திருவிளையாடல்)

என்று பரஞ்சோதிமுனிவரால் புகழப்பட்ட மணிவாசகப் பெருந்தகையார் தோன்றிய அருமைத் திருத்தலமாதலின் ஆங்குத் தொடங்கப்பெற்ற இத்திருப்பணியும் இறையருளால் இனிதே நிறைவேற்றப்பெற்றது எனலாம்!.

இத்திருப்பணியின் வேலை எவ்வாறு தொடங்கப் பெற்றது, எங்ஙனம் நடைபெற்றது என்ற விவரங்களைத் திருப்பணிக் குழுத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசனவர்கள், தமது 20—4—1963–ஆம் நாளைய திருச்சி வானொலிப் பேச்சில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர். அதன் சில பகுதிகளை மட்டும் கீழே குறிப்பிட்டுள்ளேன்:-

''இம்மாபெரும் கோயிலைத் திருப்பணி செய்து திருத்தியமைக்க வேண்டும் என்னும் திட்டம் 28-10-1959 அன்று கோயில் தர்மகர்த்தாக்களின் கூட்டம்

நடைபெற்றபோது உருவாகியது. இந்தக்குழு அரசினரை அணுகி இச்செயல் பற்றிப் பேசியபின் கோயில் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டது. திருப்பணிக்குழுவின் முதற் கூட்டம் 7—1—1960 அன்று நடைபெற்றது. கைதேர்ந்த பொறியியல் வல்லுநர்களின் உதவியினாலும் மற்றும் பல நிபுணர்களின் உதவியினாலும் திருப்பணியின் வேலைத்திட்டமும் அதற்கான மதிப்பீடும் ஆராயப்பட்டன.

திருப்பணி வேலை 17—5—1960 அன்று தொடங்கப்பட்டது. அதற்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 20 இலட்சமாகும்.

திருப்பணிவேலையின் மாபெரும் அளவினையும், எங்கள் குறிக்கோளை நிறைவேற்றுவதில், நாங்கள் எந்த அளவு வெற்றிபெற்றுள்ளோம் என்பதனையும் வெறும் சொற்களாலோ, எழுத்துக்களாகவோ எடுத்தியம்பல் இயலாது. ஒருமுறை, கோயிலை நேரிற் பார்த்தால்தான் இந்த உண்மை நன்கு புலப்படும். இருப்பினும், திருப்பணியின் பொருட்டு என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன, என்னென்ன நிறைவேற்றப்பட்டன என்பனவற்றைக் கீழ்க்காணும் சில சிறப்பான குறிப்புக்கள் விளக்கிக் காட்டும்.

1. கோயிலின் அமைப்புக்கள் காலப்போக்கிலும் கால வேறுபாட்டாலும் சிதைந்து அழியாதவாறு பாதுகாக்கும் பொருட்டு, முன்னால் அவை எவ்வாறு இருந்தனவோ அதே போன்று மீண்டும் அமைப்பதே இக்குழுவின் முதல் நோக்கமாகும்.

சிற்பங்களின் அமைப்பிலோ வண்ணங்களிலோ எவ்வித மாறுதலையும் ஏற்படுத்த இந்தக் குழு முயற்சி செய்யவோ அனுமதிக்கவோ முற்படவில்லை.

2. பெருந்தொகையில் பெரிய அளவில் செய்யும் இந்த மாபெரும் திருப்பணிவேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இப்பணி செம்மையாய் நடைபெறுவதன் பொருட்டுத் தொழில்நுணுக்க நிலையங்களையும் தொழில் நுணுக்க வல்லுநர்களையும் அவ்வப்போது கலந்து ஆலோசிப்பதாய் முடிவு செய்யப்பட்டது.

திருப்பணி செவ்வனே நடைபெறுவதற்குரிய காரணங்களுள் கீழ்க்காண்பவை மிக முக்கியமானவையாகும்:

1. திருப்பணிக் குழுவினரின் எண்ணத்தை உருவாக்குவதற்குரிய வகையில் சிற்ப நுணுக்கம் அறிந்த கைதேர்ந்த வேலையாட்களைப் பெற்றமையே குழுவின் சாதனைகளிலேயே மிகப்பெரிய சாதனையாகும்.

எதிலும் ஐயங்கொள்ளும் சிலர், 'பழங்காலத்துக் கோயிலின் சிற்பங்களைச் சரியான முறையில் திருத்தியமைக்கும் சிற்பிகளும் இக்காலத்தில் இருக்கிறார்களா' எனப் பெரு வியப்படைந்தனர். ஆனால் இன்று மதுரைக் கோயிலைப் பார்வையிடும் எவரும், 'சிற்ப, கட்டிடக் கலை பழங்கதையாய்ப் போகவில்லை, இன்னும் உயிர்பெற்றுத் திகழ்கிறது' என்பதை உணர்வார்கள். இவ்வளவு பெருஞ் செலவுடன் செய்யப்பட்ட இத்திருப்பணிவேலை எல்லோருக்கும் திருப்தியளிக்கும் என்றும், இனி வருங்காலத்தில் இத்தகைய திருப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கம் தருவதாய் அமையும் என்றும் உறுதியாய் நம்பலாம்.

2. கலைஞர்களும் திருப்பணிக் குழுவினரும் வேலையின் அளவைவிட வேலையின் தரத்தையே பெரிதெனமதித்தனர். ஒவ்வொரு சிறுவேலையும் மிகுந்த கவனத்துடன் செய்யப்பட்டது. சிறப்பாக, 'முன்னிருந்தபடியே சிற்பங்களுக்கு மீண்டும் பொலிவு கொடுக்க இயலுமா' என்னும் கருத்தை உளத்திற்கொண்டு மிகுந்த கவனத்துடன் முன்பு எவ்வாறு இருந்தனவோ அவ்வாறே அமையுமாறு சிற்பங்களும் சிலைகளும் செப்பனிடப்பட்டுள்ளன.

3. திருப்பணி செய்யவேண்டிய மிகப்பெரிய அளவினையும், அதற்குரிய பொறுமையின் முக்கியத்துவத்தையும் வேலைத்திறனையும் நன்ருக உணரும்பொழுது, மிகக் குறுகிய காலஅளவிலேயே திருப்பணிவேலை நடைபெற்று முடிந்துளது என்பதை அறியலாம்.

4. ஒப்பந்தகரிடம் விட்டுத் திருப்பணியைச் செய்து முடிப்பதற்கு மாருகத்தொழில்நுணுக்கம்வாய்ந்த தொழிலாளிகளையும் அலுவலர்களையும் தானேநியமித்துத் திட்டமிட்டதொகைக்குள்ளாகவே திருப்பணிக்குழு, திருப்பணி வேலையைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளது. இது வே மேலும் மதுரைநகரில் உள்ள மீனுட்சி தேவத்தானத்திற்குட்பட்ட மற்ற கோயில்களையும் திருப்பணி செய்யத் தூண்டியது.

திருப்பணி வேலை எல்லா வகையிலும் மக்களுள்ளத்தில் நல்லெண்ணத்தையும் நன்மதிப்பையும் பெற்றுவிட்டது என்பது தெள்ளத்தெளிவாய்த் தெரிகிறது. கோயில் கோபுரங்களுக்கும் பிரகாரங்களுக்கும் தீட்டப்பட்ட வண்ணம் சிறப்பாக அமையவில்லை என்று சில

முரண்பட்ட கருத்துக்கள் எழுப்பப்பட்டன. வண்ண வேலைப்பாடுகளில் நாங்கள் ஈடுபடுவதற்கு, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் பொதுவானதுமான ஒரு நிலையான தரம் வண்ணத்தில் இல்லாததால், வண்ணந் தீட்டுதல் திருப்பணிக்குழுவிற்கு மிகப்பெருந்தொல்லையைத் தந்தது என்பதை நான் இங்குக் குறிப்பிடத்தான் வேண்டும்.

இதைப்பொறுத்து வெளியிடப்பட்ட பல்வேறு கருத்துக்களும் குழப்பத்தைத் தருவனவாய் அமைந்திருந்தமையாலும், எல்லோருடைய எண்ணத்தையும் நிறைவேற்றுதல் என்பது இயலாத ஒன்றாகையாலும் இதைப்பற்றிய குழுவினரின் கருத்தை இங்கு நான் வெளியிட விரும்புகிறேன்.

நாங்கள் மூன்றுவிதமான கருத்துக்கொண்டவர்களை எதிர்நோக்க வேண்டிய நிலையிலுள்ளோம்.

1. எந்தவிதமான நவீன முறையில் வண்ணந்தீட்டினாலும் அது,பழைய உண்மையான அழகை மாறுபடுத்திவிடும் என்னும் கருத்துள்ள ஏட்டுப்புலமையோர்.

2. பகட்டுக்குறைந்த வண்ணங்களையே பயன்படுத்த வேண்டும் என்று கருதும், மேல்நாட்டவர்களும் அதுவே சரியெனக்கூறும் நம்மவர்களும்.

3. பழங்காலத்துப் பகட்டான வண்ணங்களையே விரும்பும் பெருவாரியான பொதுமக்கள்.

உருவங்களை அழகுபடுத்துவதற்கு மட்டும் வண்ணந் தீட்டப்படுவதில்லை; வெயிலாலும், மழையாலும், காற்றாலும் சுதைகள் எளிதில்

பாதிக்கப்படாமல், நீடித்து இருப்பதற்கே வண்ணந் தீட்டப்படுகிறது. நீண்ட நாள் வாழ்வதற்காக மனித உடலை எண்ணெய்தேய்த்துப் பேணிக் காப்பதுபோலச் சுதை வேலைப்பாடுகளையும் வண்ண எண்ணெய்யால்பாது காக்கவேண்டியது அவசியமாகும். எனவே கோபுரங்களை வண்ணந்தீட்டாது விட்டுவிடுதல் என்பது இயலாத ஒன்றாகிறது.

எந்தவகை வண்ணங்களைப் பயன்படுத்துவது என் பதற்கும், எவ்வெவ்வகைகளில்பயன்படுத்தலாம்என்பதற் கும்தொழில் நுணுக்க வல்லுநர்களின் கருத்துப் பின்பற் றப்பட்டது. மேலஆடிவீதியில் நடுத்தர அளவில் அடுத்த டுத்துக் காட்சியளிக்கும் இரு கோபுரங்களில் ஒன்றிற்குப் பகட்டுக்குறைந்த வண்ணமும், மற்றொன்றிற்குப் பகட்டான வண்ணமும் தீட்டப்பட்டன. இரண்டும் பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டன. பொதுமக் களில் பெரும்பாலோர் கவர்ச்சியான வண்ணத்தையே விரும்பினர். பொதுமக்களின் எண்ணமே இறைவனின் எண்ணமாகும் என்னும் கருத்திற்கேற்பப் பொதுமக்கள் கருத்தே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

'இராயல் ஏசியாடிக் சொசைடி'யின் உறுப்பினரும், இந்திய நிருவாகத்துறைஅதிகாரியாகச் சென்னையில்பணி யாற்றியவருமான திரு. இராபர்ட் சிவெல் என்பவர் இந் திய அரசாங்கத்தால் தென்னிந்தியாவில் உள்ள பழமை யான சிற்பங்கள், கட்டிடங்கள் பற்றிய குறிப்புஒன்றைத் தயாரிக்கும் பணியில் கி.பி. 1881-இல் நியமிக்கப்பட்டார். அவர் கருத்தை இங்குக் குறிப்பிடுவது மிகவும் பொருத்த

முடையது என்றே கருதுகிறேன். அவர் கீழ்க்காணுமாறு எழுதியுள்ளார்:

"தென்னிந்தியாவிலுள்ள கோயில்களில் நான்பார்த்தவற்றுள் மதுரையிலுள்ள மீனாட்சியம்மன் கோயில் மற்றெல்லாக் கோயில்களையும்விட மிகவும் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. கடந்த 'சில ஆண்டுகளில் பொதுமக்களிடமிருந்து வசூலித்த தொகையான ரூ. 20 இலட்சத்தின் மூலம் கோயிலைப் பல வகைகளிலும் சீர்படுத்தித் திருப்பணி (கி. பி. 1877-இல்) செய்யப்பட்டது. சுதைவேலைகளுக்கு வண்ணந் தீட்டுவதால் எந்தவிதமான பழுதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை, சற்றுத் தொலைவில் இருந்து கவனித்தால் கோயிலில் உயர்ந்த கோபுரங்களுக்குத் தீட்டப்பட்ட பகட்டான வண்ணங்கள் மிக அழகான தோற்றத்தைக் கொடுக்கின்றன"

"அருகிலிருந்து கவனித்தாலுங்கூட அவ்வாறே தோன்றுகின்றன. ஆனால் கருங்கற் சிற்ப வேலைகளுக்கு வண்ணந் தீட்டாமல் இருந்திருக்கலாம். இருப்பினும் அவர்களைக் குறைகூறும்போது, இன்றைய மக்கள், அவர்தம் முன்னோர்களின் முறையையே பின்பற்றி வருகிறார்கள் என்பதை நினைவிலிருத்தல் வேண்டும்".

மேற்கூறியதிலிருந்து வண்ணந் தீட்டுதலைப் பற்றி அக்காலத்திலேயே கருத்து வேறுபாடு இருந்தது என்பதை உணரலாம். பகட்டான வண்ணந் தீட்டுவதை வெறுப்பவர்கள் இப்பெரியாரின் நடுநிலைக் கருத்தை ஊன்றிக் கவனிக்குமாறு வேண்டுகிறேன்.

கோபுரங்களின் சில பகுதிகளை ஊன்றிக் கவனித்தால் பழங்காலத்தில் அவற்றிற்குக் கவர்ச்சியான

வண்ணங்கள் தீட்டப்பட்டன என்பதும், அதனாலேயே அவைவெயிலிலும், மழையிலும், காற்றிலும்கூட முற்றும் பாதிக்கப்படாமல் இருக்கின்றன என்பதும் நன்கு புலப் படும். தொழில்துறைகளிலும், கலைத்துறைகளிலும் முன் னேற்றமடைந்துள்ள இந்த இருபதாம்நூற்றாண்டில்கூடக் காலத்தையும், இயற்கையையும் நிரந்தரமாக வெல்லும் வண்ணங்கள் இன்னும் தயார் செய்யப்படவில்லை என் பதை நான் இங்குக் கூறத்தான் வேண்டும். கோபுரங் களுக்குத் தீட்டப்படும் பகட்டான வண்ணங்கள்கூடக் காலப்போக்கில் மங்கிய நிலையில் காட்சியளிக்கும்.

கோயில் திருப்பணி செவ்வனே நடைபெறுவதற்குக் கைம்மாறு கருதாக் கருணையுள்ளம் கொண்ட பொது மக்களின் ஒத்துழைப்பே காரணமாகும். இதுவரை வசூ லான தொகை ரூ. 15 இலட்சமாகும். அதில் இதுவரை செலவான தொகை ரூ. 12 இலட்சம். சூன் 28-ஆம் தேதி நடைபெறவிருக்கும் கும்பாபிடேகம் வரை மேலும் செல வாகும். கும்பாபிடேகத்திற்கு மட்டும் ரூ. 2 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பண்டைக்காலத்தில் கலையையும் கலைஞர்களையும் பாதுகாக்கும்பொறுப்பு மன்னர்களிடம் இருந்தது. நாள டைவில் பெரும்பெரும் நிலக்கிழார்கள் அப்பொறுப்பை ஏற்றனர். மக்களாட்சி நடைபெறும் இக்காலத்தில் அம்மாபெரும் பொறுப்பு பொதுமக்கள் கைக்கு மாறி யுள்ளது.

அவர்களுள் தங்களால் இயன்ற சிறிய தொகையைத் தந்துதவி செய்தவர் மிகப்பலர். ரூபாய் ஆயிரமும் அதற்கு மிகுதியாகவும் கொடுத்துதவியவரும் உள்ளனர். பல்வேறு

வாணிப நிலையங்களும் மனமுவந்து தங்கள் பங்கினைச் செலுத்தினர். பல கோயில்களிலுள்ள சேமிப்பு நிதியிலிருந்து அறநிலைய ஆணையாளரின் உத்தரவுடன் அக்கோயில்களின் தர்மகர்த்தாக்கள் பேரன்புடன் பெருந்தொகையைக் கொடுத்துதவியுள்ளார்கள். மடாதிபதிகளும் கொடையுள்ளம்கொண்டு தடையின்றி வழங்கியுள்ளனர். மத்திய அரசாங்கத்தினரும் மிகுந்த அன்புடன் கோயில் திருப்பணிக்கு அளிக்கும் நன்கொடைக்கு வருமான வரி விலக்குத் தந்திருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.''

## மாபெருந்திருப்பணி

சங்ககாலந்தொட்டு இன்றுவரை, எல்லாவகையிலும் இம்மதுரை,சிறப்புற்றுமுன்னணியில்நிற்கின்றதுஎன்றால் அதற்குக்காரணம், இந்நகரில் நடுநாயகமாய்க் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரரின் திருவருளேயாகும். மதுரைநகர் முழுவதும், மதுரைத் திருக்கோயிலுக்காகவே அமைக்கப்பட்டது என்ற உண்மையைக்கோயிலைச்சூழ்ந்துள்ள தெருக்களின்பெயர்களாலும் அங்கு நடைபெறும் விழாக்களாலும் நன்கறியலாம். ஆகவே மதுரை நகரைக் 'கோயில் மாநகர்' என்று அழைப்பது சாலப் பொருத்தமாகும், இப்போது (1960-63) நடைபெற்ற திருப்பணி, வரலாறுகாணாவகையில், மிகப்பெருமளவில், குறுகிய காலத்தில், சிக்கனமாக

முற்றுப்பெற்றதாதலின் எல்லாவகையிலும் இது ஒரு ''மாபெருந் திருப்பணி'' யேயாகும்.

'' திருமகட்(கு)ஒரு தாமரைக் கூடமே திருமான்
மருமகட்குவெண் டாமரை மாடமே ஞானந்
தருமகட்(கு)யோ கத்தனிப் பீடமே தரையாம்
பெருமகட்(கு)அணி திலகமே யான(து)இப் பேரூர் ''

'' பூவி னயகன் பூமகள் நாயகன்
காவி னயகன் ஆதிக் கடவுளர்க்
காவி நாயகன் அங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி ஏத்துவாம்''

பிற்சேர்க்கை

# மதுரைக் கோயிலிற் காணப்படும் கல்வெட்டுகள்

(அரசினரால் படியெடுக்கப்பட்டவை)

எண் 58/1905 —பராக்கிரம பாண்டியன் — தமிழ்— ஒன்பதுநிலை மேலைக் கோபுரம்— வடக்குச் சுவர்.

எண் 59/1905 —சடாவர்மன் என்ற திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவர்—இரண்டாம் ஆண்டு—தமிழ்—சுவாமி சன்னிதி ஒன்பதுநிலைக் கிழக்குக் கோபுரம்—இரண்டாவது நிலையின் நான்கு தூண்களிலும்.

எண் 60/1905 —மாறவர்மன் என்ற திரிபுவனச் சக்கரவர்த்தி— சுந்தரபாண்டிய தேவர்— மேற்சொன்ன நான்கு தூண்களில்

எண் 61/1905 —மேற்கூறியபடி

எண் 62/1905 —சடாவர்மன் என்ற திரிபுவனச்சக்கரவர்த்தி குலசேகர தேவர்—இரண்டாவது ஆண்டு.

எண் 502/1907 —சிதைவு

எண் 503/1907 —சிதைவு

எண் 504/1907 —சிதைவு

எண் 505/1907 —சிதைவு

எண் 506/1907 —மாறவர்ம பாண்டியன் என்ற திரிபுவனச் சக்கரவர்த்தி

எண் 507/1907 —திரிபுவனச் சக்கரவர்த்தி வல்லப தேவர்

எண் 508/1907 —பாண்டியர்கள்—இரண்டு சிறு மீன்கள்—திரிசூலம் நடுவில் பதிக்கப்பெற்றிருக்கிறது.

எண் 509/1907 — ,,

எண் 510/1907 —கிரந்தம், சமசுகிருதம்—பூர்த்தியில்லை

எண் 511/1907 —கிரந்தம், சமசுகிருதம்—பூர்த்தியில்லை

எண் 35/1908 —விரப்ப நாயக்கர்—விசுவநாத நாயக்கர்—கிருஷ்ணப்ப நாயக்கர்—குமாரர்—சாகா 1905—செல்லாநின்ற சுபானு வருடம்—சுவாமி கோயில் கம்பத்தடி மண்டபக் கல் தூண்—டை மண்டபம் கட்டுவித்ததாக—தெலுங்கு, தமிழில் குறிப்புகள்.

எண் 36/1908 —வீரவேங்கட மகாராயர்-தமிழ்—சாகா 1523—சுபகிருது.

எண் 557/1911 —இராமராசவிட்டலதேவ மகாராசா—தமிழ்.

எண் 4/1915 —திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மைகொண்டான் 13வது வருடம்—306வது நாள்—தமிழ்—சுவாமிசன்னிதி மூன்றுநிலைக் கோபுரம்—கிழக்குச் சுவர்

எண் 5/1915 —சிதைவு—சுவாமிகோயில் ஒன்பது நிலைக்கிழக்குக் கோபுரம் தெற்குச் சுவரில்—சாகா 1469—கீலக—தட்சிணாயன—வெள்ளி—பூர்வபங்குனி.

எண் 6/1915 —விசயரெங்க சொக்கநாதர், முத்து வீரப்பநாயக்கரின் குமாரர்—சாகா—1632 (?)கர, பங்குனி—10வதுநாள்—தமிழ்—மேற்கூறப்பெற்ற கோபுரத் தூணில்.

எண் 7/1915 —வாளால் விழி திறந்தான் என்றபட்டப்பெயர் கொண்ட பராக்கிரம பாண்டியன் தன் வாள்கொண்டு கடலை அடைந்ததாக—அம்மன் கோயிலில் மூன்றுவது பிரகாரத்தில் கிழக்குச் சுவரில்.

எண் 340/1918 —வீரப்பநாயக்கர்—விசுவநாதநாயக்கரின் குமாரர்—சாகா 1503—விக்கிரம—ஆடி—2—தமிழ்—சிதைவு.

எண் 161/1937-38—சாகா—1438—தாது, உத்திராடம்—சனிக்கிழமைஆவணி—10—கிரந்தம், தமிழ் — இராயகோபுரத்தெருவின் எழுகடல்முன் தூணில்—சாலுவநரசநாயக்கர் கிருஷ்ணதேவராயருக்காகக் கட்டுவித்தார்.

எண் 266/1941-42—சுவாமி கோயில்—முதல்கோபுரம்—முகப்பு—இடது பக்கம்—மிகவும் சிதைவு.

எண் 267/1941-42—மேற்கூறப் பெற்ற இடம்—தமிழ்—சாகா 1517—திருவோணம்—புதன் கிழமை.

எண் 268/1941-42—தமிழ்—மேற்கூறிய இடத்தில்—வலப்புறம்—சதாசிவராயர்—சாகா 1466—தட்சிணயனம்—விருச்சிக—ஞாயிறு உத்திரட்டாதி சுவாமி கோயில் ஒரு சன்னிதிக்குப் பூமாலைகள் கொடுக்க—கிராமம்—சாசனம்.

எண் 269/1941-42—மேற்கூறிய இடம்—தமிழ்—விசய நகர அச்சுததேவராய மகாராசாவின் பெயருக்குக் கோபுரம் கட்டப் பெற்றது—வசுவப்ப நாயக்கர்.

எண் 270/1941-42—பாண்டியன் திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மைகொண்டான்—38-ஆம்ஆண்டு—தை—184-வதுநாள்—திருவாலவாயுடைய நாயனருக்கு மாலைகள்கொடுக்கமதுரைநகரில்மலையாம் படைவீட்டிற்கும் வைகையாற்றிற்கும் நடுவிலுள்ள இடத்தைச் சரிவர நடக்க—வரிவசா—இரு கிராமங்கட்கு—சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரக் கிழக்குச் சுவர்.

எண் 271/1941-42—சுவாமி கோயில் வடக்குச் சுவர்—பிரகாரம்—பாண்டியன் சுந்தரபாண்டிய தேவர்—11-வது ஆண்டு—பங்குனி—பெரும்பகுதி—சிதைவு—சேர்க்கப்பட்டது.

எண் 272/1941-42—மேற்கூறப்பெற்ற இடம்—சிதைவு.

எண் 273/1941-42—ஷை இடம்—பாண்டியன் சடாவர்மன் என்ற திரிபுவனச் சக்கரவர்த்தி—வீரபாண்டிய தேவர்—21-வது ஆண்டு—மகர—உத்திரம்—வெள்ளி—தமிழ்—சிதைவு.

எண் 274/1941-42—ஷை இடம்—பாண்டியன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவர்—தமிழ்—கன்னி—வியாழன் — மிகவும் சிதைவு.

எண் 275/1941-42—ஷை இடம்—வீரபாண்டிய தேவர்—கார்த்திகை—மடைப்பள்ளி சரிவர நடக்க.

எண் 276/1941-42—பாண்டியன் குலசேகரதேவர்—தமிழ்—சிதைவு—சீவித காளி—11 நாயனக்காரர்களுக்கு—கோயில் சிப்பந்திகள்.

எண் 277/1941-42—ஷை இடம்—கோனேரின்மைகொண்டான்—7-வது ஆண்டு அரச சீவிதம்—பூத்தோட்டங்கள் பாதுகாக்கும் சிப்பந்திகட்கு—கிராமம்—இறை.

எண் 285/1941-42—சுவாமி சன்னிதி—கிழக்குக்கோபுரம் வலது பக்கம்—பாண்டியன் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் — கிழக்கோபுரம் — அவனிவென்றஇராமன் கட்டியதாக.

எண் 286/1941-42—ஷை சுந்தரபாண்டிய கோபுரம் எனக் கூறும்.

எண் 187/1944 —பாண்டியன் திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்—15-வது ஆண்டு 181-வது நாள்—சுவாமி கோயில் இரண்டாவது பிரகார வடக்குச்சுவர்—தமிழ்—கோயில் மராமத்து—ஏழுநிலைக்கோபுரம் மராமத்துச்செய்தது.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 12 | அமைப்பது வழக்கமில்லை | பெரும்பாலும் அமைப்பதில்லை |
| 21 | 5 | விவகாரங்களிலிருந்த | விகாரங்களிலிருந்த |
| 34 | 24 | முதலாம்கிருஷ்ணப்ப நாயக்கர் | வீரப்ப நாயக்கர் |
| 75 | 2 | முடிவில் அவன் | அரசவையில் |
| 80 | 27 | ஏற்றுக்கொண்டு | ஏற்றுக்கொண்டான் |
| 167 | 14 | தெற்காடி வீதித் தெற்குக் கோபுரத்திற்கு | வடக்காடி வீதி வடக்குக் கோபுரத்திற்கு |

110036

Q23:38:2195
N63



விவேகாநந்தா அச்சகம், மதுரை-63.